கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

NOV [illegible]

திருக்கயிலாயபரம்பரைத்

திருவாவடுதுறையாதீனத்துத்

திராவிடமாபாடியகாரரான

# சிவஞானயோகிகள்

இயற்றியருளிய

## சித்தாந்தமரபுகண்டனகண்டனம்,

## சிவசமவாதவுரைமறுப்பு,

'எடுத்து' என்னுஞ் சொல்லுக்கிட்ட

## வைரக்குப்பாயம்,

சிவசமவாதகண்டனமெனவழங்குஞ்

# சிவசமவாதவுரைமறுப்பு.

இவை,

திருவாவடுதுறையாதீனத்து

ஸ்ரீ-ல-ஸ்ரீ

## அம்பலவாணதேசிகசுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி

ஷை ஆதீனவித்வான்

## சபாபதிநாவலரவர்களால்

பலபிரதிரூபங்கள்கொண்டுபரிசோதித்து,

சிதம்பரம்:

சித்தாந்தவித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

விஜய-௵ கார்த்திகை-மீ

இதன்விலை ரூபா - க.

Copyright Registered

# பிரகடனபத்திரம்.

மரபுகண்டனகண்டனம் சிவசமவாதவுரைமறுப்பு முதலிய கிரந்தங்கள், சைவாபிமானிகள் வேண்டுகோளின்படி, பிரதிகள் பல கொண்டு, பரிசோதித் தச்சிற் பதிப்பித்துப் பிரசுரிக்கப்பட்டன.

இவை துறைசையாதீன மடாதிபதியாய் வீற்றிருக்கும் ஸ்ரீமுஸ்ரீ அம்பலவாணதேசிகசுவாமிகள் உதவியருளிய பொருள் கொண்டும், இராமநாதபுரம் ம-ா-ா-ஸ்ரீ பாண்டித்துரைத்தேவரவர்கள் உதவிய பொருள்கொண்டும், அச்சிற் பதிப்பிக்கப்பட்டன.

இனி, அச்சிற் பதிப்பிக்கப்படுங் கிரந்தங்கள்: **சம்ஸ்கிருதத்தில்,** ஸ்ரீஉ உமாபதிசிவாசாரியசுவாமிகள் இயற்றியருளிய பௌஷ்கராகம விருத்தி, ஸ்ரீஉ நாராயணகண்டவாசிரியர் இயற்றியருளிய மிருகேந்திர விருத்தி, ஸ்ரீஉ சோமசம்புசிவாசாரிய பத்ததி விருத்தி; **தமிழில், திராவிடப்பிரகாசிகை,** (தமிழ் இலக்கண விலக்கிய சாஸ்திர வரலாறு) ஞானாமிர்தவுரை, சித்தாந்தசைவசங்கிரகம், நன்னூற் பஞ்சாவயவகாண்டிகையுரை.

திருச்சிற்றம்பலம்.

# வரலாறு.

சமயங்களெல்லாம் புறப்புறம், புறம், அகப்புறம், அகமென, நான்காக வகுக்கப்படும். புறப்புறச்சமயத்தார் உலகாயதர், மாத்துமிகர், யோகாசாரர், சௌத்திராந்திகர், வைபாடிகரென, அறுவகைப்படுவர். மாத்துமிகர் முதலிய நால்வரும் புத்தநூலோர். புறச்சமயத்தார் தார்க்கிகர், மீமாஞ்சகர், ஏகான்மவாதிகள், சாங்கியர், யோகர், பாஞ்சராத்திரிகளென, அறுவகைப்படுவர். அகப்புறச்சமயத்தார் பாசுபதர், மாவிரதர், காபாலர், சாத்தர், வயிரவர், அயிக்கவாதசைவரென, அறுவகைப்படுவர். அகச்சமயத்தார் பாடாணவாதசைவர், பேதவாதசைவர், சமவாதசைவர், சங்கிராந்தவாதசைவர், ஈசுரவவிகாரவாதசைவர், சிவாத்துவிதசைவரென, அறுவகைப்படுவர். இவற்றினியல்பெல்லாம் பவுட்கரவிருத்தி, மிருகேந்திரவிருத்தி, சிவஞானபாடியம், சிவஞானசித்தி, சங்கற்பநிராகரண முதலியவற்றுட் காண்க. சொல்லப்படாத சமயங்கள் பலவும் இவற்றுள் அடங்குமாறு வைத்து அடக்கிக்கொள்க.

இனி உலகாயதம், நால்வகைப் பௌத்தம், ஆருகத மென்னும் ஆறும், வேதஞ் சிவாகம மிரண்டினையும் நிந்திக்கும் நாஸ்திக மதங்களாம். தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திர மென்னும் ஆறும், வேதத்தைப் பொது வகையான் மூலமாகக் கொண்டு தோன்றி நடைபெறுஞ் சமயங்களாம். பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வயிரவம், அயிக்கவாதம் என்னும் ஆறும், வேதாகம மிரண்டையும் பொதுவகையான் மூலமாகக் கொண்டு தோன்றி நடைபெறுஞ் சமயங்களாம். பாடாணவாத முதற் சிவாத்விதசைவ மீறாகிய வாறும், வேதாகமங்களுக்குப் பிரமாணமும் பொருளுண்மைகளுஞ் சித்தாந்தசைவத்தினோ டொப்பக் கொள்ளும் அந்தரங்க வுரிமையுடையனவாய் நடைபெறுஞ் சமயங்க ளாம்.

இனி உலகாயத நூல் செய்தவர் பிருகற்பதி. புத்தர் சமய நூலான பிடகஞ் செய்தவன் புத்தக்கடவுள். ஆருகதநூல் செய்தவன் அருகன். இவ்வறுவரும் வேதஞ் சிவாகம மிரண்டையும் நிந்திக்கும் நாஸ்திகராயினும், ஒருநூலென்றும், பிரமாண மென்றுங் கொண்டு, ஒரு நெறிக்கண் நிற்றலால், அவர் புறப்புறச்சமயத்தாரென வேறுவைத் தெண்ணப்பட்டார்.

தார்க்கிகமதம் வைசேடிகமும், நையாயிகமுமென, இரண்டாம். வைசேடிக நூல் செய்தவர் கணாதமுனிவர். நையாயிகநூல் செய்தவர் அக்ஷபாதமுனிவர். மீமாஞ்சைமதநூல் செய்தவர் சைமினி முனிவர். இது பாட்டம், பிரபாகரமென, வேறிரண்டாம். ஏகான்மவாத நூல் செய்தவர் வியாசமுனிவர். இது மாயாவாதம், பார்க்கரிய வாதம், கிரீடாப்பிரமவாதம், சத்தப்பிரமவாதம் என, நான்காம். யோக மத நூல் செய்தவர் பதஞ்சலி முனிவர். பாஞ்சராத்திர மதநூல் செய்தவர் வாசுதேவர். இவ்

வறுவருள், தார்க்கிகர் வேதம் பிரமாண மெனப் பொது வகையாற் சொல்லினும், அது தன்னுற் பிராமாண்ணியங் கொள்ளார். அன்றியும், வேதப் பொருளோடு மாறு பட்டும் பொருட்டன்மை கொள்வர். மீமாஞ்சகர் கருமகாண்டமாகிய வேதமாத்திரம் பிரமாண மென்று கொண்டு, ஞான காண்டமாகிய உபநிடதங்களை இகழ்வர். ஏகான்ம வாதிகள் ஞானகாண்டமான உபநிடதங்களை மாத்திரம் பிரமாண மென்று கொண்டு, கருமகாண்டமாகிய வேதத்தினை இகழ்வர். மற்றைச் சாங்கிய மதத்தாரும், யோக மதத்தாரும், பாஞ்சராத்திர மதத்தாரும், வேத வாக்கியங்களில், தங்கள் தங்களுக்குப் பொருந்துவன மாத்திரமே எடுத்துக்கொண்டு, மற்றையவற்றிற்குப் பிரமாணங் கொள்ளார். அன்றியும், வேதப் புறமாகிய நூல்களைப் பிரமாண மெனவுங் கொள்வர். இனி இவ்வறுவரும் முதனூலான சிவாகம நிந்தகர். ஆதலால், இவர் புறச்சமயத்தரென வேறு வைத் தெண்ணப் பட்டார்.

பாசுபத மதநூல் செய்தவர் மாயா தத்துவத்தில் வைகும் ஓர் உருத்திரர். மாவிரத மதநூல் செய்தவர் வித்தியாதத்துவத்தில் வைகும் ஓர் உருத்திரர். காபால மதநூல் செய்தவர் காலதத்துவத்தின் வைகும் ஓர் உருத்திரர். வாம மத நூல் செய்தவர் சித்த புருடர். வாமமதத்தின் ஓர் பேதமான சுத்த சாத்தம், சத்தி தத்துவத்தின் வைகும் ஓர் ஆன்மாவாற் செய்யப் பட்டது. பாசுபதர், மாவிரதர், காபாலர், வாமர், வயிரவர் என்னும் ஐவரும், வேதாகமங்க ளிரண்டிற்கும் பொதுவகையாற் பிரமாணங் கொள்ப வராயினும், அவ்விரண்டிற்கும் புறமாகிய பாசுபத முதலிய நூல்களுக்குச் சிறப்பு வகையாற் பிரமாணங் கொள்வர். அன்றியும், வேதாகம மிரண்டிலும் ஆகாவென விலக்கப்பட்டனவற்றை ஆசரித்தலுஞ் செய்வர். அயிக்கவாத சைவர், வேதாகம மிரண்டிற்குஞ் சிறப்பு வகையாற் பிரமாணங் கொண்டு, அவற்றில் விலக்கிய ஒழித்து விதித்தவழி ஒழுகுபவராயினும், எல்லாப் பெருங் கேட்டிற்கும் மூலகாரணமாகிய ஆணவமலத்தின் உண்மை கொள்ளார். அதுவேயுமன்றி, அவ்வாணவ மலத்துண்மை சாதிக்குஞ் சிவாகம வாக்கியங்களை இகழ்தலுஞ் செய்வர். ஆதலால், இவர் அகப்புறச் சமயத்தாரென வேறு வைத் தெண்ணப் பட்டார்.

பாடாணவாத சைவர் முதற் சிவாத்துவித சைவர் ஈறான மற்றை அறுவரும், வேதாகமப்பொருளுண்மை யெல்லாஞ் சித்தாந்தசைவர் போலக் கொள்ளும் அந்தரங்க வுரிமையுடையர். ஆயினும், அவ்வப் பொருள்களுக்குக் கூறுஞ் சிறப்பிலக்கணம், பொது விலக்கணங்கள் மாத்திரையில், மாறு படுவர். ஆதலால், அவர் அகச்சமயத்தாரென வேறுவைத் தெண்ணப்பட்டார்.

இனிச் சிவாத்துவிதசைவர், நிமித்தகாரணமாகிய முதல்வன் மாயையோடுங் கூடி முதற்காரணமாய்ப் பரிணமிப்பனென்னுங் கொள்கை யுடைமையால், நிமித்தகாரண பரிணமவாதிகளெனச் சங்கற்பநிராகரணத்து ஓதப்பட்டாரென்றுணர்க. இவ்வுண்மை யுணரமாட்டாதார், சிவாத்துவிதமாவது, இறுதிக்கண் ணெடுத்தோதப்பட்ட சுத்தசைவம்போலு மென மயங்குப. சுத்தசைவம் நுட்பப்பொருளுணராமை மாத்திரையே பற்றி வேறு வைக்கப்பட்டதன்றிக், கருத்துவகையாற் சித்தாந்தசைவத்தின் வேறன்மையின், அச் சுத்தசைவஞ் சித்தாந்தசைவத்துள் அடங்குமென வுணர்க. அற்றுகலினன்றே, சிவப்பிரகாசத்தில் "நிலவுல காய தாதி நிகழ்சிவாத் துவிதாந் தத்துட்-குல வின ரளவ ளாவாக் கொள்கைய தாகி" என ஏனைச் சமயங்களை எடுத்தோதி விலக்கிச், சுத்தசைவத்தை அங்ஙனம் விலக்கா தொழிந்ததூஉ மென வறிக.

இனி இவ்வாறன்றிப், பாடாணவாதத்திற்கும் பேதவாதத்திற்கும் தம்முள் வேறுபாடு சிறிதாகலின், அவ்விரண்டனையும் ஒன்றாக வைத் தெண்ணிச், சுத்தசைவத்தையு முடன் கூட்டி, அகச்சமயமாறெனத் தொகைகோடலும் ஒன்று. இங்ஙனமாகலான், சிவஞானசித்தியில், "மெய்தரு சைவமாதி யிருமூன்றும்" என்றதூஉம், சிவப்பிரகாசத்தில், "புறச்சமயத் தவர்க்கிருளா யகச்சமயத் தொளியாய்" என்புழி "அகச்சமயம்" என்றதூஉம், இப்பாடாணவாதசைவமுதலிய அறுவகைச் சமயங்களேயாமென வுணர்ந்துகொள்க. இனி ஆண்டுப் 'புறச்சமயம்' என்றது, முக்கூற்றுப் புறச்சமயங்களையுமென வறிக. இனிப்பாசுபதர் முதலியோர், கலைக்கு மேலுள்ள தத்துவங்களை உணராமையின், "வித்தையாதி - யெய்துதத் துவங்க ளேய்வர்" எனக் கோடல் பொருந்தாமை யறிக. அயிக்கவாதசைவர், கலைக்குமேலுள்ள தத்துவங்களுண்டெனக் கொண்டாராயினும், மூல மல முண்டென்ப தறியாமையின், மூலமல நீங்கிய முத்தர்க்கன்றிச் சுத்ததத்துவபுவனங்களில் எய்துதல் கூடாமையின், அவர்க்கு முத்தித்தானம், மோகினிக்குமேற், சுத்த வித்தைக்குக்கீழ், * விஞ்ஞானகலர்க்குரிய தானமேயாகலின், ஏனைப் பாடாணவாதசைவர் முதலியோரே, வித்தையாதி தத்துவங்கள் ஏய்வரென் றறிக.

இனி இவ்வகச்சமய முதலிய வனைத்திற்கும் மேலாய் விளக்கமுற்று, அவையெல்லாந் தன்கண் ஏகதேசமாய் அடங்கக்கொண்டு நிற்பது, சித்தாந்தசைவம். அது வேதாகம மிரண்டானுந் தலையான சன்மார்க்க மென் றெடுத்துப் புகழப்படுஞ் சுத்தாத்துவித சித்தாந்தசமயம். இனித் தமிழின்கண் அப்பொருள் போதிக்கும் உண்மை நூல்கள், தமிழ் வேதமுதலிய திருமுறைகளும், திருக்குறளும், சிவஞானபோதஞ் சிவஞானசித்தி சிவப்பிரகாசமுதலிய சித்தாந்த சாத்திரகளு மாம். சித்தாந்தசாத்திரங்கள் திருவுந்திமுதற் சங்கற்பநிராகரணம் ஈறாகப் பதினான் காம். சிவஞானபோதம், சிவஞானசித்தி, சிவப்பிரகாசமுதலிய சித்தாந்தசைவ சாத்திரங்கள், முக்கூற்றுப் புறச்சமயங்கள் கூறும்பொருள்கள் பற்றி ஆண்டாண் டாசங்கித்துப் பரிகரித்துச் சித்தாந்தம் வலியுறுத்துதல் போலவே, பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சிவசங்கிராந்தவாதம், ஈசுரவவிகாரவாதம், சிவாத்துவிதமென்னும் அகச்சமயங்க ளாறுங் கூறும் பொருள்கள்பற்றியும், ஆண்டாண்டாசங்கித்துப் பரிகரித்துச் சித்தாந்தம் வலி யுறுத்தாநிற்கும்.

இனி மேற்கூறிய அகச்சமயத்துட்பட்ட சிவசமவாதம், சங்கிராந்தசிவசமவாதம், உற்பத்தி சிவசமவாதம், ஆவேச சிவசமவாதம், ரூபசிவசமவாதம், அரூபசிவசமவாதமெனப் பல திறப்படும். ஆயினும், அவையெல்லாம் ரூபசிவசமவாதம் அரூபசிவசமவாதமென்னும் இரண்டாய் அடங்குமாறு ஓர்ந் துணர்க. இனி அவைதம்முள், ஞானப்பிரகாசமுனிவர் கொண்டசமவாதம், அரூபசிவசமவாதமென வுணர்க. இவ்வரூபசிவசமவாதமத தாபகர் அகோரசிவாசாரியார். அது நிற்க.

இனி ஞானப்பிரகாசமுனிவர் மேற்கூறிய சமயாதீத சித்தாந்த சைவசாத்திரங்களுள் ஒன்றாய்ப் பிரசித்தியுற்று விளங்குஞ் சிவஞானசித்தித் திருவிருத்தங்களை மனம் போனவாறெல்லாம் அலைத்து இடர்ப்படுத்து, அதற்குச் சிவசமவாத பரமாக ஓர் உரை இயற்றினர். இனிச் 'சித்தாந்தசைவசாத்திரங்களை முறையாகக்கற்றுணரு மதுகையின்றிச், சித்தாந்த உபதேசமாத்திரங்கேட்டுச் சிந்தித்துக்கொண்டிருக்கும் மந்தபுத்தி யுடையார், அவ்

* விஞ்ஞானகலரென்பது, விஞ்ஞானகலரென, மரீயிற்றென் றுரைத்தார், திராவிடமாபாடியகாரர்.

வுரைபற்றி மயங்காது, சுத்தாத்துவித சித்தாந்தசைவநெறி தலைநின் றனுட்டித்து வீட்டி ன்ப வுறுதி கூடுமாறு, அதற்கோர் மறுப்பெழுதி யருளுக' வென்று தமது பஞ்சாக்கர தேசிகர் மரபினரான பெரியோர் பிரேரித்திட, அவராணை போற்றி, **ஆசிரியர் சிவஞான யோகிகள்,** அதற்குச் **சிவசமவாதவுரைமறுப்பு** என ஒரு நியாயகண்டனஞ் செய்தருளி னர். சிவசமவாதஞ் சுருதி உத்தி அனுபவ விரோத மா மாறும், சித்தாந்தசைவநூ லான சிவஞானசித்திக் கவ்வுரை யிணங்காதவாறும், பிறவும், இம்மறுப்பினுள், அவரால் நன் றுணர்த்தப்பட்டன. இன்னும், சித்தாந்தரகசியங்கள் பல, இயைபுபற்றி வெளிப் படையான், அதன்கண் எடுத்தோதப்பட்டனவு முள. அது நிற்க.

இனி ஆசிரியர் சகலாகமபண்டிதர், சிவஞானசித்தியுள் வெளிப்படையால், சித் தாந்தசைவமுத்தி நாட்டிய "ஈசன்-புண்டரி கத்தாள் சேரும் பரிசினைப் புகல லுற்றும்" "சிவனடியைச் சேருமுத்தி செப்புவதிங் கியாமே" என்னுஞ் சுருதிகளுக்கு, "ஆன்மாத் தனது சிற்சத்தி வியத்தியைச் சேரும்பரிசு" என்றும், "ஆன்மாத் தனது சிற்சத்தி வியத்தி யைச் சேருமுத்தி" என்றும், ஞானப்பிரகாசமுனிவர் முக்கியார்த்தலங்கனஞ் செய்து, உரை கூறினர். ஆசிரியர் சகலாகமபண்டிதர், வெளிப்படையால், சமவாதம் மறுத் துச் சித்தாந்தசைவ நாட்டிய "உம்பர்பிரா னுற்பத்தி யாதிகளுக் குரிய னுயிர்தா னுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே" "எவ்விடத்து மிறையடியை யின்றிய மைந் தொன்றையறிந் தியற்றிடா வுயிர்கள்" "ஆதலாலே யரனடியை யகன்றுநிற்ப தெங்கே யாமே" என்னுஞ் சுருதிகளை, ஞானப்பிரகாசமுனிவர் அலைத்துச், சிவசமவாத பரமாக்கி உரை கூறினர். இவ்வாறு மூலங்களை அலைத்துச் சிவசமவாத மாக்கி அவர் கூறியன பல வாம். இனிக் கற்றுணர்வுசிறிதுடையாரும், மற்றிவை ஏலாவுரையென் பது, இனி துணர்வர். இனி ஞானப்பிரகாசமுனிவருக்குமுன், சிவஞானசித்திக்கு உரை யியற்றினர் சிவாக்கிரயோகிதேசிகர், மறைஞானதேசிகர் என, இருவராசிரியருளர். அவருக்குப்பின், அதற்கு உரையியற்றினர் ஆசிரியர் சிவஞானயோகிகண்முதற் பலர் உளர். அவ்வாசிரியர்கள் உரைகளெல்லாம் ஒவ்வோரிடங்களிற் சொன்முறையாற் சிறிது வேறுபடினும், சித்தாந்தசைவப்பொருள் போதித்தற்கண், ஒன்றுபட்டொழுகுதலையும், ஞானப்பிரகாசமுனிவருரைமாத்திரம் மாறுபட்டுச் சிவசமவாதம் போதித்தலையும், உற்று நோக்குவார்க்கு, அவர் சமவாதவுரை, மூலத்திற்கு ஏலாவுரையென்பது, சாலப்புல ப்படு மென்க.

இனிச் சிவாக்கிரயோகிதேசிகர், "எவ்விடத்து மிறையடியை" என்னுந் திருவிரு த்தம், "முத்தியில் ஆன்மாச் சிவனைப்போல விருப்பது; அன்றிச், சிவனைவேறறக்கலந்து நிற்பனென்பது வேண்டா" என்னும் அஞ்ஞானியுடைய மூர்த்தாவிலே * அசனிபா தமாக, எக்காலத்துஞ் சிவனைப் பிரிந்து நிற்கு முறைமை கூடாதென்பது கூறுகின்றது" எனக், கோபமிக்குச், சிவசமவாதியைச் சபித்துரைத்ததூஉங் காண்க.

இனி ஞானப்பிரகாசமுனிவர், தமக்கபிமதமான சிவசமவாதந் தமிழின்கட் கூறல் வேண்டினராயின், வடமொழிக்கட் பிரமாணதீபிகை சித்தாந்தசிகாமணிமுதலிய கிரந்த ங்களால், அதுகூறிவைத்தாற்போலத், தமிழின்கண்ணும் புதுநூல்களால் அது கூறிவைத் துப்போதலே, அவர்தமக்கு முறை யாம்; இனி அவ்வாறு செய்யாது, நால்வகைச் சம யங்களுக்கும் மேன்முறையாய்ப் பிரசித்தியுற்று விளங்கும் சித்தாந்தசைவநூலாகிய

---

* அசனிபாதம்=இடிவீழ்தல்.

சிவஞானசித்தியை, அலைத் திடர்ப்படுத்து, அங்ஙனந் தம்மதப்பிரசாரஞ் செய்தது, அவர்க்குச் சால்பாகாமை யறிக.

இனி ஆசிரியர் சிவஞானயோகிகள், சிவஞானபாடியத்துப் பொதுவதிகாரத் திறுதியதிகரணத்தில், சிவசமவாதம் இயைபுபற்றி யெடுத்துத், தடைவிடைகளான் மிக விரித்து மறுத்துச், சித்தாந்தசைவம் நாட்டினர். சிவசமவாதவுரைமறுப்பினுள், ஆண்டாண்டு விரிவஞ்சிக்கூறாது விடுத்த நுண்பொருள்களெல்லாம், ஆண்டும் பிறண்டுந் தெள்ளிதங்க விளக்கியருளினர்.

இனி மெய்கண்டதேவநாயனர் சந்ததியாகிய துறைசைப் பஞ்சாக்கரதேசிகர் மரபின்வந்த பெரியோர், அம்மெய்கண்ட சித்தாந்தசைவ சாத்திரக்கேள்வி விமரிச பாவனுனுபூதி பற்றி இயற்றிய உண்மைநூல்கள், தசகாரியம், உபதேசப்பஃறொடை, சன்மார்க்கசித்தி, சிவாச்சிரமத்தெளிவு, சித்தாந்தப்பஃறொடை, உபதேசவெண்பா, நிட்டைவிளக்கம், அதிசயமாலை, நமச்சிவாயமாலை, தசகாரியம், பஞ்சாக்கரப்பஃறொடையெனப், பதினன் காம். இப்பதினன்கும் பண்டாரசாத்திரமென வழங்கப்படும். இவற்றுள், தசகாரியம் உபதேசப்பஃறொடையென்னும் இரண்டும் இயற்றினர் தக்ஷிணமூர்த்திதேசிகர்; தசகாரியமுதன் நமச்சிவாயமாலை யிறுவாய்ப் பத்தும் இயற்றினர் அம்பலவாணதேசிகர்; பதின்மூன்ரு மெண்ணு முறைக்கணின்ற தசகாரிய மியற்றினர் சுவாமிநாததேசிகர்; இறுவாய்க்கணின்ற பஞ்சாக்கரப்பஃறொடை இயற்றினர் பின்வேலப்பதேசிகரென வறிக. மேற்போந்த அம்பலவாணதேசிகர்பான் ஞானேபதேசம் பெற்ற உலகுடையநாயனர் முதலாயினர் இயற்றிய திருக்கழிநெடில், வாதுளாகமசாரமான ஞானபூசாவிதி, வருணபத்ததி முறையான கிரியாபூசாவிதி யென்பனவும், மேலைஞானநூல்கள்போல அம்மரபினராற் போற்றிக் கொள்ளப் படுவனவாம். இனி இம்மரபிற் பெரியராய் விளங்கிய **ஆசிரியர் சிவஞானயோகிகளும்,** அவர் மாணக்கர் கச்சியப்பமுனிவர் சுப்பிரமணியமுனிவர் முதலியோரும், இயற்றிய **திராவிடமாபாடிய**மென வழங்குஞ் **சிவஞானபாடிய**முதலிய பிரபல கிரந்த பிரபந்தங்களின் வரலாறு, திராவிடப்பிரகாசிகையுள், தமிழ் இலக்கண இலக்கிய சாத்திரப் பிரகரணங்களில், ஆண்டாண்டு இயைபுபற்றி எடுத்து ஓதினும்.

இனி மரபட்டவணை முதலிய சில வசன கிரந்தங்கள், அம்மரபிற் சிலரால் எழுதப்பட்டனவென்பர். அவை குற்றம் பலவுடையனவாய்ச் சிறப்புறுமையின், பிரமாண கிரந்தங்களெனப், போற்றப்படாவாயின வென்பது. இனி "அவை தாமும், அம்மரபில் ஆன்றேரால் எழுதப்பட்டன" வெனக் கூறினரு முளராலோவெனின், அம்மரபிற் பெரியராகிய அடிப்பட்டவான்றோர், அவை குழறுபடைக் கிரந்தங்களென வொதுக்குபவாகலின், அவருரை போலியுரையாத லறிக. அது நிற்க.

**சித்தாந்தமரபுகண்டனகண்டனம்,** சித்தாந்தமரபும், அதன் கண்டனமும், மற்றதன் கண்டனமுமென, மூன்றும். இச்சித்தாந்தமரபு மரபட்டவணையெனவும் வழங்கப்படும். இவற்றுள், சித்தாந்தமரபு எழுதினர் துறைசையாதீனத்தருள் ஒருவ ரென்பர். அவர் பெயர் புலனுக வில்லை. மரபுகண்டனம் எழுதினர் தருமை ஞானசம்பந்ததேசிகர் மரபினருள் ஒருவர். அவர் பெயரும் புலனுக வில்லை. மரபுகண்டனகண்டனம் இயற்றினர் ஆசிரியர் சிவஞானயோகிகள்.

இனிச் சித்தாந்தமரபு, சித்தாந்தமரபுகண்டனம், சிவசமவாதவுரை, இப்பெற்றி யுடைய கிரந்தங்களெனக் கூறல் வேண்டாம்; ஆசிரியர் சிவஞானயோகிகடாமே மரபு கண்டனகண்டனத்துள்ளும், சிவசமவாதவுரை மறுப்பினுள்ளும், அவற்றினியல் எடு த்து விரித்தலின்.

ஆசிரியர் சிவஞானயோகிகள் மரபுகண்டனகண்டனம், சிவசமவாதவுரைமறுப்பு, 'எடுத்து' என்னுஞ் சொல்லுக்கிட்ட வைரக்குப்பாயம் என்னுங் கிரந்தங்களைச், செந்தமிழொடு வடசொல் விரவிய நடையாகவும், சிவசமவாதசண்டனமென்னுஞ் சிவ சமவாதவுரை மறுப்பினைச், செந்தமிழொடு வடசொல் ஆரியச்சொல் விரவிய நடை யாகவும், இயற்றினர். ஈண்டு வடசொல்லென்றது, ஆரியச்சொற்கள் தமிழிற் தற் சமம் தற்பவமாய் வந்தனவற்றை. நடையெனினும் உலகியல் வழக்கெனினு மொக்கும்.

'பாரிசேடியம்' 'அத்வைதம்' என்பனவே, ஆரியப்பிரயோகமாயினும், ஆசிரியர் நூலுரைகளுள், 'பாரிசேடம்' 'பாரிசேடவளவை' 'அத்துவிதம்' எனப் பயின்று வருதலின், ஆரியத் திரிபெனக் கொண்டு, அவைதம்மை அவ்வாறே பதிப்பித்தாம். இவ்வாறு வருவன பிறவு முள; அவைதம்மையும் அவ்வாறே பதிப்பித்தாம். சிவசம வாதவுரை மறுப்பின்கண், முற்றும் ஆரியப்பிரயோகமாகவும், ஒருபுடைதிரிந்த ஆரிய ப்பிரயோக மாகவும், தமிழிற்குரிய வடசொற் பிரயோகமாகவும், வந்தனவுள. அவ ற்றினை அவ்வாறே பதிப்பித்தாம். இனி அவ்வாரியவடசொற் பிரயோகங்களுக் கெல்லாம், ஆண்டாண்டுப் பொருள் குறித்துரைப்பின், விரியுமென்றெண்ணி, இன்றி யமையாதனவற்றிற் கெல்லாம் பொருள் குறித் துரைத்தாம்.

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகசுவாமிகள் திருவடிவாழ்க.

கயிலாயபரம்பரையிற்சிவஞானபோதநெறிகாட்டும்வெண்ணெய்
பயில்வாய்மைமெய்கண்டான்சந்ததிக்கோர்மெய்ஞ்ஞானபானுவாகிக்
குயிலாரும்பொழிற்றிருவாவடுதுறைவாழ்குருநமச்சிவாயதேவன்
சயிலாதிமரபுடையோன்திருமரபுநீடூழிதழைகமாதோ.

திருச்சிற்றம்பலம்

உ

கணபதி துணை.

## திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தமரபுகண்டனகண்டனம்.

மெய்கண்டதேசிகன் சந்தானத்தினெய்தி மெய்கண்டநூலை யாராய்ந்து சித்தாந்தசைவப் பொருளுண்மையை உணர்தற்குரிய தவமுதிர்ச்சி யில்லாமையான் ஏனைப் பொதுநூல்களையே பாராட்டி, மெய்கண்டநூலையும் அவற்றோ டொப்ப வைத்துப் பொது வகையாற் பாராட்டும் வெள்ளறிவுடைய வொருசாரார், "கற்றதூஉ மின்றிக் கணக்காயர் பாடத்தாற், பெற்றதாம் பேதையோர் சூத்திரம்" என்னு முறைமைத்தாகக் * குழறுபாடா யகப்பட்டதொன்றனைத் தம்மாற் குறிக்கப்பட்டோர்கொண்ட மரபென மயங்கிக் கொண்டு, அதற்குத் தாமுங் குழறுபாடாகச் சில குற்றம்போலக் கூறினார். இதன்கண் ஆண்டாண்டு ஆசங்கித்தற்குரிய தகுதியுடையனவாய் ஆசங்கிக்கப் படுவனவும் அவற்றிற் குத்தரமும் பல பல வுளவாகவும், அவற்றுளொன்றாயினும் அறிந்தெடுத்தாசங்கிக்கமாட்டாது, சிறுபெண்கள் சிறுசோ றட்டுண்டு தேக்கித் தம்மிலே களிக்குமாறுபோல ஆசங்

* 'குழறுபாடு,— குழறுபடை, குழறுதல், குழறல் என்பன வொருபொருட்சொற்கள். குழறுபாட்டுரை-எண்வகைத் தானத்தொடுபடுத்து நாவா னவிலப் பெறாததோர் நகைபடு கிளவி. அது "காவியங்கண்ணார் கட்டுரை யெட்டுக்கு, நாவொடு நவிலா நகைபடு கிளவியும்" எனச் சிலப்பதிகாரத்துட் கூறுமாற்றா னுணர்க. இனி "வளைவாய்க் கூகை நண்பகற் குழறவும்" எனப் பட்டினப்பாலையுள்ளும், "பேராந்தை குழறும்" எனச் சிலப்பதிகாரத் துரையுள்ளும், வருதலின், இந்நகைபடுகிளவி, ஒருசார் கூகை முதலிய புட்களின் எழுத்தியல் கூடா வாயொலியைக் குறிக்குஞ் சொல்லாதலறிக. இனி "உரைகுழறி" "பரவுவாய் குழறி" என்றற்றொடக்கத்தனவாக ஆன்றோர் செய்யுட்கண் ஆண்டாண்டு வருதலின், அதுதான் மாந்தர்த மெழுத்திய னிரம்பா வுரையை வுணர்த்துவதூஉமாம். இதனை இக் காலத்துக் குளறுபாடு, குளறுபடை, குளறுதல், குளறலெனவும் வழங்குப. அற்றேலஃதங்ஙனமாக; மரபுகண்டனமுடையார் வாக்கியங்கள் எழுத்திய னிரம்பிய நாவுரையேயாமாகலின், அவைதம்மை அதனோடொன்றெனவைத்துக் குழறுபாட்டுரையென் றங்ஙனமெள்ளுத லமையாதாம்பிறவெனின், அவர் வாக்கியவுரைகள் அப்பெற்றியவாயினும், அவாய்நிலை முதலிய தழீஇ நெறிப்பட்டொழுகிச் சாத்திரப்பொருளை மரபுபட இனிதுணர்த்தாது பிறழ்ந்துகிடத்தலின், அக்குறைபற்றி, அவற்றினை அதனோடொன்றெனவைத்து அங்ஙன மிகழ்ந்திட்டார்; ஆகலின், அஃதமையாமை யாண்டையதென்க. சமவாத கண்டனத்து ளிவ்வாறு கூறியதற்கும் இஃதொக்கும். அஃதேல், "உரைகுழறி" "பரவு வாய்குழறி" என்றலின், உண்மைநாயன்மார் திருவாக்குக்களும் அவ்வாறிகழுரையாம் போலுமெனின், அவர்க்கு ஆனந்தமேலீட்டினானே மொழிக்கருவி வசமறுதல்பற்றி நாத் தழுதழுத்து உரைநிரம்பாதெழுதலின், மற்றவை ஆனந்த வதீதமெய்ப்பாட் டடையாளமென வைத்தேத்தப்படுவனவல்லது, இதுபோல விகழுரையாகாவென் றொழிக.

கித்தற் குரியனவல்லாதவற்றை யாசங்கித்து, அங்ஙனங் குற்றம்போலச் சிலகூறிக், “கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து சொல்லாடச் சோர்வு படும்” என்பதுபற்றி அதனைக் கற்றுமுதிர்ந்தோர்பாற் காட்டுதற்கஞ்சித், தம்மிலே நலங்கொள்ளுதலாற் போந்த பயன், தமக்கென வொன்றிலராகிய பேதைகளை மயக்கித் தம்மாட்டீர்த்துக்கொள்ளுதன் மாத்திரையே யன்றிப் பிறிதில்லையென்பதூஉம். இதனுள் உவமத்தின்மேல் வைத்து எழுதிய குற்றங்களெல்லாம் ஆயிரம்பூப் பொன்னோடொக்குமென்றவழி அதுபோல வடித்து நீட்டவருமோவென் றாசங்கிப்பார் கூற்றொடும் பொருண்மேல் வைத்தெழுதிய குற்றமெல்லாம் நானமென்பது மணங்கமழ்கின்ற பொருளென்றவழி அது நாவிலுண்பதுவோவென் றாசங்கிப்பார் கூற்றொடொப்ப வெறும் போலியேயாமென்பதூஉம், ‘விளம்பிய வேது நோக்கிப்-பெருகிய வுவமை நான்கின் பெற்றியி னிறுவிப் பின்முன் - றருமலை வொழியக் கொள்ளு’ மறிவின் மதுகையின்மையின் அவ்வாறெல்லாங் குழறினாரென்பதூஉம், நுண்ணுணர்வுடையார்க்கு இனிது விளங்கும். அவை யவ்வாறாதல் சிறிது காட்டுதும்.

“பிறருக்கறிவிக்கமாட்டாது” என்றதேயன்றி, “மலந்தீர்ந்தவுயிர் ஆன்மாக்களுக் கறியும் பகுதியு மறிவிக்கும்” என வோரிடத்துங் கூறியதில்லை. நீர் அவ்வாறு கொள்ளுவீர் போலும். “அன்னிய மானவை யுணர்த்தி” எனவும், “அறிவு முழுவதினையு மறைக்கும்” எனவும், “போத்திருத் துவத்தை நிகழ்த்தி” எனவும் வருமித்தொடக்கத்துச் சுருதிகளின் றாற்பரியமே ஈண்டு மலத்தினியல்புகூறும் வசனங்களின் றாற்பரியமென்றறியமாட்டாது மயங்கினீர். ‘சைவசித்தாந்திகளை வழிபட்டுக்கேட்டால் மலைவறச் சொல்லுவார்கள்’ எனப் படர்க்கை வாய்பாட்டாற் கூறினீர். கூறவே, நீர் சைவசித்தாந்திக ரல்லீரென்பதற்கு நீர் இங்ஙனங் கூறிய கூற்றே சான்றாயிற்று. “யானுமறியே னவளும் பொய்சொல்லாள்” என்ற பழமொழியின் பொருளை நும்பாற் கண்டேம். மாயை கன்மங்கள் சிவவியாபகத்தின் வியாப்பியமெனச் சிவாகமங்களெல்லா முழங்கவும், அவற்றொடு முரணிச் சிவசமவாதி மதத்தின் வீழ்ந்து, மாயை கன்மங்கள் சிவவியாபகத்தோடொப்ப வேறுநிற்குந் தனிமுதலெனக்கொண்டு, ‘அவை சிவத்தையும் மலத்தையும் பொருந்துமோ’ என்றும், ‘பொருந்துமாயிற் கன்மமென் றொருமுத லில்லையாய் விடும், ஆன்மா வெதைப் புசிப்பான்’ என்றும், ‘ஆணவம்போ லறியாமைப் பொருள்’ என்றும், ‘அறியாமைப்பொருளாகிய மாயை கன்மங்களை இருளாய் நிற்குமென மீளவுங் கூறுதல் பிட்டபேடண நியாயமாம்’ என்றும், ‘அறியாமைப் பொருளாகலிற் காலத்திரயத்திலும் ஒளியாய் நிற்குமாறு கூடாது’ என்றும், ‘இருதலையு மருளென்று பாடமொப்பில் அச்சுருதிக்குத் தாற்பரியமாம்’ என்றும், ‘வேறாகப் பாடமொப்பில் அனுபவமில்லை’ என்றும், நுமக்கு வேண்டியவாறெல்லாம் பிதற்றினீர். இவையெல்லாம் ஆகாசத்திலெழுதிய சித்திரம்போல வெறும் போலியேயாமென்பதூஉம், “மாயை மாமாயை” என்னுஞ் சுருதி அவற்றியல்பு கூறும் வசனத்தின் பொருளன்றி வேறு பொருள்படாதென்பதூஉம், சிவஞானபாடியத்தி லினிது விளங்கும். ‘கன்மம் மலத்தையுஞ் சிவத்தையும் பொருந்துமோ’ என்ற நீர், “வருமலஞ் சார்ந்து” என்றற்றொடக்கத்துச் சுருதிகளையும் இவ்வாறுகூறி யிகழ்வீர் போலும். ‘மலமுஞ் சிவமுமானாற் கன்மமென்றொருமுத லில்லையாய் விடும்’ என்றீர். ‘அதுவதுவாய்ச் செறிவானுயிர்’ என்றதனால் ஆன்மாவென்றொரு முதலில்லையென்று கொள்ளுவீர்போலும். ‘இருதலையு மருள்’ என்று பாடங்கொண்டு தாற்பரியம் அதற்கேற்ப வேறுகொள்ளின், அது பொதுவுட் கூறிப்போந்தமையிற் பிட்டபேடண நியாய மென்னுங் குற்ற நுமக்கே வருமென் றறிக. மாயை கன்மங்கண் மலம்

போல அறியாமைப் பொருளென்பார்க்கு, "இரண்டுஞ் சோதி யிருளென வேறும்" எனவும், "இகலிவரு மிவையுணரி னிருள்வெளியாந் தன்மை" எனவும், "இருளிரிசுடர்-முரண்டர நின்ற முழுமல மாயை" எனவும் வருமித்தொடக்கத்துச் சுருதிகளெல்லா முரணுமாகலின்,சடமெல்லா மறியாமைப் பொருளாமென்றல் பொருந்தாமையின், ஈண்டுப் பிட்டபேடணநியாய மென்னுங் குற்றமாதல் யாண்டையதென் றொழிக. இன்னும், மாயை கன்மங்கள் ஆணவம்போல அறியாமைப்பொருளாயின், அதுபோலச் சிவத்துக்குப் பகைப்பொருளாய்ச் சிவசன்னிதியி னில்லாவெனப்பட்டுத், "தந்திடுஞ் சிவனவன்றன் சன்னிதி தன்னி னின்றே" எனவும், "விமல னுக்கோர் சத்தியாய்" எனவும், "சுத்த தத்துவஞ் சிவன்றன் சுதந்திர வடிவ மாகும்" எனவும், "மருவு பசுகரணஞ் சிவகரண மாகி" எனவும், "விருப்பு வெறுப்பென்று வேறுரைத்தா லெந்தை - யுறுப்பிற் குறையாதோ வுணர்வுடையோர் சொல்லுவரோ" எனவும், "பெற்றசிற் றின்பமே பேரின்ப மாயங்கே - முற்ற வரும்பரிசு" எனவும், "உடம்புடைய யோகிகடா முற்றசிற் றின்ப - மடங்கத்தம் பேரின்பத் தாக்கி" எனவும், "காணுங் கரணங்க ளெல்லாம்பே ரின்பமெனப் - பேணுமடியார்" எனவும் வருமித்தொடக்கத்துச் சுருதிகள் பற்பலவு முரணுமாகலின், அங்ஙனங் குற்றங்கூறுதல் சடத்துவசாதிக்கும் அறியாமைச்சாதிக்கும் வேற்றுமையறியாதார் கூற்றேயாமென் றினியாகிலும் அறிந்துகொள்ளுவீராக. "யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலின்" என்பதனுன் மாயை கன்மங்களும் ஒளிமுன் னிருள்போலச் சிவசன்னிதியி னில்லாவென்பது பெறப்படுமாலோவெனின், ஈண்டெடுத்துக்காட்டிய சுருதிகள் பலவற்றோடு முரணுமாறு அங்ஙனம் பொருள்செய்தல் பொருந்தாமையால் அதற்குத் தாற்பரியம் வேறென் றறிக.

"ஆன்மா வாணவமலத்தைப் பிடித்தான்; அது கன்மத்திலே விருப்பத்தைக் கொடுத்தது;" என்றார். 'ஆன்மா வாணவமலத்தைப் பிடிப்பானாகிற் பின்னொருகால் விடுவதுஞ் செய்குவன்; அதற்கொரு கர்த்தா வேண்டுவதில்லை. ஒருவ னின்புளதைப் பிடிப்பானொழியத் துன்புளதைப் பிடியான்; அன்றியும், மலத்தைப்பிடித்தவன் சிவத்தையும் பிடிப்பனென்று சொல்லவும் வரும். ஆன்மா மலத்தைப் பிடிப்பதற்குமுன் என்னாக விருந்தானென்று கேட்கவும் வரும். அன்றியும், கேவலத்தில் "அறிவில னமூர்த்த னித்தன்" என்றும், "தானோ மாட்டா தியானோ செய்கில - னீயோ செய்யாய் நின்மல னாயிட்டு" என்றும், சுருதியிருக்கையால், ஆன்மா மலத்தைப் பிடித்தானென்பது சித்தாந்தங்கூடாது. மலங் கன்மத்திலே விருப்பத்தைக் கொடுக்குமாகிற் காடாந்தகார நேத்திரத்திற்குப் பதார்த்ததரிசனமும், அதில் விருப்பமும், உண்டாக்கவேண்டும். அவ்வாறனுபவமில்லாமையால், அது கூடாதென வறிக. திருசியபதார்த்தத்திலே விருப்பமுண்டாவதொழிய அதிருசியத்திலே விருப்பமில்லை. ஆகையால் அவ்வாறு கூறியது. அன்றியும், லட்சணத்திலே "இருளொளிர விருண்ட" என்று சுருதியிருக்கையால், அது சடமாகையால், அடாதெனவறிக. "எண்ணரிதாய்" என்ற சுருதி யெடுத்துக்காட்டினார். அதற்குத் தாற்பரியம் அவ்வாறு கூடாது. சித்தாந்திகளைக்கேட்டால் மலைவறச்சொல்லுவார்கள்.'

'பிடித்தான் என்றது பொருந்தாது' என நமக்கு வேண்டியவாறெல்லாங்கூறி, "இருண்மலத்து ளழுந்தி" என்றற்றொடக்கத்துச் சுருதிகட்குந் தாற்பரியம் வேறு' என்றீர். ஆன்மாவினிலக்கண முள்ளவாறுணரமாட்டாமையின் அவ்வாறு கூறினீர். அம்முறைமை நுமக்கு விளங்குமாறு விரிக்கற்பாலதன்று. 'மலங் கன்மத்திலே விருப்பத்தைக் கொடுக்குமாறில்லை' என்றீர். "போத்திருத் துவத்தை நிகழ்த்தி" என்றற்றொடக்கத்துச்

சுருதிகளின் றாற்பரிய மறியாமையின் இவ்வாறு கூறினீர். ஈண்டு விரும்பப்படுங் கன்மமென்ற திதுவென்பதூஉம், முதற்கணுகாமிய மூண்டாமாறும், பிறவும், ஈன்றணியகுழவி தாய் முலைப்பாலை விரும்புமாறும், அறியமாட்டாமையின், 'அதிருசிய பதார்த்தத்தின் வைத்து விருப்பமுண்டாவதில்லை' என்று நமக்குத் தோன்றியவாறெல்லாங் குழறினீர்.

'மூன்றில் விசேடமில்லை. ஆன்மாவுக்குக் கன்மத்திலே விருப்பமுண்டாக்கினது ஆன்மாவினுடைய செயலுமல்லச், சிவன் செயலுமல்ல, மலங்கொடுத்தது. சடத்துக்கு வியாபாரமுண்டோவெனில், விடந் தீ நீர் கள்ளுப் போலுண்டென்றால், விருப்பம் ஞான செனகம்; விஷாதி பானுதியினுல் ஞானவேற்றுமை கண்டோமெனில், தனுகரணுதி வியாபாரத்தோடுங் கூடினவ னெடுத்துப்பருகல் முதலியன செய்யில் அங்ஙனஞ் சிறிது வியாபார முண்டானதுஞ் சைதன்னியத்தோடு கூடின பின்னதொழிய வேறில்லை. ஆகையாற் கன்மத்திலே விருப்பம் மலங் கொடுத்ததென்பது கூடாது.'

'விருப்பம் ஞானசெனகம்' என்றீர். அது சித்தசாதனம். ஈண்டெடுத்துக்கொண்டது விருப்பத்தைக் கொடுத்தற்கணெழுந்த விஞவிடையென்ப தாண்டே விளங்கிக் கிடப்பவும், அஃதறிந்துகொள்ளமாட்டாது, அறிந்தவர்போலப் பிதற்றினீர். 'சடத்துக்கு வியாபாரம் விடந் தீ நீர் கள்ளுப் போலுண்டென்றல் சைதன்னியத்தோடு கூடினபின்ன தொழிய வேறில்லை' என்றீர். அதுவுஞ் சித்தசாதனம். "விடம்படு மூன்றிரள் போன்றது" என்னுஞ் சுருதியின் றாற்பரியமு மறிகிலீர் போலும்.

"கன்மம் ஆன்மாவைப் பொருந்துமாறு இந்த விரண்டினுலுங் கூடாது; கர்த்தா விரக்கத்திஞலே இவன் விரும்பின சரீரத்தை விரும்பின புவனத்திலே கொடுத்து விரும்பின கன்மத்தைப் புசிப்பிப்பான்" என்று, "எண்ணரிதாய்" என்ற சுருதி யெடுத்துக்காட்டினுர். 'அதற்குத் தாற்பரியம் அவ்வாறு கூடாது; அனுதியிலே ஆன்மாவுக்கு விருப்பமுண்டானதற்கு வகையுங் கன்மமுண்டானதற்கு வகையுஞ் சொல்லவேண்டும். அன்றியும், "போகத்திற் கொள்கை யில்லான்" என்றிருக்கிறதிஞலே அவ்வாறு கூடாதென வறிக. இதற்குக் குழந்தை பிணியாளன் குருடனுவமைகள் காட்டிக், "குழந்தைக்குப் பசியே பாலின் விருப்பமுண்டாக்கினது" என்றும், "பிணியே மருந்தில் விருப்பமுண்டாக்கினது" என்றும், "குருடே கோலில் விருப்பமுண்டாக்கினது" என்றும், சொன்னுர். பாலுக்கும் பசிக்கும் சத்துரு; மருந்துக்கும் பிணிக்கும் அவ்வாறுகையாலும், குருடு அறியாமை; கோலுஞ் சடமாகையாலும், விருப்பமுண்டாகாது. ஆகையாற் குருடன் குழந்தை பிணியாள னுவமையும் உவமேயம் போனவழியே போயினது.'

'அனுதியி லான்மாவிற்கு விருப்பமுண்டானதற்கும் கன்மமுண்டானதற்கும் வகைசொல்லவேண்டும்' என்றீர். பரிபாகமுடையார்க்கன்றிச் சித்தாந்த விரோதிகட்கு வகைசொல்லார்களென்ப தறிந்துவைத்தும், 'வகைசொல்லவேண்டும்' 'வகைசொல்ல வேண்டும்' என்று குரங்கெறிவிளங்காய்போலக் கேட்பா ஞெருப்படுகின்றீர். இதுநிற்க. "போகத்திற் கொள்கை யில்லான்" என்றெடுத்துக்காட்டியது சித்தசாதனம். அஃதிவ்வசனத்தோடு முரணுதற்கு ஒருவாற்ருனு மியைபில்லை. ஈண்டுக் கூறிய நுட்பப்பொருள் வழிபடுமுறையில் வழிபட்டுக்கேட்டால் இனிது விளங்கும். 'பசி பிணி குருடுகள் பால் மருந்து கோல்கட்குப் பகைப்பொருள்களாகலானும், சடமாகலானும், அவையவற்றின் விருப்பமுண்டாக்குமாறில்லை' எனவும், 'இவ்வாறே மலமுஞ் சரீரகன்மங்களின் விருப்ப

முண்டாக்குமாறில்லை' என்வும், கூறினீர். பனி மிகுதியின் வெயிலை நாடுதற்கு ஏதுவாய் நின்ற தியாதெனச் சிறுமகாரைக் கேட்பினும் இப்பொரு ளுமக் கவு ரறிவுறுத்துவர். இன்னகாரியநிகழ்ச்சிக்கு, இன்னது காரணம், இன்னது கரணம், இன்ன தேதுவென்பன வறியாமையின், அறிவென்று மருள்கொண்ட நீர் கூறுவனவெல்லா நும்மனோர்க்கே யொப்பாம். இதுநிற்க. பகைப்பொருளுஞ் சடமுமாதலைபற்றி ஈண்டிவ்வாறு கூறிய நீர், முத்திநிலையில் "இன்பங் கொடுத்தலிறை யித்தைவினை வித்தன்மலம்" என்னுஞ் சுருதிக் கிவ்வளவினன்றிப் பெரிதுங் குற்றங் கூறுவீர் போலும். அதன்றாற்பரியந்தா னறிதற்கு நீர் யார்?

"இச்சித்த கன்மம் புசிக்கிறதற்குத் திருட்டாந்தங், குருடன் முதல்வனொழியக் கோல்கொடுத் திழுக்கிறவன் முதல்வனல்லன். அதுபோல ஆன்மா முதல்வனொழியச் சிவன் முதல்வனல்லன்" என்றார். 'ஒருவனுக்குப் புத்திரனுண்டாகவேண்டுமென் றிச்சையிருக்சப் பெண்டாட்டி செத்துப்போ யழக்கண்டோம். ஆகையால், ஆன்மா முதல்வனல்லன்.'

"இச்சித்தவாறே கூட்டுவன்" என்ற வசனத்துக்குத் தாற்பரியமறியாது, 'ஒருவனுக்குப் புத்திரன்வேண்டுமென் றிச்சையிருக்கப் பெண்டாட்டி செத்துப்போ யழக்கண்டோமாகையால், ஆன்மா முதல்வனல்லன்' என்றீர். "வேண்டுவார் வேண்டியதே யீவான் கண்டாய்" "கருத்தறிந்து முடிப்பான் றன்னை" "புக்குழிப் புக்குப் பெயர்த்துழிப் பெயர்த்து" "என்வழி நின்றன னெந்தை யன்றே" என்றற்றொடக்கத்துச் சுருதிகளையு மிவ்வாறுசங்கித்துக் குற்றங்கூற மறந்துவிட்டீர் போலும்.

"சிவன் ஆன்மாவுக்குச் சரீரம்படைக்குமிடத்து, ஆன்மாக்கள் நினைவின்படியே படைப்பான்; குயவன் கொள்வோர் நினைவின்படி பாண்டம் வனைதல்போல" என்றார். 'ஆன்மாக் கேவலியாயிருக்கையில் இன்ன கன்மஞ் செய்தேன்; அதற்கின்னபுவனத்தில் இன்னதனு வுண்டென் றெப்படி யறிவான்? அவனினைவின்படி சிவனதனை யுண்டாக்குவதெப்படி? அன்றியும், சிவனனேக விசித்திரங்களாயிருக்கிற தேகத்தை வெகுவாயுண்டு பண்ணி யோரிடத்திலே வைத்துக்கொண்டு இருக்க, ஆன்மாக்களெல்லாரும் போய்த் தங்களுக்கிச்சையான தேகத்தை யெடுத்துக்கொண்டு போகிறதாயிருந்தாற் குயவன் திருட்டாந்தங் கூடும்' என்றீர்.

'ஆன்மாவினினைவின்படி படைப்பான்' என்றதற்குத் தாற்பரிய மறியாது, இன்னகன்மஞ்செய்தேன், அதற் கின்னபுவனத்தி லின்னதனுவுண்டென்றறிவதே, ஈண்டு நினைவென்றதற்குப் பொருளாகக்கொண்ட நும்மறியாமையின் பெருமை வியக்கற்பாலதேயாம். 'குயவன் பாண்டங் கொள்வோர்க்குரிய தன்மைகள் முழுவதுந் தாட்டாந்தத்தி லின்மையிற் குயவன் திருட்டாந்தமாதல் கூடாது' என்றீர். நால்வகை யுவமங்களினியல்பு பகுத்துணரமாட்டாத நீர் இவ்வாறு பிதற்றுவதேயன்றி மற்றென்செய்வீர். இன்னுங் குயவன் திருட்டாந்தங் கூடாதென்ற நீர், "ஆரியன் குலால னுய்நின் றாக்குவ னகிலமெல்லாம்" என்றற்றொடக்கத்துச் சுருதிகளையு மிகழ்வீர் போலும். முற்றுவமை யொன்றற்குங் கூடாதென்ப தினியாகிலு மறிக.

'எட்டாவது சரி' என்றீர். நீர் எட்டாவதெனக்கொண்டது முன்னும் பின்னு நோக்குங்காற் "செழுநவை யறுவை சாணி யுவர்செறி வித்த மூக்கை-முழுவதுங் கழிப்பன் மாயை கொடுமல மொழிப்பன் முன்னோன்" என்ற சுருதிப்பொருள் போலும்.

ஏனையவற்றிற்கெல்லா மொருவாற்றானு மியைபின்றிக் குற்றம்போலச் சில குழறிய நீர், ஈண்டும் ‘உவர்சாணிக ளெத்தனை செறிவித்தும், கூறையிற் சேங்கொட்டை காட்டாமணக்குப்பான் முதலிய கறைபட்ட வழுக்குக் கழியாதிருக்கக், கூறையுடையவர்கள் பார்த்து, இப்படிக் கறையிருக்கக் காரணமென்னையென்று வண்ணானை அடித்து அபராதமும் வாங்கின தூர்தொறுங் கண்டதில்லையோ? முழுவதுங் கழிப்பனென்ற தெப்படிக்கூடும்’? என்றும், ‘இந்தக் கறையழுக்கைப் போக்கமாட்டாத வண்ணான், அடையாளம் போட்டிருக்கவுந் தெரியாம லேகதேசத்திற் புடவைமாறிக்கொடுத் தூர்தொறு மிழுப்புப்பட்ட வண்ணானுக்கு மூத்தவனேயாம்’ என்றும், ‘எல்லாம்வல்ல முதல்வனுக்குக் கறையழுக்குப் போக்கமாட்டாத வண்ணானை ஒப்புரைக்கலாமோ’ என்றும், ‘முன்னோன் மாயைகொண்டு மலமொழிப்பனாயின், ஞானமேதுக்கு? தீக்கை ஏதுக்கு’? என்று பின்னு மிந்நிகரனவாகக் குற்றங்கூற வறிந்திலீர் போலும். இதற்கு மிவ்வாறெல்லா முகரோம முறுக்கிக்கொண்டு குற்றங்கூறப்புகுந்தே, நடுவே துச்சகுனம்போலச் சுருதி வந்து நேரிட்டது கண்டு, பேசமாட்டாமற் பிட்டுத்தின்று விக்கினாற்போ னின்றுவிட்டே மென்பீராகில், ஏனையவற்றிற்கு மிவ்வாறே சுருதி யுண்டென்ப தறிந்துகொள்ளமாட்டாது, நும்மறியாமையை வெளிப்படுத்தினீர். இன்னும், சுருதிகண்டவழிக் குற்றமில்லையெனக்கோடலுஞ், சுருதிகாணாதவழிக் குற்றமெனக்கோடலுமேயன்றி, ‘இதுதகும்; இது தகாது; தக்கவற்றிற்கெல்லாஞ் சுருதியுமிருக்கும்; அஃதெங்குள்ளதோ? நமக்குத் தெரியவில்லையென் றறிந்துகொள்ளு நடுவுநிலைமையின்றி, நீரறிந்த சுருதிமாத்திரையிற் பட்சபாதம்பண்ணி, நும்மறிவிற்குப் புலப்படாதவற்றை யிகழ்தல் நுமக்கே தகும். இவ்வாறே யின்னு மாண்டாண்டுச் சிலவற்றைச் ‘சரி’ யென்றும், சிலவற்றை ‘விசேடமில்லை’ என்றும், சிலவற்றைப் ‘பசையில்லை’ என்றும், நீர் கூறுங் கூற்றெல்லா நும்மறியாமைப் பசையேயாம்.

“மலபரிபாகமாவது ஆன்மாவுக்குப் பக்குவம் வந்தகாலத்தில் மலசத்தி ஆன்மஞானத்தை மறையாதிருத்தல். பரி உபசர்க்கம். பாகந் திரிவு” என்றார். ‘திரிவாவதொன்றொன்றாகிறது. அந்த லட்சண மலத்தினிடத்திலே காணோம். ஆகையால், இவர் சொன்ன மலபரிபாக லட்சணங் கூடாது’ என்றீர்.

“மலபரிபாகம்” என்புழிப் பாகந் திரிவென்று பொருள் கூறியதாக வெழுதினீர். அவ்வா றொருவருங் கூறார். நீர் சொல்லக் கேட்டோம். அன்றியும், அங்ஙனம் பொருள் கொள்ளினும் அதனாற்போந்த விழுக்கென்னை? முன் னறிவுமுழுதினையு மறைக்குமெனப் பட்ட மலசத்தி, பின் மறைக்கமாட்டாதாய் வேறுபடுமென்பது, நும்மனோர்க்குக் கருத்தன்று போலும்.

“சத்திநிபாதமென்பது மலநீங்கின வுயிரிலே சிவசத்தி விளங்கித் தோன்றல்” என்றார். ‘சத்திநிபாதத்திலேதானே சிவசத்தி விளங்கித் தோன்றுமாகில், இருவினையொப்பு, மலபரிபாகம், ஆசிரியர் வருதல், சிரவணமுதலியன வேண்டாவாகையால், அது கூடாதென வறிக.’

“சினமருவு திரோதாயி கருணை யாகித் திருந்தியசத் திநிபாதந் திகழும்” என்னுஞ் சுருதிபற்றிச் சிவசத்தி விளங்கித் தோன்றுமென்றதன் றாற்பரியமுணராது நுமக்கு வேண்டியவாறே கூறினீர்.

“இருவினையொப்புக்கு லட்சணமாவது பதர் திரண முதலியவற்றுள் விருப்பு வெறுப்பின்றி உலகர் அறிவதுபோல விரும்பப்பட்ட பதார்த்தம் வெறுக்கப்பட்டபதார்த்

தம் இந்த விரண்டுமில்லாத பதார்த்தமாகிய நல்வினை தீவினை யிரண்டினும் விருப்பமற்றிருப்பதொருவழி ; மற்றொருவழி வைப்பாட்டி இல்லாளிரண்டும் விட்டதுபோலப் பாவ புண்ணியங்களைப் பற்றற விடுதல்" என்றார். 'இதற் கிருவினை யொப்பென்னுஞ் சத்தார்த்தம் விளங்குதலுஞ் சுருதி சம்மதமுமில்லை. ஆகையால், அது கூடாதென வறிக.'

'இருவினையினுஞ் சமபுத்தி நிகழ்தல்' என்றதனால, 'இருவினையொப்பென்னுஞ் சத்தார்த்தம் விளங்காது' என்றீர். நும்முடைய வெள்ளறிவிற்கு விளங்காதுதானே. சுருதி சம்மதியுள்ளது நீரறியீர். "இருவினையொப்பென்பதற்கு வினைமுதற்பொருண்மையுணர்த்துங் காரகசட்டி விரித்துரைப்பின், அவ்விருவினை யொப்புண்டாயினும், அஃதொருவாற்றானு முத்திக்குக் காரணமன்று" என விரித்தோதி மறுத்த பவுட்கரத்துச் சுருதியோடும், "இருவினை தூக்க வருவினை நில்லா-வொருவினை புரிகா விருவினை யாகா-வொப்புற மாறு செப்புக" என்ற சங்கற்பநிராகரணச் சுருதி முதலியவற்றோடு முரணி, ஈண்டைக்குப் பயன்படாமை யறிக. இனிக் காரகசட்டியை விரிப்பினும், சமபுத்தி செய்வோனறிவின்க ணிருவினையு மொருதன்மையவா யொத்தல் இருவினை யொப்பெனப் பொருடருதற் கிழுக் கென்னை ?

'கர்த்தாக் குருமூர்த்தியாய்த் திருமேனிகொண்டு வருதலுக்குப்' "பிறவா முதல்வன் பிறந்து" என்று வெகுவசனஞ் சொல்லிப், பின்னும், "மாயா வொருவன் மாயா வுருவினை யேயான்" என்ற வசனத்துக்குப் போக்குவிடமாட்டாமற், கொசுகுக் கடிக்குப் பயந்து புலியின்வாயகப்பட்ட கதைபோல "மலநீங்கின வுயிரிலே சிவஞானம் வெளிப்பட்டு விளங்குதலாலே அதுவே யாசிரியன்" என்றார். "சூரியகிரணத்தாலே யிருணீங்கின கண் மற்றொரு கண்ணுக்கு இருளை நீக்குமாகில், அது கூடும். அன்றியும், "துறந்தோர் துறப்போர் தொகை" என்றபடிக்கு மலநீங்கின வுயிர்களுக்கு மளவில்லை. மலபந்திகளாயுள்ள வுயிர்களுக்கு மளவில்லை. ஆகையால், ஒரு ஆன்மாவுக்கு ஒரு ஆன்மா வனுக்கிரகஞ் செய்யும். சிவன் வேண்டாம். பஞ்சகிருத்தியத்திலே அனுக்கிரக கிருத்தியம் ஆன்மாவுக்காகவேண்டும். ஆகையால், அது கூடாதென வறிக' என்றீர்.

"அருளுரு மன்னவ னணைந்து" என்றது மதத்துட் கூறியது. "மாயா வொருவன் மாயா வுருவினை - யேயா னேய்ந்தவ ரெம்ம ஞேரே" என்றது ஏனையபோலன்றிச் சித்தாந்த முடிவினின்று உண்மையா னிராகரிக்கு நிராகரணத்தினுட் கூறியதாகலின், அவற்றின் மென்மை வன்மைகணோக்கி நிராகரணச் சுருதிக்கேற்ப மதசங்கற்பத்திற் கூறியதற்கிணங்கிவருஞ் சுருதிக்குப் போக்குவிடுவதன்றி, மதசங்கற்பச் சுருதிக்கேற்பச் சித்தாந்த முடிவினின்று நிராகரிக்கு நிராகரணச் சுருதிக்குப் போக்குவிடுதல் பொருந்தாதென் றறியாது, "அருளுரு மன்னவ னணைந்து" எனச் சங்கற்பத்துட் கூறியதே முக்கியப்பொருளெனக்கொண்டு, "மாயா வொருவன் மாயா வுருவினை - யேயா னேய்ந்தவ ரெம்ம ஞேரே" என நிராகரணத்துட் கூறுஞ் சுருதிக்குப் போக்குவிடுதலே பொருத்தமுடைத்தென மாறிக்கொண்ட நீரே, சுருதிகட்குத் தம்முட் பிரபல துர்ப்பலங்க ளறியமாட்டாது, மசகக்கடிக்கஞ்சிப் புலியின் வாயகப்பட்ட கதைக்கிலக்காயினீர். 'சிவஞானம் வெளிப்பட்டு விளங்குதலாலே யதுவே யாசிரியன்'எனவே, அங்ஙனம் வெளிப்பட்டு விளங்கிய சிவஞானமே யனுக்கிரகிப்பதன்றி, ஆன்மா வனுக்கிரகிக்க மாட்டாதென்னும் பொருள் எல்லார்க்கு மினிது விளங்கக்கிடந்தது. நுமக்கு மாத்திரந் தெரியாதுபோதற் கேதுவாய்ப் பொதிந்து நின்ற நும்மறியாமையின் பெருமை வியக்கற்பாலதேயாம். சிவ

ஞானம் வெளிப்பட்டு விளங்கிய வான்மாமாட்டு நிகழும் வியாபாரமெல்லாம் பேயாவேசிக்கப்பட்டவன்மாட்டு நிகழும் வியாபாரம்போலும் என்பது, "பதார்த்தங்கள் பாரார்" "பரமே பார்த்திருப்பர்" எனப்பட்ட மெய்ஞ்ஞானிகள் நிற்குநிலை யறியமாட்டாமல் அஞ்ஞான விகற்பத்தான் மாறுகொண்டு பிணங்குகின்ற நீர் அறிதற்கு யார்?

"சீடனுக்கு ஆசாரியர் வருமுன் மலநீங்கும். பின் னாசிரியர் வந்து பதார்த்ததரிசனம் பண்ணுவிப்பர். படலம் நீங்கினகண்ணுக்கு ஆதித்தன் காட்டுமாறுபோல" என்றார். 'படலம் நீங்கினகண்ணுக்கு ஆதித்தன் காட்டவேண்டிய தென்னை? அத்தகைமை ஆசிரியர் மலநீங்கினபின் வந்து செய்யவேண்டிய தென்னை? இதற்குச் சுருதி சம்மதியில்லை.' அன்றியும், "ஐம்புலவேடரின்" என்றும், "மன்னவன்றன்மகன்" என்றும், "அன்றுமுதலின்றளவும்" என்றும், "படைத்தளித்தா ரென்றன் பாசம்" என்றும், "மற்றிவர் வடுப்படுமுன்" என்றும், "நெருப்பிலிடு வெண்ணெய்" என்றும், இது முதலியன வின்னுமனேக வசனமிருக்கையால், அது கூடாதெனவறிக.'

'படலநீங்கின கண்ணுக்கு ஆதித்தன் காட்டவேண்டியதென்னை' 'அத்தகைமையாசிரியர் மலநீங்கினபின் வந்து செய்யவேண்டிய தென்னை' என்றீர். எனவே, மலநீங்காத வுயிர்மாத்திரமே அறிவிக்க வறியுமியல்பிற்று; மலநீங்கினவுயி ரவ்வாறன்றித் தானே சுதந்திரமாயறியு மியல்பிற்றெனச் சிவசமவாதி கூறுமதமாகலின், இது சித்தாந்தசைவத்திற் கடாது. குருடன் ஆதித்தனில்லையென்பதுபோல நீரிதற்குச் சுருதி சம்மதியில்லையென்றது நும்மறிவின்மைக்குத் தகும். கண்ணுடையோர் ஆதித்தனுண்டெனக் காண்பதுபோல அறிவுடையோர் இதற்குச் சுருதியுண்மை யறிந்துகொள்வர். இன்னுங் கலையுண்மைக்கும் வித்தையுண்மைக்கும் பிரமாணங்கூறிய பவுட்கரவாக்கியத்தின் றாற்பரியமறியவல்லார்க்கு இவ்வுண்மையு மினிது விளங்கும். அன்றியும், "ஐம்புலவேடரின்" என்றற்றொடக்கத்தான் நீர்காட்டிய சுருதிகளே விருத்திரன் வாய்மொழிபோல நும்முரணை யறுக்குங் குலிசப்படையாம். இதுநிற்க. சத்தி நிபாத நால்வேறுவகைப்பட நிகழ்வதற்கேது வென்னையெனச் சத்தி பதிக்குந்தரமு மாராய்ந்தறிந்தவரல்லீர். இவையெல்லாம் வழிபட்டுக் கேட்டா லினிது விளங்கும்.

'பதினன்கு பதினைந்தில் விசேடமில்லை. பதினாறில் பஞ்சகிருத்திய நித்தியமென்பதற் கெடுத்துக்காட் டுதாரணம் பிசகு.'

'பதினாறில் பஞ்சகிருத்திய நித்தியமென்பதற் கெடுத்துக்காட்டிய சுருதி பிசகு' என்றது பெரும்பிழை.

'பதினேழில் விசேடமில்லை.பதினெட்டில் பஞ்சகிருத்தியத்துக்கு அர்த்தம்பண்ணினதில்"அனுக்கிரகம் புண்ணியபாவங் கழித்தல்"என்றார்'என்றீர். அனுக்கிரகத்துக்கு ஈண்டவ்வாறு பொருள் கொள்வார் யாருமில்லை. இனிப் புண்ணியபாவங்களைக் கழித்தலும், அனுக்கிரகத் தொழிலினிடங்குவதன்றி மற்றொருதொழிலினு மடங்காதென்பது "முயங்கிரண்டு போகத் - திறமதனால் வினையறுக்குஞ் செய்தியாலே சேருமனுக் கிரகமெலாங் காணுதுநாஞ் சிவற்கே" என்னுஞ் சுருதியான் விளங்கக்கிடத்தலின், ஆண்டிழுக்கென்னையென் றொழிக.

'பத்தொன்பதில் விசேடமில்லை.' "ஆன்மா நரகவேதனை படும்போது விட்டுநீங்காத சிவனுக்கு முண்டாமாறில்லை; ஒருவன் வயிற்றிற்கிடக்கிற புழுப்படுந்துன்பம் அவனு

க்கில்லாதது போல" என்றார். 'வயிற்றுக்கும் புழுவுக்குஞ் சம்பந்தமொழியப் புழுவுக்கு
மான்மாவுக்குஞ் சம்பந்தமில்லை. அன்றியும், புழுவை யான்மா வறியாது. ஆன்மாவைப்
புழுவறியாது. சிவனான்மாவை யறிவார். ஆகையால், அது அர்த்தமல்ல என்றறிக.'

ஒருவன் வயிற்றுட்கிடக்கும் புழுப்படுந்துன்பம் அவனுக்கில்லாததுபோல ஆன்
மாப் படுந்துன்பஞ் சிவனுக்கில்லையெனக்காட்டிய வொருபுடையுவமையை முற்றுவமை
யெனக் கொண்டு நுமக்கு வேண்டியவாறெல்லாங் கூறினீர். "உன்னுதரத் தேகிடந்த
கீடமுறு வதெல்லாம்" என்ற சுருதியையும் இவ்வாறிகழ்வீர் போலும். நும்மறிவிருந்தவா
றழகிது!

"கிஞ்சிக்ஞ னான்மா" என்றது கொண்டு கொஞ்சவறிவென் றர்த்தம்பண்ணி,
"அதைக்கொண்டு, சிவத்தை யறியலாமே"என்றும்,"சுதந்திரவீனனென்றால் அச்சுதந்திர
முள்ள சிவன் அறிவித்ததையெல்லா மேககாலத்திலே யறியவேண்டும்"என்றும், "அஃதில்
லாததினாலே கிஞ்சிக்ஞத்துவத்தையுடைய சுதந்திரவீனன்" என்றும், சொன்னார். 'கொ
ஞ்சவறிவுகொண்டு சிவத்தை யறிவனென்னிற், "பாசஞானத்தாலும்" என்கிற சுருதி யறி
யாராகிலும், சுதந்திரமுள்ளவன் அறிவித்ததையெல்லா மேககாலத்திலே யறியவேண்டு
மென்பதற்குக் "காமியத்துக் கேயக்கை கான்முதலா" என்ற சுருதி யறியாராகிலும்,
கிஞ்சிக்ஞன் சுதந்திரவீனனென்கிற சத்தார்த்த வேறுபாடு நன்றாக விசாரித்தவரல்லர்.
அன்றியும், "விரிந்திடு மறிவுங் காட்டி வீட்டையு மளிப்பன்" என்ற சுருதிப்படிக்கு
முத்திக்காலத்திலே சர்வவியாபகமாயிருக்கிற சிவனை யறிவானாகையால், இவர் கொஞ்ச
வறிவென்ற தெப்படிக்கூடும்?'

"ஆன்மாப் பெத்தத்திற் சிற்றறிவும் பரதந்திரமு முடையன்; முத்தியின் முற்றறி
வுஞ் சுதந்திரமு முடையன்" என்னுஞ் சுருதியும், "முத்தியினுஞ் சிற்றறிவும் பரதந்திர
முமே யுடையன்" என்னுஞ் சுருதியும் தம்முண் முரணாதவாறு பொருளொருமை யுணர்ந்
தேகவாக்கியத்தைச் செய்துகொள்ளமாட்டாது, ஒருபாற்கோடி முரணுஞ் சிவசமவாதி
கள் மதத்தில் வீழ்ந்து, 'முத்திக்காலத்திலே சருவவியாபகமாயிருக்கிற சிவனை யறிவானா
கையாற் சிற்றறிவாயினது கூடாது'என் றிவ்வாறு கூறி மறுப்பவே,'ஆன்மாத் தன்னறி
வுகொண்டே சிவத்தை யறிவன்' என்றும், 'அறிவித்ததெல்லா மேககாலத்திலே யறி
யாமை "காமியத்துக்கேய" எனவே அல்லுழியெல்லா மொருங்கே யறியுந் தன்மையனே
யாம்' என்றும், 'முத்தியிற் சருவவியாபகமாய் நின்றறிதலே பற்றிச் சிற்றறிவனென்பது
கூடாது' என்றும், பிதற்றினீர். இதற்கேற்ப முன்னும் 'படலநீங்கின கண் காண்டற்
காதித்தனுபகாரம் வேண்டாம்' என்றீராகலான், நீர் சிவசமவாதிக்குச் சேட்டரோ கனி
ட்டரோ வாதல் வேண்டுமென்ப தறிந்தோம். "தன்னறி வதனா லேதுந் தனக்கறி வில்லை
யேனும்" என்றும், "சிவமுதலே யன்றிமுத லில்லை" என்றும், "பொறியின்றி யொன்
றும் புணராத புந்திக்கு" என்றும், "தன்னைநான் காணிற் றனித்த *முத லல்லனே" என்
றும், இவ்வாறு வருஞ் சுருதிகளின் றாற்பரிய மறியமாட்டாத நீர், மற்றென் செய்வீரென்
றொழிக. 'சிற்றறிவுகொண்டு சிவத்தையறியும்' எனக் கூறுவார் ஈண்டியாரு மில்லை.

"ஆன்மா மோட்சத்தைக் கெட்டுங் கூடான்; கெடாமலுங் கூடான். பின்னையெப்
படியென்னில், விடயங்களிலே செல்லுகிற ஆன்மபோத நிகழ்ச்சி கெட்டுக் கூடும்" என்
றார். 'அப்படியாகில், விடயங்களிலே செல்லுகிற ஞானம் வேறு; அருளோடுங் கூடிநிற்
கிற ஞானம் வேறாக வேண்டும். ஆகையால்,அது அர்த்தமல்ல.'

* முதலல்லவே யென்பதூஉம் பாடம்.

"விடயங்களிற்செல்லு மான்மபோத நிகழ்ச்சிகெட்டுக் கூடும்" என்றாரென்றும், 'அப்படியாகில் விடயங்களிற்செல்லு ஞானம் வேறு, அருளோடு கூடிநிற்கு ஞானம் வேறாதல் வேண்டும்' என்றும், கூறினீர். விடயங்களிற் செல்லு மான்மபோதநிகழ்ச்சி கெட்டுக் கூடுமென்றாலும், அதுபற்றி விடயங்களிற்செல்லு ஞானம் வேறு, அருளோடு கூடிநிற்கு ஞானம் வேறெனப் பொருள்படுதற்கு, ஒருவாற்றானு மியைபில்லையென்ப தறியாது, நுமக்கு வேண்டியவாறே கூறினீர்.

'இருபத்திரண்டு, இருபத்துமூன்று சரி.' 'ஆன்மவியாபகத்துக்குக் கண்ணை உவமையாக விரித்துக் கூறினர். கண்ணுக்குச் சூரியகிரண முதலிய வாலோக சகாயத்தினாலே காணுங் குணமொழிய ஆன்மாவைப்போல விபுவல்லவென வறிக.'

'கண் ணான்மாவைப்போல விபுவல்லவாகலாற் கண் ணுவமை கூடாது' என்றீர். சூரியனுஞ் சிவனைப்போல வியாபகமன்மையாற் சிவனுக் குவமையாதல் செல்லாதெனல் வேண்டும். சூரியன் றன்கிரணம் வியாபிக்குமிடமளவும் வியாபகமாதல் கூடுமாகலின், ஒருபுடையொத்தல்பற்றிச் சிவனுக்குவமையாதல் கூடுமெனின், கண்ணு மவ்வாறே கண்ணொளிசென்று வியாபிக்குமிடமளவும் வியாபகமா மாதலின், ஒருபுடையொத்தல்பற்றி ஆன்மாவிற் குவமையாத லமையுமென் றறிந்துகொள்ள மாட்டீராயினீர். சைவசித்தாந்தத்திற் கூறுங் குணகுணி விவகாரமறிந்தீராயின், இவ்வாறு குழறுவீரல்லீர்.

"ஆன்மா விபுவாகவிருந்தும் பற்றுதற்குப் படிகமலை அக்கினிமலை திருட்டாந்தமாம்" எனச் சொன்னார். 'படிகமலைக்குப் பற்றுங்குணமும் அக்கினிமலைக்குச் சுடுங்குணமும் பிரகாசகுணமுமொழிய அறியுஞான மில்லை.' அன்றியும், "படிகமலை எந்தத்திசையிலே வன்னம் வந்தாலும் பற்றுதல் போலவும், அக்கினிமலை எந்தப்புறத்திலே பஞ்சைக் கொடுத்தாலுஞ் சுடுதல் போலவும், ஆன்மா எல்லாப்புவனங்களிலும் வியாபகமானதினாலே எந்தப்புவனத்திலே சரீரம் வந்தாலும் அங்கே யறியும்" என்றார். 'சிருட்டிகாலமுதற் சங்காரகாலமட்டும் புரியட்டக தேகநிட்டமாக வான்மஞானமிருந்து கேவலஞ் சுவர்க்க நரக பூமிகளில் அனுபவமுறும்' என்று சுருதி யிருக்கையால், இவர் மாறுபாடாகச் சொல்லுகைக்குச் சுருதி யில்லை. ஆகையால், அது கூடாதென வறிக.'

முந்தியசிருட்டியில் விபுவாகிய வான்மாப் புரியட்டக சரீரபேதங்களைப் பற்றுதற்கே படிகமலை யக்கினிமலை உவமை சொன்னதென்ப தாண்டே விளங்கிக்கிடப்ப, அஃதறியாமையான் நுமக்கு வேண்டியவாறெல்லாங் கூறினீர். அன்றியும், 'படிகமலை யக்கினிமலைக்குப் பற்றுங்குணமுஞ் சுடுங்குணமும் பிரகாசகுணமுமொழிய அறியுங்குணமில்லை. ஆகலால், ஈண்டைக்குவமையாதல் கூடாது' என்றீர். பற்றுதற்கேயன்றி யறிதற்கு மவை யுவமையெனக் கொள்ளினும், ஆண்டிழுக்கென்னை? உவமான உவமேய சாதாரண தன்மங்களினியல்பும் விம்பப்பிரதிவிம்பபாவமென் றலங்காரநூலார் கொண்ட சங்கேதமுமறியமாட்டீராயினும், "ஓரிடத் துணரு முண்மை யொளிதரு முபலம் போலும்" என்றற்றொடக்கத்துச் சுருதிப்பொருளு மறியமாட்டாத நும் அறியாமை அறிவுபோலப் பரிணமித்து நும்மை இவ்வாறெல்லாம் பிதற்றுவித்தால் நீரென்செய்வீரென் றொழிக.

'இருபத்தாறு சரி.' "சகலபுவனத்திலிருக்கு மான்மாக்களுக்கும் அறிவுந் தொழிலுங் கொடுக்கிறதினாலே சிவன் வியாபகன்" என்று சொன்னார். 'சர்வசங்காரகாலத்திலே சகல புவனங்களு மொடுங்கிப் போகையால், ஆன்மா வெங்கே தங்கும்? சிவனுக்கு வியாபகமு

மில்லையாய்விடும். இப்படி வெகுதோடமிருக்கையால், அது கூடாதெனவறிக.' "அள வில்லாத வான்மாக்களுக்கும் அறியாமை இருக்கையினாலே ஆணவமலம் வியாபகமாம்" என்றார். 'முத்தியடைந்தபேர் வெகுவானதினாலே அவர்களுக்கு மலபந்தமில்லாததினாலே மலத்துக்கு வியாபகத்துவங் கூடாதென வறிக.' "எண்ணிறந்தகோடி புவனத்திலிருக்கும் எண்ணிறந்தகோடி யான்மாக்களுக்குந் தனுகரணாதி யிருத்தலால், மாயை வியாபகம்" என்றார். 'எனவே, புவனம் வேறாயிற்று. அன்றியும், முத்தருக்கில்லை. அதுவன்றியும், சங்காரகாலத்தில் மாயை யில்லை. அன்றியும், புவனத்திற்கும் அள வில்லை. ஆன்மாக்களும் அவ்வாறாகையால், ஒருபுவனத்துக் கோரான்மா விருக்குமென்றாயிற்று. அன்றியும், அத்துவாசோதனை பண்ணுமிடத்துக் * கெணனையி லடங்காதாகையால், இது முதலியன தோட மிருக்கையால், அது கூடாதென வறிக.' "எண்ணிறந்தகோடி யான்மாக்களுக்கு மெண்ணிறந்தகோடி புவனத்திலே புசிப்பிருக்கையினாலே கன்மம் வியாபகம்" என்றார். 'முத்தியடைந்த வான்மாக்களுக்குக் கன்மமும் புவனமு மில்லை.' அன்றியும், 'அத்துவா வாறு' என்றும், 'புவன மதற்கு ளடங்கும்' என்றும், 'சர்வான்மாக்களுடைய கன்மம் அதிற் கட்டுப்படும்' என்றும், 'அதிற் சுத்திபண்ணப்பட்ட வான்மாவுக்குக் கன்மபந்தமில்லை' என்றும், "மந்திரங்கள் முதலைந்துங் கலையைந்தில் வியாத்தி" என்றும், வெகு வசனமிருக்கையால், எண்ணிறந்தகோடி புவனமென்பதற்கும், அத்துவசுத்தியி லந்தப் புவனம் எல்லாமடக்கிச் சுத்திபண்ணுகைக்கும், சுருதிகாட்டவேண்டும். அப்படி யில்லாத படியால், அது கூடாதென வறிக.'

'சகலபுவனங்களு மொடுங்கிப்போகையில் ஆன்மா வெங்கே தங்கும்?' என்றீர். சகலபுவனங்களு மொடுங்கி எங்கேபோம்? சற்காரியவாதமு மறியீர். அன்றி யசற்காரிய வாதங் கொள்ளினும் அதனால் ஈண்டிழுக் கென்னை? 'சகலபுவனத்திலிருக்கு மான்மாக்களுக் கறிவுந் தொழிலுங் கொடுக்கிறதினாலே சிவனுக்கு வியாபகம்' என்றது முதல் 'எண்ணிறந்தகோடி யான்மாக்களுக்கு மெண்ணிறந்தகோடி புவனத்திலே புசிப்பிருக்கையினாலே கன்மம் வியாபகம்' என்பது வரையுந் தூலாருந்ததி நியாயமாய்க் காணப்பட்டு நிகழு நிகழ்ச்சிகொண்டு, காணப்படாத பொருளைத் தெரிவித்தல் சிவாகமங்களின் றுணி பென்னு முறைமைபற்றிக் கூறியதென்றறியமாட்டாது, ஏதேதோ குழறிய நீர், "இல தென் றலி னுன்மா வுளது" "எனதுட லென்றலி னுன்மா வுளது" என்றாற்போல்வனவற்றையும், "சகசரு மத்தின் மிகத்திக ழிறையை - யாராய் பென்ன வணிகிள ருலக-மோருபா தான மின்றெனி னின்று" "வியாபி - யன்றெனின் வினைமற் றெங்கணு மார்தல் - கூறுந்" என்றற்றொடக்கத்தனவற்றையும், இவ்வாறு குற்றங்கூறி இகழ்வீர் போலும். இன்னும், இவ்வெள்ளறிவுகொண்டு, புகையுண்மையாற் றீயுண்டென்றவழிப், பின்னர்ப் புகைமாறிப்போதலின், அப்பொழுது தீயில்லையாதல் வேண்டுமாகலின், அனுமானவளவையே கூடாதென உல்காயதனுக்குத் துணையாய்க் கூடிநின்று குற்றங்கூறவும் வல்லீர்போலும். 'முத்தருக்கு மலபந்தமில்லாததுகொண்டு மலத்துக்கு வியாபகத்துவங் கூடாது' என்றீர். "† ஒளிவற நின்றக் கண்ணும் விளிவுறு-தன்னுடைக் காலந் துன்னிற் பின்னிடும்-வலியின் றெருகுதித்து" என்றதன் முற்பரியமு மறியீர் போலும். 'எண்ணிறந்தகோடி புவனங்களிலே யிருக்கிற வெண்ணிறந்தகோடி யான்மாக்களுக்குந் தனுகரணாதி யிருத்தலாலெனவே, புவனம் வேறாயிற்று' என்றீர். யோகவிபாகம் விபாகயோகமென்னு முறைமைகள் அறிந்துகொள்ளமாட்டாமையின், அவ்வாறு குழறினீர். 'புவனங்களுக்கு மளவில்லை; ஆன்

---

* கெணனை = எண்ணுதல். † ஒழிவறவென்பதூஉம் பாடம்.

மாக்களுக்கு மளவில்லை ; ஆகையால், ஒரு புவனத்துக்கோ ரான்மா விருக்குமென்றதாயி ற்று' என்றீர். " எண்ணிங் குயிரு-மளவி லண்டமு முளையின்றி விளைத்த" என்புழியும் இவ்வாறே குற்றங்கூறுவீராயினீர். சொற்குறிப்பறியவல்லார் நும்போல யாரையுங் கண்டிலம். 'அத்துவாசுத்தியிற் கெணனையில் அடங்காதாகையால் எண்ணிறந்தகோடி புவனமென்பது கூடாது; சுருதியுமில்லை' என்றீர். சுருதி மேற்காட்டினும். இன்னும், பற்பலவுள. அவ்வெண்ணிறந்த கோடிகளுங் கெணனையிலடங்கிச் சுத்திப்படுமாறு வழி படுமுறையில் வழிபட்டுக்கேட்டால் விளங்கும். நும்மடமை முழுவதும் வெளிப்படுக்கு மிக்குழறுபடை கிடக்க.

" சர்வான்மாக்களுக்குஞ் சிவனொருவனு யிருந்தறிவிக்கிறதற்குவமை, சகலமான கண்ணுக்கும் ஆதித்த னொருவனுயிருந்து காட்டுதலாம்" என்றீர்.'குருடு கூகைமுதலியவ ற்றின் கண்ணுக்கு ஆதித்தன் காட்டவில்லை. ஆகையால், அது கூடாதென வறிக.' "எண் ணிறந்தகோடி யான்மாக்களையு மலமொன்றுயிருந்து மறைக்கிறது, எண்ணிறந்தகோடி கண்களையும் இருளொன்றுயிருந்து மறைத்தல் போலும்" என்றீர். 'பூனை எலி முதலிய வற்றின்கண்ணை இருள் மறைக்க வில்லை. அன்றியும், சூரியவுதயமானவுடனே ஒருகண் ணுக்கு இருள் நீங்கும்பொழுது எண்ணிறந்தகோடி கண்களிடத்திலேயும் இருக்கிற விருள் விட்டு நீங்குகிறதுபோல, ஓரான்மாவிடத்திலிருக்கும் மலநீங்கும்பொழுது சர்வான்மாக்க ளிடத்திலிருக்கும் மலநீங்க வேண்டும்.அஃதில்லை. ஆகையால், கூடாதென வறிக.' "எண் ணிறந்தகோடி யான்மாக்களுக்கு மெண்ணிறந்தகோடி கன்மங்களைச் சிவனொருவனுயிரு ந்து அறிந்து கூட்டிமுடிக்கிற தெப்படியெனில், ஒருவண்ணன் அவனூரிலுள்ள பலபெய ருடைய் புடவைகளையும் வாங்கி வெளுத்துப் பின் கொடுத்தல் போலும்; ஊர்க்காலி ஆயனுனவன் பலபெயருடைய வாக்களை மேய்த்துப் பின் சாயங்காலம் அவரவர் வீட்டில் விடுவது போலும்" என்றீர். 'அந்த வண்ணன் சேங்கொட்டைப்பாலால் அடையாளம் போட்டிருக்கவும், ஒருவர் புடவையை மற்றொருவருக்குக் கொடுத்து, மற்றொருவர் வந்து தம் புடவையைக் கேட்டவிடத்து, இவர் புடவையென்று முந்தினவர் புடவை யைக் கொடுக்க, இஃதெம்புடவை யன்றென்று சொல்லி, வண்ணனும் புடவைக்காரரும் இழுப்புப்பட்டது ஊர்தொறுங் கண்டதில்லையா? அன்றியும், இடையன் சில மாடு தப்பிப் போனது தெரியாதிருக்க, அந்த மாட்டுக்காரர் வந்து இடையனைக்கேட்க, இடையன் தேடி யோடி மூலைக்குமூலை யவதிப்படுவது ஊர்தொறுங் கண்டதில்லையா ? அன்றியும், திருவாவடுதுறைக்குச் சமீபத்திற் சாத்தனூர் ஆயன் மறித்ததறிந்து, திருமூலர் நிரைமேய் த்த கதையும் இதனை யறிவிக்கும். ஆதலால், அது கூடாதென வறிக.'

'குருடு கூகை முதலியவற்றின் கண்ணுக்குஆதித்தன் காட்டவில்லை.ஆகையாற்''கண் கட் கெல்லா-மிருளினை யொளியா லோட்டு மிரவியைப் போல வீசன்'' உயிர்கட்கெல்லா மறியாமை நீக்கி யறிவிப்பான் எனச் சூரியனைச் சிவனறிவித்தற் குவமை கூறுதலும், பூனை எலி முதலியவற்றின் கண்ணை யிருண் மறையாமையானும், சூரியனுதயமான வழி யொருகண்ணுக்கு இருணீங்கும்பொழுதே எண்ணிறந்தகோடி கண்களுக்கும் இரு ணீங்குவதுபோலத் தாட்டாந்திகத்திற் கூடாமையானும், இருளை மறைத்தற் குவமை கூறு தலும், வண்ணன் அடையாளம் போட்டிருக்கவும் அறியமாட்டாமற் புடவை மாறிக்கொ டுத்து ஊர்தொறு மிழுப்புண்ணவும், இடையன் சில பசுக்கடப்பிப்போனது தெரியாமல் ஊர்தொறுந் தேடியலையவும், திருமூலர் மேய்த்தநிரை தாமே யவ்வவிடங்களிற் செல்ல வுங் காண்டலால், வண்ணு னிடையனைச் சிவன் அவரவர் கன்மங்களையறிந்து கூட்டி

முடித்தற் குவமை கூறுதலும், கூடா' என்றீர். இவ்வாறே "இரும்பைக் காந்தம் வலித் தாற்போல்" என்புழியும், 'காந்த மிரும்பை வலித்துக்கோடல் வேறொருவன் நேரொக் கப் பிடித்தாலன்றிக் கூடாது. அதுபோல உயிரை ஈர்த்துக்கோடற்குச் சிவனை வேறொ ருவரெடுத்து நேரொக்கப் பிடிப்பாருண்டோ? அன்றியும், காந்தமு மிரும்பு மேகதேசப் பொருளாய் வேறு நிற்றலின் வலித்தல் கூடும். அவ்வாறு சிவனு மான்மாவு மேகதேசப் பொருளாய் வேறுநிற்குமோ? இன்னும், காந்த மிரும்பை வலித்துக்கொள்ளுது மென்றறி யமாட்டாது. அதுபோலச் சிவனுக் கறிவில்லையோ? இன்னும், காந்த மிரும்பை வலித் துக்கொள்ளுதன் மாத்திரையேயன்றி அதன் கறையைப் போக்கமாட்டாது. அதுபோலச் சிவ னியைதன்மாத்திரையே செய்வதன்றி ஆன்மாவின்கண்ணதாகிய வஞ்ஞானத்தைப் போக்குமாறில்லையே! அன்றியும், காந்தத்தை யுவமை கூறுதன் மாயாவாதி முதலியோர் மதமாகவைத்து, "மன்னயக் காந்த மெனவுடல் பிரம - சன்னிதி யளவிற் சலித் திடு மாயி - னகண்டிதன் சன்னிதி யலதில தெவையு - நடந்திட வேண்டுங் கிடந்திடப் பெறுதே - காந்தத் திரும்பு காட்டோர்ப் பெறிலயஞ்-சேர்ந்திடு நீக்குஞ் செயலதற் கிலதே" என் றிவ்வா றுண்டாண்டு மறுத்திருப்பவும், அதனை யீண்டுவமை கூறுதல் பொருந்து மோ?' என் றிவ்வாறே யின்னும் பலவாக வாசங்கித்து, இதுபோல வேனை யுவமைகட் குங் குற்றங்கூறி, "இரும்பைக் காந்தம் வலித்தாற் போல்" என்ற திருவிருத்த முழுவதை யும், "காந்தங் கண்ட பசாசத் தவையே" என்றாற்போல்வனவற்றையும் மறுத்துச், 'சித் தாந்தத்திற் கடா' எனத் தள்ளுவீர்போலும். 'கண்சட்குக் காட்டும்' என்ற சூரியன் முதலிய வுவமைகளோடு இவற்றிடை வேற்றுமை யின்மையின், அவற்றை மறுத்த நீர் இவற்றையு மறுப்பீரேயாவிர். ஆகலின், அருணந்திசிவாசாரியர் முதலியோர் அறிவினை யுங் கடந்து மேற்பட்ட நும்மறிவின் பெருமை வியக்கற்பாலதேயாம்!

"வினை வேறு. கன்மம் வேறு. வினையாவது அனுதியிலே ஆணவமலத்தினலே ஆன்மாவுக்குக் கன்மத்திலே யுண்டாய விருப்பம். கன்மமாவது புண்ணியபாவங்கள்" என்றார். 'அனுதியிலே ஆணவமலத்தினலே மறைபட்டு ஓரறிவு மில்லாமலிருக்கிற ஆன் மாவின்கட் கன்மம் எங்கேயிருந்தது? அதில் விருப்பம் எவ்வாறுண்டாயிற்று? "ஆன்மா விச்சாஞானக் கிரியாசொரூபியாகையாலே, அந்தவிச்சை பண்டபதார்த்தங்களிலே சென் று பற்றும்" என்று சுருதியிருக்கையினலே, கூடுமென்று சொல்லுவீராகில், அனுதியிலே இச்சாஞானக் கிரியையைத் தானே மல மாவரித்திருக்கிறதினலே பண்டபதார்த்த விடய மெப்படியாம்? அன்றியும், சுத்தமாயா சிருட்டியானபிறகு, அசுத்தமாயா சிருட்டியாயதன் பின், பிரகிருதி சிருட்டியுண்டானபிறகு, கலையாதி தத்துவங்களிலே யத்கிஞ்சித ஞானக் கிரியைகளுக்கு விளக்கமாய்த், தேகேந்திரி யாந்தக்கரணத்தான் விடயங்களிலே சென்றறி ந்தகாலத்துக் கன்மமென்பதொழிய, அனுதியே யுண்டாமென்று சைவசித்தாந்திகள் சொல்லார்கள். இன்னும், "அல்ல லென்செயும்" என்ற சுருதி காட்டினர். அது "கனக கிரணியம்" என்னுமதுபோலக் கன்மத்துக்குத்தானே வேறு பெயராம். "மாயைய முத லென வினையின் பான்மை முதலென" என்னுஞ் சுருதியினலு மறிக.'

'வினையாவது அனுதியிலே ஆணவமலத்தினலே ஆன்மாவுக்குக் கன்மத்திலுள தாம் விருப்பமென்றார்' என்றீர். அவ்வாறு கூறுவா ரீண்டு யாருமில்லை. எவரோ குழறு படையாக எழுதிவைத்ததொன்றனைக் கைப்பற்றிக் குற்றங்கூறப் புகுந்தீர். "பொய்யார் க்குப் பொய்யாய பொய்யினன்" என்றதுபோல நும்மறிவின் குழறுபடைக்கேற்பவே அதுவுங் குழறுபடையாய் நுமக்கு வந்து வாய்த்தது. அற்றேல், நீர் கூறுவது மவ்வாறே

பொருள்படுமாலெனின், மயக்கவறிவுடையார்க்கு அவ்வாறு பொருள்படும். யாம் வேறெனக்கொண்டவினை, "மூன்றுகுற்ற மூன்றுகுண மூன்றுமல மூன்றவத்தை - யென்று நின்று செய்யு மிருவினை" ஆகலின், அவ்வினையினியல்பறிதற்கு நீர் யார்? "இருவினைப் பாச மும்மலக்க லார்த்தலின்" என்றற்றொடக்கத்துச் சுருதிகளைக் கேட்டு மறிந்திலீர் போலும்.

"ஆன்மாப்பிராரத்தம் புசிக்கிறதற்குச் சிவன் நல்வினை தீவினையிரண்டையுங் கருவியாகக் கூட்டினான்" என்றார். 'கருவியென்பது சககாரி. நல்வினை தீவினை யிரண்டுங் கருவியானால் புசிக்கிறதெத்தை?' "இதைத் தன்னுடைய தொழிலாக நினைந்தபடியினாலே இந்த விரண்டுதொழிலும் ஆகாமியமாயின" என்றார். 'பிராரத்தந்தானே ஆகாமிய மாகாதென வறிக.'

'நல்வினை தீவினை யிரண்டுங் கருவியானாற் புசிக்கிறதெத்தை?' என்றீர். நல்வினை தீவினைகட்கும் பிராரத்தத்திற்கும் தம்முள் வேற்றுமை பெரிதாகவும், அஃதறியாது நுமக்கு வேண்டியவாறே குழறினீர்.அவ்வேறுபா டறிந்தீராயின், இவ்வாறு குழறுவீரல்லீர்.

"ஆன்மாவுக்கு முன்செய்த கன்மம் பின்னும் பின்செய்த கன்ம முன்னு மாறி மாறி வன்மை மென்மைக்கீடாக நுகர்ச்சி வரும்; பனை தென்னை வாழை கத்தரி கீரை போல" என்றார். அது தானே நியமமன்று; மென்மை வன்மையாகச் செய்திருந்தால் நேரேவரும். அப்படியாகில், சுருதி "தொடங்கடைவி னடையாதே தோன்று மாறி" என் றிருக்கிறதே யென்னில், உத்தியுத்தஞ் சோத்திராதிகம் நேரே செய்யாமல் வன்மை மென்மையாற் செய்கிற கன்மத்துக் கவ்வசனமொழிய, மற்றப்படி கூடாதென வறிக' என்றீர்.

"தொடங்கடைவி னடையாதே தோன்று மாறி" என்ற சுருதியின் றாற்பரியமே அவ்வசனத்திற்குத் தாற்பரியமென்பது இனிது விளங்கிக்கிடப்பவும்,எவ்வாறாயினுங் குற்றங் கூறினேமெனப் பெயரிடுதுமென்னுஞ் செருக்கால் ஏ தே தோ தெரிந்தவர்போலப் பிதற்றி, "மலக்குச் சொற் றேடுவர் வன்க ணாளர்கள்" என்பதனை விளக்கினீர்.

"ஆன்மாக் கன்ம மார்ச்சிப்பது சகலாவத்தையிலில்லை.கேவலாவத்தையி லுண்டு. சகலாவத்தையிலுண்டெனிற், சிவன்பேரிலே தோடமேறும்" என்றார். 'கேவலாவத்தையிற் றேகேந்திரிய வியாபாரமில்லாததினாலே கன்ம மார்ச்சிப்பது கூடாதென வறிக.'

ஈண்டுக் கேவலஞ் சகலமென்றவற்றிற்குப் பொருள் வேறென்பதறியாமையாற் கேவலந் தன்னுண்மையெனக் கூறிய கேவலமே ஈண்டுக் கூறிய கேவலமெனக்கொண்டு, கேவலத்தி லார்ச்சிப் பெவ்வாறு கூடுமெனமயங்கி, நும்மறியாமையை எமக்குத் தெரிவித்தீர். அடுத்தவசனமெற்றிற்கெழுந்த தென்றாயினு நோக்கிலீர். இங்ஙனம் பொருள்காணாது நுமக்குத் தெரிந்தவாறுபற்றிப் பொருள்கொண்டு, குற்றங்கூறிய நும்மறிவு "ஆனை யெருத்தம் பொலிய" என்புழிப், "பொலிய" என்பதற்குப் பொருளறியாது, தமக்குத் தெரிந்த பொருளைப்பற்றிப் பாடம்பிழையெனத்தள்ளி,வேறு வேறு பாடங்கொண்டார் முறைமைத்தாகலின், அம்முறைமைபோல நகையாடி விடுக்கற்பாலதன்றி மறுக்கற்பாலதன்று.

"ஆணவமல மிராக்காலம் போலும். கேவல மிருள் போலும். கேவலாவத்தைக்குப் பொருள் மறைப்பு" என்றார். 'இருளுக்கும் இராக்காலத்துக்கும் வேற்றுமை சொல்லவேண்டும்.'

'இருளுக்கும் இராக்காலத்திற்கும் வேற்றுமை சொல்லவேண்டும்' என்றீர். காலமுங் காலத்தில் நிகழ்பொருளு மாகிய வவ்விரண்டிற்கும் வேற்றுமை பெரிதென்பது வழிபடுமுறையில் வழிபட்டுக் கேட்டாற் சொல்லலாம்.

"மல நிவிர்த்திக்குக் காரணம் அனாதி சிருட்டிதொடுத்து மோட்சபரியந்த மான் மாவாற்செய்யப்பட்ட சிவபுண்ணியம்" என்றார். 'சிவபுண்ணியமாவது புசிக்கப்படுங் கன்மம். அது மலநிவிர்த்திக்குக்காரணமாவது கூடாது.' அன்றியும், "அதுவும் அபுத்திபூருவம் புத்திபூருவமென் றிருவகையாய் உபாயச்சரியை முதல் நான்கும் உண்மை முதனான்குமாகிப் பத்துவிதமாம். இப்பத்தில் உண்மைஞான மொன்றும் அருணிலை, மற்றை யொன்பதும் மருணிலை" என்றும், "உண்மை ஞானமொன்றுந் தசகாரியம் பத்துவிதமாம்" என்றும், சொன்னார். 'அந்த உண்மை ஞானம் எப்படித் தத்துவரூபமுதலியவாம்?' 'அன்றியும், தசகாரியம் பத்து நின்மலாவத்தையிலடக்கினார்.' அதில் "தத்துவரூபமுத லான் மரூபமட்டும் நின்மலசாக்கிரத்திலடங்கும்" என்றார். 'அது கூடாது.' அன்றியும், "சிவபோகமாவது ஆன்மா சிவஞானத்தைப் புசித்தல்" என்றார். 'அது அர்த்தமன்று.'

சிவபுண்ணியத்தினியல்புந் தசகாரியத்தின் கூறுபாடு முண்மையினின்றறிதற்பாலவாகலின், அது நீரறிதற்கு யார்? அது நிற்க. அபுத்திபூருவம் புத்திபூருவங்கட்குஞ் சரியை முதலியவற்றிற்குந் தம்முள் வேற்றுமைதான் என்னை? சிவபுண்ணியஞ் சரியை முதற் பலதிறப்படுவதற்கு ஏதுதான் என்னை? காரியம்பத்தென்னு நியமத்திற்குத்தான் ஏதுவென்னை? தத்துவமுதலியன மூன்று முருவந் தரிசனஞ் சுத்தியென முத்திறப்படுதற்குத்தான் ஏது என்னை? ஐவகைமலங்களுண் மாயையொன்றின் காரியமாகிய தனுமுதலிய நான்கனுட் டத்துவமொன்றற்குமாத்திர முருவந் தரிசனஞ் சுத்தி சொல்லி, ஏனையவற்றிற்குச் சொல்லாதொழிந்ததுதான் என்னை? இவை நிற்க. "தேசுற மருவு மான்ம தெரிசன மான்ம சுத்தி-யாசிலா வான்ம லாப மாகமூன் றாகும்" எனச் சிவப்பிரகாசத்தின் மூன்றே யெடுத்தோதியது என்னை? இன்னோரன்ன வாசங்கைகளு ளொன்றையினு மறியமாட்டாத நீர் கூறியவற்றுள், ஒன்றையினு மாசங்கைக்குரித்தன்றென்ப தறிக. 'சிவபோகமாவது ஆன்மாச் சிவஞானத்தைப் புசித்தல்' என்றார் என்றீர். ஈண்டவ்வாறு கூறுவார் யாரு மில்லை.

'நாற்பத்தாறில் மேற்றசகாரியவனுபவஞ் சொன்னவர் சிவரூபஞ் சிவதரிசனஞ் சிவயோக மூன்றையும் பிசகாக அர்த்தங்கொண்டார்' என்றீர்.

நீர் நாற்பத்தாறெனக்கொண்ட திதுவென்றெழுதினீர். யாங்கொண்டவற்று ளில்லை. அதனை யறிந்தா லிறுப்பாம்.

'ஞானவான்களுக்குப் பிராரத்தமில்லை யென்பதற்குச் சிறிதுவமானஞ் சொல்லுகிறதிற்,' "பழையமணியகாரன் சகல ஒஷதிபதார்த்தங்களுண்டாக்கி வைத்திருக்கிறதைப் புதுமணியகாரன் கையாளுகிறதொழியப் பழையமணியகாரன் கையாளப்படாது" என்றார். "பழையமணியகாரன் ஆன்மா. புதுமணியகாரன் சிவன். சரீரம் ஊர். பதார்த்தங்கள் பிராரத்தங்கள்" என்றார். 'எனவே, ஞானி பிராரத்தஞ் சிவன் புசிப்பானென்றாயிற்று. புதுமணியகாரனூருக்கு எசமானன்போலத் தனுவுக்கு எசமானன் சிவனும். புதுமணியகாரன் வந்தநாண்முதல் அந்தவூரனுடவம் அவனதுபோல ஞானம்வந்த நாண்முதல் அந்தத் தனுவுக்குச் சீவன் சிவன். அத்தனுவுக்குள்ள பிராரத்தஞ் சிவனனுபவிக்கவேண்டும்.

சிவனிப்படி நடுவுபாதியிலே ஒரு ஆன்மாவுடைய தேகத்தைத் தனக்குத் தனுவாகக் கன்மானுபவம் பண்ணுமாயின், முன்னிருந்த வான்மா எங்கே யிருப்பன்? என்ன புசிப்பன்? இவைக்கெல்லாம் வகைசொல்லவேண்டும். அன்றியும், முன்னே "கன்மஞ் சஞ்சித பிராரத்த மாகாமியமென மூவகைப்பட்டிருக்கும்" என்றும், "அதிற் பிராரத்தந் தேகமுள்ள மட்டும் புசித்துத் தொலைவது" என்றுஞ் சொன்னவர், இவ்விடத்தில் இப்படி மாறுபாடாகச் சொன்னார். இந்த அர்த்தத்திலே தோடம் வெகுவாக விஸ்தரித்து எழுதலாம். விரிவாகுமென்பதினால் எழுத வில்லை. ஆகையால், இவர் நிரம்ப மயங்கினவேளையிலே இது சொன்னதென வறிக.'

"என்னதோவிங் கதிகாரம்" என்ற சுருதியின் குற்பரியமுநோக்காது, 'புதுவதிகாரியை ஈண்டுவமை கூறினதுபோல ஞானம்வந்த நாண்முதல் அந்தத் தனுவிற்குச் சீவன் சிவன்; அந்தத் தனுவிற்குள்ள பிராரத்தஞ் சிவனுக் கனுபவமென வேண்டும்; அதற்குச் சிவன் இப்படி நடுவுபாதியிலே ஒரு ஆன்மாவினுடைய தேகத்தைத் தனக்குத் தனுவாகக் கொண்டு கன்மானுபவம் பண்ணுமாயின், முன்னிருந்த வான்மா வெங்கே யிருப்பன்? என்னபுசிப்பன்? இவைக்கெல்லாம் வகைசொல்லவேண்டும்' என்றீர். வழிபடுமுறையிலே வழிபட்டுக்கேட்டால் இவற்றிற்கெல்லாம் வகை யினிது விளங்கும். "அன்றே யென்றனுவியு முடலு முடைமை யெல்லாமுங்-குன்றே யனையா யென்னையாட் கொண்ட போதே கொண்டிலையோ" "இறைவனே நீயென் னுடலிடங் கொண்டாய்" "ஏன்றவுடற் கன்மம்" "ஏன்றவுடற் பழவினைகள்" "ஏன்று கொண்டா யென்னை" "தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா வார்கொலே சதுரர் - அந்த மொன் றில்லா வானந்தம் பெற்றேன் யாதுநீ பெற்றதொன் றென்பால்" "நாதனிவ னுடலுயிரா யுண்டுறங்கி நடந்து நானுபோ கங்களையுந் தானுகச் செய்து" "அடியே-னுண்டலூ னுனக்காம் வகையென துள்ள முள்கலந் தெழுபரஞ் சோதி" "ஈண் டிவ்வான்மாக்க ளவனையின்றி யமைந் தொன்றையும் விடயியா வாகலான், அவனு மவற்றது விடயத்தை யுணருமென்றது" "பட்டதே மூலவினை பாதிற்றே யேறும்வினை - விட்டதே யிவ்வுடம்பின் மிக்கவினை-நட்டதே-சிற்றறிவிற் பேரறிவு சிற்றம் பலநாடி - பொற்கழல்வைத் தாட்கொண்ட போது" "நஞ்சுவீற்றிருந்த பேரானந்தப் புணரியோ ராங்குப் படித லுடையரீண்டே" என வருமித்தொடக்கத்துச் சுருதிகளைக் காதுகொண்டு கேட்டு மறியீர் போலும். இதுநிற்க. உலகத்துப் பேயாவேசிக்கப்பட்டவனையாகிலுங் கண்டிலீர் போலும். துரபிமானங் கொண்டலைவோர்க் கெத்துணை யறிவுறுத்தினும் பயன் என்னை? உடல் பொரு ளாவி மூன்றும் ஞானதீக்கையின் முதல்வனுக்கெனப் பூநீரொடுந் தானஞ்செய்தளித்தலான் முன்செயற்கையாற் றன்னுடைமையாய் நின்ற விம்மூன்றுந் தானஞ்செய்தபின்னர்த் தனக்கின்றிச் சிவனுக்குடைமையாயவாறு பெற்றாம். பெறவே, ஆண்டுப் பொருளென்ற துடம்புபோ லொற்றுமையுடைத்தாய்த் தன்னுனுகரக்கிடந்த உடல்வினையேயன்றி, முன்பே தன்னாற் றுறக்கப்பட்டொழிந்த புறப்பொருளன்றென்பது தானே போதருதலானும், அவ்வாறன்றி, ஆண்டுப் பொருளென்றது எல்லாவற்றிற்கும் பொதுவெனக்கொள்ளினும், உடல்வினையும் அவற்றுளடங்குதலானும், அன்றி, உடல்வினையை யொழித்தொழிந்த புறப்பொருண்மாத்திரையே யாண்டுத் தானஞ் செய்யப்படுமெனக்கொள்ளின், அஃதல்கு லுறுப்பொழித்து மகட்கொடை கொடுப்போர் கூற்றாயும், பாலொழித்துக் கோதானஞ்செய்வோர் கூற்றாயு முடியுமாகலின், அது பொருந்தாமையானும், அங்ஙன முதல்வனுக்கீந்த வுடல்வினையை மீளவுந் தனக்கெனக்கொண்டு நுகரக்கருதுவோன் அவ்வாறு தானஞ்செய்தளித்த வான்மாவை

மீளவுஞ் சுதந்திரனுகக்கருதுஞ் சிவசமவாதிகளோடொப்பச் சிவத்திரவிய வபகாரியாய்ச் சிவத்துரோகனுவனுகலின், அங்ஙனம் பரமசற்பாத்திரத்திற் ருனஞ்செய்தபொருளை மீளவும் அபகரிக்குந் தெத்தாபகாரிகளாகிய கொடிய பாவிகளோடு பேசினேர்க்கு முய்தியில்லதோர் கொடியபாவந் தலைப்படும். அதனுல், இவ்வாறு பிணங்காநின்ற நும்மோடு பேசினும் பெரியதோர் இழுக்கேயாம்.

“பரமசிவன், அநாதிகேவலியாகிய வான்மாவுக்கு, அநாதிசகசிருட்டி செய்யும் பொழுது,தானே தலமுந் தீர்த்தமு மூர்த்தியுமாகித், திருமேனிகொண்டு வசிக்கிறதினுலேயும், தலவாசத்தினுலேயும், தீர்த்தப் பரிசமுதலியவற்ருலேயும், அனேகம் பிரகாரமாக வுபகரித்துச் சிவபுண்ணியங்களைக் கொடுப்பான்” என்ருர். ‘ஆன்மாக்கள் அநாதிசிருட்டியிலே இவைகளிலே வசிக்கிறது முதலாகிய கன்மங்கள் எங்கே செய்திருந்தன? ஆன்மாக்களுடைய கன்மானுகுணமாக வல்லவா தலந் தீர்த்த மூர்த்தியாய் வருதல் வேண்டும். அன்றியும், சிவன்ருனே இப்படி வருவனென்பதால், இவர் பெரிய மாயாவாதியுடைய தமயனுரென்ருயிற்று.’

‘அநாதிசிருட்டியில் வசிப்பதுமுதலிய கன்மங்கள் எங்கே செய்திருந்தன? ஆன்மாக்களுடைய கன்மானுகுணமாகவன்றே சிவன் மூர்த்தி தலந் தீர்த்தங்களாய் வருதல் வேண்டும்’ என்றீர். அநாதிசிருட்டிதான் எவ்வாறு வந்தது? கன்மானுகுணமாகவன்றி வருமா?என்ருராய்ந் தறியலுறுவார்க்கு, அநாதியே தலந் தீர்த்த மூர்த்தியாய்த் திருமேனி கொண்டுவருமாறு மினிது விளங்கும். இன்னும், “தேசமலி பொதுஞானச் செவ்வொளியுந் திகழ்பதியா - மீசனது நடத்தொழிலு மிலங்குபல வுயிர்த்தொகையும் - பாசமுமங் கதுகழியப் பண்ணுதிரு வெண்ணீறு-மாசிறிரு வெழுத்தஞ்சு மநாதியிவை யாருக” என்னுந் திருவாக்குங் கேட்டறியீர் போலும். அன்றியும், ‘சிவனே யிப்படி வரும்’ என்றன் ‘மாயாவாதி கூற்ரும்’ என்றீர். “வருக தேவ முதுகுன்ற நமக்கு வடிவுமுத் தாநதி சத்தி மேனி” “எங்கு மிடையற நிறைந்த பரம்பரனேர் தீர்த்தவடி வெய்தி நின்ற - பொங்குபுனற் சிவகங்கை” என்றற்ருெடக்கத்துச் * சூதனெலிமாலையு நுமக்குப் பிரமாண மன்று கொலாம். இவை நிற்க. “சிவனெனவே தேறினன்யா னென்றமையா லின்று - சிவனவனி வந்தபடி செப்பில்- அவனிதனில்-உப்பெனவே கூர்மை யுருச்செய்யக் கண்டமையா- லப்படியே கண்டா யவன்” என்றற்ருெடக்கத்துச் சாத்திரங்களும் நுமது வெள்ளறிவிற்கு மாயாவாதி கூற்றேயாம் போலும். இவை நிற்க. “உலகமே யுருவமாக” என்றதூஉம், சிவப்பிரதிட்டையிற் சடத்துவநியாசமுதலிய நியாசங்கள் விதித்ததூஉம், “அட்டமூர்த்தி” என்பதூஉம், “பார்பத மண்ட மனைத்துமாய் முளைத்து” என்பதூஉ முதலாயினவும், முழுமாயாவாதம் பற்றிக் கூறியதெனக் கொள்ளுவீர் போலும். சித்தாந்த சைவாகமங்களின் கோட்பாடே யறியமாட்டாத நும்பழித்துரையெல்லாம் எமக்கணிகலமேயாம். திருமேனி வழக்கறிந்தால் எவ்வழியுஞ் செவ்வழியாய் விளங்கும்.

“விஞ்ஞானகலருக்கு ஆணவமலமொன்றும் பந்தமானுல், மாயையுங் கன்மமு மில்லாதிருந்தால் பந்தநீங்காதாகையால், மாயையிலே சுத்ததனுவுஞ் சுத்த கன்மமுமுண்டு” என்றும், “இல்லை யென்றது மயக்க மின்மையால்” என்றும், சொன்னுர். ‘கன்மமனுபவிக்குமிடத்து மயக்கம் எப்படி யில்லாதிருக்கும்? அநாதி சிரு

* சூதனெலிமாலை = புராணம்.

ட்டியில் சுத்தமாயா பிராத்திக்குக் கன்மம் எப்படியுண்டாம்? ஆகையாற் கூடாதென வறிக.' "பிரளயாகலருக்கு மலமுங் கன்மமும் பந்தமானால் கன்மம் புசிக்கப்படாதாகையால், சரீரம் வேண்டும். அதனால், சுத்ததனு வுண்டு" என்றார். "இல்லையென்றது மயக்க மின்மையால்" என்றார். 'கன்மானுகுணமாகவல்லவா தனுவுண்டாகிறது. தனுவில்லாமற் கன்மம் புசிக்கப்படாதாகையால், தனுவேண்டுமென்றது எப்படி? கன்மமனுபவித்துக்கொண்டு மயக்கமில்லாமல் எப்படியிருக்கும்? அன்றியும், அனாதிசிருட்டியில் அசுத்த மாயைப் பிராத்தி எப்படியுண்டாம்?. ஆகையால், அது கூடாதென வறிக.'

விஞ்ஞானகலர் பிரளயாகல ரியல்புகூறும் வசனம் யார் கொண்டதோ? அங்ஙனமாயினும், அவற்றிற் கிழுக்கு என்னை? "விஞ்ஞானகலர் பிரளயாகலர் கலையோடு கூடினுந் தொடக்குண்ணாமையின், அகலரேயாவர்" என்னும் பவுட்கராகமத்தின் பொருளே அவ்வசனத்தின் பொருளாகலின், அதன் றாற்பரிய முணரமாட்டா திகழ்தல் அறியாமை. இனி உண்மையா னோக்குங்கால், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென மூவகைப்படுமியல்பு, எண்ணிறந்த வான்மாக்களுக்கும் இலக்கணத்தாற் றம்முட் டனித்தனி யுளதாகிய வேற்றுமை யுணரவல்லார்க்கன்றி அறியக்கூடாதென் றறிக.

"ஞானிகளுக்குத்தேகமில்லையென்றது தத்துவ சுத்திப்படுதல்" என்றார்.'தத்துவத்தை அன்னியமாகக் காண்பதொழிய, விட்டு நீங்குகிறது எப்படி? வகைசொல்லவேண்டும்.'

'தத்துவத்தை அன்னியமாகக் காண்பதொழிய விட்டுநீங்குவது எப்படி' என்றீர். விட்டு நீங்கியபின்னன்றி யன்னியமாகக் காண்டல் கூடாதென்பது அனுபவமுடையோர்க்கன்றி நமக்குத் தெரியாதாயினும், "காய நின்னி-லன்னிய மாகு முன்னை யறிந்துநீ பிரிந்து பாரே" என்றற்றொடக்கத்துச் சுருதிகளின் றாற்பரியமு மறிந்திலீர். பேய் பிடியுண்டானொருவன் பேய் தனக்கன்னியமென் றறிவது எப்பொழுது? என்று உலகச் செய்தியில்வைத் தறியவுங்கில்லீர். வியாபகப்பொருளொன்றிற் கூடுமாறு நீங்குமாறும், ஏகதேசப்பொருளொன்றிற் கூடுமாறு நீங்குமாறும் போலல்லவென்பது, ஏகதேசப் பழக்கமேயுடைய நமக்குத் தெரிவ தரிதுதான். "விட்-டன்னிய மின்மையி னரன்கழல் செலுமே" என்பதற்கும், "இவ்வான்மாத் தன்னை யிந்திரியத்து வேறுவான் காணவே" என்னுங் கண்ணழித்துரைக்கும், "பாச மொருவத்-தண்ணிழ லாம்பதி" என்பதற்கும், "அசத்தாயுள்ள வன்னபேதங்களை யசத்தென்று காண" என்னுங் கண்ணழித்துரைக்கும், இன்னு மிவைபோல்வனவற்றிற்கும், பொருளொருமை கண்டீராயினும், இவ்வாறு மயங்கிக் கூறுவீரல்லீர்.

"ஞானவானுக்கு அந்தியிட்டியாவது சிவஞானத்தினாலே யடைந்த சுத்தாவத்தையு நீங்கி ஆனந்தத்திலேயழுந்தல்" என்றார். 'அந்தியிட்டி யொருவர்பண்ணுகிற கிரியையாமே. ஆனந்தத்திலே யழுந்துகிற கிரியையை எப்படிப்பண்ணுவார்? அப்படியானால் எல்லாரையும் அப்படி யடைவிக்கலாமே. அன்றியும், அந்தியிட்டிக்குச் சத்தார்த்தம் என்னை? இப்படித் தோடமிருக்கையால், அது கூடாதென வறிக.'

'அந்தியிட்டி' என்ற வசனத்துக்குத் தாற்பரியமறியமாட்டாமையின் நமக்குத் தெரிந்தவாறே பிதற்றினீர். ஈண்டு 'அந்தியிட்டி என்பதற்குச் சத்தார்த்த மில்லை' என்றீர். ஐவகை யெச்சமென்றவற்றுட் சில வெச்சங்களையும் இவ்வா றெச்சமல்லவெனக்கூறி, இகழ்வீர் போலும்.

"சிவன் சத்தியோடுங் கூடினூற் பிரபஞ்சமுண்டாம். சத்தி சிவத்தோடுங் கூடினூற் பிரபஞ்ச மொடுங்கும்" என்றூர். 'பின்னவஸ்து ஆகாதபடியினூலே தோடமுண்டு. ஆன்மாவுக்குச் சொன்னதும் அப்படித்தான்.'

சத்தி சத்திமான்களுக்குத் தாதான்மிய சம்பந்தத்தால் வேற்றுமையுண்மை யறியாது, 'பின்னப்பொருளல்ல'என்றுவைத்துக் குற்றங்கூறினீர். "சிவஞ் சத்தி தன்னை யீன்றுஞ் சத்திதான் சிவத்தை யீன்றும்" என்னுஞ் சுருதியின் ருற்பரியமு மறிந்திலீர் போலும்.

"ஆன்மாவுக்கு மலப்பிணியாற் சரீரமுண்டாயிற்று" என்றும், "அதைத் தீர்க்கைக்கு இச்சையாற் சிவன் றிருமேனி கொண்டது" என்றும், "அந்தப்பிணிக்கு மருந்து பிராரத்தம்" என்றும், "அதைச் சிவனுக்குக் கொடுத்தால் அப்பிணி நீங்கும்" என்றும், "அதை யான்மாப் புசித்தாற் பிணி நீங்காது" என்றும்,சொன்னூர். 'கன்மத்தை இவன் எப்படிக் கொடுப்பன்? அவன் எப்படி வாங்குவன்? கன்மம்புசிப்பன ஆன்மாக்கள். அதுவு மனவாக்குக்காய சென்னியம். அதைச் சிவன் தான் செய்யாமலிருக்க வாங்கி எப்படிப் புசிப்பன்? ஆகையால், அது அர்த்தமன்று. ஞானிக்குப் பிராரத்த முண்டென்பதும், ஒருவாற்ரு னில்லையென்பதும், சற்குரு சன்னிதான விசேடத்தாற் சற்சம்பிரதாயந் தெரியாதவர் சொன்னதென வறிக. அன்றியும், பிணியாளன் மருந்துதின்ருற் பிணி தீருவதொழிய, அன்னியன் மருந்துதின்ருல் தீராதெனில், மாதா மகவுக்குவந்த வியாதி நிமித்தம் மருந்து தின்னக்கண்டோமெனில், * தனந்தயனுக்கொழிய வே றில்லை.'

'கன்மத்தை இவன் எப்படிக்கொடுப்பன்? சிவன் எப்படி வாங்குவன்? கன்மம் புசிப்பன வான்மாக்கள். அதுவும், மனவாக்குக்காய சென்னியம். அதனைச்சிவன் தான் செய்யாமலிருக்கஎப்படி வாங்கிப்புசிப்பன்' என்றீர். கிரியாபாதத்திலே தானே"நித்தநித்தஞ் சிவபூசையிற் செபத்தையுங் கன்மத்தையு மான்மாவையுஞ்சிவனுக்குத் தத்தம்பண்ணுக" எனச்சொன்ன சுருதி எப்படிச்சொல்லிற்றென்றறியீர் போலும்.இன்னும்,கிரியாபாதத்திற் போசனவிதியிற் "குண்டலியிற் சிவாக்கினியை யெழுப்பி அன்னத்தை யதன்கட் செய்யுமாகுதியாகப்பாவித்துக் கவளந்தோறு மந்திரஞ்சொல்லி யருந்துக"என்று சொன்னவிதி எப்படிவிதித்தது? இன்னும், சிவார்ச்சனுசந்திரிகையுட் சைவர் புசிக்கும் போசனத்திற் பாவனை மூவகைப்படுமென்றவற்றுண், முன்னைய விரண்டும் எப்படி விதித்தன ? என்றிவையெல்லா மறியமாட்டீர். கிரியாபாதத்தி னித்தியவிதியின் ருற்பரியமே யறிமாட்டாத நீர் ஞானபாதத்தின் ருற்பரியமறிதற்கு யார்? கன்மவழக்கே நுமக்குத் தெரியாது. அன்றியும், 'மாதா மகவுக்கு வந்த வியாதிநிமித்த மருந்துதின்னக் கண்டது தனந்தயனுக்கொழிய வேறில்லை' என்றீர். அங்ஙனங் கூறிய தெமக்கே துணையாயிற்று. அம்மையப்பராகிய சத்தி சிவங்களைநோக்கி உயிர்களெல்லாந் தனந்தயரேயாகலின், சிவ னேன்றுகொண்டாலன்றி மலப்பிணி நீங்காதென்பது தெற்றென வறிக. "பாலுண் குழவி பசுங்குடர் பொறுதென-நோயுண் மருந்து தாயுண் டாங்கு" எனத் தருமபுரத்தில் வழங்கு மகவலின் பொருளு மறியீர் போலும். 'சற்குரு சன்னிதான விசேடத்தாற் சற்சம்பிரதாயந் தெரியாதவர் சொன்னது' என வாய்கூசாது புறன்பழித்தீர். நுமக்குச் சற்குரு வார்? அந்தக் குருவிடத்தில் விளங்குஞ் சற்சம்பிரதாயம் யாது? என்றறியலுறுவார்க்கு, நுமக்குச் சற்குருவாவார் இவரென்பது யாங் கூறவேண்டா. நும்முடைய ¶ கூடத்தர் கூறியவாக்குக்களே வெளிப்படையாய் முழக்கும். அதுவும், 'மெய்கண்டதேசிகன் சந்ததி' என் றுெட்டுவீராகில்,அதற்குச் சான்று

* தனந்தயன்=பாலுண்குழவிப் பருவத்தாண்மகன். ¶ கூடத்தர்=தலைவர்-முன்னோர்.

என்னை ? சந்ததியறிதற்கு முந்திய வடையாளம் அவ்வச்சந்ததிபற்றி வருந் தீக்கை வேறுபாடாமன்றே! அதுவு நுமதுசந்ததி மெய்கண்டசந்ததியோடு மாறுபட்ட சந்ததியென்பதற்குச் சான்றும். அது காட்டுதும். "விரும்பிய மந்திராதி கார மார்ச்சனாதி கார மேவும் யோ காதிகார மெனச் சமய விசேடம்-வரும்" என்னு மெய்கண்டநூற் சுருதியோடு முரணி, யோகாதிகாரம் விசேடதீக்கையில் அடங்காதென்று மறுத்து, அதற்கு வேறு தீக்கைகொண்டீர். இன்னும், சமயாசாரியர் சந்தானாசாரியர் முதலியோர் குருபூசை நக்ஷத்திரம்பற்றிச் செய்கின்ற நீர் தாமே, நுமது சந்ததியின் வருமாசிரியர் குருபூசை நுஞ்சந்ததிக்கேற்பத் திதிபற்றிச் செய்கின்றீர். இன்னும், "பினாதி மாறின்றிப் பேண றந்திர மந்திரங்கள்-மனாதிகளடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மை யாகும்" எனத் தந்திரகலை மந்திரகலைகளைக் கூறியொழித்துத், "தனாதியீ றிலாதான் றன்மை யுணர்த்துத லுபதே சந்தான்" என ஞானபாத முழுது முபதேசகலையெனக்கூறிய மெய்கண்ட சுருதியோடு முரணி, மந்திரகலைக்குமேற்பட்ட ஞானபாதத்துள்ளேதானே, சிலவற்றைத் 'தந்திரகலாப்பிரகரணம்' என்றும், சிலவற்றை 'உபதேசகலாப்பிரகரணம்' என்றும், மயங்கிச்சொண்டீர். "நீயோசெய்யாய்" "குற்றமெல்லா முற்றிடு முயிரின் கண்ணே" என்றற்றொடக்கத்துச் சுருதிகளோடுமுரணி, "எல்லாக்கொடுமைக்கு முதல்வனே மூலகாரணம்" என்றீர். "நல்லசிவ முன்பின் னடுவேயருளிருக்கு-நல்லவருண் முன்பின் னடுச்சிவமாம் - பல்காலுங் - குன்றா வருளிடத்துங் கூறாச் சிவத்திடத்து-நன்றாய்க் குடியிருந்தோ நாம்" என்பதோர் வெள்ளைப்பொருள்பற்றி, இரண்டு சிவம் இரண்டருளாக வைத்து, முத்தி பஞ்சாக்கரத்தின் முறை, சிவப்பிரகாசம் திருவருட்பயன் உண்மைவிளக்க முதலிய மெய்கண்டநூல்களிற் கூறிய முறையோடு மறுதலைப்படக்கூறி, "உடையா ளுன்ற நடுவி ருக்கும்" என்னுந் திருவாக்கே இதற்குச் சுருதியெனக் கொண்டீர். முத்தி பஞ்சாக்கரமுறை இவ்வாறன்று, வேறென்பதற்கு, நும்மனோர் செய்த வருணாச்சிரம சந்திரிகையிற் பஞ்சாக்கர முச்சரிக்கு முறை வேறுபாட்டாலினைத்தெனவும், அவற்றுண்முத்தி பஞ்சாக்கரமாவ திதுவெனவும், பகுத்தோதி ஆண்டெடுத்துக்காட்டிய சுருதியே சான்றாகலானும், உயிர் *விவதானமா யிடைநிற்றலின் சிவமுமருளுந் தம்முண்டுநிற்றல் நீர்கொண்டமுறையிற் பெறப்படாமையானும், சிவத்தி லருள் வியாப்பியமென்றதுபோல அருளிற் சிவம் வியாப்பியமென்றற்குச் சுருதியின்மையின் அருண் முன்பினாக நடுநிற்குமென்றல் பொருந்தாமையானும், "உடையா ணடுவு ணீயிருத்தி" என்ற சுருதிக்குத் தாற்பரியம் வேறாகலின், அது முடிபுநிலைக்குச் சுருதியன்மையானும், சிவத்துக்குஞ் சத்திக்கும் வஸ்து பேதமின்மையின் ஒன்று முன்பினாக ஒன்று நடுநிற்குமென்று வஸ்துபேதமாக வைத்துக் கூறுதல் பொருந்தாமையானும், வஸ்து பேதமில்லை யென்பதே யவ்வாறு கூறியதற்குத் தாற்பரியமெனின், ஆன்மாவை யவற்றோடொப்பவைத்து நடுநிற்குமென்றதும் அவ்வாறே வஸ்துபேதமின்மைபற்றி யோதினதெனப்பட்டு மாயாவாதமாய் முடியுமாகலானும், பிறவாற்றானும், நீர்கொண்ட முறை அவசித்தாந்தமென்பது, இனியாகிலு மறிந்துகொள்வீராக. இன்னும், ஈண்டு விரித்துரைக்கற்பாலன வனேகமுள; விரிவஞ்சி யுரைத்திலம். இது நிற்க. "தற்காலசந்தி யொருதினந் தவறினும் பதிதத்துவமாம்" என்னுஞ் சிவாகமவாக்கியங்களோடு முரணி, சமயவிசேடங்களில் விடியலிற்செய்யுஞ் சந்தியைவரம்பாகக் கைவிட்டீர். சிவபூசையிற் சாமானியார்க்கிய நீராட்டுமளவும் லிங்கசுத்தி; அதன்பின் ஆசன மூர்த்தி வித்தியாதேக மாவாகனாதி; அதன்பின் அபிடேகமுதலாயின; என் றிம்முறையே சோமசம்புசிவாசாரியர் ஞானசிவாசாரி

---

* விவதானம் = தடை.

யர் முதலிய பூர்வாசாரியர் சிவாகமத்தின்வழி விதித்த பத்ததிகளோடும், அவற்றைமொழி பெயர்த்துச்செய்த ஞானமிர்தஞ் சிவார்ச்சனுபோத முதலியவற்றோடு முரணி, சிவசம வாததாபகரான அகோரசிவாசாரியரையுள்ளிட்ட * ஆதுனிகர் மூல வசனமின்றித் தாமே படைத்திட்டுக்கொண்ட பத்ததிகளையே கைப்பற்றி, கேவலங் கெதானுகெதிக நியாயத்தில் வீழ்ந்து, அபிடேகஞ்செய்து திருவொற்றுடை சாத்திப் பீடத்திலெழுந்தருளிவிக்குமளவும் லிங்கசுத்தி; அதன்பின் ஆவாகனுதியெனக்கொண்டு, பாதிப்பூசைத்தொழில் பயப்பாடின்றி வறிதே செய் திளைக்கின்றீர். "ஆதியா தார சத்தி யாயது பாதி யளித்து" என்னு ஞானபூசாவிதியின் முற்பரியம் பற்றியாகிலு மறிந்துகொள்ளமாட்டிலீர். நீர் செய்யுங் கிரியைத்திறமேஇவ்வாறெல்லாங் குழறுபடையாதலை நோக்குவார்க்கு,நும்முடையஞானத்திறத்தின் குழறுபடை கைமுதிகநியாயத்தா னினிது விளங்கும். இவ்வாறே நீர் கொண்ட கோட்பாடனைத்துஞ் சிவாகமங்களோடுஞ் சிவாகமத்தெளிவாகிய மெய்கண்டநூல்களோடுஞ் சிட்டாசாரத்தோடு முரணுவனவன்றி, ஒருவாற்றானும் அவற்றோடியையுமாறின்மையின், நுமக்குச்சற்குரு பரம்பரையு மில்லை; சற்சம்பிரதாயமு மில்லை யென்பது, எல்லார்க்கு மினிது விளங்கக்கிடந்தது. அதுகிடப்பச், சற்குருசந்ததியென்பது பலவாற்றானு மெல்லார்க்கு மினிதுவிளங்குதற்குரிய பெருந்தகைமையுடைய மரபினுள்ளாரை நோக்கிச், 'சற்குருசன்னிதான விசேடத்திற் கருகரல்லாதார்'என்றும், 'சற்குருசம்பிரதாயந் தெரியாதார்'என்றும், இங்ஙன நீ ரிகழ்தற்கேதுவாகிய நுமது துரபிமானத்தின் பெருமை வியக்கற்பாலதேயாம்!

ஆணவமலந் தன்னைப் பிடித்தவனை மயக்குமென்பதற்கும்,பிடியாதவனை மயக்காதென்பதற்கும், "பரஸ்திரீ விடன் சன்னியாசி" உவமை சொன்னுர். 'மயக்குகிற மலம் எங்கேயிருந்தது? இவன் எங்கே யிருந்தான்? என்னு யிருந்தான்? என்னத்தாலேபிடிப்பான்? பரஸ்திரி உவமானஞ்சொன்னுர்; விடனுனவன் அவர்களைக்கண்டு மயங்கினதொழிய அவ ரிவனை மயக்கின தில்லை. அன்றியும், "தானே மாட்டாது" என்னுஞ் சுருதி யிருக்கையாலும், அது அர்த்த மன்று.'

வியாபகப்பொரு ளியல்பறியாமையான் 'மலம் எங்கேயிருந்தது? இவன் எங்கே யிருந்தான்' என்று ஏகதேசப்பொருட் பழக்கமே பற்றி வினுயினீர். 'எதினுற்பிடித்தான்' என்னில், அது வழிபடுமுறையில் வழிபட்டுக் கேட்டால் விளங்கும். 'பரத்தையர் விடனைமயக்குமா தில்லை' என்றீர். வரைவின்மகளி ரதிகாரமும் பார்த்தறியீர் போலும்.

"பாம்பு சட்டைகழற்றினது சரீரத்திரிபு" என்றும், "முட்டை யுவமை இடத்திரிபு" என்றும், சொன்னுர். "பன்னகமண்டசம்" என்கிற பாட்டிற்கு விரோதிக்குமாதலால், அது அர்த்தமன்று.'

"பன்னகமண்டசம்" என்கிற பாட்டிற்கு விரோதிக்குமாதலான்,முட்டையுவமையிடத்திரிபிற் கெடுத்துக்காட்டுதல் கூடாது' என்றீர். ஓரியல்புபற்றி யொன்றற்குவமை

* ஆதுனிகர் = பின்னேர்.

யாக வெடுத்துக்காட்டிய பொருளை மற்றோரியல்புபற்றிப் பிறிதொன்றற்குவமையாக வைத்தோதுதல் எல்லாநூல்கட்குந் துணிபென்பது நீரறியகில்லீர். "கண்ட நனவைக் கனவுணர்விற் றான்மறந்து" என்ற வாசிரியர்தாமே, மீள "அக்கனவும்" என்றதனையும், முன்னொடுபின் விரோதிக்குமென் றிவ்வாறுகூறித் தள்ளுவீர் போலும். நும்மறிவிருந்தவாறு வியக்கற்பாலதே!

"ஆன்மாவுக்கு முந்தினது பக்குவம்" என்றார். "பின்மலபரிபாகம்"என்றார். 'ஆன்மாவுக்குப் பக்குவபரிபாகமாவது என்னை? மலஞ் சடமானபடியினாலே அது பரிபாகப்படுகிற வகை என்னை? "மும்மலஞ் சடம்" என்று சுருதி யிருக்கையால், அது அர்த்தமன்றென வறிக.'

'ஆன்மாவுக்குப் பக்குவபரிபாகமாவது என்னை?' என்றும், 'மலஞ் சடமாகையினாலே அது பரிபாகப்படுகிற வகை என்னை?' என்றும், வினவினீர். வழிபடுமுறையில் வழிபட்டுக்கேட்டால் அவையெல்லா மினிது விளங்கும்.

---

திருச்சிற்றம்பலம்.

சித்தாந்தமரபுகண்டனகண்டன

முற்றிற்று.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# சிவசமவாதவுரை மறுப்பு.

என்னையிப் பவத்திற் சேரா வகையெடுத் தென்சித் தத்தே
தன்னைவைத் தருளினாலே தாளிணை தலைமேற் சூட்டு
மின்னமர் பொழில்சூழ் வெண்ணெய் மேவிவாழ் மெய்கண் டானூல்
சென்னியிற் கொண்டு சைவத் திறத்தினைத் தெரிக்க லுற்றும்.

ஆசிரியர் சகலாகமபண்டிதர் தம்மாற் செய்யப்படுநூற்கு வழிகூறுவா னெடுத்துக்கொண்ட "என்னையிப் பவத்தில்" என்னுந் திருவிருத்தத்துள், 'எடுத்து' என்னுஞ் சொற்குச் "சமனுந்தம் பாசக்கூட்டங் கூடாதவகை சின்மாத்திர சுத்த கேவலமாகச் சேடிக்கப்பண்ணி"என்றுரைப்பா ருரை ஒருவாற்றானும் பொருள்படுமாறில்லை யென்பது, கற்றுணர்வுடையோர்க்கெல்லா மினிது விளங்கும். அஃதறியாது மதம் மானம் மயக்கம் அறிவின்மை முதலியனபற்றிப் பிணங்கும் புல்லறிவாளரை ஒருவாற்றானு முணர்த்தும் வாயி லில்லை. ஆதலால், அவ்விரு வேறு திறத்தாரையு மொழித்து, இடைநின்றாரை நோக்கி, ஈண்டு 'எடுத்து' என்னுஞ் சொற்குச் "சின்மாத்திர சுத்தகேவலமாகச் சேடிக்கப் பண்ணி" என்றது செம்பொருள் இலக்கணைப்பொருள் குறிப்புப்பொருளென்னு மூன்றனுள், யாதெனக் கடாயினார்க்குச், செம்பொருளென்றல் பொருந்தாது. என்னை? வழக்கின்கண்ணாதல் செய்யுட்கண்ணாதல் நிகண்டுநூல்களினாதல் அவ்வாறு பிரயோகமின்மையானும், எடுத்தலாவது கீழ்க்கண்ணதோர் கண்டிதப்பொருளை ஏகதேசக் கருவிகொண்டு மேற்கண்ணதாகச் செய்தலே பிறிதன்றென்பது, 'குடத்தை யெடுத்தான்' 'ஆடையை யெடுத்தான்' என்றற்றொடக்கத்து வழக்கானும், "கரகமலங்கள் பற்றியே யெடுப்ப" என்றற்றொடக்கத்துச் செய்யுட்கண்ணும், அறியக்கிடத்தலின், அப்பொருளீண்டைக் கேலாமையானு மென்பது.

இனி இலக்கணைப்பொருளென்றலும் பொருந்தாது. என்னை? 'கங்கையின்கண் வேடச்சேரி' என்றவழிக், கங்கையென்னுஞ் சொற்குச் செம்பொருளாகிய வெள்ளநீர் வேடச்சேரிக்கிடனாதல் செல்லாமையின், ஆண்டுத் தன்பொருளுணர்த்தாது, தன்பொருளோ டியாதானு மொருவாற்றா னியைபுடைய மீன் முதலியவற்றை யுணர்த்தலுமின்றி, இலக்கணையால் வேடச்சேரியென்னும் வருமொழிப்பொருளோ டியைதற்குரிய கங்கைக் கரையினையே யுணர்த்தி ஆகுபெயராம்.

இனிச் சொல்லுவான் கருத்துவகையாற் கங்கையென்பது வெள்ளத்தினையே யுணர்த்தி யியற்பெயராய் நிற்பின், ஆண்டு வேடச்சேரியென்பது, தன்பொருளையாதல் தன்னொடு யாதானு மொருவாற்றா னியைபுடைய பிறிதோர் பொருளையாத லுணர்த்துதலன்றி, இலக்கணையால் நிலைமொழிப் பொருளோ டியைதற்குரிய வேடச்சேரியி னுள்ளாரையுணர்த்திஆகுபெயராய் நிற்கும். இவ்வாறன்றி முன்னாதல் பின்னாதலுளதாகிய சொற்களின் பொருளோடிணங்காமையுள்வழியும்,உரைப்போர் தத்தங்கருத்துக்கியையக்கொண்டு,

யாதானு மோரியையுபற்றி வேண்டியவாறெல்லாம் பொருள்செய்யின், அஃதிலக்கணைப்பொருளாதல் செல்லாதென்பதூஉம், தம்முளொன்றனையொன்று நோக்கி இருமொழியு மிலக்கணைப்பொருள்பயக்குமெனின், அஃதொன்றனையொன்று பற்றுதலென்னும் அன்னியோன்னியாச்சிரய தோடமாய் முடியுமென்பதூஉம், எல்லா நூலார்க்கும் ஒப்ப முடிந்தது. ஆகலான், அவ்வாறு இலக்கணைப்பொருள்படுதற்குரிய காரணம் ஈண்டு 'எடுத்து' என்ற சொல்லின்கணின்மையானும், இதன்முன்னுதல் பின்னுத லுள்ளதாகிய சொல்லை இதற்கிணங்க விலக்கணைப்பொருள்படக்கொண்டு, பின்னிதனையும் அப்பொருளோ டிணங்கவைத்து இலக்கணைப்பொருள்படக் கோடுமெனின், அஃதன்னியோன்னியாச்சிரய மெனப்பட்டு வழூஉவாமென்பது மேலே விளக்கினுமாகலானு மென்பது.

இனிச் சொன்மாத்திரையானன்றிச் சொல்லுவான் குறிப்பொடு படுத்துணரப் படுவதாகிய குறிப்புப்பொருளென்றலும் பொருந்தாது. என்னை? ஈண்டு ஆசிரியர் குறிப்பு வேறாகலானும், அன்றி எட்டாஞ்சூத்திரத்திற் கூறப்படுவதாகிய தீக்கைக்கட்படுமியல்பினை ஈண்டு வேறெடுத்தோதல் ஆசிரியர் கருத்தன்மையானும், பரபக்கப்பாயிரத்துட்போல ஈண்டும் முதனூலைச் சிறப்பித்து வழிகூறுதன்மாத்திரையே ஆசிரியர் கருத்தாகலானும், அதனைக் குறிப்பான் விளக்குதற்குரிய சொற்றொடரான் றீண்டின்மையானு மென்பது.

என்று, இவ்வாறு தேர்ந்துணரவல்லார்க்கு, 'எடுத்து' என்னு மூலத்தின்பொருளோடு சிறிதுமிணங்காதென்பது தெளியக்கிடந்த விவ்வுரைபோல, அவருரைத்த வேனையுரைகளும், அவ்வமூலத்தின் பொருளோடு சிறிது மிணங்குமாறின்றி, இழுக்குப்படுமென்பது, தாலிபுலாக நயம்பற்றி யுணர்ந்துகொள்க.

"கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து - சொல்லாடச் சோர்வு படும்" என்பதனால், இதனைப் பிறரறியிற் சோர்வுபடுமென்றஞ்சிப் பொதிந்து வைத்துக்கொண்டு, தாமே தம்முட்கொண்டாடுவாராய், மதமானங்களது மேலீட்டான், மூக்கரை நயஞ் சாதிப்பாருஞ் சாதிக்க; அதுகேட்ட பிறரும் கெதானுகெதிக நயம்பற்றி உடனிருந்துகொண்டாடுதல் வியக்கத்தக்கதேயாம்! "தம்மை - யுணரா ருணரா ருடங்கியைந்து தம்மிற்-புணராமை கேளாம் புறன்."

---

திருச்சிற்றம்பலம்.

---

சிவசமவாதவுரை மறுப்பு

முற்றிற்று.

---

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

'எடுத்து' என்னுஞ் சொல்லுக்கிட்ட

# வைரக்குப்பாயம்.

'சிவஞானசித்தியுரை' என்று வறிதே யொருபெயரிட்டுப், பேதவாதம் சமுற்பத்திவாதம் பரிணாமவாதம் அனேகேசுரவாதமென்னும் பலவகைமதங்களும் ஒருவயிற்காணச், சுத்த சித்தாந்தமுத்தியாபாசமாகப் புதுவதாக வொன்றுசெய்த ஞானப்பிரகாசமுனிவர், அதனுள் "என்னையிப்பவத்தில்" என்னுந் திருவிருத்தத்தில், 'எடுத்து' என்னுஞ் சொற்குச் "சமனாந்தம் பாசக்கூட்டங் கூடாதவகை சின்மாத்திர சுத்தகேவலமாகச் சேடிக்கப்பண்ணி" என்பது பொருளென்றுரைத்தது, இவ்விவ்வேதுக்களாற் செம்பொருண்முதலிய மூன்றனுள் ஒன்றற்கு மேலாமையின், அது பொருளாதல் செல்லாதெனமறுத்த மறுப்பிற்குப், 'பிரதிகண்டனமாகிய வெதிர்மறுப்புச் செய்தும்' எனப் புகுந்தார்க்கு, அம்மறுப்பினுட்கூறிய பொருள்களை முறைபிறழாமல் ஒரோவொன்றாக அனுவாதஞ் செய்துகொண்டு அம்முறையான் மறுத்தலே மரபு. அங்ஙனம் * அனுவதிக்கவுமாட்டாது, முறைபிறழ வெடுத்துக்கொண்டு மறுப்பது, ஒரு நிக்கிரகத்தானம். இது கிடக்க.

'மெய்கண்டதேவநாயனாரே சிவஞானசித்தி செய்த ஆசிரியர்க்குத் தீக்காகுருவுமுதனூலாசிரியருமானாரென்பது அவ்வாறுரைசெய்தார் கருத்தாகலான், 'எடுத்து' என்னுஞ் சொற்கு அவ்வுரைப்பொருளே பொருள்; அதுவே ஆசிரியர்கருத்து' என முடிக்குத்தக்க தலைசெய்துகோடு மென்பாரோடு பயின்ற பயிற்சிபற்றிச் சாதித்தது, தலையாய வறிவினோரெல்லாரானும் எள்ளி நகையாடற்பாலதாயிற்று. என்னை? அருணந்திதேவநாயனார்க்கு முதனூலாசிரியராயினாரும், தீக்காகுருவாயினாரும், முதனூலோதுவித்துப் பாடகுருவாயினாரும், அதன்பொருளைக் கேட்பித்த வித்தியாகுருவாயினாரும், 'அதனை வழிப்படுத்து நூல்செய்க' வென அநுஞ்ஞைசெய்தாருமெல்லாம், மெய்கண்டதேவநாயனாரேயென்பது, சித்தாந்தசைவரெல்லார்க்கு மொப்பமுடிந்ததன்றே! அதனைப் புதுவதாக வெடுத்தோதிச் சாதித்தல் ¶ சித்தசாதனமாய் முடியுமாகலானும், முதனூலாசிரியரும் தீக்காகுரவரு மாதன்மாத்திரையே மெய்கண்டதேவநாயனார் கண்ணதாகக் கூறுதலின், ஏனைப் பாடங்கேள்விமுதலியவற்றிற்குக் குரவராவார் மெய்கண்டதேவநாயனாரல்லர், வேறுளரெனப்பட்டு, † அசம்பாவிதமாய் முடியுமாகலானுமென்பது.

அல்லதூஉம், மெய்கண்டதேவநாயனார் இவர்க்குத் தீக்காகுருவென்பதனை ஈண்டுக் கூறுதற்கோ ரியைபு என்னை? "என்னையிப் பவத்திற் சேரா" என்னு மிச்செய்யுள் நூற்குப் புறவுரையாகிய உபோற்காதப்பிரகரணமெனப்படுஞ் சிறப்புப்பாயிரத்துட்பட்டதேயாமென்பதூஉம், சிறப்புப்பாயிரத்துப் பிரகிருதமா யெடுத்துக்கொள்ளப்படுவன ஆக்கியோன் பெயர்முதலிய பதினொன் றுட் பட்டனமாத்திரையேயன்றிப் பிறவல்லவென்பதூஉம், எல்லாநூலார்க்கு மொப்பமுடிந்தது. முடியவே, தீக்காகுரு விவரென்றல் ஆக்கியோன் பெயர்முதலியவற்று ளொன்றாதல் செல்லாமையானும், மற்று வணக்கம் அதிகா

---

* இது பிறன்கூறிய பொருளை அனுவதிக்கமாட்டாமையென்னு நிக்கிரகத்தானம். நிக்கிரகத்தானமெனினுந் தோல்வித்தானமெனினு மொக்கும்.

¶ சித்தசாதனமாவது-பரனுடம்பட்டதாய்ச் சித்தித்ததனை மறித்துஞ் சாதித்தல்.

† அசம்பாவிதம்=அளவைக்கிலக்காகாதது.

ரம் என்னுமிரண்டனுள் ஒன்றென்றற்கும் ஏலாமையானும், ஈண்டைக் சப்பிரகிருதமாகிய வதனை, இதனுட் கூறுதற் கொருவாற்றானு மியைபின்மை யுணர்க.

மற்று ஈண்டுத் தீக்காகுருவாதல் கூறப்புகுந்தாரல்லர்; அது கூறுமுகத்தால்ஆசிரியரருட்டிறமே விளங்கக்கூறினாராலெனின், நன்றுசொன்னாய். அஃதவ்வாற்றாற் கூறல் வேண்டுமாயினும், 'அருளினாலே தாளிணை தலைமேற் சூட்டும்' என்பதே தீக்காகுருவாதல் கூறுமுகத்தால் அதனை விளக்குதற் கமையுமாகலான், அங்கையி னெல்லிக்கனிபோல இனிது விளங்குவதாகிய வதனை யொழித்துக், 'கரும்பிருக்க விரும்புசடித் தெய்த்தவாறு' கப், பொதுச்சொல்லாகிய 'எடுத்து' என்பதனுள் அதனை யிடுக்குறப்புகுத்தி வருந்துவ தெற்றுக்கென்பது. எடுத்தோத்தில்வழியே உய்த்துணர்ச்சியாவதன்றி, அல்லுழிக் கூடா தென்பதே நூலோர் துணிபென்க. அல்லதூஉம், தென்னூல் வடநூன் முடிபுமுழுது மினி துணர்ந் திந்நூலுக் குரைசெய்துமெனப் புகுந்த சிவாக்கிரயோகிதேசிகர் மறைஞானதேசிகர் முதலிய தொல்லாசிரியருரை எல்லாவற்றொடு முரணுதலானும், ஈண் டித் கிது பொருளாதல் செல்லாமை கண்டுகொள்க. அல்லதூஉம், விதந்து கூறுதவழிக் குருவென்னுஞ்சொல்லே தீக்காகுருவையுணர்த்துமென்பதற்கும், ஏனைக் குரவரை யுணர்த்துதற்கே விதந்துகூறல் வேண்டுமென்பதற்கும்,உலகவழக்கே சான்றாகலானும்,அக்கருத்து விளக்குதற்பொருட்டு, அங்ஙன மிடர்ப்பட்டுரைத்தல், எற்றுக்கெனவுங் கூறி மறுக்க. இதுநிற்க. "உரைசெய்தார் கருத்திதுவாகலான் 'எடுத்து' என்ற நூலாசிரியர் கருத்து மிதுவேயாம்" என நூலாசிரியர் கருத்துத் துணிதற்கு இவ்வுரைசெய்தார் கருத்தை ஏதுவாகக் கொண்டார். அது*பிரகரண சமமென்னு மேதுப்போலியாய் முடியுமென்பது நோக்கிலர்போலும். மற்றிவர்போல, இன்னும் வேறு வேறுரைக்கலுறுவார் கருத்துவகையால், இப்பொருளிற் றீர்ந்து வேறு வேறு பொருள்படுதற்கு மியைபுடைத்தென்பது, சிறிது காட்டுதும்.

இவ்வழிநூல்செய்த ஆசிரியர்க்குத் தீக்காகுருவு முதனூலாசிரியரு மாதன்மாத்திரையேயன்றி,முதனூல் எடுத்தோதிச் செவியறிவுறுத்தஆசிரியராயினாரு மெய்கண்டதேவ நாயனாரேயென்னுங் கருத்தா லுரைசெய்வார்க்கு, 'எடுத்து' என்பது, எனக்குச் சிவஞானபோதநூலை யெடுத்துச் செவியறிவுறுத்தெனப் பொருடந்து, மற்றைப்பொருளெல்லாந் திலதர்ப்பணம் பண்ணப்பட்டுப் போமன்றே! இவ்வா றுரைக்கலுறுவார்க்கு, "அறிவுடை யந்தண னவனைக்காட் டென்றானே" என்றாற்போல,'என்னை' எனக்கென உருபுமயக்கமெனவும், 'அருளினாலே தன்னையெடுத் தென்சித்தத்தே வைத்து'எனக் கூட்டி,'அருள்' தீக்கையெனவும், "தூங்கு கையா னோங்கு நடைய" என்றாற்போல 'ஆன்' உடனிகழ்ச்சிப் பொருட்கண் வந்ததெனவும், 'தன்னை'என்றது,ஈண்டதிகாரப்பட்ட சிவஞானபோதநூலையெனவும், 'எடுத்து' எனக் காரியங் காரணமாக வுபசரிக்கப்பட்டதெனவும், 'என்சித்தத்தே தன்னைவைத்து' என்றது, அதனைக் கேட்பித்தபின்னர்ச் சிந்திப்பித்தென்னும் பொருட்டெனவும், 'தாளிணை' என்றது, தாள் முயற்சியாகலாற் கேட்டல் சிந்தித்தல்களின் பின்னவாகிய தெளிதல் நிட்டையென்னு மிருவகை முயற்சியெனவும், 'தலைமேற் சூட்டும்' என்பது அவற்றை அவ்விரண்டு முற்றுப்பெற்றதன்மேலே தலைமையாகச் செய்விக்குமெனவுங், கொள்ளப்படும். இவ்வாறுரைப்பார்க்கு 'மெய்கண்டானூல் சென்னியிற்கொண்டு' எனவே, மெய்கண்டதேவநாயனார் இவ்வாசிரியர்க்கு முதனூலாசிரியரென்பதூஉம், 'அருளினாலே' எனவே, அவரே தீக்காகுருவென்பதூஉம், 'எடுத்துச் சித்தத்தே வைத்துத்

* பிரகரணசமமென்னு மேதுப்போலியாவது - மறுதலைப்பொருள் சாதிப்பதாய பிறிதோரேதுவை யுடன்கொண்டு வருவது.

தாளிணை சூட்டும்' எனவே, இந்நூற் பாடஞ்சொல்லிக் கேட்பித்தாரு மவரே, கேட்டத னைச் சிந்திப்பித்தாரு மவரே, சிந்தித்ததனை நிட்டைகூடச் செய்வித்தாருமவரே என்ப தூஉமாகிய விவ்வையனைத்தும், இதனுட் போந்தவா றுணர்க.

இனி இவைமாத்திரையேயன்றி, முதனூலுக்கு முதனூலுண்டென்னுங் கருத்தானு முரைசெய்வோர்க்கு, 'எடுத்து' என்பது, வடமொழிச் சிவஞானபோதநூலைச் சிவாகம த்தினின்றும் வேறெடுத்தெனச் செம்பொருடந்து, மற்றைப்பொருளெல்லாந் தில்தர்ப்ப ணம் பண்ணப்பட்டுப் போமெனவும், இவ்வாறுரைசெய்வார்க்கு, "என்னைமுன் னில்லன் பின் றெவ்விர் பலரென்னை, முன்னின்று கன்னின்ற வர்" என்றாற்போல 'என்னை'என்பது, என்னுடைய தலைவனென மெய்கண்டதேவநாயனாரைச் சிறப்பித்து நிற்குமெனவும், அகத்தியனாற் செய்யப்பட்டநூல் அகத்தியம், தொல்காப்பியனாற் செய்யப்பட்டநூல் தொல்காப்பியம் என்றாற்போலப் 'பவம்' என்றது, பவனாற்செய்யப்பட்ட நூலெ னச் சிவாகமத்துக்குக் காரணக்குறியாய் நிற்குமெனவும், சேர் திரட்சி யென்பவாக லின், 'பவத்திற்சேர்' என்பது, பாலின்கட் சாரமாய்த்திரண்ட வெண்ணெய்போல அவ்வாகமத்தின்கட் சாரமாய்த் திரண்டு தொகுக்கப்பட்டுளதாகிய வடமொழிச் சிவ ஞானபோதநூலை யுணர்த்துமெனவும், 'ஆவகை' என்பது, "ஆவகை நாமும் வந்து" என்றாற்போலத் தமிழ்நாட்டுள்ளார்க் காகும்படியென்னும் பொருட்டெனவும், 'எடுத்து' என்றது, அதனை யவ்வாகமத்தினின்றும் வேறெடுத்தெனச் செம்பொருடந்து நிற்குமென வும், 'என்சித்தத்தே தன்னைவைத்து' என்பது, தமிழ்நாட்டிற் பிறந்துவதியும் எம்மனோர்க் குச் சித்தமாயுள்ள தமிழ்மொழியின்கண்ணே அதன்பொருளைப் பதித்தென்னும் பொருட் டெனவும், ஆண்டு 'என்' என்பது, சாதியொருமைபற்றிக் கூறியதெனவும், "அருளினாலே தாளிணை தலைமேற் சூட்டும்' என்பது, அதனை எனக் கோதுவித்தற்பொருட்டுக் கருணை யினாலே திருவடித்தாமரையிணைகளை என் புன்றலைமேற் சூட்டித் தீக்கைசெய்யும் பொரு ட்டெனவுங், கொள்ளப்படும். இதனுள், முதனூல்வந்தவா றெடுத்துக்கூறலும் உடன் போந்தவா றுணர்க.

இனி இவ்வாறன்றி, மெய்கண்டதேவநாயனார் திருமேனி மானிடர் வடிவுபோலன் றித் திப்பியவடிவாய்ச் சிறந்துள்ளதென்னுங் கருத்தால் உரைசெய்வார்க்கு, 'எடுத்து' என்பது, இம்மானிடப்பிறவிபோற் சேராவண்ணம் அருளினாலே திருவுருவெடுத்தெனச் செம்பொருடந்து, இவருரைத்தனவெல்லாந் திலதர்ப்பணம் பண்ணப்பட்டுப்போமன்றே! இவ்வா றுரை செய்வார்க்கு, 'என்னை' என்பது, மேலைப்பொருட்டெனவும், 'இப்ப வம்' என்றது, இம்மாயப் பிறவியென்னும் பொருட்டெனவும், 'இன்' உவமவுருபென வும், 'சேராவகை யருளினாலே யெடுத்து' என்பது, இதுபோல மயக்கத்துட்படாத வேறுகூறாகிய திப்பியத் திருவுருவை யருளினாலே யெடுத்தெனவும், 'என் சித்த த்தே தன்னைவைத்து' என்பது, என்னறிவின்கண்ணே யதனைத் தியானஞ்செய்யுமாறு பதித்தென்னும் பொருட்டெனவுங், கொள்ளப்படும். ஏனைய வெளிப்படை. இன்னும் விரிப்பிற் பெருகும்.

இம்முத்திறத்துரையுட்பட்ட பொருளனைத்தும் "சின்மாத்திர சுத்தசேவலமாகச் சேடிக்கப்பண்ணி" என்றுரைப்பாருரையுள் அடங்காமையும், அவருரைப்பொரு ளொரு வாற்றானிவற்று ளடங்குமாறும், அவ்வுரையைநோக்கவிவ்வுரைகள் சிறப்புடைமையும், ஓர் ந்துணர்க. இவ்வாற்றானே அவருரை யவ்வேதுப்பிரகரண சமமாதலுமன்றிச், சொற்பொரு டணிவு பிறவாது அனவத்தையாய் வரம்பின்றி யோடுதற்கு மேதுவா யிடுக்குப்படுமென் றொழிக.

அற்றேல், ஐயமு மருட்கையு நிகழாமை நூலாசிரியர் கருத்துணர்ந்து சொற்பொருடுணிதற்குரிய கருவி வேறென்னையெனின், அவை மீமாஞ்சை நூல்களி னினிது விளங்கும். அது சிவாகமநூற்கு வியாக்கியானஞ்செய்த உமாபதிசிவாசாரியர் முதலிய தொல்லாசிரியராற் காட்டப்பட்டது. அவற்றுள், பூருவமீமாஞ்சை நூலுள் வன்மை மென்மை பற்றிச் சொற்பொருடுணிவிக்குங் கருவியெனக் காட்டப்படுவன: * சுருதி, இலிங்கம், வாக்கியம், பிரகரணம், தானம், சமாக்கியையென ஆறு. உத்தரமீமாஞ்சையு ளங்ஙனங் காட்டப்படுவன: ¶ உபக்கிரம வுபசங்காரங்கள், அப்பியாசம், அபூர்வதை, பலம், அருத்தவாதம், உபபத்தியென ஆறு. இவற்றி னியல்பெல்லா மவ்வநூலார்வாய்க் கேட்டுணர்க.

இத்துணையு மெடுத்துக்கூறிய வின்னோரன்னவற்றுள், ஒன்றுனு முணரமாட்டாதார், இனிக் கூறுவனவெல்லாம், "வற்றியவோலை கலகலக்கு" மாறுபோல மற்றொன்று விரித்தலின்பாற்பட்டு, † அரண்ணியருதிதமே யாமென்பது தெளியக்கிடந்தவாறுணர்க.

அங்ஙனங் கூறியவற்றுள்ளும், அவர் தர்க்கிக்குங் காலத்துப், "பரமசிவனுக் கோரதிகரணம்" எனவும், "பிரமரகிடநயத்தா லமைந்த சிவபாவத்தர்" எனவும், "அதனு லவரது தொழில் சிவனது வியாபார சத்தியென்ற விழுக்காது" எனவும், "எனவே, அவரங்ஙனஞ் சேடிக்கபண்ணுதன் முதலாயின வருளிச்செய்தல் வழுவன்று"எனவுங் கூறிய வின்னோ ரன்னவையெல்லாம், 'எடுத்து' என்றசொற்கு 'இதுபொருளன்று'என மறுத்த தன்மேற் குற்றங்கூறி, 'அச்சொற் கதுவேபொருள்' என நிறுவுதற் குரிமையாவான்செல்லாமையின், ‡ அருத்தாந்தர மென்னுந் தோல்வித்தானமாமென் றொழிக.

"தீக்காகுரு வணக்கமு மீண்டுக் கூறத்தொடங்கினர்" என்பது பொருந்தாமை முன்னர்க் காட்டுதும்.

---

* சுருதியாவது,—வேறொன்றனை யவாவாது தான்கருதிய பொருளைத் தானே தெரிவிப்பது. இலிங்கமாவது,— ஆற்றலாற் பொருளை யுணர்த்துவது. வாக்கியமாவது,— இங்ஙனஞ் சுருதியும் இலிங்கமுமன்றிச் சொற்றொடர்பற்றி யுணர வருவது. பிரகரணமாவது,— "சோதிட்டோமம் வேட்க" என்றாற்போலும் விதிவாக்கியங்களாற் பொதுப்பட வுணர்ந்து சிறப்பா னறியப்படாத கன்மங்களா னவாவப்பட்டு இவ்வாறு செய்யற்பாற்றென வகுத்துக் கூறுவது. தானமாவது,— நிரனிறையிடமும் அண்மை யிடமுமென விருவகைப்படும். சமாக்கியையாவது,— காரணத்தான் வரும் பெயர்.

¶ உபக்கிரம வுபசங்காரங்களாவன,—எழுவாயுரை இறுவாயுரையோடொத்து ஒன்றுதலின், மற்றிந்நூல்நுதலியபொரு ளிதுவேயாமென்று துணிந்துரைத்தற் கருவியாய் நிற்பன. அப்பியாசமாவது,— நூலிற் பயின்றுவருதலின், இதற் கிதுவே பொருளெனக்கொண்டு துணிந்துரைத்தற் கருவியாய் நிற்பது. அபூர்வதையாவது,— இது மற்றொருநூலா னறிவுறுத்தப்படாதவிடயமாகலின், இதற்குச் சிறந்தபொரு ளிதுவெனக்கொண்டு துணிந்துரைத்தற் கருவியா யுள்ளது. பலமாவது,— இந்நூலிற் கிது சிறந்த பிரயோசனமாகற்பாலதெனக்கொண்டு துணிந்துரைத்தற் கருவியாய் நிற்பது. அருத்தவாதமாவது,— நூலுட் புனைந்துரைவகையால் சிறந்ததொருபொருளை அறிவுறுத்து நிற்பது. உபபத்தியாவது,— இப்பொருள் உத்திக்கு மிக இயைவதாமெனக் கொண்டுரைத்தற் பயத்ததாய் வருவது.

† அரண்ணியருதிதம்—காட்டகத்துப் புலம்பல்.

‡ அருத்தாந்தரமென்னுந் தோல்வித்தானமாவது - மேற்கோளைச்சாதிக்கமாட்டாமல் அதற்குக் கேடுவரப்பேசுதல்.

இனி "அருள்' 'பவம்' முதலிய சொற்கூட்டுறவு நோக்குமிடத்து, அவரே தீக்காகுருவு மென்று புலப்படும்" என்றலும் பொருந்தாது. என்னை? 'பவம்' என்றது, பலபொருள்பட நிற்றலானும், 'அருளினால்' என்பது, 'தலைமேற்சூட்டும்' என்பதனோடு முடிவுபெற்று நிற்ற லெல்லார்க்கு மொப்ப வினிதுவிளங்குமாகலின், அது வலிந்துகொண்டு கூட்டுவார்க்கன்றி 'எடுத்து' என்பதனோ டியைதல் செல்லாமையானும், பிறவாற்றானு மென்பது.

இனி, "வேறுபொருள் கூறின் மாறுகொளக் கூறலாம்" எனத் தம்முரைக்கட்படும் வழுவை யீண்டேற்றிக் கூறியது செவ்வனே பொருள்படுமாறு, மேலெடுத்துக் காட்டிய வேறு வேறு பொருள்களை யறியும் பகுத்தறிவில்லார் கூற்றேயாமென்பது,மேற்கூறிய பொருட்டிறம்பற்றியு முணர்ந்துகொள்க.

அல்லதூஉம்,'யா னிப்பவத்திற் சேராவகை என்னுடைய தலைவன் றனதருளினாலே தாளிணை யெடுத்துத் தாய்போ லென் சித்தத்தே வைத்துத் தலைமேலுஞ் சூட்டும்' என்றிங்ஙன முய்த்துணரவேண்டா தியார்க்கு மினிது விளங்கக் கிடக்குஞ் செம்பொருளும், இன்னு மிவைபோல்வனபிறவும்,அறியமாட்டாது, "மதம்பற்றி வேறுபொருள் கூறின் மாறுகொளக் கூறலென்னுங் குற்றந் தங்கும்" என்றது, 'மைத்துனர்பல்கி மருந்திற் றெளியாத பித்தன்'என் றெள்ளப்படுதற்கேதுவாய் முடியுமென் றொழிக.

இனித் "தீக்கைக்கட்படு மியல்பு வேறெடுத்தோத வந்திலர்; அது கூறுமுகத்தால் தமது தீக்காகுருவின தருட்டிறமே கூறினர்" எனத் தாமே வாய்சோர்ந்து கூறுதலாற், றீக்கைக்கட்படுமியல்பு ஈண்டுப் பிரகரணமன்றென்பது தானேபோந்தது. போகவே,"பிரகரணம்பற்றி யிலக்கணை கோடும்" என முன்னர்க் கூறுவதூஉம்,தில தர்ப்பணம் பண்ணப்பட்டுப் போமா றுணர்க.

இனி யருட்டிறங்கூறுதலும் ஆக்கியோன்பெயர் முதலியவற்று ளொன்றெனப்பட்டுப் பிரகரணமாதல் செல்லாமையான், அது கூறுமுகத்தா லங்ஙனம் அருட்டிறமுடைய வாத்தனாற் செய்யப்படு நூலென வீண்டைக்குப் பிரகரணமாகிய நூலின்பெருமை கூறினாரென்றலே பொருத்தமுடைத்தாகலான், இதனை விளக்குதற்பொருட்டு வேண்டப்படுவதாகிய வருட்டிற மேனை யுரைப்பொருள்களானு மினிது விளங்கக்கிடத்தலான்,இதன்பொருட் டித்துணை யிடுக்குறப்புகுத்தி நலிந்து பொருள்செய் திடர்ப்படுதல் எற்றுக்கென் றொழிக. இதனானே * 'துஷ்யது' வென்னு நயமேயன்றி யின்னு மாயிரநயங்கூடினும், ஈண்டைக்குப் பயன்படாமை யுணர்க.

இனி ஈண்டுக் குருவணக்கங்கூறுத லாசிரியர்கருத்தாயின்,'மெய்கண்டானை வணங்கி யவனூல் சென்னியிற் கொண்டு' எனத் தெரித்துக்கூறுவர்; அவ்வாறு கூறாமையானும், சிவசத்தி வணக்கமுதலியனபோலக் குருவணக்கமும் பரபக்கப் பாயிரத்துட் கூறிற்றே யமையுமாகலான் ஈண் டதனை யிடர்ப்படுத்துப் புகுத்தவேண்டாமையானும்,மறைஞானதேசிகர் முதலிய தொல்லாசிரியர் இவ்வாறுரையாமையானும், அஃதசித்தமென் றொழிக. இதனானே 'எடுத்து' என்னுஞ்சொற் கவ்வாறுரைப்பாருரை யொருவாற்றானும் பொருள்படுமா றில்லையென்பது, தலையாய வறிவினோர்க்கெல்லா மினிது விளங்கக் கிடந்தவா றுணர்க.

---

* துஷ்யது துர்ஜந: என்பதோர் நியாயம் - அவ்வளவில் அவன்மகிழ்க வென்பது அதன் பொருளென வறிக.

இனி "சூத்திரத் துப்பொரு ளன்றியும்" என்னுஞ் சூத்திரத்தை யீண்டைக்கு மானமெனக்கொண்டார், அதனியல்புணராமையின். "சூத்திரந்தானே, யாடி நிழலி னறியத் தோன்றி - நாடுத லின்றிப் பொருணனி விளங்க - யாப்பினுட் டோன்ற யாத்தமைப் பதுவே" எனவும், "மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு" எனவுங் கூறிய சூத்திர விலக்கணத்தோடு, முரணுதவாறு பொருள்காண வல்லார்க்கு, "சூத்திரத்துப் பொருளன்றியும்" என்பதே இவருரை பொருள்படாதென்பதற்கு மானமாய் முடியுமென் றொழிக. ஐயமுமருட்கையு நீக்குதற்குரிய தந்திரவகையு மீண்டில்லையென்பது, மேற் காட்டியவாற்று னுணர்ந்துகொள்க. இதனால் 'எடுத்து' என்னுஞ் சொற்கு அவ்வாறு 'சேடிக்கப்பண்ணி' என்றுரைசெய்தார், தென்னூன் முடிவாதல் வடநூன் முடிவாதல் சிறிது முணர்ந்திலரென்பது தெற்றென விளங்குதலால், அவையனைத்து முணர்ந்த வாசிரியர் கருத்துணரமாட்டாது,மதமான முதலியனபற்றியே யங்ஙன முரைசெய்தாரென்பது, உய்த்துணர்ந்து கொள்க.

இனி இவர் "இவ்வுரையை யிலக்கணப்பொருளாகக்கொண்டு கூறல் அளவை நூன் முடிவுபற்றி" என்றதும் பொருந்தாது. அளவைநூலி னிலக்கணக்குப் பீசமெனப் படுவது, 'சொற்பொருளுணர்விற்குக் கருவியாகிய விஃது இப்பொருட்டாக வெனக் கூறினான் கருத் திதனாலன்றி யறிந்துகொள்ளப்படாமை' என்பதூஉம், அக்கருத்தறிவுறுக்கு ங் கருவிகள் பிரகரணமுதலாயினவென்பதூஉம், தாமு முடன்பட்டு முன்னர்க் கூறுகின் றமையால்,அங்ஙன மாசிரியர் கருத்தறிவுறுக்கும் பிரகரணமுதலியவற்றை யுய்த்துணர வல்லார்க்கு,இவ்வுரை யளவைநூன் முடிபுபற்றி யிலக்கணப்பொருளாவான்செல்லுமாறு தான் யாண்டையதென் றொழிக.

இதனானே, 'எடுத்து' என்பதற் கவ்வாறு 'சேடிக்கப்பண்ணி' என்றுரைத்தல், செம்பொரு ளிலக்கணப்பொருள் குறிப்புப்பொருள் என்றவற்றுள்,யாதுமாதல் செல்லா தென மேன்மறுத்த மறுப்பு,மற்றிவர்போலுங் குதர்க்கவுரையாளராற் போழ்படாதவாறு, 'எடுத்து' என்னுஞ் சொல்லுக்கிட்ட **'வைரக்குப்பாய'** மென்பதூஉம், தெளியக்கிடந்தவா றுணர்க.

அற்றேலஃ தங்ஙனமாக; இவ்வுரை பொருள்படாதென வேறுபொருள் கூறினதவும், மூவகைப்பொருள்களி னொன்றுவான் செல்லாதாலெனின், அறியாது கூறினாய். ஆண்டு 'எடுத்து' என்னுஞ்சொல் ஆசிரியர் கருத்துணர்ந் துரைக்குங் குறிப்புப்பொருள் படுமாறு தொல்லாசிரிய ருரையி லினிது விளங்கும்.

இனி வேறோராற்று னிலக்கணப்பொருளாமாறும், செம்பொருளேயாமாறும், அவை யிவ்வுரைபோலன்றி அவாய்நிலை தகுதி யண்மைகளா னியைபுடையனவாய் அவ் 'வெடுத்' தென்னுஞ் சொல்லை அழகுசெய்யு மணிகலம்போலச் சிறந்தவாறும்,மேற்காட்டிய வுரைகளா லினிது விளங்கக் கிடந்தன. அவையனைத்தும் புடைபட வொற்றி யாராய்ந் துணரு நுண்ணுணர்விலாதார், "கூவ லாமை குரைகட லாமை, கூவலோ டொக்குமோ கடல்" என்பதுபோல, "இவ்வுரைப்பொருளேயன்றி வேறு பொருள்படுமாறு மொன் றுண்டாங்கொல்" என்பதூஉம், "ஈண்டுச் செவ்வனே பொருள்படவுரைத்த லயன்றனு லும் அமையாது" எனச் செருக்கிக் கூறுவதூஉம்,'மைத்துனர் பல்கிப்பித்த' னென் றெள்ளப்படற்பாலவாயவா றுணர்க.

இனிச் சொல்லுவான் குறிப்பே யக்கருவி ஆண் டிலக்கணைகோடற்கு என்பதூஉம், அதற் குரித்தாகற்பால தியாதானுமோ ரியைபேயன்றி வேறியாதானுமோ ரியை

புகோடல் பொருந்தாதென்பதூஉம், "இனிச் சொல்லுவான் கருத்துவகையால்" என்பது முதலியவற்றான் விளங்குமாறு காட்டினாம்.

"ஆண்டுத்தன் *** கங்கைக் கரையினையே யுணர்த்தியாகுபெயராம்"என்ற தனையா னெறியாது,"இனிச் சொல்லுவான் கருத்துவகையால்"என வேறுமெடுத்துக்கொண்ட தெற்றுக்கு" எனவும், "யாதானுமோ ரியைபுபற்றி எனவாளாகூறு து"உரைசெய்வோர் தத்தங் கருத்துக்கியையக் கொண்டு"என விசேடித்த தெற்றுக்கு" எனவும், அச்சொற்றொடரின் கருத்துக்களை யறிந்து கொள்ளமாட்டாத மடமை, அதற் கப்பொருண்மாட் டியாதானுமோ ரியைபுகொண் டாற்றல் கற்பிக்க ஒருப்படும்.

"அதுவே யிலக்கணை. அங்ஙனமல்லாக்காற் செம்பொருள்படுவான் செல்லினுஞ் செல்லும்.அதனாற் குறிப்பே யக்கருவி இலக்கணைகோடற்கு" எனவும், "பிரகரண முதலாயின அக்கருத்தறிவுறுத்தற் கருவிகள்" எனவும், "பிரகரணமுதலியன வுள்வழி அவையேயமையும்; பிரகரணமுதலியவற்று ளொன்று மில்வழி எத்துணை யியைபுகூடினு மிலக்கணையாதல் செல்லாது" எனவும், இன்னு மிவ்வாறெல்லாந் தம்மைப் பேசுவித்ததுபோலுந் தாமிங்ஙனங் கூறியனவெல்லாம், பிட்டபேடண நியாயமாய், "இனிச் சொல்லுவான் கருத்துவகையால்" என்னும் அத்தொடக்கத்துச் சொற்களின் பொருளை வலியுறுத்தி எமக்கே துணையாவனவாம்; அச்சொற்களின் கருத்துணரவல்ல நுண்ணுணர்வுடையார் நோக்குமிடத் தென்பது. அங்ஙனம் யாங்கூறிய கருத்துணரமாட்டார்மல் 'அவசித்தாந்தம்' என்றதொரு நிக்கிரகத்தானம். இலக்கணை கொள்ளுமிடத்து, முதற்கட் சொல்லுவார் கருத்துவகையா லியைபுகோடலன்றி, அதனை யுரைப்போர் தத்தங் கருத்துவகையா லியைபுகோடல் பொருந்தாதென்பது, இதனானுந் தெற்றென வுணர்க. "தம்முளொன்றனை யொன்று நோக்கி இருமொழியு மிலக்கணைப் பொருள் பயக்குமேனின்,அஃது அன்னியோன்னியாச்சிரய தோடமாம்" என்றதனை "அரண்ணிய ருதிதம்" என் றிகழ்ந்து, "அதற்கு முன்னுதல் பின்னுதை லுளதாகியசொல்லை அக்கருத்தறிவுறுத்தற் கருவியாகக்கொள்ளின், வழுவன்று" என அதனை ஏதுவாகக்கூறினார். அதுவு மன்னியோன்னியாச்சிரய தோடமாய் முடியுமென்பது நோக்கிலர்போலும். வேறொரு மொழியை யவாவாது தந்தம்முளொன்றற்கொன்றேகருவியாமென்பதுபடக் கூறுதலின், அது குற்றமேற்குற்றமாய்முடியும்; மற்று முணர்ந்துகொள்க.

இனி 'இதற் கிது பொருள்'என்றவழி,'அதற்கதுபொருளன்று'எனமறுத்தாரைப் பரிகரித்து அப்பொருளைத் தழீஇக்கொள்ளப் புகுந்தார், அதற் குபயோகமா யுள்ளவைமாத்திரையே கூறல் வேண்டும். ஈண் டவ்வாறன்றி, "எவ்வகைச் சொற்கு மாற்ற லிருவகைத்து" என்றும், "அவற்றியல் பிவை" என்றும், "அவற்றுண் முன்னையது இத்துணைப் பகுதித்து" என்றும், "மற்றும் இத்துணை யித்துணைப் பகுதித்து" என்றும், "அப்பொருட் கட்படு மியை பித்துணைப் பகுதித்து" என்றும், மற்று மின்னோரன்னவற்றைக் கொன்னே விரித்துக் கூறுதலும், "குறிப்புப்பொரு ளிலக்கணைப்பொருளி லடங்காதென்ப தொருசாரார் மதம்" என்றலும், "அவற்றுளொன்று சிறப்புடைத்து" என வலியுறுத்தலும், "அவற்றிற் குதாரணம் இவையிவை" என வெடுத்துக்காட்டுதலும், ஆகிய வின்னோரன்னவையெல்லாம், 'ஓசை நிலையுதலில்லது, வாயிற்குப் புலனாதலால், குடம் போலும்' என, 'விபக்கத்துச் செல்வதாகிய விஃ தீண்டைக் கேதுவாதல் யாங்ஙனம்' என ஒருவன் கடாயவழி, 'இவ்வோசைதான் ஆகாயத்தின் குணமாயுள்ளது; அதற்குச் சம்பந்தஞ் சமவாயம்; அது நிலையுடையது; ஓசை ஆகாயத்தின் குணமென்பது, அவ்வாகாயத்

தில் அஃது ஒலிரோலிவடிவாய்த் தோன்றிச் செவிப்புலனாதல்பற்றி யறியப்படும்; அவ் வோசை செவிக்கட்சென் றியையுமா றியாங்ஙனமெனின், முரசு குணிற்கூட்டரவிற் பிறந்தவோசை நீர்த்தரங்கம்போல வேறுவேறு தோன்றி யிறுதிக்கண்ணெழுந்த வோசை செவிக்குப் புலனாமென் றிவ்வாறுணரப்படும்' என்று இயைபில்லனவாகச் சொல்லுஞ் சொற்கள்போல, மற்றொன்று விரித்தலின்பாற்பட்டு, அருத்தாந்தரமென்னு நிக்கிரகத் தானமா மென் றொழிக.

அங்ஙனங் கூறியவற்றுள்ளும் பொருந்தாதன பலவுள. மற்றுக் 'கங்கைக்கண் வேடச்சேரி' என்றாலே, 'கங்கை வேடச்சேரி' என வொரோவழிச் செம்பொருள்படுதற்கு மேற்கும். அவ்வாறன்றிக்,'கங்கையின்கண் வேடச்சேரி' என இன்சாரியை தலைப்பெய்து கூறுமிதன்கண், அப்பொருள்படு மா றில்லை. கண்ணெனுருபு அப்பொருளுணர்த்தும் என்றுகோடற்கு, நச்சினார்க்கினிய முதலியனவே சான்றெனபது. "இச்சொல்லா னிப் பொருள்பயக்கவென்னுஞ் சிவசங்கேதம் இயற்கையாற்றல்" எனப் பிறமதப் பயிற்சிபற் றிக் கூறியது, ஈண்டைக் கவசித்தாந்தமாதல், சிவாகமநூல் வல்லார்வாய்க் கேட்டுணரப் படு மென்பது.

* 'உறுப்புறுப்பி நிலையாற்றல்'என்னு மூன்றாம்பகுதி தமிழின்கண் இடுகுறிப்பெயர் காரணப்பெயரென்னு மிரண்டனுள் அடங்காது வேறுபெயர்பெறுத லறிந்திலர்போலு மென்பது. இன்னு மிவ்வாறு வருவனவெல்லா மோர்ந்துகொள்க. ஈண்டு விரிப்பிற் பெருகும்.

ஈண்டைக் குபயோக மல்லாதவற்றை விரித்தலா லாவதோர் பயனு மில்லையென் றொழிக.

மேலை மறுப்பினுள், 'இனிச் சொல்லுவான் கருத்துவகையால்' என்பது முதலாக யாங் கூறியவுரைகளிற் பெறப்படுந் தாற்பரியமே ஈண் டொருவகையால் வகுத்துக்கூறினு மென்ப துணர்ந்துகொள்க.

இத்துணையுங் கூறியவாற்றால், 'எடுத்து' என்னுஞ் சொற்குச் "சின்மாத்திர சுத்த கேவலமாகச் சேடிக்கப்பண்ணி" என்றுரைத்தல், ஒருவாற்றானும் பொருந்துமா றில்லை யென்பது, மனக்கோட்டம்விட்டு, நுண்ணறிவு நடுவுநிலைமையு முடையராய் நோக்குவார்க்கெல்லாம், இனிது விளங்கு மென்பது. இனிக் "கல்லாவொருவன்" முதலாக அவற்றை யெடுத்துக்காட்டுதல்,"குணமென்னுங் குன்றேறிநின்றார்' இயல் பன்று" என்பார்க்கு,அவற்றை முதற்கண் அங்ஙன மெடுத்தோதிய தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் முதலிய அவரெல்லாங்," குணமென்னுங் குன்றேறி நின்றார்" என்பது, உடன்பாடன்றுபோலுமெனக் கூறி விடுக்க.

* உறுப்புறுப்பி நிலையாற்றல் - காரணவிடுகுறி யெனப் பெயர் பெறுமென் றுணர்க.

---

திருச்சிற்றம்பலம்.

---

**'எடுத்து' என்பதற்கிட்ட**

**வைரக்குப்பாய முற்றிற்று.**

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சிவசமவாதகண்டனமென்னும்

# சிவசமவாதவுரை மறுப்பு.

இக்காலத்துச் சைவரிலொருசாரார் உருவ சிவசமவாதிகளிற் சிறுபான்மை வேறுபடப் புதிதாக வொருமதங் கட்டிக்கொண்டு, அதற்கேற்பச் சிவாகமவாக்கியங்களைத் தமக்குத் தோன்றியவாறெல்லாம் ஈர்த் திடர்ப்படுத்தா வியாக்கியானஞ்செய்து தம்முள் வைத்துத் தாமே நலம் பாராட்டாநிற்பர். அதுகேட்ட பேதைகளும், அவர்சொல்லிய அர்த்தத்தையுஞ் சிவாகமவாக்கியங்களையும் முன்பின் மலைவறநோக்கி, இஃதிணங்கும் மற்றிஃதிணங்காதென்று தெரிந்துகொள்ளமாட்டாமல், கெதானுகெதிக நியாயத்தானேஅவர் தம் மதத்திற்றுனே வீழ்ந்து கூடி நலம் பாராட்டாநிற்பர். அவர்தாம், சிவஞானசித்தி சிவாகமார்த்தங்களுக்கெல்லாம் உரையாணியெனச் செயப்பட்டு நிலைபெறுவதென்றுலகிற் பிரசித்தியுறுதலின், அதனைத் தள்ளிற் றங்கருமம் பலிக்கமாட்டாதென் றுட்கொண்டு, அதற்கும் இணக்கமின்றாகவுரையொன்று செய்துகொண்டனர். அவ்வுரையிலுள்ள தோஷங்களை விசாரித்தல் மணற்சோற்றிற் கல்லாய்தல்போலும். ஆதலின், அதனை லக்ஷியத்தின்பாற் படுத்துக் கண்டித்தல் மகாபாணப் பிரயோகத்திற்கு முயலை லக்ஷியப்படுத்தல்போல வடுச்சொற்கேதுவாம். ஆயினும், "சாஸ்திரப் பிரவேசமின்றிச் சித்தாந்த வுபதேசமாத்திரங் கேட்டுச் சிந்தித்திருக்கு மந்தபுத்தியுடையார்க்கு, அதிற் புத்திப் பிரமசம் வாராமற் சிறிதொரு வழி காட்டுக" என்று பெரியோர் ஆஞ்ஞாபித்தலின், ஆஞ்ஞோல்லங்கனஞ் செய்யலாகாதென்று சம்மதித்து, ஸ்தாலிபுலாகநியாயம்பற்றி அதன்கண் ஆண்டாண்டுச் சிற்சில தோஷங்களெடுத்துக் காட்டுதும்.

" சிவமுற நமக்கு முந்தி "

தமிழ் வியாகரண மிருந்தமூலையுங் கண்டறியாது, தமிழ்க்காவியங்களையுங் கேட்டறியாது, தமிழ்ப்பதங்களையேனு மிகப் பயின்றறியாது, 'தமிழ் நூலுக் குரைசெய்து'மென்று நீர் ஆரம்பித்துக்கொண்டது, சிறுமியர் சிறுவீடுகட்டி விளையாடுதலை யொக்கும். ஆதலின், நும்முரையின்கணுள்ள சொற்குற்றங்களை யொழித்துப், பொருட்குற்றங்களுட் சிற்சில எடுத்துக் கூறுவான் புகுந்தேம்.

" முத்தான்ம முத்தான்ம சிற்சத்திகளெல்லாஞ் சிவ சிவசிற்சத்திகளோடு முழுவது மொக்கும்" எனக் கொண்டநீர், அதற்கு மாறுபாடாக முதற்கட்டானே "உவமையில் சிவன்" என்றும், "ஒப்பிலாவுமை" என்றுஞ் சொல்லியது, நுமக் கவசித்தாந்தமாம். அதனைச் சங்கோசம் பண்ணிப்பொருள்கோடுமென்பிராயின், தொடக்கத்தில் நீர் சொன்னசொற்கே சங்கோசமாக வுரைசெய்திடின், நும்முரை முழுவதுஞ் சொற்கிடந்தபடியன்றிச் சங்கோசமுறையானே மூலத்திற்கேற்ப வேறு பொருள்கொள்ளப்படுமென முடிந்தது. இனி

அங்஫னம் நும்முரைக்கெல்லாஞ் சங்கோசமாகப் பொருள்கொள்வுழி, நும்மதங்கைவிடப் படுதலும், நமது சித்தாந்த நிலைபெறுதலும், ஒருதலையாம். ஆகலின், முதற்கட்டானே "உவமையில்சிவன்" என்றும், "ஒப்பிலாவுமை" என்றும், நீர் பிரயோகித்த சொற்களுக்குச் சங்குசிதமாகப் பொருள்கொள்வது நமக்கே பலமாயிற்று. "முன்னுரை நலங்கொளார்க்கு நவமுறு முரை யுரைப்பாம்" என்றீர். எனவே, 'முன்னுரையே நல முடைத்து; அதனலங் கொள்ளமாட்டாத பேதைகளுக்கு நாமொரு நலமிலுரையுரைப்பாம்' என்றதாயிற்று. இதனால், "யானுமறியே னவளும் பொய் சொல்லாள்" என்னும் பழமொழிக்கு நும்வாக்குச் சிறந்த எடுத்துக்காட்டாம். இது நிற்க.

## "ஒருகோட்டன்"

வாரணமுகத்தையுடையானை "வாரணம்" என்றுகுபெயராற் கூறி, 'ஒருகோட்டன்' முதலிய விசேடணங்களுக்கு விசேடியமாக வைத்த ஆசிரியர் கருத் தறியமாட்டாது, "வாரணமென்று ரூபகம் பண்ணுக" என்றீர். ரூபகப்பிரயோசனமுள்ள பதான்னுவயமில்லாதவிடத்து ரூபகஞ்செய்தல் பொருந்தாதென்ப தறியகில்லீர். அலங்கார சாஸ்திரம் படித்தறிந்தீராயின், இவ்வாறு ரூபகத்திற்கும் ஆகுபெயர்க்கும் பேதந் தெரியாமற் சொல்லி யிழுக்குறீர். அதுகிடக்க.

## "என்னையிப் பவத்திற் சேரா வகை"

இயம நியமாதி யட்டாங்கங்களும் யோகத்திற்கேயன்றி ஞானத்திற்கு முண்டென்று சிவாகமங்கள் கூறினதில்லை யென்பதும் விசாரியாமல், சாலம்பயோகம்போல நிராலம்பயோகமும் யோகபாதத்திலன்றி ஞானபாதத்திற் சொன்னதில்லையென்பதும் விசாரியாமல், 'சாலம்பயோகமே யோகம்,' 'நிராலம்பயோகம் ஞான' மெனக் கொண்டு, "அதிற் பிரத்தியாகாரந் தாரணைவரையிற் சமனைபரியந்தஞ் செல்லும்" என்றும், "அதுவரையு மான்மாப் பசுவெனப்பெயர்பெற்றுப் பசுத்துவமெனப் படிக்கப்படும்" என்றும், "அதற்குமேல் உன்மனமூலந் தியானத்தானம்" என்றும், "அவ்விடத்திற் பசுத்துவ நிவிர்த்தியாய் ஆன்மாப் பசுவென்னும் பெயர்நீங்கி அறிவுமாத்திரமாய் ஆன்மாவெனப்பெயர்பெற்று ஆன்மதத்துவமெனப் படிக்கப்படும்" என்றும், "அதற்குமேல் உன்மனகலாந்தஞ் சமாதித்தானம்" என்றும், "அவ்விடத்தில் ஆன்மாவென்னும் பெயர் போய்ச் சிவனைப்போல நிட்களமாய்ச் சர்வகமாய் அதிக்கிராந்த விந்துகமாய்ப் பரமெனப் பெயர்பெற்று வித்தியாதத்துவமெனப் படிக்கப்படும்" என்றும், "அதற்குமேல் உன்மனகலைக்குபரி சாக்ஷாத்காரத் தானம்" என்றும், "அவ்விடத்தில் ஆன்மாப் பரமென்னும் பெயருநீங்கிச் சிவனைப்போலச் சாட்குண்ணிய பரிபூரணமாகிய சிவத்துவாபி வியத்தியுடையவனாய் நிட்களாதீதமாய்ச் சுத்தசிவமெனப் பெயர்பெற்றுச் சிவதத்துவமெனப் படிக்கப்படும்" என்றும், "இந்த ஆன்ம தத்துவ முதலிய மூன்றுமே முறையே ஞானம் ஞேயம் ஞாதிரு வெனப்படும்" என்றும், "இதிற் பிரத்தியாகாரஞ் சுத்தாவஸ்தைச் சாக்கிரம்; தாரணை சொப்பனம்; தியானஞ் சுழுத்தி; சமாதி துரியம்; சாக்ஷாத்காரம் துரியாதீதம்" என்றும், "சித்தாந்த மகாவாக்கியத்தில் மூன்று பதத்திற்கும் வாச்சியப்பொருள் வேறேயானாலும் இலக்கியப்பொருள் இப்போது சொல்லப்பட்ட ஆன்மாவென்பதும் பரமென்பதுஞ் சிவமென்பதுமாகிய மூன்றுமே யாம்" என்றும், நீர் கொண்டவாற்றிற்கேற்ப, இத்திருவிருத்தத்தில் இந்தமூன்றின் விளக்கமும், 'சித்தத்தே' என்பதனானும், 'தன்னை' என்பதனானும், 'தாளிணை' என்பதனானும், இலக்கணையாற் சொல்லப்பட்டதென்று உரை செய்தீர்.

'கட்டில் கூப்பிட்டது' என்ற விடத்திற் கட்டிலுக்குக் கூப்பிடுந்தன்மை யில்லாமையால் ஆண்டுக் கௌணப்பொருளுரைத்தல் வேண்டும். 'ஆயுக்கிருதம்' என்றவிடத்தும் ஆயுவுக்குக் கிருதத்துவமில்லாமையாற் கௌணப்பொரு ளுரைத்தல் வேண்டும். 'நூலுடுப்பு' என்றவிடத்து நூருனே யுடுப்பாகமாட்டாமையால் ஆண்டு இலக்கணைப்பொருளுரைத்தல் வேண்டும். 'கங்கையில் வேடச்சேரி' என்றவிடத்துங் கங்காசலப்பிரவாகம் வேடச்சேரிக்கு ஆதாரமாகமாட்டாமையால் ஆண்டும் இலக்கணைப்பொரு ளுரைத்தல் வேண்டும். 'பிச்சை சிதம்பரத்தில் வசிப்பிக்கிறது' என்றவிடத்தும் வசிப்பிக்கிற தொழிலுக்குப் பிச்சை கர்த்தாவாகமாட்டாதாகையால், வேறிலக்கணைப்பொரு ளுரைத்தல்வேண்டும். "சிங்கந்தானே புருடன்' என்றவிடத்தும் புருடனுக்குச் சிங்கத்துவசாதி யில்லாமையால் இலக்கணையால் வேறு பொரு ளுரைத்தல் வேண்டும். அருத்தவாதந் துதிவாதங்களுக்கும் அப்பொருள் கூடாமையாற் முற்பரியப்பொருள் வேறுரைத்தல் வேண்டும். அவ்விடங்களிற்போலத் 'தன்னைவைத்து' என்றவிடத்தும், 'தாளிணை தலைமேற்சூட்டும்' என்றவிடத்தும், அருத்தானுபபத்திக்கு இட மில்லை. இரு சிவத்தியானங்கொண்ட நுமக்குச் சிவசொருபத்தியானமும் அங்கிகாரமாம். ஆதலின், 'சித்தத்தே தன்னைவைத்து' என்பதற்கு, இதயத்திலே குருரூப சிவத்தியானஞ் செய்வித்தென்னும் பொருளு முடம்பாடாமன்றி விரோதமாமாறில்லை. இன்னும், சாம்பவிதீக்கையிற் றிருவடி சிரசின்மேற் சூட்டுவது நுமக்கும் அங்கிகாரமாம். ஆதலின், 'தாளிணை தலைமேற் சூட்டும்' என்பதற் கங்ஙனம் பொருளுரைப்பதூஉம் நுமக்குடம்பாடாவதன்றி விரோதமாமாறில்லை. இங்ஙனம் நுமது மதவிரோதமுமின்றி உபபத்தியு நேர்வதாகவும், ஈண்டும் இலக்கணையென்றுகொண்டு வேறு பொருளுரைத்தல் நெறியன்று. பதங்கள் விரோதப்பொருடராது உபபத்தியு முடையனவாயிருக்கவும், இலக்கணையென்று வைத்து வேறு வேறு பொருளுரைப்பின், அவையெல்லா நியமமுறைபிறழ்ந் தொழியுமென் றுணர்க. 'தன்னைவைத்து' என்பதும், 'தாளிணைதலைமேற் சூட்டும்' என்பதும், அவ்விடங்களிற்பொருண் மாறுகொள்ளாவிடினும், 'எடுத்து' என்னு மூற் சொல்லொடு சம்பந்திக்கும் பொழுது பொருள் பகைக்குமாகலின், இலக்கணைப்பொருளே ஆண்டுக் கொள்ளல்வேண்டும். அங்ஙனமுரைபண்ணுது விடின், 'எடுத்து' என்பதற்குச் 'சமனுந்தம் பாசமுத்தியாகிய பசுத்துவ நிவிர்த்தியே பொருள்;' ஆதலால், அது நின்று வற்றிப்பொருள் பகைக்குமென்பிராயின், 'எடுத்து' என்பதற்கு அதுவேபொருளென்பதற்கு நியாமகம் என்னை? ஒன்றுங் காண்கிலம். இன்னும், தீக்கையில் அத்துவசோதனை செய்தபின்னரன்றே ஆன்மாவைப்பிராசாதமார்க்கத்தாற் சமனைபரியந்தம் எடுத்துக்கொண்டுபோவது. இந்தத் திருவிருத்தத்தில் அத்துவசோதனை செய்தென்று சொன்னதில்லையாக, 'எடுத்து' என்பதற்குப் பின்னர்ச் சின்மாத்திர சுத்தகேவலமாகச் சேடிக்கப்பண்ணி யென்பதைக் குறிக்குமொருசொற்றானுமில்லையாக, முன்பின் ஒருசம்பந்தமுமின்றி 'எடுத்து' என்றன் மாத்திரையானே அப்பொருள் படுமோ? சாஸ்திரத்தில் 'எடுத்து' என்று வருவனவற்றிற்கெல்லாம் அதுவே பொருளாகலின், அதற்கேற்ப 'அத்துவசோதனை பண்ணி' என்பதும், 'ஆன்மாவாகச் சேடிக்கப்பண்ணி' என்பதும், அவ்விடத்தில்லையாயினும், அவைதம்மை வருவித்து உரைசெய்துகோடுமென்பிராயின், இந்தத் திருவிருத்தத்திற் 'பவத்திற் சேரா வகையெடுத்து' என்றவாறே, "சிவஞானச் செயலுடையோர்" என்னுந் திருவிருத்தத்திற் "பவமாயக் கடலிலழுந் தாதவகை யெடுத்து" என்றோதுதலின், ஆண்டு மிவ்வாறே யுரைசெய்தல்வேண்டும். ஆண்டு மிவ்வாறே யுரைசெய்து மெனின், "மீளத் தவமாரும் பிறப்பொன்றிற் சாரப் பண்ணி" என்று கூறுதலின், நீர்கொண்ட சிவத்துவாபி வியத்திக்கு மீளப் பிறப்புண்டென்றவாறாயிற்று. ஆண்டுப் பொருள் பகைத்தலின், அவ் 'வெடுத்து' என்னும்

பதத்திற்கு வேறுபொருள் கோடுமென்பிராயின், ஈண்டும் பொருள் பகைத்தலின், 'எடுத்து' என்பதற்கே வேறு பொருள்கோடல் வேண்டுமென்று சமானமாம். அதுநிற்க. "* த்யஜே தேகங் குலஸ்யார்த்தே" என்னு நியாயத்தான், முன்னும் பின்னுமுள்ள சொற்களெல்லா வற்றோடும் பகைத்தலின், 'எடுத்து' என்னுஞ் சொற்கே வேறுபொருள் கோடல்வேண்டுமென்று தெரிந்துகொள்ளமாட்டாத பேதையீர்க் குணர்த்தும் வாயி லில்லை. இன்னும், நீர்கொண்ட அர்த்தத்தை 'எடுத்து' என்னும் பதம் இலக்கணையானன்றி யுணர்த்தமாட்டாது. என்னை? ஆன்மா எடுக்கத்தக்க கண்டிதப்பொரு ளன்றாகலானென்பது. ஆகவே, தானே தன்பொருளோடு பகைத்துத் தாற்பலமுற்று இலக்கணையாற் பொருள் கொள்ளக் கிடக்கும் 'எடுத்து' என்னும் பதம் அன்னியபதங்களைத் தாற்பலஞ்செய்ய வல்லதாகமாட்டாது. இதுதானு மறிந்துகொள்ளமாட்டிலீர். இவ்வாறு சாஸ்திரமுழுவதுஞ் சம்பந்தமின்றி மூலமொருபக்கமும் உரை மற்றொருபக்கமுமாகப் போலிப்பொருள் பயப்ப வுரையெழுதுதற்கு நும்மைப்போல யாரும் வல்லராகார். இவ்வாறே நீர் பவுட்கரத்துக்கும் வியாக்கியானஞ் செய்துமென்று பெயரிட்டு, விளையாட்டுமக்கள் நகையாடுந் திறத்தாற் போலிப்பொருள் சொல்வதுபோலத், தொடக்கத்திற்றானே பிரகிருதானுசாரமின்றிப் பதப்பிரயோசனங் கற்பிக்கத்தெரிந்தவர்போலக் காட்டி, மகாமேருப் பிரசம்சை பண்ணினீர். அதிவியாத்தி பரிகாரார்த்தம் அங்ஙனம் பண்ணல் வேண்டிற்றெனின், ஆண்டுப் பிரகிருதஞ் சம்போதனமேயன்றி இலக்கணஞ் சொல்லுமிடனன்றாகலின், ஆண்டு அதிவியாத்திப் பிரசங்கம் வருதற் கேது வின்று. அல்லதூஉம், எதிர்முகமாகவிருந்து † ஆமந்திரணஞ் செய்து உத்தரப் பிரத்தியுத்தரமாக நடந்துசெல்லு நெறிக்கிடையே, ஈண்டுச்செய்த ஆமந்திரணமாத்திரம் எதிர்முகமாயிருக்கிற எம்மைக் குறித்ததோ? எதிர்முகமல்லாததூஉம் அசேதனமாயுள்ளதூஉமான மேருவைக்குறித்ததோ? என்று சந்தேகிப்பராயின், சீகண்டபரமேசுரர் அத்தனை அஞ்ஞானமுடையவரென்றன்றே நும் வியாக்கியானத்தாற் பெறப்படுவதாம். அதுவேயுமன்றி, அதிவியாத்தி அவ்வியாத்தி அசம்பவ பரிகாரம் ஆசிரியர் சிஷ்யர்களுக்குப் போதிப்பதன்றிச் சிஷ்யர்கள் ஆசிரியருக்குப் போதிப்பதென்பதூஉ மாம். அன்றியும், முன்னர்ப் பிரயோகித்த பதத்தினுன் மகாமேருவில் அதிவியாத்தி வந்ததென்றுட்கொண்டு, அதனைப் பரிகரித்தற்குப் பின்ன ரொருபதம் பிரயோகிக்கலுறின், மேலும் அதன்கண் அதிவியாத்தி யெய்தாது பரிகரிக்கத்தக்க பதம் பார்த்தன்றே பிரயோகித்தல் வேண்டும். அவ்வாறன்றிப், பின்னும் பின்னும் அந்த மகாமேருவின்கட்டானே அதிவியாத்தியை யெய்துவிக்கும் பதங்களையே பிரயோகித்தாரெனச், சனகாதி முனிவரிடத்தும் பெரியதோர் அஞ்ஞானத்தை அவ்வியாக்கியானத்தா லாரோபித்தீர். இவ்வாறெல்லாம் பலதோஷயுத்தமாக வியாக்கியானஞ்செய்தற்கு நீரன்றி ஏவர் வல்லராவர்! இன்னும், ஆண்டு "ஹம்வநு" என்னு முதற்பதத்திற்குச் 'சர்வசாஸ்திரப் பிரசித்த சாமானிய ஐசுவரியமுடையவனே' என்று பொருளுரைக்காமல், "வித்தியா பாதைக வேத்தியமான சுத்தவித்தையில் விளங்கும் விசேஷ ஐசுவரியமுடையவனே" என்று ஆமந்திரணம் பண்ணினாரென்று பொருளுரைத்தது, நும் வியாக்கியானத்துக்குப் பூர்வாபர விரோதமாம். யாதினாலெனின். ‡ "ஶ்ரோதுமிச்சாமஹே வயம்" என்புழிச், 'சனகாதிகளுக்கு மதாந்தரங்க

* இ-ள். "குல நலத்தின்பொருட்டு (அதற்குமாறான) ஒருவனை நீக்கிவிடுக" என்றவாறு. † ஆமந்திரணம் = விளி. ‡ இ-ள்.] "கேட்டற்கு விருப்பு மீதூருகின்றது" எ-று.

ளிற் பிரவேசமேயன்றி வித்தியாபாதத்திற் பிரவேசமில்லாமையால், இவ்விடத்திற் புத்தி
விருத்தி மனோவிருத்தியெனச் சாமானியப் பொருளுரைத்தல்வேண்டுமேயன்றிச்,சிற்சத்தி
வியத்தியுடையராயினும், அதனை அவரறியாமையின், சிற்சத்தி வியத்தியில் வைத்துப்
பொருளுரைத்தலாகாது' என்று பின்னுரைத்தமையினென் றறிக. 'மாறுகண்ணுக்கு
மூலைசெவ்' என்னு நியாயத்தானே தொடக்கத்திற்றானே இத்தனை தோஷங்களுக் கிடனா
யிருக்கும் அவ்வியாக்கியானம் நுமக்குமாத்திரம் நன்றாய்க் காணப்படுகின்றது! திவ்விய
ஸ்திரீயிடத்திலுள்ள நலம் நபுஞ்சகனுக்குத் தெரியவாராப் பெற்றிபோல, ஸ்ரீஉசு உமாபதி
சிவாசாரியர் பிரகிருதானுசார மாகவும், சகலமத * சிலாகனகாரியாகவும், பலவத்தாகவும்,
ஆண்டுச்செய்துவைத்த பதப்பிரயோசன சாரத்தைப்பார்த்து மறியமாட்டாத நும்முடைய
ஞானத்தின் மாகாத்மியத்தை, எற்றென் றெடுத் துரைப்பாம்! இனி உங்கள் உமாபதி
சிவாசாரியர் பரமதங்களுடன் போராடித் தர்க்கசெடிலமாக வியாக்கியானஞ் செய்த
னரன்றிப், பரிபாகியாயுள்ள சிஷ்யனுக்குமாத்திரந் தெரியுமாறு சம்பிரதாயமாத்திரை
யானெடுத்துக்கொண்டு வியாக்கியானம் பண்ணிற்றிலர். ஆகலின், அது எமக்குறுதிபய
க்காதென் றுபேக்ஷையாற் கைவிட்டோமென்பிராயின், நீர் பண்ணிய மகாமேருப் பிர
சம்சைமாத்திர நும்மனோர் சம்பிரதாயத்துக் காவசியகம் வேண்டுவதுபோலும்! அன்றியும்,
அந்த வியாக்கியானம் யாண்டுந் தூஷணை என்முக்கியமே பிரதானமாகக்கொண்டு அகங்
காரசெடிலமாயிருப்பதன்றி, வேறு நலமுடைத்தன்றாதலை நோக்கின், அதுவே நும்மனோர்
கொண்டுபோற்றுஞ்சம்பிரதாயமென்பது புலனும்! நுங்குழறுபடையெல்லா நும்மனோர்க்
கே ஏற்பனவாம். சர்வஞ்ஞானோத்தராதி சிவாகமங்கள் உபதேசமாத்திரையா னெடுத்துக்
கொண் டனுக்கிரகிப்பனவாகலின், அப்பெற்றியவாஞ் சிவாகமங்களுக்குச், சம்பிரதாயமா
த்திரையாற்றானே வியாக்கியானஞ் செய்தல் வேண்டும். பவுட்கராதி சிவாகமங்கள், அங்
ஙனமன்றிச், சித்தாந்தத்தைச் சாதாரணமாகச் சொல்லிவைத்துப், பரமதகண்டனமே
பிரதானமாகக்கொண்டு, பிரசினமும் உத்தரமு மேன்மேற் றலைப்பெய்து தர்க்கசெடில
மாய் நடப்பனவாகலின், அப்பெற்றியவாம் பவுட்கராதி சிவாகமங்களுக்கு, அவ்வாறு
மூலானுசாரமாகவே வியாக்கியானஞ் செய்தல்வேண்டுமன்றி, நும்மைப்போல வியர்த்த
வியாக்கியானஞ்செய்தல், அபசாரமென் றொழிக. அதுநிற்க.

**"பண்டைநற் றவத்தால்"**

இதன்கண், "தேசிகனுக்கு ஞானம் பிரதானம், சாதகனுக்குத் தீக்கை பிரதானம்"
என்றும், "ஞானந் தீக்கைக் கங்கம்" என்றும், "மலந் திரவியமாதலா னேத்திரபடலம்
போல ஞானகோடிகளாலும் போகாது" என்றும், பிரலாபித்தீர். இவையெல்லா முன்
னர்த் தந்து கண்டித் தொழிப்பாம். சமவாத பிசாசாவேசராய்த் துராக்கிரகங்கொண்டு
பிரலாபிக்கு நும்போல அடிக்கடி புலம்பாம். ஈண்டு, "ஈசன் புண்டரிகத்தாள்" என்
பதற்கு, "ஆன்மாவினது புண்டரிகத்தாள்" என் றுரை செய்தீர். இஃது யாண்டும் பயி
ன்று வருதலின், இந்த அப்பியாசலிங்கத்தை அதிக்கிரமித்துக் கௌணப்பொருள் சொல்
லுதல் நியாயவிரோதமென் றறிக.

**"அருளினு லாக மத்தே"**

இதன்கட் "பரதந்திரியங் கரைகழிபந்தம்" என்று ஞானுமிர்தத்து வருதலாற், பரமு
த்தியில் ஆன்மாச் சிவனுக் கடிமையல்லன்; சிவனைப்போலத் தானுஞ் சுதந்திரன்" என்றீர்.

* சிலாகனகாரி என்பதற்குப் "புகழ்புரிந்தில்லிலோர்க்கு" என்புழிப்போலப் பொருள்கொள்க.

"பரதந்திரியங் கரைகழி பந்தம்" என்பதற்குப் பொருள் முன்னர்க் கூறுதும். அதுநிற்க. விஞ்ஞானதீக்கையில் 'உடல் பொருளாவி மூன்றும் என்னுடைமை யல்ல, சிவனுடைமை யாம்' என்று, குருசொரூப சிவனுடைய ஸ்ரீ ஹஸ்தத்திற் றானஞ்செய்து, அங்ஙனந் தானஞ்செய்திட்ட ஞானந் திடம்பிறக்கவேண்டித், தினந்தோறுஞ் சிவபூசையிற் செப நிவேதன கன்மநிவேதனங்களோடு * "ஶிவொதாதா" என்னு மந்திரஞ்சொல்லி, ஆன்ம நிவேதனஞ் செய்துபோந்தும், மனம் வேறு செய்கை வேறாகக்கொண்டு, சிவதருமாகமத்தில் "தானத்துக்குப் பரமசற்பாத்திரஞ் சிவன்" என்றோதுதலின், அப்பெற்றியுடைய சிவபரமசற்பாத்திரத்திற் றானஞ்செய்தபொருளைச் சிவனுடைமையன்றென்று மாறுற்று மீட்டபகரித்தலின் தத்தாபகாரிகளாய்ச், செய்யுங் கிரியையெல்லாம் இங்ஙனம் மனம் வேறு செய்கை வேறாகக்கொண்டு செய்தலிற் பரமவஞ்சகர்களாய்ப், பரமுத்தியிலான் மாச் சிவன்வழித்தாய் நிற்பதின்றென்றலின் சிவன் அநாதிதொடங்கி இதுகாறுஞ்செய்து போந்த வுபகாரத்தை மறந்த கிருதக்கினர்களாய், நான் சுதந்திரனென்றுகொண்டு நிற்றலின் அகங்காரிகளாய்த், தம்பாற் காணப்படுஞ் சிவசாட்குண்ணியத்தைச் சிவசாட்குண்ணியமன்று, நஞ்சாட்குண்ணியமேயென்று பேசுதலின் துர்விவகாரிகளாய்த். † "திலெதைலவதிவஸ்ரூவஹிஷவ்யவஸ்தஃ" என்னும் வசனத்தின்படி சர்வாந்தரியாமியாய் நிறைந்திருக்கிற சிவனுக்குஏளபச்சிலேடிகவியாத்தியினாற்'சர்வாந்தரியாமித்துவம் இல்லை' என்று நூனதை யாரோபித்தலின் சுவாமித்துரோகிகளாய், ‡ "க்ஷீரெக்ஷீரஂஜலெஜலஂ" என்றவசனத்தின்படி பிரிக்கப்படாமற் சம்பந்தித்திருக்கும்'ஆன்மசிவன்களுக்கு ஒட்டில்லை' என்று பிரித்துப் பேசுதலானும்,வேதாந்தத்தின்கணுள்ள ¶ "ஏகவாவாத்மா" என்றற்றொடக்கத்து வசனங்களுக்குப் பொருடெரியமாட்டாது, § "வெதஸாரஂஶிவாகமஂ" $ "வெதாந்தாத்தஂஜ்ஞாநஂ" என்னுஞ் சிவாகமவசனங்களின்படி சூத்திரமும் பாடியமும்போலத் தொகை வகையாயும் பொதுச்சிறப்பாயும் ஒருகருத்தினவாயுமிருக்கும் வேதத்தையுஞ் சிவாகமத்தையும் பேதித்துப் பிரமாணப்பிரமாணஞ் சொல்லுதலானும், அந்தச்சித்திரகாரிகளாய், "|| ஊதிவணாஶ்ரஂஜாவாராநுஜநஸாவிநஜஂவயெசு" என்றற்றொடக்கத்துச் சிவாகமவசனங்களை யதிக்கிரமித்தொழுகுதலின், சிவாஞ்ஞா பங்க காரிகளாய்ச், சிவ வாக்கியங்களை மனம்போனபடியெல்லாம் பேதித்து அர்த்தஞ்செய்தலின் சிவகோபாஸ்பதர்களாய், இவ்வாறு பரமசிவத்துரோகிகளாயிருக்கு நம்மனோருடன் சம்பாஷணஞ் செய்தல், நரகபதனவேதுவாகலின், நம்மைக்காணிற் றூரவொதுங்கிப்போதலே செயற்பாலதன்றி, முகம்பார்த் துரையாடுத றக்க தன்று.

---

* இ - ள். "ஈய்பவன் சிவனும்" எ-று. † இ - ள். "எள்ளின்கண் நெய் உள்ளும் புறம்புங் கலந் துறைதல்போல முதல்வன் இருவேறுவகைப் பிரபஞ்சத்தின் உள்ளும் புறம்புங் கலந் துறையும்" எ-று. ‡ இ - ள். "பாலின்கட் பாலும், நீரின்கணீருங், கலந் தொத்தாற்போல" எ-று. ¶ இ - ள். "பரமான்மா ஒருவனே" எ - று. § இ - ள். "வேதத்தின்சாரமான சிவாகமத்தினை" எ-று. $ இ - ள். "வேதாந்தத்தின் பொருளான இந்த ஞானம்" எ-று. || இ - ள். "இவ்வாறு ஒதிய வருணாச்சிரம ஒழுக்கங்களை மனத்தானுங் கடந்திடற்க" எ-று.

## " அன்னிய சாதியுந்தன் சாதியும் "

இதன்கட் "சிவத்துவ மியற்கை, பசுத்துவஞ் செயற்கை" என்று, நீர்தாமே ஆண்டாண் டுரைத்ததையு மறந்து, முன்பின் மாறுபாடுறப், 'பசுத்துவமுஞ் சிவத்துவத்தைப் போலச் சாதி' என்று கொண்டீர். அதுவேயுமன்றி, மாயாவாதி மதத்தி லிழிந்து, ஓரான்மாவுக்கே, " முத்தான்மசாதி வேறு, பெத்தான்மசாதி வேறு" என்றும், " முத்தான்மாவுஞ் சிவனுந் தன்சாதி; பெத்தான்மாவும் பாசமும் அன்னியசாதி" என்றும், பெத்தான்மாக்களுள் விஞ்ஞானகலத்துவ பிரளயாகலத்துவ சகலத்துவங்கள் உபாதியென்பதறியாது, சாதியெனக்கொண்டு, " விஞ்ஞானகலர் முதலிய மூவரும் ஒருவர்க்கொருவர் தன்சாதி, பாசமும் பதியு முத்தான்மாக்களும் அன்னியசாதி" என்றும், இவ்வாறெல்லாம் விஸ்தரித்துச் சொற்றீர். இயற்கையாயுள்ளது சாதி, செயற்கையாயுள்ளது உபாதியென்பது, சர்வமத சம்மதம். அந்தப் பேத மறியாது உபாதியுஞ் சாதியென்று கொண்டீர். ராசகுமாரன் வேடச்சேரியில் வளர்ந்தானேனும், ராசசாதியனாதலன்றி, வேடச்சாதியனாமோ? ஓரரசன் சிங்காதனத்திலிருந்தான், மற்றோரரசன் காராக்கிரகத்திற் கிடந்தானெனின், காராக்கிரகத்திற் கிடத்தன் மாத்திரையாற் சாதி அன்னியமாய்விடுமோ? இஃதுணரமாட்டாப் பிராந்தரான நுமக்கு உணர்த்து மா றில்லை. இன்னும், இவ்வாறு கூறிய நீர், ஆன்மாவுக்குப் பசுத்துவம் ஆன்மத்துவம்போலச் " சிவனுக்கு பதித்துவஞ் சிவத்துவமென விரண்டு பேத முண்டு" என்று சர்வஞ்ஞானோத்தராதியாகமங்கள் வெளிப்படையாற் கூறுதலின், ஆண்டும் இவ்வாறே பதித்துவம் அன்னியசாதி, சிவத்துவந் தன்சாதியென்று, சொல்லாது விட்டது என்னை? அதை மறந்துவிட்டீர் போலும். அன்றியும், பசுக்களுக்கெல்லாங் கிரமேண சிவத்துவாபிவியத்தியுண்டென்பது நும்மனோர்க்கெல்லாஞ் சம்மதமா மன்றே! அங்ஙனம் பசுக்களெல்லாஞ் சிவமாயொழிந்தவழிப், பதிபதார்த்தமும் பாசபதார்த்தமு முளவாவனவன்றிப், பசுபதார்த்தமென வொன்று இல்லையாயொழியும். ஆகமாந்தரங்களில் ஏழுபதார்த்தம் ஆறுபதார்த்தம் ஐந்துபதார்த்தம் நாலுபதார்த்தம் மூன்றுபதார்த்தமுண்டென்று சங்கியாபேதஞ் சொல்லப்படினும், எல்லாந் திரிபதார்த்தத்தில் அந்தர்ப்பவிக்குமென்பதுவே சகலாகம சம்மதம். அவ்வாறன்றிப், பதார்த்த மிரண்டெனக்கொண்டு, அந்த இரண்டு பதார்த்தத்தில் எல்லாம் அந்தர்ப்பவிக்குமென்று ஓராகமமுங் கூறக் கேட்டிலேம். இன்னும், சிவத்துவசாதியினால் ஆன்மாப் பதிபதார்த்தத்தில் அந்தர்ப்பவிக்குமெனின், பசுத்துவசாதியினால் அது பாசத்தில் அந்தர்ப்பவிக்குமென்றுஞ் சொல்லல்வேண்டும். " பசுத்துவத்தின் வேறாக மலத்துவம் படிக்கப்பட்டதில்லையாகலான், "அறியாமை-அகற்றி" என்பதற்கு ஆன்மசுத்திபண்ணி யென்பதே பொருள்" என்று நீருஞ் சொன்னீரன்றோ! எல்லா மிரண்டுபதார்த்தத்தி லந்தர்ப்பவிக்கும்; அசாகளத்தனம்போல அதிக சங்கியை கொள்வது எற்றிற்கு? என்பிராயின், சைவாகம விரோதமாக இங்ஙனஞ் சொல்லுநீயிர், சீவன் பிரமத்தி லந்தர்ப்பவிக்கும் பதார்த்தாந்தர மன்றென்று கூறு மாயாவாத விவகாரசோரர்களாய்ப், பிரஷ்டசித்தாந்த விவகாரர்களாய்ச், சைவசித்தாந்த வாபாசகர்களாயொழிவிர். ஆதலின், நும்மோடு பேசினும் பெரியதோ ரிழுக்காம். சிவாதிவஸ்துக்களுக்குச், சிவாத்மமலமாயாதிநாமங்கள் நிருபாதிகங்கள், பதிபசுபாசாதிநாமங்கள் சோபாதிகங்களென்பது, சகலாகம சித்தாந்தமென் றறிக.

## " உயிரினோ டுணர்வு "

இதன்கண் " பரசம்வித்தைச் சுவசம்வித்துப் பிரமேயமாயறியும் " என்றும்,

"அதற்குப் பிரமாதாப் பொதுசம்வித் தொன்றுண்டு" என்றும், "ஆன்ம சிற்சத்திபோலச் சிவசிற்சத்தியுஞ் சிவனுக்குப் பிரமாணமேயாம்" என்றும், பிரலாபித்தீர்.

### "ஈண்டுப் பக்கப் போலி"

இதன்கண் "ஆன்மசிற்சத்தி ஆன்மாவுக்கு முக்கியப் பிரமாணமாதல்போலச் சிவசிற்சத்தி சிவனுக்குமுக்கியப்பிரமாணமாம்" என்றும், "அந்தச் சிவசிற்சத்தி ஆன்மாவுக்குப் பிரத்தியக்ஷாதிகள்போல உபகாரோபசாரத்தாற்பிரமாணமாவது முத்திபரியந்தம், அப்பால் இல்லை" என்றும், "ஆன்ம சிற்சத்திக்குச் சிவன்முதலிய பொருள்கள் பிரமேயமாதல்போலச் சிவசிற்சத்திக்குப் பசுபாசங்கள் பிரமேயப் பொருளாம்" என்றும், "சிவனுக்குச் சிவசிற்சத்தி பிரமேயமாம், சிவசிற்சத்திக்குச் சிவன் பிரமேயமாகான்" என்றும், "இவ்வாறே ஆன்மாவுக்கு ஆன்மசிற்சத்தி பிரமேயமாம்,ஆன்மசிற்சத்திக்கு ஆன்மாப் பிரமேயமாகான்" என்றும், பிரமாணப் பிரமேய சாங்கரிய விவகாரம் பேசித் தார்க்கிகமத சோரராயினீர். பவுட்கரத்தில் "உபகாரத்தினை அபேக்ஷிக்கும் ஆன்மசிற்சத்தி பிரமாணமாம்" என்று சொல்லப்பட்டதன்றி, "உபகாரானபேக்ஷமா யறியுஞ் சிவசிற்சத்தி பிரமாணமாம்" என்று சொல்லப்பட்டதின்று. அதுவேயுமன்றி, "யாதொன்று பிரமாண மாம், அது பிரமேய மாகாது; யாதொன்று பிரமேய மாம், அது பிரமாண மாகாது" என்று, பிரமாணப் பிரமேய சாங்கரியம் வாராமல் வரையறுத்தோதி, "இந்த வேதுவினானே இந்திரிய லிங் காகமாதிகளும் இதரவஸ்துக்கள்போல ஆன்மசிற்சத்திக்குப் பிரமேயமாதலின், அவைதம்மைப் பிரமாணமென்றல் கூடாது" என்று தார்க்கிகமத கண்டனஞ்செய்த பவுட்கரச் சுருதியை நுணுகி ஆய்ந்திடின், நீர் இங்ஙனம் பிரமாணப்பிரமேய சாங்கரியம் பேசிடமாட்டீர். இனி ஆன்மாக்களும் ஆன்மசிற்சத்திகளுந் தனக்குப் பிரமேயமாகாவிடின், சிவனுக்குச் சர்வஞ்ஞத்துவ பங்கம் வரும்; அங்ஙனமே இதரான்மாக்களும் இதரான்ம சிற்சத்திகளுந் தானுந் தனக்குப் பிரமேயமாகாவிடின், ஆன்மாவுக்குச் சர்வஞ்ஞத்துவ பங்கம் வரும். இஃதென் சொல்லியவாறோவெனின்,—சர்வஞ்ஞத்துவ பங்கம் வாராமற் பரிகரிக்கப்புகின் "பிரமாதிரு பிரமாணங்கள் பிரமேயமாகா"வென்னும் ஆகமவிரோத மாம். அவ்வாகமவிரோதம் வாராமற் பரிகரிக்கப்புகின் சர்வஞ்ஞத்துவ பங்கம் வரும். மற்றிது மயூரநிர்த்தம்போல ஒன்றை நாட்டும்வழி மற்றொன்று விட்டுப் போவதாமென்றவாறு மென்க. இதற்கு யாது பரிகாரம் செய்யவல்லீர்? சிவனால் ஆன்ம ஆன்மசிற்சத்திகள் அறியப்படுவதூஉம், ஆன்மாவால் இதரான்ம இதரான்ம சிற்சத்திக ளறியப்படுவதூஉம், ஆன்மாவுக்குப் பதிபாசங்கள் பிரமேயமாவதுபோலன்று, பேதமுண்டென்று, இந்தவிரண்டுக்கும் விரோதம் வாராமல் அதிசூக்ஷ்மமவிசாரஞ் செய்தறிது மென்பிராயின், நீர் மெல்ல மெல்ல எமது சித்தாந்தத்திற்குச் சமீபமாக வந்து கூடினீர். மற்று அப்பேதந்தான் என்னை? அறியப்படும் பொருள்போலன்றி அறியும்பொருளா யறியப்படும் பிரமேயமல்லாப் பிரமேயமாயிருத்தல் பேத மெனின், எவ்வாற்றானுயினும் ஒன்று அறியப்படின், அதனை அறியப்படுவதன்றென்று கூறுதல், விரோதமாம். இனிப் 'பிரமேயமுமன்று,பிரமேயமுமா'மென்று, அனிருவசனமாகப் பேசுவோர் மாயாவாதிகளும், அனேகாந்தவாதிகளுமே யாவர். ஆதலின், நீர் அவ்விருமத சோரருமாவிர். அற்றேலஃதாக; உங்கள் சித்தாந்தத்தில், பிரமாதிரு பிரமாணங்கட்கும் பிரமேயத்திற்குஞ் சாங்கரியம் வராமலும், சர்வஞ்ஞத்துவ பங்க மெய்தாமலும், ஏனைப் பிரமேயங்கட்கும், இதற்கும், ஆகமசம்மதமாக ஒரு பேதஞ் சொல்லல் வேண்டும். அது

தான் யாதென் றுசாவுவிராயின், சிவசமவாதவாபாசராயிருக்கு நும்மனோர்க்கு அவ்வே றுபா டுணர்த்தற்பால தன்று. ஆயினும், அதனைச் சாமானிய திருஷ்டாந்த பூர்வமாக ஒருவாறு காட்டுதும். திரிபதார்த்தங்களுள், ஒன்றுயினு மறியப்படாவிடின், சர்வஞ்ஞத் துவ பங்கம் வருமாகலின், திரிபதார்த்தங்களு மறியப்படும் பொருள்களே யாம். அஃ தேல், எல்லாம் பிரமேயமெனப்படாவோவெனின், படா வென்பது. என்னை? அனுபவ ஞானத்திற்கு விடயமா யறியப்படும் பொருண் மாத்திரமே பிரமேயமாம். மற்றைஞானத் திற்கு விடயமா யறியப்படும் பொருள் பிரமேய மாகாது. அஃதாமாறு யாங்ஙனமெனின், வேறொன்றன்கண் வைத்துக் காட்டுதும். * யதார்த்த மிருதிஞானத்திற்கு விடயமாயறியப் படுத லுண்டென்பதூஉம், அங்ஙன மறியப்படும்பொருள் ஞேயவிசேடமாவதன்றிப் பிர மேயரூப ஞேய மாகாதென்பதூஉம், சர்வமத சம்மத மன்றே! இங்ஙனம் அறியப்படுட பேதங்க ளனேக முள. ஆகலின், அவைதம்முள், அனுபவஞானத்திற்கு விடயமாதன் மாத் திரையே அபேக்ஷித்து அந்தச் சிற்சத்தியாகிய ஞானம் 'பிரமாணம்' என்றும், அந்த ஞாதாப் 'பிரமாதா' என்றும், அதனானே யறியப்படு ஞேயம் 'பிரமேயம்' என்றும், விவகரிக்கப்படுதலல்லது, இதர ஞானரூப சிற்சத்திக்கு விடயமாகும்வழி, அந்த ஞானத்தி ற்குப் 'பிரமாணம்' என்னும் விவகார மில்லை. அந்த ஞானத்திற்குப் 'பிரமிதி' என் னும் விவகாரமு மில்லை. அந்த ஞாதாவிற்குப் 'பிரமாதா' என்னும் விவகாரமு மில்லை. அந்த ஞேயத்திற்குப் 'பிரமேயம்' என்னும் விவகாரமு மில்லை. ஆகலின், சிவசிற்சத்தி ஆன்மசிற் சத்திபோல அனுபவ விடயமாக வொன்றனை யறிவ தன்று. அதனால், அதற்கு 'ஞானம்' என்னும் பெயர் பொருந்துவ தல்லது 'பிரமாணம்' என்னும்பெயர் பொருந்தா தாம். ஆக வே, அந்த ஞானத்தாலறியப்படும் பொருள்களும், அதனை யபேக்ஷித்து 'ஞேய' ரூபமாத லன்றிப் 'பிரமேய' ரூபமாத லில்லை. ஆன்மாவும், தன்னையும் இதரான்மாக்களையும் இத ரான்மசிற்சத்திகளையும் அறியுங்கால், நிருவிகற்ப ஞான விடயம்போலச் சாதாரண விடய மாக அறிவதன்றி, அனுபவ விடயமாக வறிவ தன்று. ஆகலின், அப்பெற்றித்தாகு ஞான த்தை யபேக்ஷித்து ஒருபதார்த்தமும் பிரமேயமாத லில்லை. அதனால், சாதாரண விடய மான ஆன்ம ஆன்ம சிற்சத்திகள், சிவனுக்கு மனுபவ விடயமல்ல; ஆன்மாவுக்கு மனுபவ விடய மல்ல. ஆகலின், ஆன்ம ஆன்மசிற்சத்திகள் எந்தப் பிரகாரத்தினும் பிரமேய மாத லில்லை. சிவ சிவசிற்சத்திகள் ஆன்மாவை யபேக்ஷித்துப் பிரமேயமும் உபகாரவுப சாரப் பிரமாணமு மாதலே யன்றித், தம்மை யபேக்ஷித்துப் பிரமேயமாதலு மில்லை; பிர மாதிரு பிரமாணமாதலு மில்லை. ஆதலாற், பிரமாணப் பிரமேய சாங்கரிய தோஷம் வரின், ஆன்மாக்களிடத்தன்றோ வரல்வேண்டும்! ஆண்டு வருதற்கொரு சம்பந்தமு மில்லை. இனி அனுபவ விடயமாகாது வேறொரு பிரகாரமாக விடயமாவது பிரமேய மாகா தென வே, சிவனுஞ் சிவசத்தியை யறியலாம். சிவசத்தியுஞ் சிவனை யறியலாம். ஆன்மாவும் ஆன்மசிற்சத்தியை யறியலாம். ஆன்மசிற்சத்தியும் ஆன்மாவை யறியலாம். அங்ஙன மறிதல்பற்றி, நீர் சொல்லிய தோஷ மெய்துதற்கேது வில்லை. "சிவசிற்சத்தி சிவனை யபே க்ஷித்துப் பிரமாண மாகாவிடின், சிவன் அந்தகனயொழியும்" என்ற சங்கையு மோடியொ துங்கிற்று. சிவனுக்கு ஞானக்கண் பிரதானமென்றும், ஆன்மாவுக்கு ஞானவிசேடமான பிரமாணக்கண் பிரதானமென்றுந், தம்முள் வேறுபா டறிக. நீர் கூறுவனவெல்லாம் வாய்மையே யாம். ஆயினும், பவுட்கரத்தில் 'ஆன்மசிற்சத்தி பிரமாணம்' என்று விசே டித்தெடுத்துச் சொல்லாமற், "சிற்சத்தி பிரமாணம்" என்று சாதாரணமாகச் சொல்லு

* யதார்த்தஸ்மிருதிஞானம்=மெய்யான நினைவுணர்வு.

தலின், சிவசிற்சத்தியும் பிரமாணமென்று சித்திக்குமன்றே! அதற்குக் கதி யாதெனின், பூர்வாபர பரியாலோசனை செய்யாது லீடாலீட நியாயமாக அவ்விடமாத்திரையே நோக்குவார்க்கு, அங்ஙனஞ் சித்திப்பதுபோல வாபாசிக்கும். பூர்வாபர பரியாலோசனை செய்து நோக்கின், அந்த வாபாச மோடி யொதுங்கும். அது காட்டுதும்: பூர்வார்த்தத்திற் "பிரத்தியக்ஷம் அனுமானஞ் சத்தம் அருத்தாபத்தி யென்றிவை பிரமாணம்" என்று சித்தாந்தஞ் செய்து, உத்தரார்த்தத்திற் "சந்தேகாதிகளினீங்கின சிற்சத்திபிரமாணம்" என்று சித்தாந்தஞ் செய்தொழிதலின், இவ்விரண்டற்குஞ்சம்பந்தவைக்கியஞ் செய்யாதுவிடின், பொருள்பகைத்து, இரண்டும் பிரமாண மாகாதொழியும். இனி இரண்டனையுஞ் சித்தாந்தமாகச் சொல்லுதலின், அவைதம்மு ளொன்று பூர்வபக்ஷமாமென் றோதுதற்கு மேதுவில்லை. இன்னும், பிரத்தியக்ஷாதிப் பிரமாணங்களிற் சிற்சத்திப் பிரமாணத்திற்கு வியாத்தி யுண்மையின், "அவ்வியாத்தி தூஷணமில்லை" யென் றோதுதலின், அதற்குப் பிரத்தியக்ஷாதித்துணை *"உவப்ரு०ஹித விஷக்தியாத" லென்றே நும் வியாக்கியானமுமோதுதலின், அவ்விருவகைப் பிரமாணங்களுக்கும் வியாத்திப் பிரயோசகமான சம்பந்தம் பிறிதியாது மின்மையின், உபகாரகோபகாரிய பாவ சம்பந்தமே யிரண்டற்குங் கொண்டு, பிரத்தியக்ஷாதிகள் உபகாரகப்பிரமாணம், சந்தேகாதிகளி னீங்கிய சிற்சத்தி யுபகாரியப் பிரமாணமென்று, அவ்விருவாக்கியங்களுக்குஞ் சம்பந்த வைக்கியத்தானே சமாதானஞ் சொல்லல் வேண்டுதலின், அச்சம்பந்த லக்ஷணஞ் சிவசிற்சத்திக் கில்லாமையின், ஆண்டு ஆன்மசிற்சத்தி மாத்திரமே யெடுத்தோதிற்றென்பது தானே சித்தித்தது. இனி இவ்வாறன்றி, சிற்சத்தி சாமானியத்திற்குப் பிரமாணத்துவங் கொள்ளின், 'பிரத்தியக்ஷாதித்துணை "உவப்ரு०ஹித விஷக்தி" என்னு நும் வியாக்கியானமே விரோதமாம். அன்றியும், அச்சிற்சத்தியை எடுத்து 'மலாவிர்தி காலத்திற் கலாதி காரணத்தால் வியத்தமா யர்த்த யோசனஞ் செய்யும். மலபந்த நிவிர்த்திகாலத்திற் கலாதிகாரணங்களை யபேக்ஷியாமற் சுபாவமாக வறியும்' என்று கூறுதலின், சிவசிற்சத்தியும் பிரமாண குக்ஷி நிக்ஷிப்தமாயின், மலாவிர்தி மலநிவிர்த்திகள் சிவசிற்சத்திக்கு முண்டெனப்பட்டுத் தூஷணமெய்துமென்பது. என்னை? "ஆன்மசிற்சத்திக்கு" எனப் பிறிதினியைபுநீக்கும் விசேடணமடுத்தோதாது "அந்தச் சிற்சத்திக்கு" என்றே கூறுதலி னென்பது. அல்லதூஉம், சிகண்டருத்திரக்கடவுளுக்குச் சிவசிற்சத்தியும் பிரமாணமென்னு மபிப்பிராய முண்டாயின், பிரத்தியக்ஷ லிங் காகம புத்தியாதிப் பிரமாணவாதிகளை நிராகரிக்கும்வழி, இவையெல்லாஞ்சிவசிற்சத்தியி லவ்வியாத்தியாமென்று நிராகரித் தோதிடுவ ரன்றே! அவ்வாறோதாமல், "இந்திரியாதிக ளனைத்தினும் வியாபித்து நிற்குஞ் சம்வித்து யாது அதுவே பிரமாணம்" என்று காட்டுதலினானும், சிவசிற்சத்தி ஈண்டுப்பிரமாணகுக்ஷி நிக்ஷிப்தமன்றென்பது, இனிது சித்தித்தது. இனி இவையெல்லாம் விசாரஞ்செய்யாது, இப்பியை வெள்ளியென்று பிரமிப்பதுபோல நும் மனத்தின்கண் நினைத்துக்கொண்டதனையே ஈசுரவாக்கியத்தினும் ஆரோபணஞ்செய்து பிரமித்த, "சிவ சிற்சத்தியுஞ் சிவனையபேக்ஷித்துப் பிரமாணமாம்" என்னும் பிராந்தியை, யாம் ஈண்டுக் கூறிய வாக்கியார்த்த மாகுந் தீபப்பிரகாசங் கொண்டு நிவிர்த்தி செய்துகொள்க. இவ்வாறு, ஆகம வாக்கியத்தால், "ஆன்மசிற்சத்திக்கே பிரமாணத்துவம், சிவசிற்சத்திக்கு ஞானத்துவ மல்லது பிரமாணத்துவ மில்லை" என்று, வைலக்ஷண்ணியஞ் சித்திப்பதாகவும், 'சிவசிற்சத்திக்கும் ஆன்மசிற்சத்திக்கும் வைலக்ஷண்ணிய மில்லை, அவை சமானமேயாம்' என்று, நும்மைப் பிரலாபிக்கச் செய்யுஞ்

* இ - ள். "உடங்குநின் றாக்குஞ் சிற்சத்தி" எ-று.

சமவாத மலத்தின் சாமர்த்தியம் ஆணவமல சாமர்த்தியத்தினைக் காட்டிலும் * அதிரித்த மாகலின், அதை நிவிர்த்தி செய்து கொள்ளுதல் நுமக்குப் பிரயாசமே யாம். அது கிடக்க. இனிச் சிவனுஞ் சத்தியு மென் றிருபாகுபாடன்றி 'இரண்டற்கும் பொதுவாக இடையே மூன்றாவதொரு பாகுபா டுண்டு' என்றும், 'ஆன்மாவுக்கும் ஆன்ம சிற்சத்திக்கு மிடையேயும் அவ்வாறோர் பாகுபா டுண்டு' என்றுஞ் சொல்லின், மேலு மங்ஙன மனவத்தையாம். குணங் குணி யென்றிரு பகுப்புமாத்திரையே யன்றி மூன்றாவ தொரு பகுப்புண் டென்று கூறுவாரை யாண்டுங் கண்டிலம். ஆகலின், அங்ஙன மொன் றுண் டென்பதூஉம், அவசித்தாந்த மென் றொழிக.

## "புத்திமற் காரி யத்தால்"

இதன்கண் "புத்திமற் காரியம்" என்னுஞ் சமாச பதத்தினைப் பின்னபதமாக வைத் துரை செய்தீர். 'புத்திமத்' என்பது தமிழின்கட் பின்னபதமாய் வருங்கால், உகாராந்த பதமாய் வருவ தல்லது, தகாராந்த பதமாகவேனும் றகாராந்த பதமாக வேனும் வாராது. தமிழ் வியாகரணத்திலுகத் தமிழ்க் காவியத்திலுகப் பரிசயமில்லையா யினும், தமிழ் வார்த்தைகளையேனும் பயின்று வல்லிராயின், இங்ஙனம் பிரயோகிக்க லாம், இங்ஙனம் பிரயோகிக்க லாகா தென்பது, தெரியகிற்பீர். அத்தனைபயிற்சிதானு நுமக் கில்லை கொலாம்! அது கிடக்க. இனிப் பின்ன பதமாக வைத்துப் பொருளு ரைப்பினும், 'புத்திமத்' என்னும் பதத்திற்கு நீர் கூறிய பிரதிஞ்ஞைப் பொருள் கிடைக்கமாட்டாது. அற்றன்று: இலக்கணையாகக் கொள்ளின் அப்பொருள் கிடைக் கும்பிறவெனின், சொல்லு நெறிப்படாமற் பொருளு நெறிப்படாமல் வைத்து, அங் ஙனம் வீண்பிரயாசை யுறுவது எற்றிற் கென் றொழிக. பஞ்சாவயவ வாக்கியப் பிர யோகம் முன்னரே செய்யப்பட்டமையின், ஈண்டுப் பாரிசேடப் பிரமாண மாத்திரங் காட்ட லமைவுடைத்தாம். அன்றியும், இவ்விடத்தில் இலக்கணைப் பொருள் கொள்ள லாம், இவ்விடத்தில் இலக்கணைப் பொருள் கொள்ளலாகா தென்னும் வரையறையின்றி, நேர்ந்தவழி யெல்லா மிலக்கணையாக வைத்துப் பொரு ளுரைக்கலாமோ? ¶ "நதேஸ்ப்ரயோஜநாதிஷ்டம் லக்ஷ்யஸ்வாரஸ்யபங்கமுசிதம்" என்ப வாகலின், பிரயோசனம் பெறுதற்கு வேண்டு மிடனெல்லாம் இலக்கணையாற் பொரு ளுரைக்க லாமெனின், இலக் கணைக்குப் பிரயோசனம் பூர்வாபர வசன விரோத பரிகார மாத்திரையே யல்லது, பிற வல்ல வென் றறிக. இனி அது வன்றித், தத்த மனத்துக் கியைந்தன வெல்லாம் பிரயோசன மாம்; அவைக் கேற்குமாறு யாண்டும் இலக்கணைப் பொரு ளுரைக்கலாமெ னின், அவ்வாறு கொள்வீர்க்கு, நியம மிகை யாம். இனி நியமத்தாற் பயனின்றாயின், நாஸ்திகமத கண்டனஞ் செய்து நிமித்த காரணத்தினை நிறுத்த வெழுந்த இத்திரு விருத்தத்தினை, நிமித்த காரணமின்றென்று சாதிக்க வெழுந்த தென்று வைத்து, அந்நாஸ் திக மதானுசாரமாகவும் பொருளுரைக்கலா மன்றோ! என்னை? அர்த்தஞ் செய்தற்கண் யாதா னுமொரு பிரயோசனம் போதரற்பாற்றென்றலி னென்க. இனி இத்திருவிருத்தம் நாஸ் திக மதானுசாரமாகப் பொருள்படுதல் யாங்ஙன மெனின், அஃ தாமாறு காட்டுதும்: பூதாதி—பூதமாகிய வாதிகாரண மென்றவாறு. புத்திமற் காரியத்தால்—புத்திமற்

---

* அதிரித்தம்—ஈண்டு அதிகமென்னும் பொருட்டு. ¶ இ - ள். "பய னின்றிச் செம்பொருளைக் கடந்து மற்றொன் றுரைத்தல் நூலோர்துணி பன்று" எ-று.

காரியமாதலானென வெகுவிரிகி யாமென்க. நாலு பூதக்கூட்டரவி லொரு ஞான முளதாமென்று கொண்ட வுலகாயதனுக்குச் சரீரமே புத்திமத்தாதலால், அது பூதத்தின் காரியமாதலால், பூதாதி புத்திமற்காரிய மெனப்படு மென்றவாறு. புருடன்றானும்—இப்பூதத்திற்கு நிமித்த காரணனா யொரு முதல்வ னுளனென்று சித்தாந்தசைவர் முதலியோர் கூறுங் கர்த்தாத்தானு மென்றவாறு. புருடனென்பது பொதுச்சொல். அத்தனுகரணம் பெற்றால் அவற்றை யறிதலானென மாறுக. அப்புத்திமத் தென் றுரைக்கப்படுந் தனுகரணங்களைப் பெறினே அப்பூதங்களை யறிவ னாகலி னென்றவாறு. அத்தனுவெனச் சுட்டுதலின், மேற் புத்திமத் தென்றது தனுவே யாத லறிக. மாயை யுய்த்திடு மதனால்—காமரசங்களின் மயக்கத்தினை விளைக்கு மன்மத பகவனால் மாயை மயக்கு மென்றவாறு. மதன்—மன்மத னென்க. மாயைக்கு உணர்வு ஒன்றும் இல்லை யென்றே வைத்திடும் அதனால்—அச்சித்தாந்தசைவர் முதலியோர் உள் பொருளென்று கூறு மாயைக்குப் பிரமாண மொன்று மில்லை யென்று உலகாயத சாஸ்திரத்திலோதிவைத்தலி னென்றவாறு. உணர்விற்கேதுவாயுள்ள பிரமாணத்தினை உணர் வென்றுபசரித்தார். எல்லாம் வருவிப்பான்—தனுகரணங்க ளெல்லாவற்றையுங் காரியப்படுத்தும்பொருட் டென்றவாறு. வேண்டும்—அந்தப் பூதமாகிய முதற்காரணத்தினை விரும்பு மென்றவாறு. ஒருவன்—ஒப்பில்லாத வியாழபகவ னென்றவாறு. இங்ஙனம் உலகாயத மதானுசாரமாகப் பொருள் கூறலா மாறு காண்க. நீர் கொள்ளும் பொருட்குப்போல இதன்கட் பிரயாசமு மின்று. இனி இத் திருவிருத்தத்திற்குப் பௌத்தரி லொருவன் மதானுசாரமாகவும் பொருள்கூறலாமென்பது காட்டுதும்: பூதாதி புருடன்றானும்—சித்தாந்தசைவர் முதலியோர் கூறும் பூதாதியாகிய வுலகமும் புருடனாகிய ஞாதாத்தானு மென்றவாறு. புத்தி—ஞானத்தின தென்றவாறு. மற் காரியத்தால்—பலத்தகாரியமாதலா னென்றவாறு. இதற்குப் பிரமாண மென்னையோவெனின், அத்து—அதன தென்றவாறு. அதனதென்பது அத்தென விகாரமாயிற்று. அனுகரணம் பெற்றால் — அனுகரித்தலைப் பெற்றக்கா லென்றவாறு. அறிதலால்—கடாகாரம் படாகாரமா யறிவு நிகழ்தலா னென்றவாறு. அவற்றை மாயை உய்த்திடு மதனால்—நிராகாரமாயிருக்கு ஞானத்திற்குக் கடாகார படாகார முதலிய வாகிருதிகளை மயக்கமாகிய அஞ்ஞானந் தருமாதலா னென்றவாறு. மாயைக்கு உணர்வு ஒன்று மில்லை யென்றே வைத்திடு மதனால்—இவ்வாறன்றிப் பிரபஞ்சத்துக் குபாதான காரணமா யுள்ளதென்று அச்சித்தாந்தசைவர் முதலியோ ரோது மாயை யுண்மைக்குப் பிரமாண மொன்று மில்லை யென்றே பிடகசாஸ்திரத்திற் கூறி வைத்த வதனானே யென்றவாறு. எல்லாம் வருவிப்பான்—பிரபஞ்ச வாகாரங்களை யெல்லாந் தோற்றுவித்தற்பொருட் டென்றவாறு. வேண்டும்—அப்புத்தியாகிய ஞானத்தை விரும்பு மென்றவாறு. ஒருவன்—ஒப்பற்ற புத்தக் கடவு ளென்றவாறு. இப்பொருட்கும் நீர் கூறும் பொருட்கட்போல விடர்ப்பா டின்று. இனிச் * சாக்ஷாத் பிரகிருதி விரோதியான சாங்கிய மதானுகூலமாகவும் இத் திருவிருத்தத்திற்குப் பொருள் கூறலாமென்பது காட்டுதும்: புத்தி—புத்தி தத்துவ மென்றவாறு. காரியத்தால்—ஒன்றன் காரிய மாதலினானு மென்றவாறு. "அதுமற் கொண்கன் றேரே" என்புழிப்போல மன் இடைச் சொல் லாம். பூதாதி புருடன்றானும்—தோற்றமுறையிற் பூதங்களுள் வைத்தாதியான வாகாயம் போல விகாரமின்றி யொட்டற்று ஞான மாத்திரையாய் நிற்கும் புருடனு மென்றவாறு. பூதாதி புருடன் உவமத் தொகை. உம்மை சிறப்பு. அத் தனுகரணம் பெற்றால்—அந்தப் புத்

* ஈண்டுச் சாக்ஷாத் பிரகிருதியென்றது, மோகினி பெண்ணு மாயையை.

தியின் காரியமாகிய தனுகரணங்களைச் சன்னிதி மாத்திர சம்பந்தத்தாற் பெறி னென்றவாறு. அறிதலால்—அவ்வழி அறியு மாதலினானு மென்றவாறு. அவற்றை மாயையுய்த்திடு மதனால்—அந்த மகதாதிப் பிரபஞ்சங்க ளனைத்தினையும் பிரகிருதிமாயை தருமாதலானு மென்றவாறு. மாயைக் குணர் வொன்று மில்லை யென்றே வைத்திடு மதனால்—அப்பிரகிருதி மாயைக்கு ஞானங் கிரியை யென்னு மிரண்டனுள், ஞான மொன்று மில்லை யெனவே, கிரியை யுண்டென்று சாங்கிய சாஸ்திரத்தி லோதிவைத்தலானு மென்றவாறு. எல்லாம் வருவிப்பான்—மகதாதிப் பிரபஞ்ச மனைத்தையுந் தோற்றுவித்தற் பொருட் டென்றவாறு. வேண்டும்—ஞான மின்றிக் கிரியை மாத்திர முடையவந்தப் பிரகிருதி மாயையை விரும்பு மென்றவாறு. ஒருவன்—ஒப்பற்ற கபில முனிவனென்றவாறு. காரியத்தா னறிதலா னென்றது—புத்தி தத்துவத்திற்குச் சுதந்திர வறி வில்லை யென்று காட்டு முகத்தானே மூலப்பிரகிருதிக்கும் அஃதின்றென் றறிவித்த வாறா மென்க. இவ்வாறே அவ்வப் பரபக்கங்களுக் கெல்லா மேற்குமாறு புத்தி சாமர்த்தியத்தான் முன்னும் பின்னு முள்ள திருவிருத்தங்களையும் இப்பொருள்களுக் கியைய விணக்கி வெவ் வேறு பொருள் கூற லாம். அவையெல்லாம் அவ்வமதத்தர்களுக்குப் பயன்படுவன வாகலின், அவ்வா றாகுக வெனின், அவ்வாறு பேதித் துரைக்கலுறின், சித்தாந்தசைவ சாஸ்திரங்களெல்லாம் பொருள் பேதித்துக் கெட்டொழியும்! நீர் இக் கேட்டிற்கு வழி காட்ட வந்தமையின், சாலப் பெரியிர்தா னென் றொழிக. இங்ஙன மாகலின், எந்நூற்கும் உபக்கிரமோபசங்காராப்பியாசாதி லிங்கங்களை நோக்கி, அவற்றிற்கு விரோதம் வாராமல் வியாக்கியானம் பண்ணல் வேண்டு மென்பது, சகலமத சம்மத மாகலின், அது செய்தலை யொழிந்து, தாந்தாங் கருதும் பிரயோசனங்களுக் கிணங்க வியாக்கியானஞ் செய்த லடாதென்பது, இதனான் அறிக.

### “சூக்தும வாக்க து”

இதன்கண் “சம் சாரத்திற் போகானந்தமாவது, பசுத்துவசொரூப சிற்சத்தி விளக்கமே வே றில்லை” என்றும், “முத்தியில் மோக்ஷானந்த மாவது, சிவனுக்குப் போலச் சிவத்துவசொரூப சிற்சத்தி விளக்கமே வே றில்லை” என்றும், “இப்படியாதலால், “நீக்கமி லறிவா னந்தம்” என்றது, நீங்காமலிருக்கிற தன்னுடைய ஞானசத்தி யபிவியத்தி” என்றும், “முதன்மை” என்றது, “அப்படிப்பட்ட தன்னுடைய கிரியாசத்தி யபிவியத்தி” என்றும், “நித்திய முடைத்தாய்” என்றது, “திரும்பச் சிவசத்தி விளக்கு விருப்பின்றிச் சர்வப்பிரகாரமாக மல மறைப்பு நீங்குதலாற் கெடா திடைவிடா தனுபவிப்பா னாகி” என்றும், “இப்படியல்லாமற் சொல்வதெல்லா மாறுபடு மென்பது, பிரமாணதீபிகை சித்தாந்தசிகாமணி சிவஞானபோத வியாக்கியான மிவைகளிலே காண்பித்துக் கண்டித்தனம்” என்றும், உரைத்தீர். இவையெல்லாஞ் சிவஞானபாடியத்துள் விஸ்தாரமாக வெடுத்து விளக்கிக் கண்டித்தொழிக்கப்பட்டன. அக்கண்டனமாகிய கல்லெறிக் கஞ்சி நீர் செய்த இவ்வுரை நிற்றலாற்றா தோடும் போழ்து, பிரமாணதீபிகை சித்தாந்தசிகாமணி முதலிய வெல்லாம், இதற்கு முன்னரே ஓடி ஒதுங்கு நீரவன்றிச், சிறுவரையு நின்று ஆற்ற மாட்டாவென்றுணர்க. சித்தாந்தசிகாமணியில், நீர் அவசித்தாந்தமாகச் சாதித்த சிவசமதார்த்தமும், அத்துவிதார்த்தமும், ஆனந்தார்த்தமும், சைவசித்தாந்த மாறுபாடாமென்பது, சிவஞானபாடியத்துள் விரித்துக் காட்டி மறுத்தாம். பிரமாணதீபிகையில் நீர் சொன்ன அர்த்தம், “ஈண்டுப் பக்கப் போலி” என்னுந் திருவிருத்தத்திற்கு நீரெழுதின வுரையின்மறுப்

பின்முன் நிற்றலாற்ற தோடி யொதுங்கு மென் றறிக. இனி ஈண்டு நீர் எழுதியதூஉம், பொருந்தாவாறு சிறிது காட்டிக் கண்டித்திடுவாம். ‘பசுத்துவசொரூப சிற்சத்தி விளக்கமே போகானந்தம்’ எனின், போக துக்கமும், பசுத்துவசொரூப சிற்சத்திவிளக்கமே, வேறன்று மென்று சொல்லல் வேண்டும். அங்ஙனஞ்சொல்லின், மோக்ஷானந்தமாஞ் சிவத்துவ ரூப சிற்சத்தி விளக்கமே மோக்ஷ துக்கமு மாமென முடியும். அது நிற்க. நீர், “புறப்பொருள் விஷயங்களைப் பிரதிவிம்பமாகக்கொண்டு வந்த புத்திதத்துவமே சுகரூபையுந் துக்க ரூபையு மோகரூபையு மாம்” என்றும், “அந்தப் பவுத்த சுகதுக்க மோக போகத்தை ஆன்மா வனுபவிக்கும்” என்றும், தத்துவ வியாபாரப் பிரஸ்தாபத்திற் சொல்லியவற்றினை மறந்து, முன்னொடுபின் விரோதமாக, ஈண்டுப் “பசுத்துவ சொரூப சிற்சத்தி விளக்கமே போகானந்த மாம்” என்று பேசினீர். இங்ஙனங்கூறிய நும்முடைய பிராந்தியின் மகத்துவத்தை யாதென்று எடுத்து வியப்பாம்! புத்திதத்துவநிட்டமான சத்துவகுண விளக்கமே சுகமும், ரசோகுண விளக்கமே துக்கமும், தமோகுண விளக்கமே மோகமு மென்பது, சர்வாகமப் பிரசித்தமாயிருக்க, நீர் இவ்வாறு சொற்றது விரோதம். சம்சாரத்திற் றனக்கு வேறான புத்தி தத்துவநிட்ட மாய்த் தன்மாட்டு விளங்குஞ் சத்துவ குண பூர்த்தியே போகானந்த மல்லது, வேறில்லை யென்பது, சர்வாகம சம்மதம். ஆதலால், முத்தியினும், தனக்கு வேறான அனாதி முத்த சிவநிட்டமாய்த் தன்கண் அத்துவித சம்பந்தமாய் விளங்குஞ் சிவசாட்குண்ணிய பரிபூர்த்தியே மோக்ஷானந்தமாவதன்றி வேறில்லை யென்பது, இனியாயினும் அறிந்துகொள்க. அத்துவிதசொரூபஞ் சிவஞானபாடியத்துள் விஸ்தாரமாக எடுத்துக் காட்டினும். இங்ஙனமாகலின், சிவசாட்குண்ணிய சொரூப சிவத்துவம் ஆன்மாவில் அத்துவிதமாய் மேலிட்டு விளங்கும் பொருட்டே, தீக்ஷையில் ஆன்மாக்களைப் பிராசாத மார்க்கமாகக் கொண்டு சென்று துவாதசாந்தத்தில் அனாதிமுத்த சிவனிடத்தில் யோசித்துப், பின்னர்ச் சிவசாட்குண்ணியங்களை யான்மாவில் * ஆபாதனம் பண்ணி, ஒவ்வொன்றற்கு மும்மூன்றாகுதி செய்தல் வேண்டிற்றென் றறிக. இவ்வாறன்றிச், சிவசாட்குண்ணியங்களின் வேறாக ஆன்மாவிற்குச் சாட்குண்ணியந் தனியே யுண்டென்று, ஓராகமமும் உரைப்பக் கேட்டிலம். மிருகேந்திரத்திற் சூக்ஷுமதேகத்தை ¶ “விச்வஸம்பவிச்” என்றவாறே சர்வஞ்ஞானோத்தரத்தில் ஆன்மா “தச்சுயத்ர்யதீஸ்” என்றும், “தற்றருமமாவன அட்டகுணங்கள்” என்றும், சொல்லிய வசனங்களையும், பார்த்தறியீர் போலும். “தச்சுபத்ர்யதீஸ்” என்பதற்குத் தற்றருமம்போலுந் தருமத்தை யுடையதென வெகுவிரீகிப் பொருளுரைக்கலாமெனின், † “நகர்மதாரயாத் மத்வர்த்தீயொ” (வஹுவ்ரீஹிஸ்ச தத்ப்ரதிபத்திகர:) என்று மாபாடியத்துள் ஆசிரியர் பதஞ்சலியார் எடுத்தோதுதலின், அது வியாகரண விரோத மாமென் றுணர்க. இன்னும், சர்வஞ்ஞத்துவ குணத்திற்கு வேறாக அனாதிபோதமென வொரு குணஞ் சொல்லப்பட்டது. அதற்குப் பொருள் என்னை? போத மனாதியா யுள்ளதென்று அதற்குப் பொருள் சொல்லின், மற்றை அனந்தசத்தி அலுத்தசத்தி முதலிய வெல்லாம் அனாதிய வன்றி ஆதிக்கண் வந்தன வென்று பொரு

* ஆபாதனம்—தலைக்கூடுதல். ¶ இ-ள்: “சித்தின் சம்பந்தமுடைய சித்து” எ-று.
† இ-ள். “வெகுவிரீகி சமாசத்தினாற் பொருள் பெறற்பாலதாயின், ஆண்டுப் பண்புத்தொகை கொண்டு மத்வர்த்தீயப்பிரத்தியயம் புணர்த்தன் மரபன்று” எ-று. வெகுவிரீகி சமாசமெனினும் அன்மொழித்தொகை யெனினு மொக்கும்.

ள்படும். 'அனாதி' என்னும் பதம், * நடுநிலைத் தீபகமாக யாண்டுங் கூட்டியுரைக்கப்படு மெனின், அங்ஙனமுரைக்கின், போதமென்பது சர்வஞ்ஞத்துவத்தில் அடங்கிப்போம்; பேதமின்றாம். அது அவ்வாறு அடங்குகவெனின், 'அனாதிபோதம்' எனத் தனியே ஒருகு ணமாக வைத்ததனை வேறன் றென்று, கூட்டிச் சொல்லின், நுமக்குச் சாட்குண்ணியம் அட்டகுணமாதல் சித்திக்கமாட்டாது. ஆதலால், 'அனாதிபோதம்' என்பதற்கு அனா திமுத்தத்துவமே பொருளன்றி மற்றுரைப்பன பொருளல்ல. ஆகவே, சாட்குண்ணி யத்தி லொன்றாகிய 'அனாதி முத்தத்தன்மை' என்னுங் குணஞ் சிவனுக்கே யன்றி ஆன் மாவுக்குக் கிடைக்காது. கிடைக்காதாகவே, மற்றைச் சர்வஞ்ஞத்துவாதி குணங்களும் அனாதி முத்தத்துவகுணம்போலச் சிவனுக்கே யன்றி ஆன்மாவுக்குக் கிடைக்காதென் பது தானே சித்தித்தது. ஆதலால், சிவசாட்குண்ணியங்கள் ஆபாதனாகுதியால் தன் னிடத்திற் சுப்பிரகாசமாய் விளங்குதலென்னுஞ் சிவத்துவ பூர்த்திவிளக்கமே சிவா னந்தம். தற்பாவ பாவத்தால் அதுவாய் மூழ்கி அதைக் கண்டுகொண்டிருத்தலே சிவா னந்தானுபவமென்பது வச்சிரலேபமாக நாட்டப்பட்டது. அற்றே லஃது தங்ஙனமாக.

இனி மற்றைக்குணங்களெல்லாம் ஆன்மாவுக் கில்லாதொழியினும், "சர்வஞ்ஞத்துவ முஞ் சுவாதந்திரியமுஞ் சிவனுக்குப்போல ஆன்மாவிற்கு முண்டு" என்று சிவாகமங்களில் ஆண்டாண்டுச் சொல்லப்படும்பிறவெனின், அதற்குப் பொருள் முன்னர்க் கூறுதும். ஆகலின், அதுகொண்டு தானே நுங் கருத்து நிரம்புமா றின்றென்பது. இனி இவ்வாறன்றி, ஆன்மாத் தன்னுடைய ஞானவிளக்கத்தைத் தானனுபவிப்பனெனின், பிரமாணப்பிரமேய சாங்கரிய தோஷ முதலியவரு மென் றொழிக. இனி நேத்திர படல நீங்கினும், நேத்தி ரத்திற்கு விஷய தரிசனத்தில், ஆதித்த விளக்கம் ஆவசியம் வேண்டும். அந்தச்சகாய மில்லாதவழி, ஆதித்தப் பிரகாசத்தினாற் சத்திகெட்டடங்கிக் கிடக்கும் அந்தகாரம் மறி த்தும் மேலிடுதற் கைய மின்று. இனி அந்தகாரஞ் சத்தி கெட்டடங்கிக் கிடத்தல் நேத்தி ரப் பிரகாசத்தினா னன்று. தாட்டாந்திகத்தினும் இங்ஙனமாகலின், சர்வப்பிரகாரத்தி னானும் மல மறைப்பு நீங்கினும், ஆன்மாவிற்குச் சிவவிளக்க விருப்பு ஆவசியமென் பது, வச்சிரலேபமாக நாட்டப்பட்டது. இந்தச் சொரூபங்கள் தெரியமாட்டாமற் பிர லாபிப்பதெல்லாம் அஞ்ஞானவிலாசமே யல்லது வேறன்றென் றொழிக.

"உலகெலா மாகி"

இதன்கண் † "தஸ்வடிஂகிஜவிஷூதஜ" என்னும் வசனத்திற்கு அநிருவசன மென்று பொருள் படாமற் பாதுகாத்தற்பொருட்டுத், "திருசியமு மன்று, அதிருசிய முமன்று, திருக்குரூபமென்பது, தாற்பரியம்" என் றுரைத்தீர். திருக்கு ரூபமாவது யாதெனின், "பிரமேய மல்லாப் பிரமேயம்" என்று மேற் கூறினீர். அதுவும் அநிரு வசனமே யாம். அல்லுழி அனேகாந்த வாதமாய் முடியும். "கிஜவிஷூதஜ" என் பதற்குத் தாற்பரியஞ் சொல்லமாட்டாதீர்க்கு, அதனை யெடுத்துரையாடா தொழிதலே சால் பாம். இது நிற்க. "சிவனுக்குப்போல ஆன்மாவுக்குஞ் சர்வஞ்ஞத்துவ சர்வ கர்த்திருத்துவ முண்டு" என்று கூறி, அதனை நாட்டுதற்குப் பராக்கியை முதலிய

---

* நடுநிலைத் தீவகத்தினைத் தேகளீதீபநியாய மென்றும் உரைப்பர். † இ-ள். "அப் பொருள் இப்பெற்றிய தென்று உயிராற் சுட்டி உரைக்கற்பாலதாய் உள்ள தன்று; தான் அதுவாய் ஒற்றித்து நின்றுணரும் பான்மைத்தாய் உள்ளது" எ-று.

வாகமங்களில் வசனமெடுத் தெழுதினீர். சிவனுக்குப்போல ஆன்மாவுக்குச் சர்வஞ்ஞ த்துவ சர்வகர்த்திருத்துவங்க ளுண்டென்பதன்கண் சந்தேக மெழுமா றின்று. மற்று அச்சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்களுக்குச் சொரூபம் இஃதென்று தெரிந்து கொள்ளமாட்டாமற் சிவசமவாத பிசாசாவேசராய்ப் பலவாறு பிரலாபிக்காநின்றீர். இனிச் சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்களாவன—சர்வ வஸ்து விஷயக வேதனக் கிரியைகளெனின், அது நுமது மதத்திற்கே பலவாற்றானும் விருத்த மாம். அது காட்டுதும்: நுமது மதத்திற் புறப்பொரு ளறிவு தற்பொரு ளறிவினை யறிவதுஞ் செய்வது மில்லை. அல்லதூஉம், 'முத்தான்மாக்க டொகை அளவிறந்தது' என்பவாகலின், அத்தனை முத்தான்மாக்களுஞ் சிவப் பிரேரிய ரல்ல ரென்றலின், சர்வவஸ்து விஷய கர்த்திருத்து வஞ் சிவனுக் கின்றும். என்னை? *"ஷூயொஜநஉந-ஜிஙூநஉஂஷொவிஷூவக-ெ" என்பது நியாயநூற் றுணி பாகலின். இனி முத்தான்மாக்கள்பாற் செய்யக்கடவ தொன் றில்வழி, நிட்பிரயோசன மாகலின், அவர்தம்மைச் சிவன் அறிவதூஉ மின்று. இங்ஙனமாகலின், சர்வ வஸ்து விஷயக வேதனக் கிரியைகள் சர்வஞ்ஞத்துவ சர்வகர்த் திருத்துவங்க ளென்பது, நுமக்கே அவசித்தாந்தமாய் முடியு மென் றுணர்க. இனி ஆண்டுச் சர்வ சத்தத்தைச் சங்கோசம் பண்ணுது மெனின், "சங்குசித சர்வஞ்ஞத் துவ சர்வகர்த்திருத்துவங்கள் புத்த கபிலாதியர்க்கு முண்டு" என்ப வாகலின், சித்தாந்தப் பிரதிபாத்தியமான நிரதிசய குணங்களை அங்ஙனஞ் சங்குசித குணமெ ன்றல் அவசித்தாந்த மாம். இது நிற்க.

இனிச் சர்வவஸ்துக்களையும் அறிவதூஉஞ் செய்வதூஉஞ் சர்வஞ்ஞத்துவ சர்வ கர்த்திருத்துவங்களெனின், சர்வ வஸ்துக்களையும் யாதானு மோர் பிரகாரத்தான் அறி வதோ? செய்வதோ? மற்றுச் சர்வப் பிரகாரத்தானும் அறிவதோ? செய்வதோ? என்று கடாயினார்க்குச், சர்வ வஸ்துக்களையும் யாதானு மோர் பிரகாரத்தா லறிவதூஉஞ் செய்வதூஉஞ் சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்க ளென் றிறுப்பின், சர்வ பதார் த்தங்களும் பதி பசு பாசத் திரயத்தில் அந்தர்ப்பாவ முறுதலின், அப் "பதார்த்த மூன் றினையுஞ் சொரூப மாத்திரையா னறிந்து பாசத்தைக் கழித்துப் பதியைப் பற்றி நிற் றல் சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்கள்" என்னுஞ் சைவைகதேசிகள் செயிப்ப ரென் றுணர்க. இனிச் சர்வப்பிரகாரத்தானுஞ் சர்வ வஸ்துக்களையும் அறிவதூஉஞ் செய்வதூஉஞ் சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்க ளென் றிறுப்பின், ¶" நவிதஷெ உஹெஜியஃ" "யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலிற், சத்தே யறியாது" என்றற் றொடக்கத்துச் சுருதி விரோதமும், ஆன்மாக்கள்பாற் பிரமாணப் பிரமேய சாங்கரிய மும், (சிவனுக்கு யாவும் போக்கியத்துவப் பிரமேயத்துவ நிர்த்தேசியத்துவாதிப் பிரகா ரங்களான் அறியப்படாமை கொண்டும், நித்தியாநித்திய பதார்த்தங்கள் அநித்தியத் துவ நித்தியத்துவாதிப் பிரகாரங்களான் அறியப்படாமை கொண்டும்,) சர்வஞ்ஞத் துவ சர்வகர்த்திருத்துவ பங்கமு மென, இன்னோரன்ன தோஷங்கள் பல சம்பவிக்கு மென் றுணர்க. அல்லதூஉம், ஆதித்த சன்னிதியில் அந்தகாரத்தைப் போலச் சிவ சன் னிதியிற் சூனியமாய் நிற்கும் ஆணவமலத்தைச் சாக்ஷாத்தாக அறிதல் கூடாமையா னும், சாக்ஷாத்தாக வன்றி யறிவதூஉஞ் சர்வஞ்ஞத்துவ மாயின், பரோக்ஷமாய்ச் சர்வ

* இ-ள். "மந்தன்றானும் பயன் கருதாது கொன்னே பிரவிருத்தி யுறான்" எ-று.

¶ இ-ள். "சத்தான சிவமும் அசத்தானபாசமும் தம்முள் ஒன்றனை யொன் றறியா" எ-று.

வஸ்துக்களையும் அறியும் பெத்தான்மைக தேசிகளையும் நிரதிசய சர்வஞ்ஞ ரென்று கூறல்வேண்டு மாகலானும், சர்வ வஸ்துக்களையும் அறிவதூஉஞ் செய்வதூஉஞ் சர்வஞ் ஞத்துவ சர்வ கர்த்திருத்துவங்க ளென்பது, சிறிதும் பொருந்தாமை யுணர்க. இனிச் சர்வதாபிவியத்த வேதனக் கிரியைகளு மல்ல, அவை அனுதி முத்த சிவனுக்கே யன்றி ஆதிமுத்தான்மாவிற்கு இல்லாமையின். சர்வதாசித்த வேதனக் கிரியைகளு மல்ல, கிஞ்சிஞ்ஞத்துவ வாதிகளுஞ் செயிப்ப ராகலின். சர்வ சேதன தன்ம ரூப ஞத்துவ கர்த்திருத்துவங்களு மல்ல, சர்வ வஸ்து தருமங்களும் ஒரு தருமியி லிராமையின். இனிப் பரிசேடத்தானும்,*"[illegible]" என்னும் வசன பலத்தானும், நிவிர்த்தியாதி கலாசோதனையில் தேசாவச்சின்னக் கிரமத்திற் பிரகாசிக்கும் ராகு முத்த சந்திரப் பிரகாச திருஷ்டாந்தஞ் சொல்லும் வசனத்தானும், "விரிந்திடு மறிவுங் காட்டி வீட்டையு மளிப்பன் மேலோன்" எனவும், "தனவானே யெங்குமாந் தன்மை போல" எனவும், "எங்குமாய்க் கருதரன்போ னிற்பன்" எனவும் வரும் வசனங்களானும், 'சாவதி சர்வஞ்ஞத்துவம்' 'நிரவதி சர்வஞ்ஞத்துவம்' என அவதியில் வைத்து விவகரிக்கும் அபியுத்த விவகாரங்களானும், ஞானக்கிரியைகள் சர்வதோபிவியாபகமாய் அபிவியத்தியாய் அறிவதூஉஞ் செய்வதூஉஞ் சர்வஞ்ஞத்துவ சர்வ கர்த்திருத்துவங்க ளென்பதே, சைவசித்தாந்த நிச்சயப் பொருளென் றறிக. நீர் ஈண்டுச்செய்த சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவ பரீக்ஷை, சூக்ஷும விசாரமேயாம். மற்று இதுகொண்டு முடிந்தது யாது? ஞானக்கிரியைகள் சர்வதோ வியாபகமாய் அபிவியத்தி யாங்கால், சர்வ வஸ்துக்களையும் விஷயீகரித்தலை வர்ச்சித்தல் செல்லாதெனின், அற்றன்று: நமது மதத்திற் சிவனுக்குச் சர்வகர்த்திருத்துவம் வியாபகமாய் அபிவியத்தியாயினும், அந்தக் கிரியை முத்தான்மாக்களை விஷயீகரித்தலும், அங்ஙனமே வியாபகமாம் புறப்பொருளறிவு தற்பொருளறிவினை விஷயீகரித்தலும், புறப்பொருளறிவுந் தற்பொருளறிவும் பொதுநடுச் சித்தென்பதை விஷயீகரித்தலும், இல்லை யாகலி னென்பது. இங்ஙனமாகலின், ஞானக்கிரியைகள் வியாபகமாய் அபிவியத்தியாதல் கொண்டு சர்வவஸ்துக்களும் விஷயமாதலை வர்ச்சிக்கப்படாதென்று சொல்ல நுமக்கு வா யேது! இனிச் சிவனது சர்வகர்த்திருத்துவம் சர்வதோபிவியத்தி யாயினும், முத்தான்மாக்கள்பாற் கர்த்தவ்வியதாம்ச மின்மையின், அஃது முத்தான்மாக்களை விட்டு, மற்றவைகளை மாத்திரம் விஷயீகரிக்கும்பிறவெனின், அவ்வாறே முத்தான்மாக்களுக்குச் சர்வஞ்ஞத்துவம் சர்வதோபிவியத்தியாயினுஞ் சிவேதர வஸ்துக்களில் ஞாதவ்விய தாம்சமில்லாமையின், அஃது சிவேதரவஸ்துக்களை விட்டுச், சிவனை மாத்திரம் விஷயீகரிக்குமென்று நாமுஞ் சொல்லுவாமென்பது. இனி அங்ஙனந் தானுகுகவெனின், அதுவும் பொருந்தாமை காட்டுதும்: "[illegible]" என்றற்றொடக்கத்துச் சுருதிகளானே சிவனுடைய ஞானக் கிரியைகளுக்குச் சர்வவஸ்துக்களிலும் † ஔபச்சிலேடிக வியாபகத்துவம் பிரசித்தம்.

---

* இ-ள். "முத்திக்காலத்து என்றுமாம் வியாபகம் கேட்கப்படும்" எ-று. † வடமொழி வியாகரணநூலார் ஒருபொருளின் ஏகதேசத்தில் மற்றோர் பொருள் இயைந் திருப்பது 'உபச்சிலேடம்' எனவும், வேற்றுமை நயத்தான் வேறே யாயினும்—ஒற்றுமை நயத்தா னொன் 'றபி வியாபகம்' எனவும், கூறுவாராக, ஆசிரியர் ஈண்டு எள்ளின் கண் நெய் உள்ளும் புறம்புங் கலந்து நிறைதல்போலப் பரமான்மாவான சிவ

*"ஸவெஜ்யதா ¶ஜ்ஞாத்ருஃ ஸம்தி யதேவவிஷ்ணு யெஸ்| தஸ்த ஜ்ஞவத்யஸம்தெஹாஸ் ஸதாத ஜ்ஞாவஹாவதஃ" என்னுஞ் சர்வஞ்ஞோத்தராதி சுருதிகளானே ஆன்மாவின் ஞானக் கிரியைகளுக்குப் பற்றும் பதார்த்தமாத்திரையே வியாபகத்துவம். ஆகலின், ஔபச்சிலேஷிக வியாபகமாகுஞ் சிவனுடைய சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங் களுக்கு முத்தான்மாக்கள் பெத்தான்மாக்கள் சடவஸ்துக்கள் சர்வமும் விஷயமே யாம். அங்ஙனமன்றி ஸ்படிகம்போலச் சார்ந்ததன் வண்ணமாகுந் தற்பாவபாவமுடைய ஆன்மாவினது சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்களுக்குத் தம்மாற் பற்றப்படும் பதார்த்தமாத்திரமே விஷயமாம். இனிப் பெத்தக்காலே மலத்தாற் றடையுற்றுக் கலாதிகளான் ஏகதேசத்தின் விளங்கிச் சோபாதிகமாயக் கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித்கர்த்திருத்துவங்களாம் ஆன்மாவின் ஞானக்கிரியைகள், அழுக்குப் போயவழிப் படகத சௌக்கிலியம் படமுழுதும் விளங்குமாறுபோல மலநிவிர்த்தி யனந்தரம் ஆன்மவியாபக முழுதும் நிருபாதிகமாய்ச் சர்வதோமுகமாய்ச் சர்வதாபி வியத்தமாய் விளங்கும். இந்த அர்த்தத்தை யபேக்ஷித்துச் சிவனுடைய சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்களும், ஆன்மாவினுடைய சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்களும், துல்லியமே யாம். அற்றாயினும், சிவனுடைய சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்கள் ஔபச்சிலேஷிக வியாபகமாதலின், சர்வவஸ்துக்களையும் விஷயீகரிக்கும். ஆன்மாவினுடைய சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்கள் அவ்வாறன்றி ஸ்படிகம்போலத் தற்பாவ பாவமாய் வியாபிக்கு மாகலின், அவ்வொன்றனையே விஷயீகரிக்குமல்லது, மற்றை வஸ்துக்களை விஷ

---

பிரான் சர்வ வஸ்துக்களினும் கலந்து ஒன்றாய் நிறைதல் 'ஔபச்சிலேஷிக வியாபகம்' என்றோதுதன், மாறுகோள்போலு மென்று மலையற்க; அவ் வடநூலார் அதற்கு அவயவவாற்றல் பற்றி ஒருபுடை இயைபு பொருளாகக்கொண்டு அங்ஙனம் கூறுதலானும், ஈண்டு ஆசிரியர் அதற்குச் சமுதாய வாற்றல் பற்றி முற்றியைபு பொருளாகக்கொண்டு அங்ஙனம் ஓதுதலானும், அது கருத்து வேறுபாடாவதன்றி, மாறுகோளாதென்பதுணர்க. இவ்வாற்றான், ஒருபுடையியைபு முற்றியைபென உபச்சிலேடம் இருவகைப்படுமென் பதூஉம், அவற்றுள், முற்றியைபென்னும் ஔபச்சிலேடிக வியாபகமும் அபிவியாபகமும் சொல்லினால் வேறுபடினும் பொருளினால் ஒற்றுமையுடையனவேயா மென்பதூஉம், போந்தவா றுணர்க. அஃதேல், அதனை அபிவியாபகமென ஓதாது, ஔபச்சிலேடிகவியாபகமென அங்ஙனம் வழக்கு வேறுபடுத்துக் கூறுத லெற்றிற்கெனின், ஒரு பயன் நோக்கி அவ்வா றோதுவாராயிற் றென்க. என்னையோ பயனெனின், பசுபாசங்கள் உண்மையிற் பதார்த்தாந்தர மல்லவென்னும் ஒருசார் ஏகான்மவாதிகள், பிரமப்பொருள் ஒன்றோடுந் தொடர்பின்றித் தனித்து நிறையுமென்று கொண் டஃதபிவியாபக மென்று வழங்குபவாகலின், அவ்வழக்கிற்கும் பொதுவாகும் அது தன்னாற் கூறற் கமர்ந்திலராய்த் தமது சித்தாந்தமரபு பொள்ளெனப் புலப்படுமாறு அங்ஙனம் ஔபச்சிலேடிக வியாபகமென வழக்கு வேறுபடுத் தோதுவாராயினர்; ஆகலின், அதுவே பயனென்று கடைப்பிடிக்க. இவ் வழக்கும் ஆசிரியர் படைத்திட்டுக்கொண்டு கூறிய தன்று; சிவாகமம் உரைப்பக் கண்டு எடுத்து ஓதியதே யாமென் றுணர்க. * இ-ள். "ஆன்மா அங்ஙனம் இருதன்மைப்படுமா றென்னை யென்று ஐயுறுது கேள்: எல்லாப்பொருளின் றன்மைகளும் ஆன்மாவுக் குளவாம். அஃ தெங்ஙன மெனின், ஆன்மா யாதினை யாதினைப் பற்றினான், அதனதன் சுபாவமே தன் சுபாவமாந் தன்மை யுடையான்; அது வது வாயே நிற்பன்" எ - று. ¶ இன்னோரன்னவற்றை 'ஸாம்ஸித்திகவ்யாப்தி' என்ப.

யீகரிக்கமாட்டா. ஆகலின், இந்த அர்த்தத்தை யபேக்ஷித்து ஆன்மாவினுடைய ஞான
க்கிரியைகள் கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித்கர்த்திருத்துவங்களே யாவன வன்றித், துல்
லிய மாக மாட்டா. இங்ஙன மாகலின், முத்தான்ம குணங்கள் சிவகுணங்கள்போல
வியாபகமாத்திரையாற் சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்க ளெனப் படுவனவன்றி,
உபயவிதத்தானுஞ் சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்க ளெனப்படா; பெத்தான்ம
குணங்கள்போல உபயவிதத்தானுங் கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித்கர்த்திருத்துவங்க ளென
வும் படா. இவையே தம்முள் வேறுபாடென்று நுண்ணுணர்வாற் கண்டு கொள்க.
நீர் ஈண்டுக் கூறியனவெல்லாம் நுண்பொருள்களே யாம். ஆயினும், சர்வஞ்ஞானோத்த
ரத்தில் "ஆன்மாத் தற்பாவ பாவத்தானே சார்ந்ததன் வண்ண மாம்" என்னும் வச
னம், சோபாதிகமாஞ் செயற்கைக் குணத்தைச் சொல்லிய தாம்; அன்றி, நிருபாதிக
மாம் இயற்கைக்குணத்தைச் சொல்லிற்றென்பதற்கு, நியாமகம் என்னையென்பிராயின்,
ஆண்டுப் பூர்வாபர வாக்கிய பரியாலோசனை செய்யின், அஃது இயற்கைக் குணமெ
ன்பதற்கு நியாமகந் தானே விளங்கும். அவ்வா றெல்லாஞ் சிவஞானபாடியத்துள் விரி
த்துக் காட்டினும். அல்லதூஉம், மலத்தினாற் போதருஞ் செயற்கை அஞ்ஞத்துவ அக
ர்த்திருத்துவங்க ளாம். கலாதிகளாற் போதருஞ் செயற்கை கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித்
கர்த்திருத்துவங்க ளாம். இவ்வாறே தற்பாவபாவமாய் அது வது வாதலுஞ் சோபாதிக
மென்பதற்கு ஒரு காரணமு மில்லை; பிரமாணமு மில்லை. ஆகலின், அதுவதுவாய்ச்
சார்ந்ததன் வண்ணமாந் தன்மை ஆன்மாவிற்கு நிருபாதிகமே யாம். அஃதறியமாட்
டாது, சோபாதிக மென்பதெல்லாம் பிராந்தி மூல மன்றி, வேறு யாதா மென் றொழிக.
இனி இவ்வுண்மை அறிய வல்லார், ஏகதேசதோபாசமான ஞானக்கிரியைகளாகுங் கிஞ்
சிஞ்ஞத்துவ கிஞ்சித்கர்த்திருத்துவங்கள், * "கிஂசிஜ்ஞத்வஂ தத்-காரணாத்" என்னும் வச
னத்தானே சோபாதிகங்களே யா மென்றும், சர்வதோவபாசமான ஞானக்கிரியைகளா
குஞ் சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்கள், பராக்கியை மிருகேந்திர மென்பவற்றிற்
கூறியவாறு, விபுவாகிய ஆன்மாக்களுக்குச் சிவனுக்குப்போல நிருபாதிகங்களே யா
மென்றும், உறுதி கடைப்பிடிப்பர்; விவாத மேவுறார். இதனான் முடிந்த விசேடப் பொ
ருள்கள் யாவை யெனின், சிவனுடைய சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்கள் ஔபச்
சிலேடிக வியாத்தியினாற் சர்வ வஸ்து விஷயக மாம். ஆன்மாவினுடைய சர்வஞ்ஞத்துவ
சர்வகர்த்திருத்துவங்கள் தற்பாவ பாவ வியாத்திமாத்திரையான் ஏகதேச வஸ்து விஷ
யக மாம் எனத், தம்முள் வேறுபா டுடையன வென்பதூஉம், ஏகதேசமா யறிதலுஞ்
செய்தலுமுடைய பெத்தான்மாக்களை யபேக்ஷித்துச் சர்வக்ஞன் சர்வகர்த்தா வாகு
முத்தான்மா, உபயப் பிரகாரத்தானுஞ் சர்வஞ்ஞன் சர்வகர்த்தா வாத லுடைய சிவனை
யபேக்ஷித்துக் கிஞ்சிக்ஞன் கிஞ்சித்கர்த்தாவே யா மென்பதூஉம், என் றுணர்க.
இவ்வாறு சகலாகம சம்மதமாகச் சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவ கிஞ்சிஞ்ஞத்
துவ கிஞ்சித்கர்த்திருத்துவ விவேகஞ் செய்து அறிந்து கொள்ளமாட்டாமே பல
வாறு பிரலாபிக்க நும்மைப் பிடித் தாட்டுஞ் சிவசமவாத பிசாசினை யோட்டல்
வேண்டின், மகாமந்திர வாத மாக நிலையிட்ட இந்த அர்த்தத்தை, மந்திரசித்தி யெய்
துமாறு ஊகித்துக்கொள்க. இனி, "ஆன்மாப் பெத்தத்திற் பரதந்திரன், முத்தியிற்
சுதந்திரன்" என்பதூஉம், இவ்வாறே விவேகஞ் செய்து அறியற்பாற்று. அதனையுஞ்
சிறிது காட்டுதும். சுவாதந்திரிய மாவது என்னை? பரானபேக்ஷத்துவமு மன்று;

---

* இ - ள். சிற்றறிவுதான் காரணத்தினாய செயற்கை யாம் எ - று.

*"கர்த்ராகர்த்ருஸ்வதந்த்ர:" என்நற் ஜெடக்கத்து வசனங்களானே, கர்மாதிகளை யபேக்ஷித்துச் செய்தலின், சிவனுக்குச் சுவாதந்திரிய பங்கம் வரு மாகலின். பரேச்சானு வர்த்தித்துவமு மன்று; ஆன்மேச்சானு வர்த்தியாய்ப் பயன் கொடுத்தலின், சிவனுக்குச் சுவாதந்திரியபங்கம் வரு மாகலின். பராப்பிரேரியத்துவமு மன்று; விம்பாதிகளில் ஆவாகனாதிகளாற் பிரேரிக்கப் படுதலின், சிவனுக்குச் சுவாதந்திரிய பங்கம் வரு மாகலின். பராவசியத்துவமு மன்று; சிவன் றியானுதி வசிய ராகலின். இனி †"யதிச்சதி ததாகரோதி" என்னு நியாயத்தான், அப்பிரதிகத சுவேச்சானுவர்த்தித்துவமே சுவாதந்திரியம், தற் பிரதியோகியே பாரதந்திரிய மென்று, நுணுகி நாடி யறிந்து கொள்க. ஆன்மாவிற்குச் சிவானுபவேச்சை யொன்றே அப்பிரதிகதமான சுவேச்சை. ததனுவர்த்தனமாகுஞ் சுவாதந்திரியம் ஆன்மாவிற்கு இயற்கை யாம். தற்பிரதியோகியாகும் பாரதந்திரியம் அபரமுத்தி பரியந்த முளதாகுஞ் செயற்கை யாம். இவ்வாறன்றிச், சிவசமவாத பிசாசாவேசமுற்றுச் சுவாதந்திரியப்பொருள் பேசிப் பிரலாபிப்ப தெல்லாம், மேற் கூறியவாறு சிவனுக்குச் சுவாதந்திரிய பங்கப் பராபவங்களா மென் றொழிக. இந்தச் சுவாதந்திரியமுந் தற்பாவ பாவமாய்ச் சார்ந்ததன் வண்ணமா மியல்புடைய ஆன்மாவிற்கு, ஔபச்சிலேடிக வியாத்திமத் சிவனது சுவாதந்திரியத்தை யபேக்ஷித்துப் பாரதந்திரியமே யாகலின், ஆண்டுஞ் சிவன் அனுகூலப் பிரேரகராதல் வேண்டப் படும். இதனுன் முடிந்த பொருள் யாதெனின், ஆன்மாவிற்குப் பெத்தத்திற் பதிபாரதந்திரியம்; முத்தியில் அப்பாரதந்திரியத்தை யபேக்ஷித்துச் சுவாதந்திரிய மெனப்படுஞ் சிவபாரதந்திரிய மென் றறிக. பதித்துவ சிவத்துவ ‡விபதேச பேதஞ் சர்வஞ்ஞானோத்தரத்துட் காண்க. இங்ஙனம் அவிரோத நயனஞ் செய்யாக்கால், "தற்பாவ பாவத்தால் அது வது வாவன்" என்னும் வசனமும், ¶"முக்தாத்மநாமுபாதி" என்றற் றொடக்கத்து வசனங்களும், சாம்பவ தீக்ஷையிற் "சரீரார்த்தங்களோடு ஆன்மாவையுந் தானஞ் செய்க" எனவும், அங்ஙனந் தானஞ்செய்த ஞானந் திடம்பிறத்தல் வேண்டித் தினந்தொறுஞ் சிவ பூஜையில் "ஶிவோதாதா" என்னு மந்திரஞ் சொல்லி ஆன்ம நிவேதனஞ் செய்க" எனவும், விதித்த வசனங்களும், தம்முண் முரணிப் பொருட்பேறிலவா யொழியு மென்பது. அவை அன்னவாமாறு, துரபிமானங் கைவிட்டு நியாய நெறி பற்றி நின்று ஊகிப்பார்க்குக், கரதலாமலகம்போல இனிது விளங்கு மென்க. அது நிற்க. "எள்ளுக்கு ணெய் போல ஔபச்சிலெடிக வியாத்தியினுற் சிவனுக்கும் ஆன்மாவிற்கும் வியாபகத்துவ வியாப்பியத்துவங்கள் கூறுதல் கூடாது" என்றும், "ஆகாசாதி அமூர்த்த பதார்த்தங்களுஞ் சமசமயத்திற் சந்திரனிடத்தி லொத்துவிழுங் கண்ணொளிகளும் ஒன்றோடொன்று தட்டாது ஒத்திருத்தல் போல, நிருபாதி கான்ம சிவன்கள் சமசமயத்திற் சர்வபதார்த்தங்களிலும் ஒத்து விழினும் ஒன்றை யொயொன்று பரிசியாமல் ஒன்றிருக்கு மிடத் தொன்று இருப்பு விடாமல் ஒத்திருக்கும்" என்றும், "ஆகலால், ஆன்மசிவன்களுக்குச் சாதிருசிய சிவசாதி சம்பந்த மொன்றுமே சார்த்தகமன்றி மற்றைச் சம்பந்த மொன்றுங் கிடைக்காது" என்றும், பிர

---

* இ-ள். "அவையே தானே யாயிரு வினையிற்-போக்கு வரவு புரிய வாணையி-னீக்கமின்றி நிற்கு மன்றே" என்னுஞ் சூத்திரத்தினுட் காண்க. † இ-ள். யாதனை யாங்ஙனம் எண்ணிடும், அதனை அங்ஙனம் பண்ணிடும் எ-று. ‡ விபதேசம்=வழக்கு. ¶ இ-ள். "முத்தான்மாக்களைப் புரந்திடுவன்" எ-று.

ஞ்ஞை யின்றிப் பிரலாபித்தீர். சிவனுக்குச் சர்வ பதார்த்தங்களினும் எள்ளின்க ணெய் போல ஔபச்சிலேடிக வியாத்தி கூடாதென்றல் பலவசன விரோதமாம். அல்லதூஉம், 'சிவனுக்கு ஔபச்சிலேடிக வியாத்தி யின்றெனின், சம்பந்தம் பெறப்படாமையின், சிவன் அனைத்தினையும் அறியவுஞ் செய்யவு மாட்டானும். இனிச் சம்பந்த மின்றி யும் ஒன்றனை யறிதலுஞ் செய்தலுங் கூடுமெனின், 'நேத்திரம் சம்பந்த மின்றி அபி முகமாத்திரையானே பதார்த்தங்களைத் தரிசிக்கும்' என்னுஞ் சார்வாகர் முதலியோரும், 'சம்பந்த மின்றிச் சன்னிதி மாத்திரையானே புருடன் பொருள்களை யறியும்' என் னுஞ் சாங்கியர் முதலியோரும், செயிப்பர். இதுவேயு மன்றி, நீர் ஈண்டு எடுத்துக் காட் டியதூஉம் விஷம திருஷ்டாந்தம். யாங்ஙன மெனின், ஆகாசாதி அமூர்த்த பதார்த்தங் களுக்குஞ் சம சமயத்திற் சந்திரன்கண் ஒத்து விழுங் கண்ணொளிகளுக்கும் அன்னியோ ன்னிய தரிசன மின்று; அன்னியோன்னியக் கிரியைகளு மின்று; ஆகலினென்க. இனி ஆன்ம சிவன்களுக்கு அன்னியோன்னிய ஞாதிருஞேய பாவம் உண்டோ? இன்றோ? எனக்கடாயி னார்க்கு, இன்றென்று விடுப்பின், *"ஶிவஶ்ஶக்த்யாதிஹிஸ்ஸாயஸ்ய(முக்தி)முக்தஸ்யைகஶிவ ஜ்ஞேய:" என்றற் றொடக்கத்து வசனங்களோடு மாறுபட்டு, அவசித்தாந்த மாம். உண் டென்று விடுப்பின், சம்பந்த விசேடமில்வழி ஞாதிரு ஞேயபாவங் கூடாமையின், ஞாதி ருஞேயபாவப்பிரயோசக சம்பந்த விசேட முண்டென்பது, தானே சித்தித்தது. இனிச் சாதிசம்பந்த மாத்திரையான் ஞாதிரு ஞேயபாவங் கூடு மென்றல் செல்லாது, "கண் ணொளிகளுக்குச் சமசாதி சம்பந்த முளதாகவுந் திருசிய தர்சக பாவ சம்பந்த மின் றாய் ஒன்றனை யொன்று பரிசியாமல் இருத்தலால்" என்றீர். நிரவயவபதார்த்தங் களுக்கு அறிவதூஉம் அறியப்படுவதூஉம் பரிச மன்றி வே றில்லை என்ப தறியமாட் டாது, அறிவதுண்டு, பரிசிப்ப தில்லை யென்றல், என்னை ஈன்றாள் எனக்கு மாதாவல் லள் என்பதனோ டொத்துப் பரிகாசாஸ்பதமா மென்பது. அஃதேல், சமவியாபக வஸ்துக்களுக்கு வியாப்பிய வியாபக பாவங் கூடுமாறு யாங்ஙன மெனின், அஃ தாச ங்கை யன்று. என்னை? சமவியாபகமாங் கண்ணொளியும் விளக்கொளியும் ஸ்தூல சூக்ஷும வேறுபாட்டால் வியாப்பிய வியாபக பாவ முடையவா யிருத்தல் பிரத்தியக்ஷ சித்த மாய்க் காணப்படுதலி னென் றுணர்க. அற்றேல், விபுத்துவயங்களுக்குச் சையோக சம்பந்தமேலாமையின், ஆண்டுச் சம்பந்த விசேடம் என்னைகொலெனின், அது சிவ ஞானபாடியத்துள் விரித்துக் காட்டினும். ஆண்டுக் காண்க. அது நிற்க.

சிவனுக்கும் ஆன்மாவிற்கும் சாமியஞ் சொற்றீர். அஃது ஏகதேச சாமியமோ? சர்வ சாமியமோ? ஏகதேச சாமிய மெனின், அஃது எல்லார்க்குஞ் சம்மதமே யாம். சர்வ சாமியமெனின், அஃது அபேத வாதமாய் முடியும். ஆன்ம சிவன்க ளிருவர்க்குங் குணங்கள் அபேத மாம், குணியாதல் பேதமா மாகலின், அஃ தபேதவாத மாமா தில்லையெனின், நீர் இங்ஙனங் குண குணிகளுக்கு அத்தியந்த பேதங் கூறுதலின், தார்க்கிக மதாபாச ராயினீர்; சித்தாந்தத்தில் குணங்கள் செறிந்த மயமே குணியன்றி வேறன் றென் றுத்தரித்தலின். "புறப் பொரு ளறிவுதானே தற்பொரு ளறிவா யிரு க்கும், தற்பொரு ளறிவுதானே புறப்பொரு ளறிவா யிருக்கும்" என்று, முன்னர்க்கூறிப் போந்து, ஈண்டு இங்ஙனம் பூர்வாபர விரோதமாகப் பிரலாபிக்கின்றீர். இதனானே, நும்மைப் பிடித்தாட்டுஞ் சிவசமவாத பிசாசின் நிர்வாகம் அளக்கற் பாலதன்று போலும்!

---

* இ-ள். "சிவன் சத்தி முதலியவற்றோடு முத்தனை அறியா நிற்பன்; முத்தன் சிவ மொன்றனையே யறியும்" எ-று.

"குணத்துக்குள்ளதே குணிக்கு, குணிக்குள்ளதே குணத்துக்கு, பேத மின்று" என்பது, சிவாகம சித்தாந்த மாகலின், இதனை * அபலாபனஞ் செய்தல் யார்க்கும் ஒல்லாது. இங்ஙனமாதலின், "ஆன்மா சிவனுக்குச் சமான சாதியன், சிவனும் ஆன்மாவிற்குச் சமானசாதியன்" என்பதற்குப் பொருள் வேறுண் டென்றும், சமபூச்சியம் ஆன்மசிவன்களுக்குக் கிடைக்காதென்றும், ஒருதலையாக வுணர்ந்து கொள்க.

"தூலமா ழநவி னுக்த"

"சிவத்துவம் பெற்ற முத்தான்மாவைக் குறித்துச் சிவன் பிரேரகனல்லன், சிவனைக்குறித்து அவனும் பிரேரியனல்லன்" என்று, "மதங்க பாரமேசுவரத்திற் பேசப்பட்டது" என் றுரைத்து, "வஶ்யாசு" என்னும் வசனம் எடுத் தெழுதினீர். அந்த வசனத்தில் "காரணதேந" என்றெழுந்த திரிதீயாந்த பதமே நமக்கு இஷ்டவிகாதஞ் செய்து நமது சித்தாந்தத்தை நாட்டும். இனி அதன் ருற்பரியம் அறியமாட்டாமையின், இங்ஙனம் பிரலாபித்திட்டீர். அது நிற்க. அப்பிரதிகத சுவேச்சானுவர்த்தித்துவமே சுவாதந்திரியம் என்று பூர்வம் உத்தரித்தலின், அதற் கனுகூலமாக அறிவிப்பதூஉம் அறிவதூஉம் ஆகிய பிரேரகப் பிரேரியபாவம் முத்தியின் கண் உண்டென்பது, "ஐபக்தாணஒநுவாதி" என்றற்றொடக்கத்து வசனங்களாற் சகலாகமப் பிரசித்தம். "முத்தான்மாவைக் குறித்துச் சிவன் பிரேரகனல்லன்" என்பதற்குத் தாற்பரியம்: சிவன் அவனைக்குறித்துச் சம்சாரப் பிரேரகனல்லன்; அவனும் சம்சாரப் பிரேரிய னல்லன்; என்பதேயாம். இவ்வா றுரையாக்கால், அவ்வசனங்க ளன்னியோன்னிய விரோதமுற்றுப் பொருட்பே றிலவா யொழியு மென்க.

"தத்துவ நப மாதும்"

இதன்கண் "ஓரான்மாவிற்கே சகலப் பிரளயாகல விஞ்ஞானகல அபரமுத்தித்திரய பரமுத்திகளென்னும் அவஸ்தா பேதங்கள் உண்டு, இதில் ஆன்மா தூலசூக்ஷுமாதி பேதமாய் வேறுபடும்" என்று, நும்மாற் சொல்லப்பட்டது. அங்ஙனமாயின், அது பரிணம மாம். பரிணமமாவது சூக்ஷுமம் ஸ்தூலமாதலும் ஸ்தூலம் சூக்ஷுமமாதலும் அல்லது மற்றொன் றன்று. இனிச் சடத்துக்கன்றிச் சித்துக்குப்பரிணமங் கூடாதென்பது, சகலாகமப் பிரசித்தமாகவும், நீர் இங்ஙனம் ஆன்மாவிற்குப் பரிணமங்கூறுதல் அவசித்தாந்தம். சகலாதி அவஸ்தைகளில், ஸ்தூல சூக்ஷுமாதி பேதங்கள், உபாதிகளுக் கன்றி, உபாதிமானுக் கில்லையென்பது சித்தாந்தம். அது தெரிந்துகொள்ளமாட்டாமல், "ஸ்தூலசூக்ஷுமாதி பேதப்படுதல், உபாதிக்குப்போல உபாதிமானுக்கும் சுதந்திரமாகவுண்டு" எனக்கொண்டு, பரிணமவாதி ஆபாசராயினீர். அது கிடக்க. திரிபதார்த்தங்களுள், சடபதார்த்தம் ஸ்தூலம், அதனைநோக்கச் சித் பதார்த்தம் சூக்ஷுமம், அதனை நோக்க அனாதிமுத்த சித் பதார்த்தம் பரம் என்று, இங்ஙனம் பதார்த்தங்களுக்குத் தம்முள் தாரதம்மியஞ் சித்திக்கும். "ஆதி முத்த பதித்துவஞ் சூக்ஷுமம், அனாதிமுத்த பதித்துவம் பரம்" என்று, நீரும் ஈண்டு ஒப்பிக் கூறினீர். இங்ஙனந் தாரதம்மிய முடைய ஆன்ம சிவன்களுக்குச் சமபூச்சிய முளதென, மேற் கூறினீர். அது பொருந்துமாறு யாங்ஙன மென் றொழிக.

"மோய்தரு பூத மாதி"

இதன்கண் "முற்றப்புச் சிவசாமியமாயின், முத்தான்மாவும் பஞ்ச கிருத்தியம் பண்ணல் வேண்டும். பண்ணுமாயின், 'பண்ணன்' என்னும் வெகுவசன விரோ

* அபலாபனம் = தள்ளுதல்.

தம் வரும்" என்னுஞ் சங்கைக்கு, உத்தரஞ் சொல்ல அறிந்தவர் போல வெழுந்து, "முத்தனுக்குக் கர்த்திரு சத்தி யின்றெனின், சிவனுக்குங் கர்த்திரு சத்தி யின்று யொழியும்; அஃது சர்வகர்த்திரு சத்தி யன்றெனின், சிவனது கர்த்திரு சத்தியுஞ் சர்வகர்த்திரு சத்தி யன்று யொழியும்; ஆகலின், முத்தான்மாவிற்குஞ் சர்வவிஷயக கர்த்திரு சத்தி யுண்டு, அஃதுடையான் சிவனே லேவப்படானெனின், சிவனுக்குச் சர்வ கர்த்திருத்துவ பங்கம் வரும், "உத்தாரணாநுவாதி" என்னும் வசனவிரோதமும் வரும்" என் றிங்ஙனம் ஆசங்கித்தெடுத்துக் கொண்டு, ஏவ யோக்கியனை ஏவாவிடின், சர்வகர்த்திருத்துவ பங்கம் வரும், மல மின்மையின் ஏவயோக்கியன் அன்மையின், அது வருமா றின்று" என்றும், "ஏவ யோக்கிய னல்லானை யேவின், சர்வஞ்ஞத்துவ பங்கம் வரும், அது பற்றிச் சர்வகர்த்திருத்துவ பங்கமும் வரும்" என்றும், "உத்தாரணாநுவாதி என்பது, அபரமுத்தர்களை ரக்ஷிப்பனென்று பொருள் படுமாகலின், வசன விரோதமும் இல்லை" என்றும், ஆகலின், "அபி வியத்த சர்வ விஷயக கர்த்திரு சத்தி சிவனுக்குப் போல முத்தான்மாவிற்கும் உண்டு" என்றும், "அவ்வாறுண்டெனினும், பின்ன சங்கற்பம் இன்று" என்றும், அஃதேல், கிருத்தியஞ் செய்கவெனின், "சிவத்துவாபி வியத்தி இலக்கணச் சுவப் பிரயோசனஞ் சித்தித்துவிடுதலின், தன் பிரயோசனத்தின் பொருட்டுப் பிரவிருத்திமா னாகான், எக்காலத்தும் இளைப்பில்லாத சிவன் எங்கும் வியாபித்து இடையீடின்றிப் பிறர் பிரயோசனத்தின் பொருட்டுக் கிருத்தியஞ் செய்து வருதலின், பிறர் பிரயோசனத்தின் பொருட்டும் பிரவிருத்திமா னாகான், சர்வகர்த்திரு சத்திக்கு வியத்தியும் சர்வகிருத்தியத்துஞ் சங்கற்பமென்னும் விழுதலுந் திரும்பச் சிவசங்கற்பத்தி னின்றுங் குறைத்துச் சுருக்கப் படாவாகையால், சிவனுக்குக் கிருபா சம்சித்த பஞ்ச கிருத்தியம்; முத்த சீவான்மாவிற்குப் பிரிந்த பின்ன கிருத்திய பல மின்றி அபின்ன பல அவர்ச்சனீய சம்சித்த பஞ்ச கிருத்தியம், ஆகையால், விரோத வேற்றுமைக ளில்லை" என்றும், "இதற்கு ஆகமங்களில் வசனங்கேட்டறிக" என்றும், ஏதேதோ நுமக்குத் தோன்றியவா றெல்லாம் குழறினீர். "ஆன்மாவிற்குச் சர்வ விஷயக கருத்திரு சத்தியின்றேல், சிவனுக்கும் சர்வ விஷயக கருத்திரு சத்தி யின்றாய் ஒழியும்" என்றீர். ஈண்டு நியாமகம் என்னை? முற்றப்புச் சாமியமே நியாமக மென்பிரேல், அஃது ஏகான்ம வாதமாய் முடியுமாகலானும், குணத்துக் கொத்ததே குணிக்குமா மன்றி வேற்றுமை இன்றாகலானும், முற்றப்புச் சாமியம் சித்திக்கமாட்டாது என்பது, மேலே காட்டினும். முன்னருங் காட்டுதும். அல்லதூஉம், முற்றப்பு—சாமிய மெனக் கொண்டு, 'ஆன்மாவிற்கு எது வுண்டு, அது சிவனுக்கும் உண்டு, ஆன்மாவிற்கு எது இன்று, அது சிவனுக்கு மின்று, என்பீர்க்கு, ஆன்மாவிற்கு அனாதி மல முத்தத்துவம் இன்றெனின், சிவனுக்கும் அனாதி மல முத்தத்துவம் இன்று யொழியும், ஆன்மாவிற்குக் கிரமத்தில் ஞாதிரு சத்தி கர்த்திரு சத்தியுள வெனின், சிவனுக்கும் அவ்வாறே கிரமத்தில் அவை யுளவர்வனவாம் என்று கூறல் வேண்டும். ஆகலின், "ஆன்மா அனாதிமல முத்தனே" என்றும் நீர் கூறாது ஒழிந்ததென்கொலோ ! இன்னும், முற்றப்பு—சாமியம் எனின், சிவனைப் பந்திக்க மாட்டாத மலம் ஆன்மாவைப் பந்திப்பது யாங்ஙனம்? இனி ஒரு சூரியனை மறைக்கமாட்டாத அந்தகாரம் மற்றொரு சூரியனையும் மறைக்கமாட்டாது. ஒரு கண்ணினை மறைக்கு மந்தகாரம் எல்லாக்கண்களையும் மறைத்திடும். இங்ஙனமாகலின், 'ஆன்மாவிற்கு அனாதி மல பந்தம் இன்று என்றானும், அல்லது 'சிவனுக்கு அனாதி மலமுத்தி

இன்று என்ருனும், கூறல் வேண்டும். அற்றன்று; தாமிரமுங் கனகமுஞ் சமசாதியவாகவும், தாமிரத்திற்கே காளிம முண்டு; கனகத்திற்குக் காளிம மின்று; இங்ஙனமாகலி னெனின், அவ்விரண்டும் பார்த்திவ விகாரமாகலின், பிறந்த நில வேறுபாட்டானே அவை அவ் வாருகாநிற்கு மென்று ஆண்டுக் காரணபேதம் உளவென்று எடுத்தோதப்படும். ஈண்டும் அங்ஙனங் காரண பேத முளவென்று எடுத்தோதல் வேண்டும். இனி ஈண்டும் அவ்வாறு காரண பேத முண்டென் றெடுத்தோதலுறின், நமக்கு முற்றப்புச் சாமியங் கிடைப்ப தின்ரு மென்க. அற்றேல், "கனக தாமிரங்களுக்குக் காளிமா பாவ பாவங்கள் அகாரணங்கள்" என்று, ஆகமங்கள் எடுத்தோதுப வாலோவெனின், அது நில வேறுபாட்டால் உள்ளதென்பது பிரத்தியக்ஷ சித்தமாகலின், அதனை ஆகமத்தால் அபலாபனஞ் செய்தல் செல்லாமையின், அவ் வாகம வசனங்களுக்குத் தாற்பரியம் அது வன்று, வே றுண்டென்பது, சித்தித்தது. இனி அக்கருத்துச் சித்தாந்த சைவர்க்கன்றி ஏனையோர்க்குப் புலப்படும் பான்மைத்தன்று. அந்தச் சூக்ஷ்ம விசாரம் ஈண்டுச் செயற்பால தன்று. அது நிற்க; மேல் பிரகிருதத்திற் போதும்.

"ஆன்மாவிற்குச் சிவனோடு முற்றப்பு—சாமியம்" என்றீர். அஃது ஆன்மாவிற்கு அநாதியின்கண் உள்ளதோ? இடையிட்டுள்ளதோ? இடையிட்டு உளதாயதெனின், சற்காரியமென்ப தெடுபட்டுச் சமுற்பத்திவாதமாய் அவசித்தாந்த மாம். அநாதியின்கண் உள்ளதெனின், ஆயிரம் ஆணவமலந் தலைக்கூடினும், அதனை ஆவரிக்க மாட்டா; ஆயிரம் அந்தகாரந் தலைக்கூடினும், ஒரு ஞாயிற்றினைத் தகைதரமாட்டாத வாறுபோல வென்பது. ஆதலின், அஃ தான்மாவிற்கு அநாதியிற்ருனே அபிவியத்தியாயிற்றென விடுத்தல் வேண்டும். அது செல்லாது. ஆயினும், பாஞ்சராத்திரிகள் 'சில ஆன்மாக்கள் நித்திய சூரிகளா யுள' ரென்று சொல்லுதல் போலச் சில ஆன்மாக்கள் அநாதி மல புந்தர்களாய் உளரெனினும், சில ஆன்மாக்கள் அநாதி மல முத்தர்களாய் உளராவர்; பரம சிவ சைதன்னிய மாத்திரம் அநாதி மல முத்தம் என்றற்கண் யாப்புற வில்லை யாகலினெனின், அவ்வாறு கூறுவீராயின், நீர் அவசித்தாந்தி யாவிர். இங்ஙனமாகலின், சிவனுக்கு முத்தான்மாக்களொடு முற்றப்புச் சாமியம் எவ்வாற்ருனும் பொருந்தா தென் றுணர்க. மிருகேந்திரத்தில் கலைமுதலியவற்றை "விசுவஸம்விசு" என்றதுபோலச் சர்வஞ்ஞானோத்தரத்தில் ஆன்மா "தசுயஉ்யதீ்" எனப்படுதலின், அதுபற்றி முற்றப்புச் சாமியம்போல்வ தல்லது, பொருட் சுபாவத்தானே முற்றப்புச் சாமிய மெய்தா தென்பது வச்சிர கவசமாக நாட்டப்பட்டது. ஆகலின், ஆன்மாவிற்குச் சர்வ வியாபக ரூப கர்த்திரு சத்தி யுண்டாயினும், சர்வ விஷயக ரூப கர்த்திரு சத்தி யுண்டென்றல் செல்லாது. ஆகவே, அது கொண்டு சிவனுக்கும் அஃ தில்லாதொழியுங் கொலா மென்ற வாசங்கை தூரம்போய்ச் சுஷ்க தர்க்கம் ஆயது காண்க. இவ்வாற்ருனே, நீர் ஈண் டெடுத்துக் கூறிய மோக்ஷகாரிகா வசனத்துக்குத் தாற்பரியம் அது வன்று; மற் றுண் டென் றுணர்க. "முத்தான்மாவிற்கு மலமின்மையின், ஏவ யோக்கிய னன்மையின், அவனைக் குறித்துச் சிவன் பிரேரக னல்லன்; ஏவ யோக்கிய னல்லாதவனை ஏவிடின் சர்வஞ்ஞத்துவ பங்கம் வரும்" என்றதூஉம், அவ்வாறே சுஷ்க தர்க்கமா யொழிந்தது. அது காட்டுதும்: சிவனுக்கு அனைத்தினும் ஔபச்சிடிலேக வியாபக முண்மை சகலாகமப் பிரசித்தம். அவ்வாறு மேலே காட்டினும்; முன்னருங் காட்டுதும். சிவன் சடசித்துக்க ளெல்

லாவற்றிற்கும் பிரேரகனென்பது சர்வாகமப் பிரசித்தமன்றே! சிவன் முத்தான்மாக்களொழித் தொழிந்த சடசித்துக்களுக்கெல்லாம் பிரேரகனென்பது, நமக்குஞ் சம்மதமாம். இனிப் பிரேரகனாகிய சிவன் அனைத்தினையு மோரோவொன்றாகப் பிரேரிப்பனோ? ஒருங்கு பிரேரிப்பனோ? ஓரோவொன்றாகப் பிரேரிப்பனென்ப தமையாது; சடசித்துக்கள் இவ்வளவினவெனச் சங்கியையி லடங்காமையின். அல்லதூஉம், அங்ஙனஞ் செய்யிற் சிவனுக் கனந்த சத்தித்துவ பங்கமும் வரும். அல்லதூஉம், சில சடசித்துக்களைப் பிரேரகஞ்செய்துவருங்காலும் ஏனைச் சடசித்துக்கள் தொழிற்படாமற் கொன்னே யிருந்தொழியுமென்னுங் குற்றமு மாம். இனி யொருங்கு பிரேரிப்பனெனின், அன்னியதாவனுபபத்தி யர்த்தாபத்தியினானே ஔபச்சிலேடிக வியாத்தி யுண்டெனப்பட்டுச், சர்வாந்தரியாமித்துவமென்னும் ஔபச்சிலேடிக வியாபகத்தும் சிவனுக்குத் தானே சித்தித்தது; எதுபோலவெனின், ஞாயிற்றின் சன்னிதியிற் பங்கசாதிகள் எல்லாம் ஒருங்கு தொழிற்படுதல் அதன் கிரண பரிச சம்பந்த மொருங்கியைந்தல்லது செல்லாதவாறுபோல வென் றுணர்க. இங்ஙனம் ஆகமப்பிரமாணத்துக் கனுகூலமாம் அர்த்தாபத்திப் பிரமாணத்தானும் சிவனுக்குச் சர்வ பதார்த்தங்களினும் ஔபச்சிலேடிக வியாத்தி சித்தித்தலின், அது பின்னர்ச் சிலபதார்த்தங்களினின்றுமாறு சுருக்கி யொதுக்கி வர்ச்சிக்கற்பாலதன்று; எதுபோலவெனின், ஞாயிற்றின் கிரணபரிசம் விகசிதபத்மாதிகளிற் கர்த்தவ்வியதாம்ச மில்லையெனச் சுருக்கி வர்ச்சிக்கப்பட்டு முகுளித பத்மாதிகளின் மாத்திரஞ் செல்லுமென்றல் கூடாதவாறுபோல வென வறிக. அல்லதூஉம், முத்தான்மாக்கள்பாற் சிவனாற் செய்யற்பால தொன் றில்லையெனின், அறியற்பாலது மில்லையெனப்பட்டுச் சிவன் அவர் தம்மை அறிவானுமல்ல னென்று முடியும்; ஆன்மாவினுடைய சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்களுக்குச் சாமியஞ் சொல்லல்வேண்டிச், சிவனுடைய சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்களுக்கு முன் னிலையிற் சுருக்கி நூனதை யாரோபிப்பவர் நும்போல யாரையுங் கண்டிலம். இனி மலமின்மையின் முத்தான்மாக்கண்மாட்டுக் கர்த்தவ்வியதாம்ச மொன்றினையுங் காண்கிலமாலெனின், சித்தாந்தக்கண்ணில்லாத நும்போலும் அந்தகருக்கு அது காணப்படாமை ஓர் வியப்பன்று! சிவானந்தம் சிவநிட்டமாகலின், ஆன்மா அதனை அனுபவிக்கற்பாலனென்று மேல் ஆனந்தப் பிரஸ்தாபம்வந்துழி உத்தரித்தாமாகலின், அந்தச் சிவானந்தவனுபவத்தில் நிருபாதிக விச்சையுடைய முத்தான்மாவிற்கு, அந்த வப்பிரதிகத சுவேச்சானுசாரிதாரூப சுவாதந்திரியத்திற்கு அனுகூலமாக அதனைக் கொடுத்தருளாநிற்குங் கர்த்தவ்வியதை, முத்தியிலுளதாமாறு, சித்தாந்தக் கண்ணுடையார்க்கு, இனிது புலனாமென் றொழிக. பெத்தக்காலத்திற் சிவன் அந்தச் சுவேச்சானுவர்த்தித்துவமாகும் ஆன்மாவினது சுவாதந்திரியத்திற்கு மலானுசாரியாயிருந்து பிரதிகூலஞ் செய்துபோதரலின், ஆன்மாப் பெத்தத்தின் மலோபாதியினாற் பரதந்திரனானான். சிவன் மலோபாதி நீங்கு முத்திக்காலத்தில் அந்தவிச்சைக்குப் பிரதிகூலஞ்செய்தலை விட்டு அனுகூலஞ் செய்து வருதலின், இயற்கையாயுள்ள அந்தச் சுவாதந்திரியம் வியத்தியாய் அந்தச் சிவானந்தவனுபவமுற்றுச் சுதந்திரனாம். ஆகலின், இவ்வாறு முத்தான்மாமாட்டுஞ் சிவனுக்குக் கர்த்தவ்வியதை சித்தித்தலின், "உதாஸீநவத்" என்னும் வசனம் அன்னியார்த்தபரமென்றதூஉம், தூரம் போயது காண்க. இனி முத்தியின்கண் சிவன் அனுகூலப் பிரேரகனாகாக்கால் ஆன்மாவிற்கு ஆண்டுச் சுவாதந்திரிய பங்கம் வருமென் றொழிக. வேண்டிற் செயற்பாலதும் வேண்டாக்கால் தவிரற்பாலதுமாய் இவ்வாறிருப்பதன்றே சுவாதந்திரியம். அங்ஙனமன்றி, வர்ச்சிக்கப்படாததாய்ச் செய்யவேண்டிடின், சுவாதந்திரிய பங்கமுற்றுப்

பழைய கேவலாவஸ்தையே தலைப்படுமென் றுணர்க. இதனால், "வ்யாபாஸ" என்றற்றொடக்கத்து வசனங்களுக்கு மேற்கூறியவாறு முத்தியின்கண் சிவன் ஆன்மாவிற்குப் பாரதந்திரியப் பிரயோசகமான பிரதிகூலப் பிரேரகனல்லன், முத்தான்மாவும் பிரதிகூலப் பிரேரியனல்லனென்பதே நிச்சயப்பொருளென் றறிந்துகொள்க. ஈண்டுக் கூறியவாற்றான் ஆன்மாவிற்குச் சர்வவியாபகரூப கர்த்திருசத்தி சிவனுக்குப்போல வுண்டெனினுஞ் சர்வவிஷயகரூப கர்த்திருசத்தி சிவனுக்குப்போல ஆன்மாவிற் கில்லை யென்பது வச்சிர கவசமாக நாட்டப்பட்டது. அது நிற்க. "ஆன்மாவிற்குச் சர்வவிஷயகரூப கர்த்திருசத்தி யுண்டு" என்றும், "பின்னசங்கற்பமு மில்லை" என்றுங் கொண்டநீர், அற்றாயிற், "பஞ்சகிருத்தியம் பண்ணுமோ?" என்று எழுந்த சங்கைக்கு முடிந்த உத்தரம் "பண்ணான்" என் றாயிற்றோ? "பண்ணுவன்" என் றாயிற்றோ? 'பண்ணான்' எனின், "சர்வகிருத்தியத்தில் விழுதலே சர்வகர்த்திரு சத்திக் கபிவியத்தி" என்று நீருஞ் சொற்றீராகலின், அஃதின்மையின் அனபிவியத்தியேயாயிற்று. ஆகவே, சர்வகர்த்திருத்வரூப சிவத்துவாபிவியத்தி விளங்காமையின், முத்தி சித்திக்கமாட்டாது. இனிப் 'பண்ணுவ'னெனின், "சுவப்பிரயோசனத்தின் பொருட்டும் பரப்பிரயோசனத்தின்பொருட்டும் பிரவிருத்தி மானுகான்" என்று நீர் தாமே கூறுதலின், இரண்டுமின்றிக் சொன்னே பிரவிர்த்திப்பவன் பிரஞ்ஞையில்லாத பயித்தியகார தல்லியனே யன்றி, சர்வஞ்ஞனுகா னென்பது. பின்னகிருத்திய பலமாக ஒரு பிரயோசனமு மில்லை யாயினும், அவர்ச்சனீயமாதலின், பஞ்சகிருத்தியப் பிரவிருத்தி மானுவனெனின், அங்ஙனமாயின், சுவாதந்திரியமில்லை யெனப்பட்டுப் பழைய பாரதந்திரியமேயாய் முடியுமென்பது. முத்தான்மாவிற்குச் சிவானந்தத்தினை அனுபவித்தல் வேண்டு மென்னும் இச்சை நிருபாதிகமாய் இடையீடின்றி நிகழ்தலின், அதன்கண் இடையறவுபடாப் பிரவிருத்திமானுகின்றான். இதர விஷயங்களில் அவ்விருப்பில்லாமையின், அவைகளிற் பிரவிருத்திமானுகின்றிலன். சிவனுக்கும் பெத்தத்திற் கன்மானுசாரமாகவும், முத்தியில் நிருபாதி கான்மேச்சானுசார மாகவும், ரக்ஷித்தல் வேண்டுமென்னுங் கிருபையே, இடையீடின்றி நிகழ்தலின், அந்தச் சுவேச்சானுசாரமாகப் பிரவிருத்தி செய்தருளாநிற்பன். இனி நீர் கூறு முத்தான்மாவிற்குப் பிரவிருத்தி அவ்வாறன்றி வர்ச்சிக்கப்படாத சங்கடமாய் வந்து தலைச்சுமை யாகின்றது! இவ்வியல்புடைய சங்கட முத்தியை ஒரு நூலினுங் கேட்டிலம். இனிப் "பஞ்சகிருத்தியம் பண்ணுவன்" என்றே கொண்ட உருவ சிவ சமவாதி, நம்மைப்போல இத்தனை சங்கடமுறக் கடவனல்லன். இவ்வாற்றான் நீ ரிரண்டுமின்றி, உழிதருபவர் தாம். அது நிற்க.

இன்னும், "சிவனுக்குக் கிருபாசம்சித்த பஞ்சகிருத்தியம், முத்தான்மாவிற்கு அவர்ச்சனீய சித்த பஞ்சகிருத்தியம்" என்றலின், 'முத்தான்மாவிற்குச் சிறிதுங் கிருபையில்லை' என்பதாயிற்று. இனி அஃதில்லாதவன் சிவனோடொத்துச் சமபூச்சியனுதல் யாங்ஙன மென் றொழிக. இனி முத்தான்மாக்களும் பஞ்சகிருத்தியஞ் செய்பவெனின், அது அனேகேசுரவாதமாய் முடியுமென்பது. பின்னசங்கற்ப மின்மையின், அதுவாமாறில்லையெனின், அங்ஙனமாயின், ஒப்போலை யெழுதிக்கொண்டு பின்னசங்கற்பமின்றிப் பிரவிருத்தியுறும் மகாசனங்கள் கூட்டத்திற்குப்போல முத்தான்ம சிவசமுதாயத்துக்கே ஈசுரத்துவ சத்தி யன்றிச் சிவனுக்கு ஈசுரத்துவ சத்தியின்றா யொழியுமென்பது. நுங்கொள்கை இத்தனை தோஷங்களுக்கெல்லாம் இங்ஙனம் இடனுவதாகவும், 'மாறுகண்ணுக்கு மூலைசெவ்' வென்பதுபோல அவை யெல்லாம் நுமக்குச் செப்

பமாகக் காணப்படு நயப்பை என் சொல்லி வியப்பாம்! இனிச் சமவாதமலப்பிசாசு, குணதோஷந் தெரியவொட்டாது, இவ்வாறெல்லாம் நும்மைக் கூத்தாட்டின், 'நீவிர் தாம் என் செய்விரென் றெழுக.

"இருவினைச் செயல்க ளோப்பில்"

இதன்கண் "பிரேரக வவஸ்தை தானே மத்தியா வஸ்தை" என் றறியமாட்டாது, தூலபுத்திமான்களுக்குத் தூலாருந்ததி நியாயம்பற்றிக் காட்டின உதாரணத்தினையே பற்றி இரண்டற்கும் பேதஞ் சொன்னீர். இனி நீர் கேவலசகலங்களிற் சொன்ன பேதங்களெல்லாங் கிடக்க. "கேவலஞ் சகலஞ் சுத்தம்" என் றெடுத்துக்கொண்ட மூன்றனுள், "சுத்தமெனப்படு நின்மலாவஸ்தா லக்ஷணங் காண்பிப்பாம்" என்றெடுத்துக்கொண்டு, "அது வெகுபிரகாரமா யிருக்கும்" என்றீர். அவற்றுள் ஒரு பிரகாரமாகச் சித்தாந்த சாராவலி யோகபாதத்திற் சொல்லிய யோகாவஸ்தா பஞ்சகத்தை எடுத்தெழுதினீர். பிராசாத மந்திரமார்க்கத்தைப்பற்றி ஞானசித்தியிற் சொல்லிய மந்திரான்மாவஸ்தா பஞ்சகமாமவற்றினையே மற்றொரு பிரகாரமாகப் பின்னரும் எடுத்தெழுதினீர். பின்னரும், அவற்றினையே இருவகை யஞ்சவஸ்தையாகப் பகுத்துக்கொண்டு, "பிரணவகலா பஞ்சக அதிதேவதா பஞ்சகங்களைப்பற்றிப் பிரமரந்திரமுடிவில் ஐந்தவஸ்தை யுளவாம்" என்றும், "அதற்கு மேற் றுவாதசாந்தவரையில் தற்காண்டன் முதற் றனது வாதலீறாக அனுபவபேதத்தால் ஐந்தவஸ்தையுள" என்றும், "மறித்தும் ஒரு பிரகாரம் அந்த ஐந்தவஸ்தையும் அவாந்தரபேதத்தாற் சாக்கிரச்சாக்கிரஞ், சாக்கிரச்சொப்பனஞ், சாக்கிரச்சுழுத்தி, சாக்கிரத்துரியங், காலபரம், அதீதம், பரதரிசனம், விசுவக்கிராசம், உபசாந்தஞ், சிவதரிசனஞ், சாயுச்சியமெனப் பதினொரு பேதப் படும்" என்றும், "இந்தப் பதினொரு பேதத்துள், சாக்கிரச்சாக்கிரமுதற் காலபராந்தமாம் ஐந்தும், சமனாந்த பசுத்துவ நிவிர்த்தியனந்தரம் உன்மனா மூலமாந் தியானத்தானத்தில் விளங்கு மான்மாவின தான்ம சாக்கிராதி ஐந்தவஸ்தை" என்றும், "அவற்றுண் மூன்று நீக்கிச், சாக்கிர துரிய முதற்கொண்டு, விசுவக்கிராசாந்தமாம் ஐந்தும் உன்மனாந்தமாஞ் சமாதித்தானத்தில் விளங்கும் பரத்தினது பரசாக்கிராதி ஐந்தவஸ்தை" என்றும், "அவற்றுண் மூன்று நீக்கிப், பரதரிசனமுதற் கொண்டு சாயுச்சிய முடிவாம் ஐந்தும் உன்மனோபரிசாக்ஷாத்காரத் தானத்தில் விளங்குஞ் சிவனது சிவசாக்கிராதி யைந்தவஸ்தை" என்றும், "இந்த மூவகை யைந்தவஸ்தையுள் அவ்வச் சுழுத்தி யீறும் மூவகை மூன்றவஸ்தையும் முறையே காரிய விசுவங் காரண விசுவம் வாசனா விசுவமென்னு மூன்றின் வியாத்திக் கிராசோபசாந்திகளாம்" என்றும், "அதற்கு மேல் துரியாதீத மென்னு மூவகை யீரவஸ்தையு முறையே ஆன்ம பர சிவங்களென்னும் அவஸ்தாத்திரயத்தினைத் தரிசித்தலும் அதுவதுவாதலு மாம்" என்றும், "இவற்றுட் காரிய விசுவோபசாந்தியாகு மிடத்திற் காரண விசுவ வியாத்தி, அப்போழ்து தன்னுடைய ஆன்மத்துவந் தரிசனமாய் ஆன்மாவாவன்" என்றும், "காரண விசுவோபசாந்தியாகு மிடத்திற் வாசனா விசுவ வியாத்தி, அப்போழ்து தன்னுடைய பரத்துவந் தரிசனமாய்ப் பரனாவன்" என்றும், "வாசனா விசுவோபசாந்தியாகு மிடத்திற் சர்வ வியாத்தி, அப்போழ்து தன்னுடைய சிவத்துவந் தரிசனமாய்ச் சிவனாவன்" என்றும், எடுத் தெழுதினீர். மறித்தும் அதிற்றானே "பிரமாதி பரநாதாந்தமாம் வஸ்துக்களிற் பார்த்தல், கிரகித்தல், தழுவுதல், ஆவேசித்தல், அவசமாத லாகும் ஐந்தும் ஓரோவொன்று ஐந்தவஸ்தைகளாக அறியப்படும்" என்றீர். மறித்தும் ஒருபிரகாரம் பிராசாத மந்திர செபமார்க்கத்தைப் பற்றி ஞானசித்தியிற் சொல்லியவாறு முன்காட்டிய ஐந்தவஸ்தையுள் தூல சிவத்துவாபி

வியத்தி சூக்ஷுமசிவத்துவாபிவியத்தி பர சிவத்துவாபிவியத்தி யென்னுஞ் சிவத்துவாபிவியத்திகள் கிரமத்தில் வரும்பொருட்டு மூவைந்து பதினைந் தவஸ்தைகள் காண்பிப்பாம்" என் றெடுத்துக்கொண்டு, மேற்சொல்லியவைகளைத்தாமே தூலசாக்கிராதி சூக்ஷுமசாக்கிராதி பரசாக்கிராதி" யெனப் பெயரிட்டு மூவைந்து பேதமாம்" என்றெடுத்துக் காட்டினீர். "பின்னரும் அதிலொரு பிரகாரம் பூதான்மாதி மந்திரான்மாந்த மாம் ஐந்தனுள் ஒரோவொன்றை ஐவகைப்படுத்துக் காண்க" என்றீர். "இங்ஙனம் நானுபிரகாரமாகச் சொல்லிப்போந்த பேதமத்தனையும், ஞானசித்தி வசனம்பற்றிப் பிராசாத மார்க்கமாக முற் கூறிய மூலாவஸ்தா பஞ்சகமாகிய ஒன்றனைத்தானே பலபடப் பகுத்துக்காட்டிய தன்றி வே றன்று" என்று விடுத்தீர். இவ்வாறெல்லா நுமது புத்தி சாமர்த்தியத்தினைக் காட்டியது மிக நன்றும். ஆயினும், இவ்வளவில் ஒழிந்துவிட்டது அமையாது. இன்னும், இவை தம்முள் அனேகபிரகாரங் காட்டலாம்: பூதான்மா முதலிய ஐந்தனுள் ஒரோவொன்றில் ஐந்தைந்து காட்டலாம். பஞ்சகலைகள், பஞ்சவாக்குக்கள், பஞ்சாகங்காரங்களிலும் அங்ஙனங் காட்டலாம். தத்துவங்களுக்குள்ளும் ஒரோவொன்றில் அவ்வாறு காட்டலாம். பிராசாதகலை பன்னிரண்டினும் அவ்வாறு காட்டலாம். அங்ஙனமே கேவலாவஸ்தை சகலாவஸ்தைகளில் ஒரோவொன்றில் அனேக பிரகாரங் காட்டலாம். அங்ஙனமே சாலம்ப சிவயோகத்தினுங் காட்டலாம். இவையெல்லாந் தெரியாது விட்டனிரா? மறந்து விட்டனிரா? அலுத்து விட்டனிரா? உபலக்ஷணத்தா னறிந்து கொள்ளலாமென்று விட்டனிரா? இனி யாங்ஙனம் விடினும், சில பிரகாரங்களைச் சொல்லிச் சில பிரகாரங்களைச் சொல்லாமல் விடுதல் தோஷந்தான். அது நிற்க. நீர் ஈண்டுக் கூறிப்போந்த இவ்வவஸ்தா பேதங்களெல்லாம், சித்தாந்தசாராவலியோகபாதத்திற் சொல்லிய யோகாவஸ்தை யென்பது பிரசித்தம். நுமக்கும் அஃ தங்கீகார மாம். இவைதம்மை ஞானபாதத்தில் ஓதாது யோகபாதத்தில் ஓதியதே இந்த அவஸ்தைகள் யோகநெறியிற் காணப்படும் ஐந்தவஸ்தையேயன்றி ஞானநெறியிற் காணப்படும் ஐந்தவஸ்தை யன்றென்பதற்குச் சான்றாகலானும், தியான சமாதியீறாகு மட்டாங்கங்கள் யோகமார்க்கத்திற் கல்லது ஞானமார்க்கத்திற்குமுண்டென்பதற்கு வசனமில்லாமையானும், ஞானநெறிச் சாக்ஷாத்காரத்துக்குச் சிரவண மனன நிதித்தியாசனங்களே யங்க மல்லது மற்றையன அங்கமல்லவென்பது சர்வசாஸ்திர சம்மதமாகலானும், சிவாகமங்களிற் சாலம்பயோகம் நிராலம்பயோகமிரண்டும் யோகமென்றே வைத்து யோகபாதத்திற் கூறுதலின், அதற்கு விரோதமாகச் சாலம்பயோக மாத்திரமே யோகமார்க்கம், நிராலம்பயோகம் ஞானமார்க்கமென்றல் அவசித்தாந்தமா மாகலானும், நுங் கருத்திற்கியைய நோக்கினும், சமனுந்தமாஞ் சாக்கிரஞ் சொப்பன மிரண்டன்கண்ணும் "தருமிது பசுஞானம்" என் றாசிரியரோதுதல்பற்றிப் பசுத்துவமே யுண்மையின், சுழுத்தியினும் ஒரு பிரகாரம் பசுத்துவமுண்மையின், அவையென்றல் கூடாமையானும், இவை முடிவாயுள்ளன சுத்தாவஸ்தையாகாவென் றொழிக. அல்லதூஉம், ஈண்டுக் கூறிப்போந்த அவஸ்தையெல்லாம் மந்திரான்மாவில் வைத்துக் காணப்படுவன வாகலான், இவைதம்மைக் கேவலாவஸ்தை சகலாவஸ்தைகளை நோக்க உபசாரமாக நின்மலாவஸ்தையென் றுரைப்பினும், முத்தாவஸ்தையாகு நின்மலாவஸ்தையென்பது செல்லாது. என்னை? * "ரஹிதஸ்து பரஶ்ஶிவ:" எனச் சர்வஞ்ஞானோத்தரத்துட் கூறுதலின், மந்திரான்மாவிற்கு முத்தத்துவ மில்லாமையினென்பது.

---

* இ-ள். "இவற்றானே விடப்படாநின்றான் பரசிவனும்" எ-று.

"கருவியும் பொருளுங் காட்டும்"

"அறிதரும்பொருளோ வீச னன்னிய மிலாமை யானும்"

இவைகளில் உரைத்தனவெல்லாம் மேலே காட்டிக் கண்டித்தாம்; கடைப்பிடிக்க.

"ஒன்றெனு மதனல்"

இதன்கண் "இவனவ னென்ன லாமே" என்பதில் வைத்துச், "சிவ ப்பொருண் மாத்திரங் குறித்த சிவத்தியானமுஞ் சொரூப சிவ தாதான்மிய சிவ த்தியானமும் அதனுண் முகிழ்க்குஞ் சிவசாதி விசிட்ட சிவத்தியானமு மென இருபாவனையில் மூன்று சிவத்தியானமு முண்டு" என்றும், சித்தாந்த மகாவாக் கியத்திற்கு இந்த மூன்றும் பொருள்" என்றும், "இந்த மூன்றில் சிவப்பொரு ண்மாத்திரங் குறித்த சிவத்தியானங் கருடபாவனைபோலப் பொய்யாயினும் அந்தக் கருடபாவனைபோலச் சத்திய பலங் கொடுக்கும்" என்றும், "பின்சொன்ன இருசிவ த்தியானமுஞ் சத்தியமே யாம், பலமும் அப்படிப் பலிக்கும்" என்றும், பேசினீர். சித்தாந்த மகாவாக்கியத்திற்கு நீர் கூறிய பொருள் இணங்காதென்பது, முன்னர்க் காட்டுதும். அது நிற்க. "கருடபாவனை பொய்" என்றீர். பசித்தவன் உண்ட வனைப்போல எத்தனைவிதமாகப் பாவிக்கினும் பசி தீராது; அதுபோலப் பொய்ப்பாவ னை பலிக்கமாட்டாதாகலின், சத்தியபயன் கொடுப்பதாகுங் கருடபாவனை சத்தியமே யாமென்று சித்தித்தது. அற்றேல், அது சத்தியமாமாறு யாங்ஙனமெனின், கூறுதும். மாந்திரிகன் தனது சரீரத்தைக் கருடனாகப் பாவிப்பானல்லன்; மற்றுப் பாவிக்குமா றென்னையெனின், அவன் தன்னுண்மாவைக் கருடனுக் கதிதெய்வமா மந்திர ரூப மாகப் பாவிப்பன். ஆண்டு "ஸவெஷயஜா ஊதகஷஂதி" என்று முடிந்தவாரத் தையான் ஆன்மலக்ஷணந் தெரிவித்த சர்வஞ்ஞானோத்தரச் சுருதியானே தற்பாவபாவ மாய்ச் சார்ந்ததன்வண்ணமா மியல்புடைய வான்மா, அந்த மந்திர தன்ம தன்மி யாய் அம்மந்திர சொரூபியே யாவன். அங்ஙனம் பாவனை சத்தியபாவனையாதலி னன்றே சத்தியபலமாக் விஷநிவிர்த்தி யாகாநிற்கும். பக்ஷி மிருகாதி சர்வப்பிரா ணிகளுக்கும் அதிதெய்வ மந்திர முண்டென்பதூஉம், அவற்றினைக் கூடுங்கால் ஆன் மா ஸ்படிகம்போல அவ்வ மந்திரசொரூபியாவ னென்பதூஉம், சர்வஞ்ஞானோத்தரத் திற் பிரசித்தம். அரதத்தாசாரியர் சதுர்வேததாற்பரியசங்கிரகத்தில் "சுஅஉ" என்றதற்குத் தாற்பரியம்: அதுகொண்டு தானே நிருபசரிதைக்கியஞ் சொல்லுதல் கூடாதென்பதாம். ஸ்ரீஉசுஅ சுந்தரமூர்த்தி ஸ்ரீஉகூ மாணிக்கவாசகமூர்த்தி முதலிய உண்மை நாயன்மார் திருவாக்குக்களுக்கும் ஈண்டு நுமது மதத்திற் கிணங்குமாறு தாற்ப ரியங்கூறத் தலைப்பட்டீர். நுஞ் சூழ்ச்சி இருந்தவாறு சால வழகிது! சிவஞானசித்திக்கே நுமது மதானுகூலமாகத் தாற்பரியங் கற்பித்துச் சொல்லத்துணிந்த நீர், மற்று உண்மை நாயன்மார் திருவாக்குக்களுக்கும் அவ்வாறு தாற்பரியங் கற்பித்துக்கூற வல்லிர்தா மென் றொழிக. சிவாகமவாக்கியங்களுக்கும் இவ்வாறே சத்தமும் அர்த்தமு மிணங்காதவாறு வியாக்கியானஞ் செய்து கெட்டீர். நீர் கூறும் அர்த்தமெல்லாம் நியாய மாகா வென் பது முன் ஒரு திருவிருத்தத்தின்மேல் வைத்துக் காட்டினும். ஈண்டும் ஒரு திருவிரு த்தத்தின்மேல் வைத்துச் சிறிது காட்டுதும்.

"சத்தசத் தறிவ தான்மா"

இதன்கண் "ஆன்மா" என்பது எழுவாய். "அறிவது" என்பதூஉம், நின்றிடும்" என்பதூஉம், "உதித்து நில்லாது" என்பதூஉம், "உதியாது நின்

றிடாது" ஏன்பதூஉம், அந்த எழுவாய்க்குப் பயனிலேகள். "தோற்றம்" என்பது, அந்த ஆன்மாத் தோன்றுதல். "இரண்டு" என்றது, மேற் கூறிய சத்து மசத்துமாகிய பொருள்கள். இவை இனிது விளங்குவனவாகவும், இம்முறையை விட்டு, "இரண்டு" என்பதற்கு, ஆன்மாவினது சிவத்துவ பசுத்துவங்களாம் இயற்கைச் செயற்கைத் தன்மங்கள்" என்றும், "அந்தத் தன்மங்களில் ஆன்மாவாகுந் தன்மி யிருக்கும்" என்றும், "நில்லாது" "நின்றிடாது" "போலும்" என்னும் பயனிலேகளுக்கு எழுவாய் சிவத்துவரூப தன்மம்" என்றும், பொருள் சொன்னீர். இந்தவுரையு மூலமும் எவ்வா றிணங்கும்? பசுத்துவஞ் சிவத்துவமென் றிந்தத்திருவிருத்தத்தில் எடுத் தோதப்படவே யில்லே. தன்மியைச் சொல்லவே தன்மங்களை எடுத்துரைக்கலாமெனினும், "இரண்டின்பாலும்" என்னுஞ் சத்தமி அர்த்தத்தோடு எவ்வாறிணங்கும்? தன்மத்திலே தன்மியிருக்குமெனின், தன்மம் வியாபகம், தன்மி வியாப்பிய மென் றும். இஃது அவசித்தாந்தம். அது நிற்க. அந்த விரண்டுதன்மத்துள் ஒரு தன்மத்தை மாத்திரம் பிரித் தெடுத்துக்கோடற்கு ஏதுவாய் ஆண்டு நிற்குஞ் சொல் ஒன்று மில்லே. இனித் தோன்று எழுவாயாக எடுத்துக் கோடுமெனின், பூர்வாபர வாக்கியங்களிற் சொல்லப்படின், அதனைத் தோன்றுவெழுவாயாக எடுத்துரைக்கலாமன்றி, இல்லாதசொல்லேக் கற்பித்துக்கொண் டுரைத்தல் இலக்கண மன்று. அது கிடக்க. "மலர்போல ஆன்மா, நாற்றம்போல ஆன்மதன்மமாகிய சிவத்துவம்" என்றும், "அந்த நாற்றம் அரும்பிற் சூக்ஷுமமாயிருந்து மலரின் விளங்குதல்போல அந்தச் சிவத்துவம் ஆன்மாவிலே பெத்தத்திற் றோன்றுதடங்கிநின்று முத்தியில் விளங்கித் தோன்றும்" என்றும், சொன்னீர். "அரும்பு" என்று மூலத்தில் வரக் கண்டிலம்! "மலர்" என்று வருதலின் அதுவும் எடுத்துக்கோடுமெனின், இனி அரும்பு மலராதல்போல ஆன்மாவிற்குச் சங்கோச விகாசங்கள் சொல்பவன் ஆருகதனுகலின், நீர் ஆருகதமதாபாசகருமாயினீர். அன்றியும், "ஈசன் புண்டரிகத்தாள்" என்புழிச் சிவத்துவரூப தன்மத்திற்கு மலரைத் திருட்டாந்தமாகவைத் துரைத்து, ஈண்டுப் பேதப்படுத்து மலரின்கணுள்ள மணத்தினை அதற்குத் திருட்டாந்தமாக வைத்துரைத்தல் பூர்வாபர விரோதமென் றறிக. அல்லதூஉம், "ஆன்மா விரண்டின்பாலு நின்றிடும்" என்புழி, இரண்டன்பாலும் யாங்ஙன நின்றிடுமென்னுஞ் சங்கைக் குத்தரமாக, "ஒத்துட னுதித்து நில்லா துதியாது நின்றி டாது - வைத்திடுந் தோற்ற நாற்ற மலரினின் வருதல் போலும்" எனக் கூறி, "ஒத்துடன்" என்பதனை "உதியாது நின்றிடாது" என்பதனேடுங் கூட்டியுரைக்குமாறு, முதனிலேத்தீவகமாக வைத்தோதிய ஆசிரியர் கருத்திற்கு, நீர் சொல்லும் பொருள் விரோதமாமென் றுணர்க. என்னே? நின்றிடுமென்றதனைச் சமர்த்தித்தற் கெடுத்துக்கொண்டதே உத்தரார்த்தமாதலினென்பது. இவ்வாறு திருவிருத்தந்தோறு நீரெழுதிய வுரை விருத்தங்கள் விரிக்கிற் பெருகுமென் றெழிக. அது நிற்க. "ஆன்மாச் சிவனெடுகூடிச் சிவனுயும், மலத்தொடுகூடிப் பசுவாயும், இருப்பன் என்பது, இசையாது" என்றீர். செவ்வரத்தம்பூச் சம்பந்தத்தால் ஸ்படிகஞ் செவ்வரத்தம்பூ வண்ணமாயிருத்தல் பிரத்தியக்ஷமாம். நீரும் ஈண்டு அதனை ஆன்மாவிற் குவமையாக வெழுதினீர். "பசுத்துவமுடைய னுகிப் பசுவென நிற்கு மான்மா" என்பதூஉம், நீரும் அங்கீகரித் தெழுதினீர். ஆகலான், அந்த அம்சத்தில் விவாத மின்று. இனித் தனக் கன்னியசாதியாயிருக்குஞ் சடபதார்த்தத்தோடு கூடுங்கால் அவ்வண்ணமாயிருக்கும் ஆன்மா அவ்வுபாதி நீங்குங்கால் இயற்கையாய்த் தன்சாதியாய்த் தன்னேடு சம்பந்தித்தே யிருக்குஞ் சிவனேடு

கூடிச் சிவனுயிருப்பது, கைமுதிக நியாய சித்தம். ஆகலின், அதனை அபலாபனஞ் செய்தல் யார்க்கும் இயலாது. 'ஆன்மாவிற்குஞ் சடபதார்த்தங்களுக்குஞ் சன்னிதி மாத்திரையன்றிச் சம்பந்த மில்லை' எனின், இவ்வாறு சொல்லு நீர் சாங்கியமதா பாசகராவிர். சர்வஞ்ஞானோத்தரத்தில் "யதைவவிகலை யுக்த| தஸ்தஸ்வதி" * "ஷூதாதூ ஷூதஸம்யொமாக" என்றற்றொடக்கத்தான் "ஆன்மா அவ்வப் பதார்த்தங்களோடு கூடும்" என்றும், "அங்ஙனங் கூடுங்காற் சார்ந்ததன் வண்ண மாய் அது வது வாய் நிற்கும்" என்றும், தொகுத்தும் வகுத்தும் வெளிப்படை யாற் சொல்லுதலின், அதனோடு முரணிக் கூறுதல் அவசித்தாந்தம். அற்றேல், "ஷூதாதூ ஷூதஸம்யொமாக" என்றாற்போலப் பரமான்மாவாயிருத்தல் இன்ன சம்யோகத்தாலென்று ஏதுக் கிளந்தோதாமல் "ஸஹிஜ்-மக்து: வாஸ்லிவ:" என்று வாளாகூறியொழிதலின், ஒன்றோடுகூடிப் பரமான்மா வாவனெனல் அமையாதெ னின், அறியாது கூறினீர்: "ஊசல்கயிறற்றாற் றாய் தரையேயாந் துணையான்" என்னு நியாயத்தானே பூதாதிகளைவிடவே, ஆன்மாச் சிவதாரகனாயிருப்பனென்பது தானே சித்தி க்கு மென் றுணர்க. அல்லதூஉம், அவ்வேது மேலே காட்டினமையின், ஈண்டுக் காட்டிற் புனருத்தியாமென்று கருதி, "ஸஹிஜ்-மக்து: வாஸ்லிவ:" என்றருளிச் செய்தார். இந்த நியாயத்தினை நீரும் ஒப்பக்கடவீராவிர். ஒப்பாக்கால், "ஸஹிஜ்-மக்து: வாஸ்லிவ:" என்றே ஓதுதலாற், சிவத்துவாபிவியத்தியின்றி மலமுத்தி மாத்திரமே மோக்ஷமாமெ னப்பட்டுப் பாடாணவாதி பேதவாதிகளுக்கு ஜயமுண்டாமென் றறிக. ஆகலின், இவ ற்றான் விடப்படாநின்றான் சிவத்துவாபிவியத்தி தலைக்கூடிப் பரமான்மாவாவனென்றே நீரும் ஆவசியகஞ் சொல்லல் வேண்டும். இதனானே, "ஸஹிஜ்-மக்து: வாஸ்லிவ:" என் பது கொண்டு நமக்கு ஜயமான தொன்று மின்று. இனி அந்தச் சிவத்துவஞ் சிவனு டைய சிவத்துவத்தின் வேறாக ஆன்மாவின் கண்ணதாயுள்ளதொன்றென்று நீர் சொல் கின்றீர். அவ்வாறுகூறின், சற்காரியவாதத்தில் அபிவியத்தியே உற்பத்தியாதலின், உற்பத்தி சமவாதிகளான மாவிரதர் ஜயிப்பராகலானும், சிவனுடைய சிவத்துவத்தின் வே றாக ஆன்மாவிற்கொரு சிவத்துவ முண்டென் றாகமங்களிற் கேட்கின்றிலமாகலானும், சிவ த்துவமாவது சர்வஞ்ஞத்துவாதி சாட்குண்ணியரூபம், அது சிவனுக்கேயன்றி ஆன்மா விற்கில்லையென்பதற்குச் சர்வஞ்ஞத்துவாதி குணமத்தியில் அனாதிமலமுத்திக்குப் பரி யாயநாமமாகப் படிக்கப்படும் அனாதிபோதமென்பது சான்று பகர்தலானும், சிவனது தன்மமாஞ் சிவத்துவம் "ஸவெஜ்யஜா ஸூதநஸம்தி" "தஸுயஜ்யதீ" என்னும் வச னங்களாற் சிவசம்பந்தமாம் ஆன்மதன்மமு மாமென்று நாஞ் சொல்கின்றாம். இவ்வாறன்றிச், 'சிவத்துவாபிவியத்தி யோகமின்றி முத்திமாத்திரத்தினாற்றானே பர மான்மா வாவன்' என்று சொல்ல நுமக்கு மடுக்காது; நமக்கு மடுக்காது. அது நிற்க. "அபிவியத்திக்கும் உற்பத்திக்கும் வேற்றுமை யுண்டு" என்றீர், சற்காரியவா தத்தின் சொரூப மறிந்தீராயின், இவ்வாறு சொல்லீர். இனி நீரும் "உயிரவை யொ டுங்கி" என்னுந் திருவிருத்தத்தில் வைத்து, "விகாரமின்றி ஞானக்கிரியைகளுக்குக் கலையினால் விளங்குதல் மலத்தினால் மறைதல் சித்துக்குச் சனனமரணம்" என் றீர். ஈண்டு விளங்குதலுக்குச் சொன்ன பரிகாரமெல்லாம் ஆண்டும் ஒக்குமாகலின், இப்பொழுது புதுவதாகச் சிவத்துவாபிவியத்தியைப் பண்ணுவதென்பதற்கு எந்த

* இ-ள். "பூதக்கூட்டரவினாற் பூதான்மா வாகும்" எ-று.

ப்பிரகாரமாகப் பொருள் சொல்லினும், சற்காரியவாதத்தில் அது சமுற்பத்திவாதபே தமே யாம். நமக்காயின், ஒரு பிரகாரத்தானும் அந்தத் தோஷஞ் சம்பவிக்கமாட்டாது; என்னை? அநாதியே விளக்கமாய் நிற்குஞ் சிவத்துவாபிவியத்தி 'எந்தப்பிரகாரத்தானும் இப்பொழுது பண்ணப்படு மென்னும் உபசாரத்துக்குந் தூரமாயிருத்தலின், எக்கா லத்தும் நிருபாதிகமாய் ஆன்ம சம்பந்தியாயிருக்கும் அந்தச் சிவனது சிவத்துவாபி வியத்தி ஆன்மாவிற்குப் பிரயோசனமாதன் மாத்திரையே இப்பொழுது செயப்படுவ தென்று சொல்லுதலி னென் றறிக.

"அறிவிக்க வறித லானும்"

இதன்கண் "ஆன்மாச் சிவத்துவாபிவியத்தி யுற்றபின்னர் மறித்தும் சிவவிள க்கத்தினை வேண்டாது தானேயறியும்" என்றும், "சிவானந்தத்தின் வேறாக ஆன்மா விற்கு ஆனந்த முண்டு, அதனால் ஆன்மாவுஞ் சச்சிதானந்தரூபி" என்றும், பேசினீர். இவை யெல்லாம் மேலே கண்டித்தாம்; கடைபிடிக்க.

"மன்னவன்றன் மகன்வேடர்"

இதன்கண் "ஆன்மாச் சிவனின் வியாப்பியனெனிற் சடமாய்ப் போவன்" என் றீர். அங்ஙனமாயின், ஆன்ம சிவன்கள் ஒருவர்க்கொருவர் ஞேயமாயிற் சடமாய் ஒழிவ ராகலின், அன்னியோன்னிய ஞேயப்பொருள்க ளாகார்" என்றுங் கூறல் வேண்டும். ஞேயப்பொருளெல்லாஞ் சடமென்றற்கண் வியாத்தி யின்று; ஆகலின், சடமு ஞேய மாகலாஞ் சித்து ஞேயமாகலாமெனின், அவ்வாறே சிவவியாப்பியப்பொருளெல்லாஞ் சடமாமென்றற்கண் வியாத்தி யின்மையின், சடமுஞ் சிவவியாப்பியமாகலாஞ் சித் துஞ் சிவவியாப்பிய மாகலாமென் றுறுதி கடைப்பிடிக்க. அது நிற்க. சிவசத்தி சிவ வியாப்பியமென்பது சர்வாகம சித்தாந்தமாய்ச் சர்வசம்மதமா மன்றே! இனி அது கொண்டு சிவசத்தியுஞ் சடமாதல் வேண்டுமென்று நீர் கூறுது விட்டது என்னை? இவையெல்லாம் விவேகித்தறியு ஞானம் நமது மத துரபிமானத்தினால் நம்மிடத் துச் சாராது தூரம் போயினமையின், இவ்வாறெல்லாம் பிரலாபிக்காநின்றீர். இனி "வியாப்பியமாயின் உங்களுக்கு அயிக்கந் கிடையாது" என்றீர். நிருபசரிதயிக்கியங் கூறும் அபேதவாதிகளுக்கு இந்தத் தோஷமெய்தும்; அவ்வாறன்றி, வியாபக வியா ப்பிய பேதமாக "உடலுயிர் கண்ணருக்க னறிவொளிபோற் பிறிவரு மத்துவிதம்" கொள்ளு நமது சித்தாந்தமே யறியமாட்டாத நீர், இங்ஙனம் பிரலாபித்தல்பற்றி நமக்கொரு தோஷமும் எய்தமாட்டாதென் றொழிக.

"உரைதருமிப் பசுவர்க்கம்"

"பிரளயாகலருக்குத் தேகமில்லை" என்றும், "இல்லாமையால் அவர்களுக்குத் தேவகுருவாய் வந் தனுக்கிரகிக்கு மென்ப கூடாது" என்றும், பேசினீர். "பிரள யாகலராவார் இன்னரென் றறியமாட்டாமையானும், சாதாரதீக்ஷை நிராதாரதீக்ஷை களின் சொரூப மறியமாட்டாமையானும், இங்ஙனம் பிரலாபித்தீரென் றொழிக.

"ஓதி யுணர்ந்து"

இதன்கண் "பவுதிக சிவதருமிணி தீக்ஷையொன் றுண்டு" என்றீர். இவ்வாறு கூறிய நீர், உலகதருமிணியினும் நயிட்டிக வுலகதருமிணி யொன்றுண்டென் றுரைக்காத தென்கொலோ? அது நிற்க. கிருகத்தருக்கும் நயிட்டிகதீக்ஷை யுண்டு; நயிட்டிகப் பிரமசாரிகளுக்கும் பவுதிக தீக்ஷை யுண்டு" என றத்தியந்த விரோதஞ் சொன்னீர்.

முன் "ஆசிரியார்க்கெல்லம் நயிட்டிகதீக்ஷை சாமானியமாக உண்டு" என்றீர். அஃதேல், வியவஸ்திதவசனம் நிஷ்பலமாய் அப்பிராமாண்ணியமாய் ஒழியாதோ? என்றுசங்கை நிகழ்ந்தவழி, அதனை விட்டுப் பூர்வாபர விரோதமாகப், பின் "ஆசாரியரில் இருவித முண்டு" என்றீர். இவையெல்லாஞ் சர்வாகம நியாய விரோதமென்பது, சிவஞானபாடியத்துள் விஸ்தரித்துக் காட்டினும். ஆண்டுக் காண்க. சோமசம்பு பத்ததி விருத்தியிற் "பவுதிக னன்று, நயிட்டிகனன்றனே" என்றதுகொண்டு, 'கிருகத்தாசிரியருக்கு நயிட்டிகதீக்ஷை யில்லை' என்பதே நாட்டப்பட்டது. என்னை? "பவுதிக தீக்ஷாபலவாஞ்சை யில்லாமையினெனவே, பவுதிக தீக்ஷாவானுயினும், அந்தப் பலவாஞ்சை யில்லாமையின், பவுதிகனென்று சொல்லப்படான், நயிட்டிக னல்லியனே யாம்" என்று, அஃது அர்த்தவாதப்பொருள் போதித்தலினென் றறிக. * "நாலாம் வருணத்தில் நயிட்டிகர்க்கேயன்றிக் கிருகத்தருக்குக் குருத்துவமில்லை" என்னுங் காமிகாகமவசனம் "மடகுரு மனக்குறிப்புப் பிரிப்பினுற் சொன்னது" என்றும், "காலோத்தர முதலிய வாகமங்களில் ¶ "[illegible]:" என்பதாதி வசனங்களால் அவர்தம்மையும் அகப்படுத்துக் குருத்துவம் விதித்தலின், "அப்படி ஓராகமத்திற் சொன்னது கொண்டுதானே தள்ளப்படாது" என்றும், பிரஞ்ஞையின்றிப் பிரலாபித்தீர். அவ்வாறாயின், சர்வாகமங்களும் இவ்வாறு அன்னியோன்னி யாப் பிராமாண்ணிய மூற்றுக் கெட்டொழியும்! அல்லதூஉம், ஆகமவசனங்களுக்கு விரோதம் வந்துழி, அவிரோதநயனஞ் செய்தல் வேண்டாவாம். இன்னும், முன் அவிரோதநயனஞ்செய்த பெரியோர்க்கெல்லாம் நம்மைப்போலத் தள்ளிவிடுதற்குப் புத்தியில்லை என்றன்றோ கூறல் வேண்டும். அது நிற்க. நுமது மதத்திற்கேற்குமாறு நீர் ஈண்டு எடுத்துக்காட்டிய வசனங்களெல்லாஞ் சாவகாச விதிவசனங்கள்; காமிகத்தில் அவ்வாறோதிய வசனம் நிரவகாச நிஷேதவசனம். ஆகலின், அந்த வசனத்தின்முன்னர்த் துர்ப்பலமுற்று அந்த விசேஷ விஷயத் தலத்தினை விட்டு, மற்றைத்தலங்களைப் பற்றுமென்பதே சர்வசாஸ்திர சம்மதம். அது தெரிந்துகொள்ளமாட்டாமற் பிரலாபிப்பதெல்லாம் மோக மூலம். "பிரவாகசந்ததிப் பிரசித்தப் பிரகுதிமானுயிருக்குங் குருபுத்திரனைத் தியாச்சியம் பண்ணலாகாது" என்றீர். அஃது வசன விரோதம். அல்லதூஉம், புத்திரபரம்பரையிற் குருத்துவம் ஆதிசைவர்க்குமாத்திரமேயன்றி, மற்றவர்களுக்கு நியமமாக விதியாமை யறிக. கிருகத்தனுக்குப் பூச்சியத்துவஞ் சொல்லும் வசனங்களும் ஆதிசைவரைக் குறித்தனவேயாமென்று வசனவிரோதமின்மை தெளியப்படும். "சன்னியாசிக்குக் குருத்துவ மில்லை" என்றும், "உண்டு" என்னும் வசனத்திற்குச் சாஸ்திரதீக்ஷை மாத்திரத்தில்" என்றும், "அல்லவென்றாற் சாம்பவதீக்ஷை மாத்திரத்தில்" என்றும், சமாதானஞ் சொன்னீர். அஃது அசிந்தியவிசுவசாதாக்கிய முதலிய வாகம விரோதம். "கிருகத்தாசாரியருஞ் சன்னியாசங் கொடுக்கலாம்" என்றீர். அதுவும் சர்வாகம விரோதம். இவையெல்லாஞ்

* "நாலாம் வருணத்து நயிட்டிகர்க்கன்றி இல்வாழ்வார்க்குக் குருத்துவமில்லை" என்றெழுந்த காமிக வசனம் முன்னை மூன்றுக விடயம்" என்றும், "நான்கு வருணத்தும் இல்வாழ்வார்க்குக் குருத்துவ முண்மை கூறும் ஏனையாகம வசனங்கள் கலியுக விடயம்" என்றும், அவிரோதநயன கதி கூறுவாரு முளர். அது பொருந்தாமை சிவஞானபாடியத் துபோற்காதப்பிரகரணத்துட் காண்க. ¶ இ-ள். "இல்வாழ்வான் எல்லாவருணத்தும் பூச்சியகுரவனென் றெடுத்தோதப்படும்" எ-று.

சிவஞானபாடியத்துள் விரித்துக் காட்டி மறுத்தாம். விஸ்தாரபயத்தினால் ஈண்டு எழுதிற்றிலம்.

"அழிவிலாக் கிரியையினால்"

இதன்கண் "சிவனுக்குச் சிவசத்தி வியாப்பியம்" என்றது, சிவசமவேதையாகச் செலுத்தப்படுதலால் உபசாரம்" என்றீர். உபசாரமாயிற் செலுத்தப்படாது. செலுத்தப்படாநிற்கவும், அதனை "வியாப்பியமென்றது உபசாரம்" என்றல், என்னை ஈன்றாள் எனக்கு மாதாவென்ப துபசாரமென்பதோ டொக்கு மென் றொழிக.

"இம்மையே யீரேட்டாண்டு"

இதன்கட் பிரிப்பின்றி, ரூபசிவசமவாதி அரூபசிவசமவாதி யென்னு மிருவர் மதத்திற்கும் பொதுவாக வெடுத்துக்கொண்டு, "தம் மெய்வடிவாஞ் சிவத்தைச் செம்மையே பெறுகை முத்தியென்றுஞ் செப்புவர்கள்" என்று ஆசிரியர் பிரத்தியக்ஷமாகவே சொல்லி ஒதுக்கிவிட, "இது ரூபசிவசமவாதியைமாத்திரஞ் சொன்னது, அரூபசிவசமவாதியாகிய வெம்மைச் சொல்லவில்லை" என்று, நீர் சொல்லுதற் கொட்டியாதுமில்லை. அதுவேயுமன்றிப், பரமதமுத்திகளையெல்லாங் கண்டித்து, முடிவிற் சித்தாந்தமுத்தி நிர்ணய நாட்டுதற்பொருட்டுச் சொன்ன "சிவனடியைச் சேருமுத்தி செப்புவதிங் கியாமே" என்னும் வாக்கியத்தினையுந் "தன்னடியைச் சேருமுத்தி" என்று முக்கியார்த்தலங்கனம் பண்ணி, அன்னியபரமாக அர்த்தஞ்சொல்லின், உலகத்தில் நிர்ணயவார்த்தை யென்பதே யின்றி வியவஸ்தை கெட்டொழியும். அன்றியும், "ஈசன் புண்டரிகத்தாள் சேரும் பரிசினை" என்றற்றொடக்கத்தான் யாண்டும் இவ்வா றோதுதவின், இந்த அப்பியாசலிங்கத்தினை அதிக்கிரமித்துக் கவுணப்பொருள் சொல்லுதன் நியாயவிரோத மென்பது சாஸ்திரம் கற்றாரைக் கேட் டறிக. அரூப சிவசமவாதியாகிய நும்மை அரூப சிவசமவாதியெனச் சொல்வதேயன்றி, 'உருவ சிவசமவாதி' யென ஈண்டு யாருஞ் சொல்லார். நுமது அவசித்தாந்த சித்த சிவசாதிருசிய சிவசாத்தயிக்கியமென்னும் விசேடாத்துவிதமுத்தி சுத்தாத்துவிதமுத்தி யன்றென்பதூஉம், மற்றுச் சுத்தாத்துவிதமுத்தி வேறென்பதூஉம், அந்தச் சத்தத்திற்கு அர்த்தம் உரைப்புழிக் காட்டுதும். நீர் சொல்லும் விசேடாத்துவிதமே விசிட்டாத்துவிதப் போலி யென்ப தறியாது, மாறிக்கொண்டு, நமது சுத்தாத்துவிதமுத்தியை 'விசிட்டாத்துவிதப் போலி' என்றும், விசிட்டாத்துவிதப் போலியாம் விசேடாத்துவிதமுத்தியைச் 'சுத்தாத்துவிதமுத்தி' என்றும், பிரஞ்ஞையின்றிக் குழறுங் குழறுபடைக்கு, நாங் கூறும் பரிகாரம் இன்று. சைவசித்தாந்தத்திற் சொல்லும் அத்துவிதபதத்திற்கும் அயிக்கியபதத்திற்கும் பொருள் வேற்றுமை யறியமாட்டாது, அயிக்கியஞ் சொல்லும் அத்துவிதவாதத்தில் வீழ்ந்து, இரண்டற்கும் பொருளொன்றென்று புலம்பிப் பிராந்தராயினீர்.

"ஓது சமையங்கள்"

"சிவனடி" என வருமிடனெல்லாம் "முத்தான்மாவினுடைய வடி" என்று இலக்கியப்பொருள் சொல்லு நீர், ஈண்டு "அரனடிக்கீ ழடங்கும்" என்பதற்கும், அவ்வாறே பொருள் சொல்லல் வேண்டுமன்றி, முக்கியப்பொருள் சொல்வது நுமக் கிழுக்காத லறிக.

## " வேதநூல் சைவநூல் "

இதன்கண் "நீண்மறையி னொழிபொருள் வேதாந்தத் - தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம்" எனவே, "பிறநூ றிகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்" என்பது, அந்த வேதவேதாந்தங்களுக்கு அன்னியமாஞ் சாஸ்திரங்கள் அவைகளுக்குப் பூர்வபக்ஷம், சிவாகமங்கள் அந்த வேதவேதாந்தங்களினது சித்தாந்தமென்று, பொருள்படுமென்பதையு நோக்காது, "சிவாகமங்கள் சித்தாந்த மாகும்" எனின் எதினுடைய சித்தாந்தமென் றவாய்ப் பொருள் காணுமுறையு நோக்காது, "வெதாஙாயுர்திஷஂஜாநழ்" "வெதஸாரஷிஷஂதஂதூழ்" ⁎"ஸிஷாஜூழ் வெதஸாரகூாஸ்" என்றிங்ஙனம் சிவாகமங்களெல்லாம் ஐககண்டியமாகச் சொல்வது நோக்காது, பிரதிஷ்டாதிகளில் வேதமந்திரங்களை யெடுத்துச் சொல்வது நோக்காது, பதிபசுபாசபதார்த்தபேதங்களும் விபூதி ருத்திராக்ஷ தாரண பஞ்சாக்ஷரஜெப சிவபூஜாதி சைவதருமங்களும், பிறவும், வேதமாகம மிரண்டினுஞ் சுருக்கமாகவும் வரிவாகவும் சமமாகவே சொல்லுதலின் அந்த விரண்டற்கும் பேத மில்லை" என்று சதுர்வேததாற்பரியசங்கிர காதிகளி லெடுத்தோதியது நோக்காது, ஈண்டும் பூர்வாபர வாக்கிய விரோதமாக வேதவேதாந்தங்களையும் "பிறநூல்" என்று வைத்துப், "பூர்வபக்க மாம்" என்றுசொன்ன நும்முடைய அஞ்ஞதையின் மாகாத்மிய மளக்கற்பால தன்று! அல்றேல், சைவாகமங்களுள், "உலகநூல், வைதிகம், அத்தியான்மிகம், அதிமார்க்கம், மாந்திரமென ஐவகைப்படுத்து, மாந்திரமொழிந்த நான்கும் புறநூல்" என வைதிகத்தினையும், ¶"வெதாஜெஷ்கவைவாதூா" என வேதாந்தத்தையும், பரமதங்களொடு வைத்தோதுதன் மலைவாம்பிறவெனின், மலைவாகாது; ஆண்டு "வேதம்" என்றும், "வேதாந்தம்" என்றும், கூறியன, சதுர்வேதங்களு முபநிடதங்களு மல்ல, வேறு சாஸ்திராந்தரங்களா மென்பது, சிவஞானபாடியத்துள் விளக்கினும். அவ்வாறு அவிரோதநயனஞ் செய்யாக்கால், பொருள் பகைத்து, இரண்டனையும் அப்பிராமாண்ணியமாக்கி, வத்தாவுக்குத் தோஷமெய்துவிக்குமென் றுணர்க.

## " சன்மார்க்கஞ் சகமார்க்கம் "

இதன்கண் "சன்மார்க்க முதல் நான்குஞ் சன்மார்க்கத்திற் சனமார்க்க முதலாகத் தனித்தனி நான்காம்" என்றும், அவைகளின் பலங்களாகிய சாலோக்கிய முதல் நான்குந் தனித்தனி சீகண்ட சாலோக்கியாதி நயிட்டிகதீக்ஷா முத்திகளாயும், காலாக்கினியாதி புவனபதி சாலோக்கிய முதற் பவுதிகதீக்ஷா முத்திகளாயு மிருக்கும்" என்றும், "இவைகளுள் அவரவர் சாயுச்சியமாவது அவரவர் சமபலப் பிராத்தி" என்றும், சொன்னீர். காலாக்கினியாதி புவனபதி சாயுச்சியங்கள் பெறுபவர்களுக்கு அந்தந்தப் புவனபதி சமபலமுளதாயின், அவர்கள் அந்தந்தப் புவனபதி கிருத்தியஞ் செய்துகொண்டு புவனபதிகளா யிருப்பார்களோ? அதுவன்றி அந்தந்தப்புவனபதி சமபோக போத்தர்களாய் மாத்திர மிருப்பார்களோ? முன்னதமையாது; அணுசிருதாந்த புவன பதித்துவம் பரிபக்குவ மல மல வாசனு தாரதம்மியவான்களாகிய பிரளயாகலர் விஞ்ஞானகலர்க்கே யன்றிச் சகலர்க் கின்மையி னென்பது. அன்றியும், "மேற்புவனத்திலிருக்கும் புவனபதிகள் அந்த அதிகாரத்தினை விட்டு மே

---

⁎ இ-ள். "வேதசாரமாயிருத்தலிற் சித்தாந்த மாம்" எ-று. ¶இ-ள். "வேதாந்தங்களில் ஏகனே ஆன்மா ⁎ ⁎ ⁎" எ-று.

லே போகும்பொழுது அதற்கடுத்த கீழ்ப்புவனத்திலிருக்கும் புவனபதிகள் அவ்வதி காரம் பரிப்பார்கள்" என்றே ஆகமங்கள் கூறுதலின், புண்ணியவிசேடத்தினுற் புதுவதாக அவ்வப்புவனபதி சாயுச்சியம் பெறுமிற்கின்றவர்களே அவ்வவதிகார நிர்வாகஞ் செய்வார்களென்பது செல்லாது. இனி அவ்வப்புவனபதிகள் அவ்வவதிகார கிருத்தியஞ் செய்துபோதராநிற்பத் தாமும் ஒருங்கிருந்து அவர்களைப்போல வதிகாரஞ் செய்பவெனின், அங்ஙனஞ் செய்யிற் பின்னசங்கற்பமாகச் செய்யப்பட்டுக் கிருத்தியம் வேறுபட் டொழியு மென்க. என்னை? மல மலவாசனைக ளுளவாங்காறும் அபின்ன சங்கற்பவான்க ளென்றல் செல்லாமையி னென்க. இங்ஙனமாகலின், முற்கூறியது அமையாமை யறிக. இனிப் பிற்கூறியதுங் கூடாது; மல மலவாசனையுளவாங்காறும் அதிக பலாதிகாரவாஞ்சையுடையவர்கள் அந்த அதிகாரஞ் செய்தற்கேற்ற சம பலமுளதாயிருக்கவும், அதன்கண் உபேக்ஷைபண்ணிச் சமபோக போத்திருத்துவ மாத்திரத்தி லடங்கியிருப்பார்க ளென்ற லமையாமையின். இங்ஙனமாகலாற், புவனபதி சாயுச்சியங்களில் வைத்துச் சமபல சாயுச்சியமென்பது, முற்றெப்புச் சாமியமன்றென் பது, பசுமரத்தாணியாக நாட்டப்பட்டது. ஆகலின், இவற்றே டொருங்குவைத்தெண்ணிப் பரசிவ சமபலம் பரசிவ சாயுச்சிய மென்பதூஉம், இவைபோல முற்றெப்புச் சாமியமன்றெனப்பட்டு, விருத்திராசுரன்போலச் சுவவாக்கு வச்சிரகதராகும் நும்மாற்றுனே நாட்டப்பட்டது.

## "ஞானத்தால் வீடென்றே"

இதன்கண் "முறையே நிராதார சாதார அசத்தியோ நிருவாணதீக்ஷைகளில் தீக்ஷாங்க தீக்ஷாரூபங்களாகுஞ் சிவனது ஞானக்கிரியா வியாபாரங்களுங் குருவினது ஞானக்கிரியா வியாபாரங்களுந் தீக்ஷாங்கமாகுஞ் சிஷ்யனது ஞானக்கிரியா வியாபாரங்களு ஞானம்" என்றும், "அவ்வாறு சிவாகமங்களிற் சிறப்பித்தலின் தீக்ஷையு ஞானமாதல் சிவாகமப் பிரசித்தம்" என்றும், "இவ்வாறுகலின் இவ்விடத்தில் "ஞானம்" என்றது தீக்ஷையே யாம்" என்றும், "இங்ஙனமன்றிச் சைவசித்தாந்தப் பெயரின் மறைந்து பரமதவாபாசகராயிருக்குஞ் சிலர் ஞானத்துக் கங்கியாயிருக்குந் தீக்ஷையை ஞானத்துக் கங்கமென மாறிக்கொண்டு, சீவ சிவ அயிக்கிய விஷயக சிவ சத்திகரண நைமித்திக பவுருஷப் பொதுஞானமாத்திரமே ஞானமென்பார்கள்" என்றும், "அவ்வாறேுதின் ஆசிரியர் "தீக்ஷையே மோக்ஷ சாதனம்" என்று பலவிடத்தும் விஸ்தரித்தலின் பூர்வாபரவிரோதமுற்று அப்பிராமாண்ணியமாய் விடும்" என்றும், "அவ்வாறு ஆசாரியர் வாக்கியங்களை விப்பிரலம்ப வாக்கியங்களாக்கிப் பேசுவார்களோடு பேச்சு எற்றிற்கு" என்றும், "மலகுணமாகும் அஞ்ஞானம் ஆன்மகுணமு மன்று; ஞாத்திருத்துவ பாவமு மன்று; புத்திகுணமாகுஞ் சந்தேகவிபரீத ஞானங்களு மன்று; புத்தி பொருந்தாத சரீர நானென்னும் ஆன்ம சகிதாவித்தையின் குணமாகுஞ் சரீரான்மப் பிராந்தி ஞானமு மன்று; வேறும்" என்றும், "இந்தச் சரீரான்ம ஞானமாகு மஞ்ஞானம் விவேகஞானத்தால் உண்ணீக்கமுற்றுலும் மலத்திரவிய நீக்கமின்றிப் புறநீக்க முறுது, இருசந்திரஞானமாகு மஞ்ஞானம் விவேகஞானத்தா லுண்ணீக்கமுற்றுலும் நேத்திரபடலத் திரவிய நீக்கமின்றிப் புறநீக்க முறுமைபோல" என்றும், "நேத்திரபடலத்திரவியம் படல நீக்கு முபாய ஞானத்துணையுடைய வைத்திய சத்திரகன்மத்தால் அவ்விருத்தியோடு நீங்குதல்போல மலத்திரவியமும் மல நீக்கு முபாயத்துணையுடைய சிவதீக்ஷாகுறிச் சிற்கன்மத்தால் மவுட்டிய விருத்தியோடு நீங்கும்" என்றும்,

"இங்ஙனமாதலின், ஞானாதிகளெல்லாம் சாதார வசத்தியோ நிருவாணதீக்ஷைக்குமாத்திர மங்கங்களாகலாற், சிவசத்திலக்ஷண தீக்ஷாசிற்கன்மத்தால் மோக்ஷமன்றி ஞானகோடிகளால் மோக்ஷ மில்லை யென்பதே சித்தாந்தம்" என்றும், இவ்வாறெல்லாந் தூரபிமான பிசாசாவேசராய்ப் பிரலாபித்தீர். இனி நுமக்கபிமதமாந் தீக்ஷையாவது, அக்கினியாதியில் ஆச்சிய *க்ஷேபணாதி ரூபமெனின், அது பொருந்தாது; நிரதிகரண தீக்ஷைகளில் அவ்வியாத்தியும், பிரதிஷ்டை பிராயச்சித்தாதிகளில் அதிவியாத்தியும் வருதலின். அன்றியும், "ஈண்டுச் செய்யு மவுத்திரிதீக்ஷைக் கங்கமாகப் பின்னர்ச் சரீர பதனபரியந்தஞ் செய்யப்படு நித்தியகன்மாதிகளுக்கு மத்தியில் லோபம் வரின், இந்தத் தீக்ஷை நிஷ்பலமாதன்மேலும் பைசாசபுவனப் பிராத்தி யெய்தும்" என்று மூலாகமங்களினும், "ஞாலமதின் ஞானநிட்டை யுடையோருக்கு நன்மையொடு தீமையிலை நாடுவதொன் றில்லைச் - சீலமிலைத் தவமில்லை விரதமொடாச் சிரமச் செயலில்லைத் தியானமிலைச் சித்தமல மில்லை" என்றற்றொடக்கத்தாற் றேவிகாலோத்தராதி யுபாகமங்களிலும், பிரசித்தமாகச் சொல்லுதலின், தீக்ஷையே சுதந்திரமாகக் கொள்பவர்களுக்குத், தீக்ஷாங்க லோபமாகும் இந்த வனுட்டானுபவாதாதிகளான் மோக்ஷந்தலைக்கூடாமற் பைசாசபுவனப் பிராத்தி யெய்துமென் றன்றோ சொல்லல் வேண்டும். அவ்வாறோதிற், றேவிகாலோத்தராதி யாகமங்களெல்லாம் ¶விப்பிரலம்ப வாக்கியங்களாமென்றாயிற்று. இனித் தேவிகாலோத்தராதி வசனங்கள் அவ்வா றிருத்தலின், "தீக்ஷாங்கமாகும் ஆசாரலோபம் வந்திடின், தீக்ஷை நிஷ்பலம்" என்றது, சாக்ஷாத்கார ஞானசித்தி பரியந்தமே, அப்பால் வேண்டாமென்று, சமாதான மா மெனின், அவ்வாறோதின், சாக்ஷாத்காரஞானமே சாக்ஷாத்காரத்திற் சுதந்திரகாரணம், தீக்ஷையந்த ஞானத்திற் கங்கமே யன்றிச் சுதந்தர மன்று என்று சித்தித்து, நும்முடைய சித்தாந்தம் அவசித்தாந்த மா மென் றொழிக. இங்ஙனமாகலின், அவுத்திரியாதிகளைத் தீக்ஷையென்றது, பிரத்தியக்ஷாதிகளைப் பிரமாண மென்றதுபோலக் கவுணமன்றி முக்கிய மன்று. முக்கியமாகச் சிவதீக்ஷை யென்று சொல்லப்படுவது, சிவசத்தி சங்கற்ப விசேடமொன்றேயன்றிப் பிறிதில்லை. இதுவே சர்வாகம சம்மதமென்பது, ஆகமவசனங்களானும், நிரதிகரண தீக்ஷையில் இதரவியாபாரமொன்று மில்லாமையானும், பிரசித்த மென் றுணர்க. சாதிகரணத்திற் சொல்லப்படும் பேதங்களெல்லாம் அந்தச் சிவசத்தி சங்கற்ப விசேடத்திற்கு வியஞ்சகங்களாகலின், உபகார தீக்ஷைகளே யா மென்க. அந்தச் சிவசத்தி சங்கற்ப விசேடமாவதுஞ், சிவனது கிரியாசத்தி வியாபார விசேடம்; அந்தக் கிரியை ஞானத்தில் அடங்கி ஞானத்துக் கங்கமாம். "பரிதியை முகின்மறைப்ப" வென்னுந் திருவிருத்தத்தில் "இச்சை கிரியையி லடங்குமாறு போலக் கிரியை ஞானத்தி லடங்கும்" என்று நீருஞ் சொன்னீர். ஆகலின், ஞானத்தி லடங்குவதாகிய "கிரியைக்கு ஞான மங்கம்" என்றும், "கிரியை யதற் கங்கி" என்றும், பேசுதல் சர்வ விரோத மாகலின், ஞானாங்க மாகுஞ் சிவதீக்ஷை ஞானத்துவாரத்தினன் மோக்ஷப் பிரதமென் றினியாயினு மறிந்து கொள்க. "மலந் திரவியமாதலால் நேத்திரபடலம்போலக் கிரியா வியாபாரத்தா லன்றி நீக்க முறாது" என்றது, அர்த்தவாதமே யாம். கிரியா வியாபாரமின்றியுங் கருடபாவனை ஞான மாத்திரத்தினால் விஷத்திரவிய நிவிர்த்தி பிரத்தியக்ஷமாகக் காணப்பட்டு, நீர் சொன்னது வியபிசாரமாய்ப் போதலின், விஷமொரு திரவியமென்பதூஉஞ் சர்வ சம்மத மாதலின், நேத்திரபடல திருட்டாந்தமொன்றே கொண்டு நீர்

* க்ஷேபணம்=பெய்தல். ¶ விப்பிரலம்பம்=சூது.

செய்யும் சம்பிரமம் தூரம் போய்விட்டது. இதுவேயுமன்றி, மலத்திரவியத்திற்குப் படலாதி திருட்டாந்தங்களை யபேக்ஷித்து முக்கிய திருட்டாந்தம் அந்தகாரம்; அது தீபாதிப் பிரகாசமாத்திரத்தால் நிவிர்த்தியாவதன்றிக் கிரியாவியாபார மாயிரங் கூடினும் நிவிர்த்தியாவ தில்லை; கிரியா வியாபாரமெல்லாம் தீபாதி யுற்பத்தி நிமித்தமாகலின், தாட்டாந்தத்தினு மிங்ஙனங் கண்டுகொள்க. அது நிற்க. “சீவ சிவாத்வைத விஷயக ஞானம் பூவுருஷப் பொது ஞானம்” என்றும், அதற்குச் சிவசத்தி கரணம்” என்றும், சொல்வார்கள்” என்றீர். அவ்வாறு சொல்வார் யாவர்? *“தத்தர்மதர்மீ” ஆகும் ஆன்மாவினது ஞானம் பாசத்தினை விஷயீகரிக்கும்போழ்து பாசஞானமென்றே சொல்லப்படுவதன்றி வேருகச் சொல்லப்படுவ தன்று; அதுபோலச் சிவத்தினை விஷயீகரிக்கும்போழ்து சிவநிட்டமாஞ் சிவஞானமென்றே சொலலப்படுவதன்றி வேருகச்சொல்லப்படுவ தன்று. இனி அப்பெற்றித்தாகும் ஆன்மாவினது ஞானம் முத்திவியத்தி யிரண்டற்கும் நடுவே வாசனை மணந்து பசுஞானமெனச் சடுதியிற் காணப்படு மத்தனையேயன்றி வேறில்லை யாகலின், சீவ சிவாத்வைத விஷயகஞானம் சிவசத்திகரண நைமித்திகப் பவுருஷஞானமென்பது பொருந்தாமை யறிக. சிவசத்தி கரண மென்பதூஉம், பொருந்தாது. என்னை? குலாலகரணமாந் தண்டசக்கராதிகளுக்குப்போலச் சிவசத்திக்குச் சுவாதந்திரியபங்கம் வருமாகலின். அல்லதூஉம், பிரயோசகனைப் பிரயோச்சிகனுக்குக் கரணமென்று சொல்வா ருலகத் திலராகலின், ஆன்மாவிற்குப் பிரயோசக ருடையயாஞ் சிவசத்தி, ஆன்மாவிற்குக் கரணமாமென்றல், செல்லாதென்க.

## “அறியாமை யறிவகற்றி”

இந்தத் திருவிருத்தம் “திரிபதார்த்த விவேக பசுத்துவ சிவத்துவ விவேக ஞானத்தில், தியானமுந், தியானத்திற் சமாதியுஞ், சமாதியிற் சதேக சீவமுத்தி சாக்ஷாத்கார முகிழ்க்கு முறைமையுஞ், சாற்றுகின்றது” என்றும், “இந்த மூன்றனுள்ளும், ‘ஒருவார்த்தை’ யென் றோதப்படுஞ் சித்தாந்த மகாவாக்கியத்தின் மூவகை முப்பதங்களினது இலக்கியப்பொருள் விளங்கும்” என்றும், இந்த “தத்த்வமஸி” யாதி மூவிடக்குறி மூவாக்கிய முப்பதங்களுள், நடுமுதன் முடிவின் மும்முப்பதங்களுக்கும் இலக்கியப்பொருளாவன, ஆன்ம பர சிவங்கள்” என்றும், “அந்த மூன்றனுள் நடுப்பதப் பொருளாம் ஆன்மதத்துவம், சமனைபரியந்தமாஞ் சாக்கிரஞ் சொப்பனமெனப்படும் பிரத்தியாகாரத்தானம் தாரணைத்தானம் வரையிற் பசுத்துவநீங்கி யுன்மனுமூலமாஞ் சுழுத்தியெனப்படுந் தியானத்தானத்துத், திரோதானசத்தி நிக்கிரககிருத்தியத்திற்கும் பராசத்தியனுக்கிரக கிருத்தியத்திற்கு நடுவாயுற்றவிடத்துச், செயற்கையாய் வந்த பசுத்துவமுமன்றி யியற்கையாய் விளங்குஞ் சிவத்துவமுமன்றிக் கேவலஞ் சின்மாத்திரமாகத் தன்னைக் காணப்படு மவசரம்” என்றும், “அந்த ஆன்மதத்துவமும் மல மலவாசனு நிவிர்த்தி தாரதம்மியத்தால், தூலான்மா சூக்ஷுமான்மா பரான்மாவென மூவகைப்படும்” என்றும், “இனிச் சம்புபக்ஷத்தில் இவ்விடத்திற் காணப்படும் இலக்கியப்பொருள், அனதிக் கிராந்தவிந்துக சின்மாத்திர அபரசிவம்” என்றும், முதற்பதத்தில் இலக்கியப்பொருளாகும் பரதத்துவம், கேவல கும்பக

---

* ஆசிரியர்: “தத்தர்மதர்மீ” என்பதற்கு—‘தற்றருமத்தாற் றருமி’ என மூன்ரும் வேற்றுமைத்தொகைப்பொருள் கொண்டார்; சிவஞானபாடியத் தாருஞ் சூத்திரத்திறுதி யதிகரணத்திற் காண்க.

சின்முத்திராசகித தியானத்தானமாம் உன்மனுமூல சுழுத்தியிற் சின்மாத்திரமாகக்
காணப்படுந் தன்னையுஞ் சிவனையும் அந்தத் தியானவறிவில் முகிழ்க்குஞ் சூனிய
கும்பக மவுனமுத்திராசகித சமாதித்தானமாம் உன்மனுந்தமெனப்படுந் துரியத்தில்
அதிக்கிராந்த விந்துகமாய் நிஷ்களமாய் வியாபகமாய் இவ்வாறு காணப்படு மவசரம்"
என்றும், "அந்தப்பரமென்பதுந் தாரதம்மியத்தால் அவ்வாறு மூவகைப்பட்டுத் தூல
பரஞ் சூக்ஷுமபரம் பரபரமெனச் செப்பப்படும்" என்றும், "முடிவுபதத்தில் இலக்
கியப்பொருளாகும் சிவதத்துவம், அவ்விடத்தில் அவ்வாறு காணப்படுஞ் சிவனையுந்
தன்னையு மந்தச் சமாதியறிவு முகிழ்க்குஞ் சூனியாந்த கும்பக மவுனுந்த முத்தி
ராசகித சாக்ஷாத்காரத் தானமாம் உன்மனோபரி யெனப்படுந் துரியாதீதத்தில் நிஷ்
களாதீத சாட்குண்ணிய பரிபூரண சுத்த சிவமாகக் காணப்படுமவசரம்" என்றும், "அந்
தச் சிவதத்துவமும் அவ்வாறு தாரதம்மியத்தால் தூல சிவஞ் சூக்ஷுமசிவம் பரசிவ
மென மூவகைப்படும்" என்றும், "இந்த முப்பகுப்பு ஆன்ம பர சிவங்களு ளிருபகு
ப்பு, ஆன்ம பர சிவங்கள் தாரணைத்தானஞ் சொப்பனுந்தமாஞ் சமனு சத்திவரையில்
அத்தியசிக்கப்படும்" என்றும், "அந்தமகாவாக்கியத்திற்கு இந்த இலக்கியப்பொருளின்
வேறும் வாச்சியப் பொருள், தடத்தவணுபக்ஷ சம்புபக்ஷ முப்பொருள்" என்றும்,
"இவ்வாறு சொல்லிவந்த மார்க்கத்தினுற்றுன், சிவாகமவழி சிவமந்திரவழிச் செல்
லுஞ் சிவகரணங்களாகு மனோகங்கார புத்தி வியாபாரங்களாற்றுன், அறியாமை யறி
வகற்றுதல் முதலானவைகள் செய்யப்படும்" என்றும், இதன்கண் "அறிவு" என்
றது, "தேவர் நரர் முதலிய கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித்கர்த்திருத்துவ லக்ஷண சித்துவ
சின்ன அசுத்த போத்திருத்துவமுடைய கலா வசியத்துவ துரந்தர பசுவர்க்கமாந் தூல
சீவனும், மந்திர மந்திரேசுரர் முதலிய சாதிருசிய சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவ
லக்ஷண தூல சிவத்துவ சின்ன சுத்த போத்திருத்துவமுடைய கலா வசியத்துவ விதுர
பதிவர்க்கமாஞ் சூக்ஷும சீவனும், அணுசதாசிவர்முதலிய சூக்ஷுமசிவத்துவ சின்ன
சுத்த போத்திருத்துவமுடைய பதிவர்க்கமாம் பரசீவனு மென்னு மிம் முப்புருடதத்
துவ புத்திரப் போலி முச் சீவனுக்கும், அறிவை விளக்குதலானும், தடத்தலக்ஷண
மாகு மிந்த முச்சீவத்துவ சுத்தி, தத்துவசுத்திபண்ண, வேறு யத்தினமின்றிப் பண்
ணப்படுமாதலானும், அந்தத்தத்துவங்களை யுபசாரத்தால் அறிவென்று சொன்னது"
என்றும், "அகற்றி" என்றது, "அந்தத்தத்துவங்களைச் சுத்திபண்ணி" என்றும்,
"தத்துவசுத்திபண்ணு முறைமை யாவது, தத்துவலக்ஷண ஆன்மதடத்தலக்ஷண சிவதட
த்த லக்ஷணங்களாகும் இந்த முப்பதார்த்த லக்ஷணங்களைப் பரோக்ஷமாகவறிவதாம் ரூப
த்திரயம், அந்தலக்ஷணங்களை அன்னியோன்னிய விலக்ஷணங்களாகப் பரீக்ஷித்தறிவ
தாகுந் தரிசனத்திரயம், பரோக்ஷமாக வறிந்தவைகளை மனோகங்கார புத்திவிருத்தி
களால் அபரோக்ஷம்போல அபினயித்து மகாவாக்கிய வாச்சியப்பொருள்படப் பலவித
மாக வறிதலாகுந் தியானக்குறித் தியானத்தி னசைவறுதலாகுந் தியானசித்திச் சமா
திக்குறி யோகத்திரயம், சமர்த்தித்தபின், அபரோக்ஷமாக வறிதலாகுஞ் சாக்ஷாத்காரக்
குறிப் போகத்திரயம், சாக்ஷாத்கரித்தபின்பு, தத்துவங்களையுந் தத்துவதடத்தத்தினுல்
ஆன்ம சிவன்களில் வைத் தத் தடத்தத்தன்மைகளையு மறுத்துக், காரணத்தடைவிலொடுக்
கியடக்கித், தத்துவங்களுக்குத் தான்வசியனு யிருந்ததை நீக்கித், தனக்குத் தத்துவங்கள்
வசியங்களாகத் தான் வசியாயிருத்தலாகுஞ் சுத்தித்திரயமென்னு மிந்த ரூபதரிசன
யோகபோக சுத்திகள் பண்ணிச், தத்துவங்கள் தனக்கு வசியங்களாகத் தான் வசி
யாயிருத்தலாம்; யோகசாதக சாமர்த்தியாதிக்க முடைய சிவஞானத்துணைச்சித்த

சிவகன்மயோகி பண்ணும் யோகசாதகத்தில் அதிக சாமர்த்திய மில்லாத சிவஞானத்துணைச் சாத்திய சிவகன்மயோகியாயிற், சொல்லியகுறிப் பரோக்ஷ ரூபதரிசனயோகபோகங் கூடி, யம நிய மாதி மனோவாயு செய வச மாத்திரத்தினால் அந்தத்தத்துவங்களை யொருபிரகாரந் தன்வசமாக்குத லாகுஞ் சுத்தித்திரயம் பண்ணப்படும்; யோக சாமர்த்தியமில்லாத சிவகன்ம மாத்திரத்துணைச் சாத்திய சிவஞானயோகியாயிற், சொல்லிய குறிப் பரோக்ஷரூபதரிசனங்கள்பண்ணி, அனான்மாவை ஆன்மாவென்னு மபிமானத்தைத் தியாகம்பண்ணுவதாகுஞ் சுத்தித்திரயம் பண்ணப்படும். இவ்வாறன்றி, மமகார வகங்காரத் தியாச்சியம் பண்ணுவதுந் தத்துவ சுத்தியாம். அல்லது வெகுவாகத் தத்துவ தாத்துவிகப் பிரவஞ்சமெல்லா நிராகார நிராலம்பமாம் மாயை மகாமாயைகளின் வேறற்ற மாதலால், அவ்வா றகண்டிதமாகக் காரணாகார நிராகார நிராலம்ப நிஷ்பிரவஞ்சமாகச் சிந்தனைபண்ணுவது மாத்திரமுந் தத்துவ சுத்தி யாம். இவ்வாறு முச்சிவயோகிகள் பண்ணு முப்பகுப்புத் தத்துவமுதலிய முப்பதார்த்த முச்சுத்தி யோகவழியிற் பழகிப் பழகிப் பண்ணுமிடத்தும், பிரமாதி பதமுத்திகளாகும் அபர முத்திக்குறிச் சித்திகளைக் குறித்து முச்சிவயோகிகள் பண்ணு முறைமையிற் சுவாவதிசுத்தியோடு விரும்பிய மூர்த்தியில் வைத்துத் திரிரூப தரிசன யோகபோகங்களைப் பண்ணுமிடத்தும், சித்திக்குப் பின் முத்தி விரும்பின் முத்திவழி பழகிச் சுத்தியோடு பண்ணுமிடத்தும், அசுத்த பூதான்மாதிகளைச் சாலம்ப சிவயோக மார்க்கங்களிற் பழகிய வொருவழிவைத் தடக்கிப், பின்பு சுத்தபூதாதிதொட்டுச், சமானாந்தமட்டுமுட்டும் பூதான்ம சித்துபாதித் தூலதேகக்குறிப் பூதங்களிற்றான், தத்துவான்ம சித்துபாதிச் சூக்ஷ்மதேகக்குறித் தத்துவங்களிற்றான், அந்தரான்ம சித்துபாதிப் பரதேகக்குறி யந்தரத்திற்றான், சீவான்ம சித்துபாதி யகங்காரமாத்திரக்குறிச் சீவனிற்றான், மந்திரான்ம சித்துபாதிப் பிராசாதமுதலிய மந்திரத்திற்றான், ரூபதரிசன யோக போக சுத்திகள் பண்ணப்படும்" என்றும், "அறிவகற்றி" என்றதற்குப் பொருள் இவ்வள வமைந்தது" என்றும், "அறியாமை யகற்றி" என்றது, "மல மலவாசனாசுத்தித் துவாரத்தினால் ஆன்மசுத்தி தானே பண்ணப்படுதலாலும், மல மலத்துவமென்று வேறு தத்துவமாக மதிக்கப்படாது மலோபாதியுற்ற பசுத்துவத்தோடு பசுத்துவமென்று படிக்கப்படு மாகலாலும், ஆன்மசுத்தி பிரதானமாகையால் ஆன்மசுத்திபண்ணியெனவே யறையப்படும்" என்றும், "அந்த வறியாமை முன்சொல்லிய முச்சீவனிற் றூல சீவனாகுஞ் சகல பசுவர்க்கத்திற் காணப்படும் பிரஞ்ஞாமோக அஞ்ஞானமூல பசுத்துவத்தின் வேறாக மூர்ச்சாமோக அஞ்ஞான மூல சிவத்துவ சூனிய வறியாமைப் பெயர்ச் சிவத்துவ பசுத்துவமுந், தூலசீவனாகும் பிரளயாகல விஞ்ஞானாகல மூடபசுவர்க்கத்திற் காணப்படும் அப்படிப்பட்ட தூலசிவத்துவ சூனியக்குறி யறியாமைப்பெயர்த் தூல சிவத்துவ பசுத்துவமுஞ், சூக்ஷ்மசீவனாகும் மந்திரேசுவராதி பதிவர்க்கத்திற் காணப்படும் அப்படிப்பட்ட சூக்ஷ்ம சிவத்துவ சூனியக்குறி யறியாமைப்பெயர்ச் சூக்ஷ்ம சிவத்துவ பசுத்துவமும், பரசீவனாகு மனு சதாசிவாதிகளிற் காணப்படும் பரசிவத்துவ சூனியக்குறி யறியாமைப்பெயர்ப் பரசிவத்துவ பசுத்துவமுமென்று பல வகைப்படும்" என்றும், "அந்தந்தப் பசுத்துவத்தை அந்தந்தத் தத்துவசுத்தி நடு நடுவே கண்டு தத்துவசுத்திப்படி முச்சிவயோகிகள் பண்ணுமுறைமையிற், றூலதர சிவத்துவ பசுத்துவத்தைச் சிறிது மலசுத்தித் துவாரத்தினாலும், தூலசிவத்துவ பசுத்துவத்தை முற்று மலசுத்தித் துவாரத்தினாலும், சூக்ஷ்ம சிவத்துவ பசுத்துவத்தைத் தூல மலவாசனாசுத்தித் துவாரத்தினாலும், பரசிவத்துவ பசு

த்துவத்தைச் சூக்ஷும மலவாசனைசுத்தித் துவாரத்தினாலும், சுத்திபண்ணத் தக்கது" என்றும், "அறியாமை யகற்றி" என்பதற் கிவ்வளவு பொரு ளமைந்தது" என்றும், "மேற் பர சிவத்துவாபிவியத்தி சித்திக்குமளவும் பர மலவாசனை தாக்கி யாபாசிக்குமாதலால், "அறிவினுள்ளே" என்பது, தியானத்தானத்தில் சின்மாத்திரமாகக் காணப் படுமென்ற அணுபக்ஷ சம்புபக்ஷ விருவகை யான்மாவின்" என்றும், "அறிவுதனை" என்றது, "முறைமையி லணுபக்ஷ பர சிவங்கள் சிவபக்ஷ பர சிவங்களென்னு நான்கு சித்துக்களையும்" என்றும், "அருளினால்" என்றது, "சிவசத்திவிளக்கு விளக்கிய சிற் சாத்த மனோகங்கார புத்தி வியாபாரங்களால்" என்றும், "அறியாதே" என்றது, "திருசியமாக நோக்காமல்" என்றும், "அறிந்து" என்றது, "தடத்தலக்ஷண நிர் முத்த சொரூபலக்ஷண பரோக்ஷ நிரீக்ஷணக்குறிச் சிவரூபம், அந்தச் சிவரூப மாகுஞ் சாஸ்திரீயபரீக்ஷைக்குறி விலக்ஷணமாஞ் சூக்ஷுமபரீக்ஷாக்குறிச் சிவதரிசன மென்னுந் தசகாரியத் திருகாரியம் படுத்திப் பார்த்து" என்றும், "குறியாதே" என்றது, "திருசியமன்றிச் சர்வ திருக்குரூபமாக" என்றும், "குறித்து" என்றது, "ஶிவொயஹஂ" யாதி மகாவாக்கிய மூன்றற்கும் முறைமையி லிலக்கியப்பொருளாகும் அணுபக்ஷ தற்பொருட் சிவக்குறிப்புச், சம்புபக்ஷ புறப்பொருட் சிவசாதி விசிட்ட தற்பொருட் சிவக்குறிப்பு, ஆரோபித சம்புபக்ஷ புறப்பொருட் சிவக்குறிப் பென்னு மூன்றனுள், ஒன்றின் மற்றது மொக்கப் பொருத்திப் பண்ணுஞ் சிவத்தியானமாகுந் தசகாரியத் தொரு காரிய சிவயோகம் பண்ணி" என்றும், "அந்தக் கரணங்களோடுங் கூடாதே" என்றது, "தாரணையிற் சுருங்கிப் போலியாய்ப் போன மனதைத் திருப்பி விடயத்தில் வீழ்த்துஞ் சகலத்தன்மை தாக்காமல்" என்றும், "வாடாதே" என்றது, "யோகநித்திரா முத்திரித மனதைத் திருப்பிப் பிராகிருத நித்திரையில் மூழ்குவிக்குங் கேவலத்தன்மை தாக்காமல்" என்றும், "குழைந்திருப்பையாகில்" என்றது, "முற்சொல்லிய தியானத்திற் சொல்லப்படுந் தியாதிருத் தியானத்திலே யப் பகுப்பிறந்து ஞேயத்தழுந்தி யத் தியேயமாத்திரத்தில் அடங்குவதாஞ் சிறப்புத் தியான விசேடசமாதி பண்ணி யிருப்பையாகில்" என்றும், "பிரியாத சிவன்றானே" என்றது, "பிரேரகப் பிரேரியத்தன்மைச் சம்பந்தியாயிருந்த வீசுரன்றானே" என்றும், "பிரிந்து தோன்றி" என்றது, "அந்தச் சம்பந்தம் விட்டுச் சாதிருசிய மாத்திர மித்திர சம்பந்தியாகச் சாக்ஷாத்கரிக்கப்படும்" என்றும், "பிரபஞ்ச பேதமெலாந் தானாய்த் தோன்றி" என்றது, "அதுவன்றிச் சித்தசித்துக்களுக்கெல்லாம் வியாபகமாய்த் தாரகமாய்ச் சாக்ஷாத்கரிக்கப்படும்" என்றும், "நெறியாலே" என்றது, "திருக்குத் திருசியக்குறிக் குறிப்பினால்" என்றும், "அவையெல்லா மல்லவாகி நின்றென்றுந் தோன்றிடுவ னிராதார னாயே" என்றது, "அந்தத் திருசியப் பொருள்களி னொன்றன்றித் தனக்கொரு தாரகமின்றி நிராதாரனா யிருந்தும், சமாதி சாமர்த்தியத்தி லுதிக்குஞ் சாக்ஷாத்காரத்தினாற் சாக்ஷாத்கரிக்கப்படுவன்" என்றும், "சீவன்முத்தி சிவசாக்ஷாத்காரஞ் சமாதி சாமர்த்தியத்தினாற் சித்திக்குமென்பது தாற்பரியம்" என்றும், உரைத்தீர். "இந்தச் சாக்ஷாத்காரம் அங்கி யோகம்" என்றும், "இதனைச் சித்திப்பிக்குந் தியானசமாதியெல்லாம் அங்க யோகம்" என்றும், நீர் தாமே ஆண்டாண்டுக் கூறுதலானும், இவ்வட்டாங்கங்களைச் சிவாகமங்களெல்லாம் யோக பாதத்திலன்றி ஞானபாதத்திற் கூறாமையானும், நீர் ஈண்டுக் கூறிய சாக்ஷாத்கார ஞானஞ் சாரூப்பியபலகமாம் யோகநிஷ்டையே யன்றிச், சாயுச்சியபலகமாகு ஞானநிஷ்டையன்றாம். ஆதலின், நீர் இத்துணை விரித்தெழுதிய வுரையில் ஈண்டைக் காகற்பால

தொன்று பின்றென் றொழிக. இதன்சணுள்ள குழறுபடைகள் விரிக்கிற் பெருகும். அது நிற்க. மகாவாக்கியத்தின் முப்பதத்துக்கும் அணுபக்ஷத்தில் வாச்சியப்பொருள் இலக்கியப்பொருள் இரண்டு, சம்புபக்ஷத்தில் வாச்சியப்பொருள் இலக்கியப்பொருள் இரண்டாக, நான்கு பொருள் சொன்னீர். இது சர்வசாஸ்திர விரோதம். இதற்கு மூலவசனம் யாண்டு மின்று. அது நிற்க. ஒருவாக்கியத்தில் ஒன்று வாச்சியப்பொருளும் ஒன் றிலக்கியப்பொருளுமாகச் சொல்லின், லக்ஷணுபீசங் கிடைக்கும். அங்ஙன மன்றி, எல்லாப்பதங்களுக்கும் இலக்கியப்பொருளே சொல்லின், வாக்கியத்தில் லக்ஷணு பீசங் கிடைக்கமாட்டாது. 'கங்கையில் வேடச்சேரி' என்புழி, 'வேடச்சேரி' என்னும் பதத்திற்கு வாச்சியமே பொருளாகலின், அதனுடன் அன்னுவயிக்குங் 'கங்கா' பதத்திற்கு லக்ஷணுபீசங் கிடைத்தலின், இலக்கியப்பொருள் சொல்லப்பட்டது. "கங்கையில் வேடச்சேரி கூப்பிட்டது" என்புழி, "கூப்பிட்டது" என்னும் பதத்திற்கு வாச்சியமே பொருளாகலின், அதனுடன் அன்னுவயிக்கும் "வேடச்சேரி" என்னும் பதத்திற்கு லக்ஷணுபீசங் கிடைத்தலின், இலக்கியப்பொருள் சொல்லப்பட்டது. இனி வாக்கியத்திற்கு லக்ஷணுபீசமின்றி இலக்கியப்பொருள் சொல்லுதல் அவசித்தாந்தமாதலின், முப்பதத்திற்கு மிலக்கியப்பொருளே சொல்லுதல், மோகமூல மென்று இனியாயினு மறிந்துகொள்க. அன்றியும், ஆண்டு "அயமஸ்தியாதி" பதங்களுக்கு ஒப்புச் செப்புதல் பொருள்" என்றீர். எல்லாப்பதமும் அணுபக்ஷப் பொருளேயாகவும் எல்லாப்பதமுஞ் சம்புபக்ஷப் பொருளேயாகவுஞ் சொல்லின், அப்போழ்து அனுயோகி பிரதியோகி கிடைக்கா; ஆகவே, ஒப்புச்செப்புதல் யாங்ஙனம் பொருந்து மென்றேனுஞ் சூக்ஷுமபுத்தியாற் பார்க்கமாட்டாது, தூலபுத்தியாற் குழறி வைத்தீர். அல்லதூஉம், ஒரு பொருடானே அவஸ்தாபேத வுபாதியினுல் 'ஆன்ம பர சிவங்க' ளென மூன்றுபொரு ளாமென்று கொண்டு, 'இம்மூன்றுமே மகாவாக்கிய முப்பதப்பொருள்' என்றுரைப்பின், இவ்வாறு ஒருபொருளினையே அவஸ்தா பேதத்தினுன் மூன்றுக வைத்து மகாவாக்கியப்பொருள் சொல்லி, இலக்கணையான் முடிக்கு மாயாவாதியும் ஜயிப்பன். ஆகலின், நீர் பிரச்சன்ன மாயாவாதியென்ப தின் றறிந்தாம். ஆகவே; சைவசித்தாந்தப்பேரின் மறைந்து, மாயாவாதி யாபாசகராயிருக்கு நும்மோ டுரையாடன் முறை யன்றென் றொழிக.

## "புண்ணியமே ஹேத்துவித்தும்"

இதன்கண் "புறப்பொருட் சிவ சாதி விசிட்டாத்வைத விசிட்ட சுற்சிவ வியத்திச் சுத்தாத்வைதஞ் சொல்லப்பட்டது" என்றும், "இங்ஙனமாகவும், பிரமித்து, ஓரோவிடத்து மதாந்தரப்போலியாகச் சொல்லிய வசனத்தைத் தூக்கியெடுத்துக்கொண்டு, புறப்பொருட் சிவவியத்திசுத்தாத்வைதம், புறப்பொருட் சிவவியத்திவிசிட்டாத்வைதந்தான் விளம்புவோர், வேதாந்தி ராமாநுஜ வேடங் கொண்டு, வேற்றுச் சமயத்தவர்க ளாவார்" என்றும், "சிவசாயுச்சியச்சொற்கு வெவ் வேறுகப் பொருள் சொல்வதெல்லாம், ஏகான்மப் பிரசங்காதிகளுக்கு இடங்கொடுக்கு மாகலாற், சிவசாதியாகுஞ் சிவசாதிருசியமே 'சிவசாயுச்சியம்' என்னுஞ் சொற்குப் பொருள்" என்றும், "ஆதிமுத்தன் அநாதிமுத்தன்" என்னும் "வைசாதிருசியம் மலோபாதி தொட்டுவந்த பகிரங்க வார்த்தை" என்றும், "சிவனுக்குக் கிருபாசம்சித்த பஞ்சகிருத்தியம், முத்தனுக் கவர்ச்சனீய சம்சித்த பஞ்சகிருத்திய மென்னும் வேற்றுமை வார்த்தையும் வேறு காரணீடமில்லாமையால்" என்றும், "முற்றுஞ் சிவசாதிருசியமென்பதே யங்

தரங்க வார்த்தையாகலால், அதுவே சிவசாயுச்சியமென்று சித்தாந்தஞ் சித்தித்தது'' என்றும், "சிவயிக்கியம்' என்பது உபசரிதாயிக்கிய மென்று பொருளாம்" என்றும், "சிவானன்னியத்துவம்" என்பதில், 'அன்' என்பதற்கு அபாவப்பொருள் விரித்தாற், சிவானன்னியபாவமென்று பொருள்பட்டு மாயாவாதி மதமாம்'' என்றும், விருத்தப்பொருள் விரித்துச் சிவான்னியப்பொருளுக்கு விருத்தனுதலென்று சொன்னுலும், அன்னியப்பொருள் விரித்துச் சிவான்னியப்பொருளுக்கு அன்னியனுத லென்று பொருள் சொன்னுலும், சீவனு மப்படியென்று சிவசதிர்சனுகீச் செப்பப்படுவன்'' என்றும், "இப்படி அவர்களுக் கிஷ்ட விகாதம் பண்ணுஞ் சிவானன்னியச் சொற் சொல்லி ஏது பிரயோசனம் விசேடித்துக் கட்டிக்கொண்டது? ஒன்று மில்லை'' என்றும், "சிவசாதிருசியமே சிவசாயுச்சியமென முன் சொன்னபடி சித்தாந்தம்பண்ணிச் சுகியாயிரு'' என்றும், இங்ஙனம் ஆசீர்வாதஞ் செய்தீர். நும்முடைய ஆசீர்வாதப் பொருள் நுமக்கே கிடைக்காமற் றூரமாய், முடவன் கொம்பிற்றேனுக் காசைப்படுதல் போல, வாயூறன்மாத்திரையே பிரயோசன மாத லன்றி வேறின்மையின், நுமது பேச்சினை நம்பினோர் சுகியாயிருத்தலு மவ்வாறே யா மாகலின், நும்முடைய ஆசீர்வாதத்தினை, நீர்தாமே அந்தரங்கமாக வைத்துக்கொள்க. அது நிற்க. 'அத்துவிதம்' என்னுஞ் சொற்கே பொருளறியாத நீர், 'விசிட்டாத்வைதம்' என்றும், 'சுத்தாத்வைதம்' என்றும், தெரிந்தவர்போல அபினயித்துப் பேசுதல், கூத்தாடி சிலம்பம் போலச் சொற் சம்பிரமமே யாம்! அது கிடக்க. 'சுத்தாத்துவிதம்' என்னுஞ் சொல்லில் 'அ' என்பதற்குப் பொருள் என்னை? அபாவப்பொருள் விரித்துச் சுத்த த்வைத மில்லையெனப் பொருள் சொல்லின், சுத்த த்வை தாபாவம், அசுத்தயிக்கியமென்றுனும், அசுத்த த்வைதமென்றுனும் பொருள்பட்டு, விரோத மாம். அவ்வாறன்றி, விருத்தப்பொருள் விரித்துச் சுத்த த்வைதத்திற்கு விருத்தமென்று பொருள் சொல்லினும், அவ்வாறே பொருள்பட்டு விரோத மாம். அன்னியப்பொருள் விரித்துச் சுத்த த்வைதத்திற்கு அன்னியமென்று பொருள் சொல்லின், சுத்த த்வைதத்திற்கு அன்னியமாவது அசுத்தயிக்கிய முதலியவென்று பொருள்பட்டு விரோத மாம். அவ்வாறன்றிச், சுத்தயிக்கியமென வைத்துப் பொருள் சொல்லினும், சுத்தபதத்துக்குப் பொருள் நிருபசரிதமெனின், ஏகான்மவாதி பிரசங்க மாம். மலநிவிர்த்திப் பொருள் சுத்தமெனின், மலநிவிர்த்திப்பொருள் அனேகமாதலின், அயிக்கியங் கிடைக்க மாட்டாது. விசிட்டமில்லாத தெனின், சாதி விசிட்டாத்துவித விசிட்டஞ்சொல்லு நுமக்கே விரோத மாம். ஒரு அம்சத்தில் விசிட்டம், ஒரு அம்சத்தில் விசிட்டமில்ல தெனின், அங்ஙனம் அம்சஞ் சொல்லுதல் சாவயவப்பொருளுக்கன்றி நிரவயவப்பொருளுக் கேலாது. அன்றியும், அங்ஙனம் விசிட்டாத்துவித சுத்தாத்துவித சாங்கரியஞ் சொல்வோர் உபயமதாபாசகர்களுமாவர். ஆதலின், சித்தாந்தாபிமதமாஞ் சுத்தாத்துவிதப் பொருள்கொள்ள வறியாதீர்க்குச், சுத்தாத்துவிதஞ் சொல்ல வாய் ஏது? இவ்வாறு சித்தாந்தாபிமத சுத்தாத்துவிதப் பொருளறியமாட்டாத நீர், சுத்தாத்துவிதப்பொருளே சொல்லுஞ் சிவானன்னியத்துவச்சொல் எமக்கு "இஷ்ட விகாதம் பண்ணும்'' என்று பாண்டித்திய முடையிர்போல அபினயித்துப் படித்தல், நகையாடற் கேதுவாஞ் சம்பிரமமே யாம். இனிச் "சிவானன்னியம்' என்பதில்,'அன்' என்பது பயக்கு முப்பொருள்களுள், அபாவப்பொருள் சொல்லின், சிவனுக்கன்னியமாக ஆன்மா வில்லையெனப் பொருள்பட்டு விரோதிக்கும்'' என்றீர். அஃது அறிவில்லா ருரையே யாம்.'அபாவப்பொருள்'என்பதில்'அ'என்பதும் அவ்வாறு முப்பொருள் படுமன்றே! அவற்றுள், எப்பொருள்கொண்டு இங்ஙனஞ் சொற்றீர்?

எனின், மேலுமங்ஙன மனவஸ்தை யெய்தச் சொல்வீ ரல்லது, வரையறை போதரச் சொல்லமாட்டீர். அவ்வாறே 'விருத்தப்பொருள்' என்பதில், 'வி' என்பதும், பல பொருள் பயக்கும். அவற்றுள், எப்பொருள்கொண்டு இங்ஙனஞ் சொற்றீர்? எனின், ஒன்றினை நிச்சயித்துக் கூறமாட்டாமல் அனவஸ்தைபடவே குழறுவீர். இங்ஙனங் குழறு நீர், "ஸுந்யஸுந்யாவஸ்திதொநந்யஃ" என்றற்றொடக்கத் தாகமச் சுருதிகளில், 'அனன்னிய;' என்னுஞ் சொற்கு, எங்ஙனம் பொருள் சொல்கிற்பீர்! அது கிடக்க.

'சிவானன்னியத்துவ' பதத்திற்கு, நீர் சொன்ன பொருள்களுள், அபாவப்பொருளுக்கு, நஞ்ஞுதற்புருடசமாசம் விரித்துச் சொன்னீர். விருத்தப்பொருளுக்கும், அன்னியப்பொருளுக்கும், வெகுவிரீகிசமாசம் விரித்துச் சொன்னீர். ஒருபெற்றியாகவன்றி இங்ஙனம் ஒன்றற் கொருமுறையாகவும், ஒன்றற்கு மற்றொருமுறையாகவும், விரித்துச் சொல்லிச், சர்வசன பரிகாசாஸ்பத மாயினீர். இனி அவ்வாறன்றிச், 'சிவானன்னியத்துவ' பதத்திற்குச், சொல்லியல்பறிந்து விரிப்பின், நீர் கூறியவாறெல்லாம் பொருள் சொல்லினும், நமக் கிஷ்டசித்தியேயன்றி, இஷ்டவிகாதம் வரமாட்டாது. அது நுமக்கு விளங்குமாறு, நீர் சொன்ன முப்பொருள்களினும் வைத்து, உணர்த்துதும். 'சிவானன்னியத்துவம்'என்பதில்,'அன்னியத்துவம்'என்பது, அன்னியத்தினது பாவம்,தந்நபவதி அனன்னியத்துவமெனப், பாவார்த்தத்தின் மேல்வந்த நஞ்ஞுதற்புருடனேயன்றி, வேறு சமாசமன்று. ஆகலின், 'சிவானன்னியத்துவம்' என்பதற்கு, நீர் கூறியவாறு அபாவப்பொருள் விரிப்பினும், சிவனுக்கன்னியமாந்தன்மை தற்றருமதருமியாகு முத்தான்மாவிற் கில்லையென்றும், விருத்தப்பொருள் சொல்லினும், சிவனுக் கன்னியமாந்தன்மை ஆன்மாவிற்கு விருத்த மென்றும், அன்னியப்பொருள் விரிப்பினும், சிவனுக்கன்னியமாந்தன்மை யான்மாவிற் கன்னிய மென்றும், இவ்வாறு பொருள்படுமே யன்றி, நீர் கூறியவாறு பொருள்படு மா றில்லை. ஆகலின், இந்தப்பொருள்களுள் யாதொன்றினுனும் நீர் சொன்ன தூஷணம் நமக் கெய்த மாட்டாது. இனி இங்ஙனம் 'அனன்னியத்துவம்' என்பது, பாவார்த்தத்தின்மேல் வந்த நஞ்ஞுதற்புருட னென் றறியமாட்டாமற் பிரலாபித்தல் பற்றி, நும்முடைய மவுட்டியமாத்திரம் நிலைநிற்குமல்லது, நும்முடைய மத நிலை நிற்கமாட்டாது. அது நிற்க. "முற்றுஞ் சிவசாதிருசியமே சிவசாயுச்சியம்" என்றீர். முற்றுஞ் சிவசாதிருசியமாவது என்னை? ஒருபிரகாரத்தானும் வேற்றுமை தோன்றுமையென்ப தன்று; நிருபசரிதயிக்கியமாய் ஏகான்மப் பிரசங்கம் வரு மாகலின். சிவசாதிமாத்திரத்தில் அவ்வாறு வேற்றுமை தோற்றுமையென்பது மன்று; தாதான்மியமாஞ் சாதிவியத்திகளுக்கு நையாயிகாதி மதத்திற்போலச் சித்தாந்தத்தில் வைலக்ஷண்ணியஞ் சொல்லாமையின். மகாமேருவோடு சையோகமாந் திரவியம்போலச் சிவசையோகத்தால் அவ்வா றுமென்பது மன்று; விபுத்துவயங்களுக்குச் சையோகங் கூடாமைபற்றி வியாபகத்துவ பங்காதி தூஷணம் வரு மாகலின். குணகுணிபாவம் போல்வது மன்று; ஏகான்மப் பிரசங்கத்துக் கிடங்கொடுக்கு மாகலின். சிவ லயமு மன்று; துல்லியப்பொருளுக்கு விரோதமாய் விநாசப் பிரசங்கம் வரு மாகலின். சிவானன்னியத்துவமு மன்று; முற்சொல்லியவாறு சித்தசாதன மா மாகலின். சிவப் பிரதிவிம்ப சாமியமு மன்று; சடத்துவாதிப் பிரசங்கம் வரு மாகலின். சிவகுண சங்கிராந்த சாமியமு மன்று; பாசுபத மத மாகலின். சிவகுண சமுற்பத்தியு மன்று; மாவிரத மத மாகலின். சிவத்துவாபிவியத்தியு மன்று; ஈண்டுச் சிவானன்னியத்துவ சாக்ஷாத்காரப் பொருள் சொல்லிற் படுங் குற்றம் யாது மின்று; அது சொல்லாக்கால்,

* " தஸ்ய்ஜக்ஞநஜாஜ தக்காரக ஸஜாரூயாஸ" என்று மிருகேந்திரச் சுருதி கூறுதலானும், கூப சலாதி திருட்டாந்தங்களானும், சித்தாந்தத்தில் அபிவியத்தியே யுற்பத்தி யென்பது பசுமரத்தாணியாக நாட்டப்படுதலான், உற்பத்திக்கு நாசமுண் டென் றனித்தியப் பிரசங்கம் வரு மாகலின். சிவாவேச சாமியமு மன்று; காபா ல மத மாகலின். முற்றும் வியாபகத்துவ மாத்திரத்தான் முற்றுஞ் சிவசாதிருசியமு மன்று; முற்றும் வியாபகமா மலாதிகளுக்குஞ் சிவசாயுச்சியப் பிரசங்கம் வரு மாக லின். முற்றும் நிர்மலத்துவத்தான் அவ்வாறு சொல்வது மன்று; அவ்வளவே முத்தி யென்னும் பாடாணவாதிமுதலியோரும் ஜயிப்ப ராகலின். "கருதரன்போ லெங்கு மாய் நிற்பன்" எனச் சிவசாதிருசியத்திற்குச் சாதாரண தருமம் ஆசாரியர்தாமே சொல்லுதலான், அதற்கியையச் சிவன்போல வியாபகமுற்றும் ஞானம் விளங்குதல் பற்றி முற்றுஞ் சிவசாதிருசியமெனின், அது சித்தசாதன மாம். "சோகமெனப் பாவி க்கத் தோன்றுவன் வே றின்றி" என்பதற் கியையப் பகிரங்கவேற்றுமை சிறிதுந் தோன்றாமையே முற்றுஞ் சிவசாதிருசியமெனின், அதுவுஞ் சித்தசாதனமே யாம். அன்றியும், சாதிருசியமாவது தற்பின்னத்துவேசதி தற்கத பூயோ தன்மவத்துவம் என் பது, சர்வசாஸ்திர சித்த மாதலின், அவ்வாறன்றித், தற்கத சர்வ தன்மத்துவஞ் சொ ல்லுதல், சாதிருசியச்சொற்குப் பொருளாகமாட்டா தாகலின், இவ்வாறு எந்தப்பிரகா ரத்தானும் நுமக் கிஷ்டவிகாதம் பண்ணி, நமது சித்தாந்தானுகூலமா யிருக்குஞ் 'சிவசா திருசியச்' சொற் சொல்லி, நீர் எய்திய பிரயோசனம் ஒன்று மில்லை. இனி முற்கூறிய அர்த்தம்பற்றிச், சிவானன்னியத்துவமே சிவசாதிருசியம், சிவானன்னியத்துவ சாக்ஷா த்காரமே சிவத்துவாபிவியத்தி, அதுவே சிவசாயுச்சியம் என்று, சித்தாந்தஞ்செய்து, சுகியா யிருக்க. அற்றே லஃ தங்ஙனமாக; தற்பாவபாவத்தாற் சிவானன்னியத்துவஞ் சொல்லின், வியாபக வியாப்பியத்துவ வியஞ்சக வியங்கியத்துவ சுவ சுவாமித்து வாதி பிரசங்கம் வரும்; அவை வரின், சடத்துவப் பிரதிபத்தத்துவ சுவாதந்திரிய பங்காதி தூஷணம் வரும்; எனின், வியாபக வியாப்பியத்துவாதி சம்பந்தங்களாற் சடத்துவாதி தூஷணம் வருமென்பது, பிரஞ்ஞையில்லாத மடவோர் சொல்லும் வார் த்தையாகலின், அத்தூஷணங்களுக்கெல்லாம் நாஞ் சொல்லும் வியாபகவியாப்பியத் துவாதிகளில் ஆஸ்பதங் கிடைக்கமாட்டாது. அவ்வாறெல்லாம் மேலுரைத்தாம். கடை ப்பிடித்து விரித் துணர்ந்துகொள்க.

* இ - ள். "சத்தி ரூபமாய் அடங்கியிருக்குங் காரியம், கருவிகளின் உபகாரத்தால் வியத்திரூபமாய் விளங்குதல், உற்பத்தி யென் றோதப்படும்" எ-று.

திருச்சிற்றம்பலம்.

**சிவசமவாதகண்டனம் என்னுஞ்**

சிவசமவாதவுரைமறுப்பு

முற்றிற்று.

# பரிசோதனைபத்திரம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௫ | ௭ | தெள்ளிங்க | தெள்ளிதின் |
| ௧ | ௧௯ | உரையைவுணர்த்துவதூஉம் | உரையையுணர்த்துவதூஉம் |
| ௪ | ௬ | செயலுமல்லச், | செயலுமல்லீ, |
| ௨௦ | ௨௦ | னடு | நடு |
| ௨௪ | ௨௩ | மூக்கரை | மூர்க்கரை |
| ௩௮ | ௩௦ | ஏய்பவன் | ஏபவன் |
| ௫௦ | ௧௭ | ஸ்டிகம் | ஸ்படிகம் |
| ,, | ௨௩ | மாறுகோளாது | மாறுகொளாது |
| ௫௨ | ௨ | பரோச்சா | பரேச்சா |
| ௫௪ | ௩௮ | முற்றப்பு | முற்றுப்பு |
| ௫௧ | ௩௪ | இடத்திற் | இடத்தில் |
| ௬௫ | ௧௮ | வேண்டாவாம். | வேண்டாதாம். |
| ௬௭ | ௧௨ | வரிவாக | விரிவாக |